ஸ்ரீ ராமஜயம்.

ஸ்ரீமத் வால்மீகி
ராமாயணம்
ஆரண்ய காண்டம்

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள்
ஸ்ரீ மடம் வித்வானும் தர்ம ப்ரசாரகரும்,
ஸ்ரீ ஜகத்குரு ச்ருங்கேரி மடம் ஸநாதன தர்ம ப்ரசாரகரும்,
சாஸ்த்ர ரத்னம், வேதமூர்த்தி, கவிகுஞ்சரம், வித்யாவாக்பதி,
வேதாந்த தத்வ மஹோபதேசகர் முதலான அநேக பிருதுகளால்
அலங்கரிக்கப்பட்டவருமான

ப்ரும்மஸ்ரீ

தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்

அவர்களால் எழுதப்பட்டது.

கிரி ப்ரஸ்

பப்ளிஷர்ஸ்

திருவல்லிக்கேணி, சென்னை.



वामे भूमिसुता पुरश्च हनुमान्पश्चात्सुमित्रासुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयोः वाय्वादिकोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम् ॥

உ

ஸ்ரீராமஜயம்.



ஸ்ரீமத் ராமாயணம்

ஆரண்ய காண்டம்

संसेव्यो ऋषिमण्डलेषु बहुधा गोदावरी सत्तटे
कुर्वन् वासमराति मण्डलमपि छित्वा मुहूर्तात् स्वयम् ।
सीता त्यागमिषेण कल्पितमतेः दूरंभवेत् तत्परं
ब्रह्मेत्येवममुष्यशासनमपि श्रीमान् सयः पातुमाम् ॥

𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯𑍋 𑌋𑌷𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑍇𑌷𑍁 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌗𑍋𑌦𑌾𑌵𑌰𑍀 𑌸𑌤𑍍𑌤𑌟𑍇
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌵𑌾𑌸𑌮𑌰𑌾𑌤𑌿 𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌪𑌿 𑌛𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌸𑍀𑌤𑌾 𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌿𑌷𑍇𑌣 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑌤𑍇𑌃 𑌦𑍂𑌰𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌪𑌰𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌮𑍁𑌷𑍍𑌯𑌶𑌾𑌸𑌨𑌮𑌪𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸𑌯𑌃 𑌪𑌾𑌤𑍁𑌮𑌾𑌮𑍍 ॥

ஸம்ஸேவ்யோ ரிஷிமண்டலேஷு பஹுதா கோதாவரீ ஸத்தடே
குர்வந் வாஸமராதி மண்டலமபி சித்வா முஹூர்தாத் ஸ்வயம் ।
ஸீதா த்யாகமிஷேண கல்பிதமதே: தூரம்பவேத் தத்பரம்
ப்ரஹ்மத்யேவமமுஷ்யசாஸநமபி ஸ்ரீமான் ஸய: பாதுமாம் ॥

முன் காண்டத்தில், ஸமஸ்தமான ஜகத்தினுடைய உத்பத்தி, ஸம்ரக்ஷணம், நாசம், என்ற மூன்றுக்கும் எந்த வஸ்து பரமகாரணமாகுமோ அதுதான் பரப்ரம்மம் என்றும், ஸகல வேதாந்தங்களாலும் ப்ரதிபாதிக்கப்படும் பொருள் என்றும், மாயை என்ற இருளுக்கு விலகிய வஸ்து என்றும், அழி

யாததான பரமானந்தத்தை ஸ்வரூபமாக உடையதென்றும், ஸகல ப்ரபஞ்சத்திலும் அந்தர்யாமியாக விளங்கும் வஸ்து என்றும், ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் தேஜோமயமான உருவமென்றும், நிகரற்ற ஸனாதன தர்மத்தை லோகத்தில் பரவச் செய்யும் பரம்பொருள் என்றும் விவேகிகள் அறிந்திருக்கக்கூடும். அந்த பரம்பொருள்தான் ப்ரக்ருதத்தில் கதாநாயகனை ஸ்ரீராமன் என்றும் நன்றாக அறியவேண்டும். ஸ்ரீராமனே, முன்காண்டத்தில் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டியது அவச்யம் என்பதை ஸ்தாபித்துவிட்டு, இக்காண்டத்தில் ஸஜ்ஜனங்களை ஸம்ரக்ஷிக்கவேண்டியது ஸனாதனிகளின் முக்ய கடமையாகும் என்பதைத் தான் அனுஷ்டித்து ப்ரகாசப்படுத்துகிறார். அரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்கு ஆரண்யர்கள் எனப் பெயர் ஏற்பட்டது. அம்மஹான்களுக்கு பரமானந்தத்தை உண்டுபண்ணுவதற்கு ப்ரக்ருத கதாநாயகனை ராமன், தண்டகாரண்யத்தில் ப்ரவேசிப்பதனால், இக்காண்டத்திற்கு ஆரண்யகாண்டம் எனப் பெயர் ஏற்பட்டது.

தண்டகாரண்ய ப்ரவேசம்.

प्रविश्य तु महारण्यं दण्डकारण्यमात्मवान् ।
ददर्श रामो दुर्धर्षस्तापसाश्रममण्डलम् ॥

𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌰𑌣𑍍𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌰𑌾𑌮𑍋 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑌸𑍍𑌤𑌾𑌪𑌸𑌾𑌶𑍍𑌰𑌮𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ॥

ப்ரவிச்ய து மஹாரண்யம் தண்டகாரண்யமாத்மவாந் ।
ததர்ச ராமோ துர்தர்ஷஸ்தாபஸாச்ரமமண்டலம் ॥

இந்த ச்லோகத்திலுள்ள प्रविश्यतु (𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌤𑍁) (ப்ரவிச்யது) என்ற இடத்தில் காணப்படும் तु (𑌤𑍁) (து) சப்தமானது ராமன் ப்ரவேசித்த தண்டகாரண்யத்தின் விசேஷத்தை ப்ரகாசப்படுத்துகின்றது. முன் காலத்தில் இந்த அரண்யம் பெரிய ராஜதானியாக விளங்கிவந்தது. தண்டகன் என்ற ஓர் அரசன் இதைப் பரிபாலனம் செய்துவந்தான். சுக்ராசார்யர்களுடைய ஆச்ரமும், இந்த ராஜதானியில் ப்ரஸித்தமாக விளங்கி வந்தது. தண்டகன்

என்ற அரசன், ஒரு ஸமயம் வேட்டையாடும் காலத்தில் சுக்ராசார்யர்களுடைய ஆச்ரமத்தின் அருகில் வரும்படி நேர்ந்தது. அவ்வமயம், சுக்ராசார்யருடைய, குமாரியான பத்மவிலாஸனீ என்ற கன்னிகை ஸகிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். அரசனே, அக்கன்னிகையைப் பார்த்த மாத்ரத்தில் அவளிடம் மோஹங் கொண்டு, பலாத்காரமாக அவளை ஆலிங்கனுதிகள் செய்து போகஸுகத்தை அனுபவித்தான். இதை அறிந்த சுக்ராசார்யர்கள் மிகுந்த கோபங்கொண்டு அந்த ராஜனை, "நீ இதுமுதல் ராக்ஷஸனுகப் போகக்கடவாய். உன் ராஜ்யமும் அரண்யமாகப் போகக்கடவது" என்று சபித்துவிட்டு, தானும் ஹிமாலயம் சென்றுவிட்டார். அது முதல், தண்டகாரண்யம் என்ற பெயருடன் இந்தத் தேசமானது விளங்கி வருகிறது. இது நிரம்பவும் பயங்கரமான வனமாகும். விராதன் முதலான க்ரூர ஸ்வபாவமுள்ள ராக்ஷஸர்களுக்கு இந்த அரண்யத்தில் ஸஞ்சாரம் உண்டு. ஆகிலும், த்ரிகால ஞானிகளான மஹர்ஷிகள் பாவியாக ஏற்படக்கூடிய ராமனுடைய ஆகமனத்தை அறிந்து ராக்ஷஸர்களையும் பொருட்படுத்தாது தபஸ்ஸைச் செய்துகொண்டு வருகிருர்கள். இந்த வ்ருத்தாந்தத்தைத்தான் ச்லோகத்திலுள்ள ரு (தா) (து) சப்தமானது போதிக்கின்றது. ராமனைத் தவிர மற்றவர்களால் ப்ரவேசிக்க முடியாததான கோரமான அரண்யம் என்றே இதைச் சொல்லவேண்டும். ராமனே, மஹா தீரனுனதால் லக்ஷ்மணனுடனும் ஸீதாதேவியோடும் இந்த அரண்யத்தில் ப்ரவேசித்தும் பயலேசமேயில்லாதவரானுர். ப்ரவேசித்ததும் ப்ரம்ம வித்யையை அப்யாஸம் செய்யும் காரணத்தால் ஏற்பட்ட தேஜோ விசேஷத்தால் அலங்கரிக்கப்பட்டு ஸூர்யமண்டலமோ என்று தோன்றக்கூடிய மஹர்ஷிகளுடைய ஆச்ரம மண்டலங்களையும் ராமன் தர்சனம் செய்து பரம ஸந்தோஷத்தையும் அடைந்தார். இவ்விதம் தண்டகாரண்யத்தில் ராமன் ப்ரவேசித்ததை அறிந்து ப்ரம்மநிஷ்டர்களான அநேக மஹர்ஷிகளும் ராமனையும், லக்ஷ்மணஸ்வாமியையும் ஸீதாதேவியையும் பரமபக்தியுடன் வரவேற்றுர்கள். அவதார ரஹஸ்யத்தை அறிந்த அந்த மஹர்ஷிகள் ராமனையும், லக்ஷ்மணனையும், ஸீதையையும் பார்த்துப் பார்த்துப் பரமானந்தத்தையடைந்து தம் தம் பர்ணசாலைகளில் ராமனை வஸிக்கும்படியும் வேண்டிக்கொண்டார்கள். அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் முதலான உபசாரங்களால் ஸத்காரம் செய்து பல மூலாதிகளையும் பரமபக்தியுடன் ராமனுக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பூர்வீகமாக ராமனை வேண்டிக்கொண்டார்கள்.

धर्मपालो जनस्यास्य शरण्यस्त्वं महायशाः ।
पूजनीयश्च मान्यश्च राजा दण्डधरो गुरुः ॥
इन्द्रस्येह चतुर्भागः प्रजा रक्षति राघव ।
राजा तस्माद्वरान्भोगान्भुङ्क्ते लोकनमस्कृतः ॥
ते वयं भवता रक्ष्या भवद्विषयवासिनः ।
नगरस्थो वनस्थो वा त्वं नो राजा जनेश्वरः ॥
न्यस्तदण्डा वयं राजञ्जितक्रोधा जितेन्द्रियाः ।
रक्षितव्यास्त्वया शश्वद्गर्भभूतास्तपोधनाः ॥

𑌧𑌰𑍍𑌮𑌪𑌾𑌲𑍋 𑌜𑌨𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌯𑌶𑌾𑌃 ।
𑌪𑍂𑌜𑌨𑍀𑌯𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃 ॥
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌹 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌾𑌗𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵 ।
𑌰𑌾𑌜𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌰𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌲𑍋𑌕𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌃 ॥
𑌤𑍇 𑌵𑌯𑌂 𑌭𑌵𑌤𑌾 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌭𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 ।
𑌨𑌗𑌰𑌸𑍍𑌥𑍋 𑌵𑌨𑌸𑍍𑌥𑍋 𑌵𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌜𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥
𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑌣𑍍𑌡𑌾 𑌵𑌯𑌂 𑌰𑌾𑌜𑌞𑍍𑌜𑌿𑌤𑌕𑍍𑌰𑍋𑌧𑌾 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ।
𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌶𑌶𑍍𑌵𑌦𑍍𑌗𑌰𑍍𑌭𑌭𑍂𑌤𑌾𑌸𑍍𑌤𑌪𑍋𑌧𑌨𑌾𑌃 ॥

தர்மபாலோ ஜநஸ்யாஸ்ய சரண்யஸ்த்வம் மஹாயசா: ।
பூஜநீயச்ச மாந்யச்ச ராஜா தண்டதரோ குரு: ॥
இந்த்ரஸ்யேஹ சதுர்பாக: ப்ரஜா ரக்ஷதி ராகவ ।
ராஜா தஸ்மாத்வராந்போகாந்புங்க்தே லோகநமஸ்க்ருத: ॥
தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந: ।
நகரஸ்தோ வநஸ்தோ வா த்வம் நோ ராஜா ஜநேச்வர: ॥
ந்யஸ்ததண்டா வயம் ராஜஞ்ஜிதக்ரோதா ஜிதேந்த்ரியா: ।
ரக்ஷிதவ்யாஸ்த்வயா சச்வத்கர்பபூதாஸ்தபோதநா: ॥

என்ற ச்லோகங்களால் ஸ்ரீ ராமனிடம் ரிஷிகள் தெரிவித்துக் கொள்வதாவது :—

“ராமா! வர்ணாச்ரம தர்மங்களை ரக்ஷிக்க நீ அவதாரம் செய்திருக்கிறாய். ராக்ஷஸர்களால் பீடிக்கப்பட்ட மஹாரிஷி

களுக்கு நீதான் பரம பந்துவாகவேயுண்டும். மஹாவிஷ்ணு வென்றே உன்னைக் கருதிப் பூஜிக்க யத்னம் செய்யும் ஜனங்கள் புண்ய ஜனங்கள். ராஜா என்ற புத்தியுடனும் உன்னை பஹுமானம் செய்யவேண்டும். ராஜாக்களுக்குத் தான் தர்மத்தை ஒழுங்காகச் செய்யாத ப்ராணிகளைத் தண் டிக்க அதிகாரம் உண்டு. தேவேந்த்ரனைப்போல் ப்ரஜை களை ரக்ஷிக்கும் காரணத்தால் ப்ரஜைகளிடமிருந்து கரங்களை வாங்கக்கூடிய அதிகார தோரணை உன்னிடம் இருப்பதிலிருந் தும் உன்னையே நாங்கள் எங்களுக்கு ரக்ஷகனாக வரிக்கின் றோம். உன் தேசத்தில் நாங்கள் வஸிப்பதால் நீதான் எங் களை ரக்ஷிக்கவேண்டும். நீ நகரத்தில் ராஜ்யாபிஷேகம் செய்துகொண்டு அரசனாயிருந்தாலும், அரண்யத்தில் ரிஷி குமாரனைப்போல் ஜடாதாரியாக விளங்கினாலும் எங்களை ரக்ஷிக்க உனக்குச் சக்தியுண்டு. இதர ராஜாக்களுக்கு, புத்தி பலத்தாலும், ஸ்தான பலத்தாலும், ஸேனாபலத்தாலும், ப்ர ஜைகளையும், ராஜ்யத்தையும் பரிபாலனம் செய்வதில் சக்தி ஏற்படுகிறது என்பதிருந்தாலும் ஸகலலோகத்தையும் இச்சா மாத்ரத்தில் ரக்ஷிக்கச் சக்தியுள்ள உனக்கு யாதொருவிதமான ஸஹாயபலமும் வேண்டியதவச்யமேயில்லை. ஆகையால் எங்களை ராக்ஷஸ பயத்திலிருந்தும் விமுக்தர்களாகச் செய்து வைக்கவேண்டும். ஸகல மஹர்ஷிகளும் உன் கர்ப்பத்தில் (குக்ஷியில்) வஸிக்கிறவர்கள் என்பதையும் நீ அறியவேண் டும். பரம சேஷியான உன்னுடைய ஆகமனத்தால் எங்க ளுக்கு ஸௌபாக்யம் ஏற்படும் என்ற எண்ணத்துடன், 'சாபத்தால் ராக்ஷஸர்களை நிக்ரஹம் செய்வது' என்ற எண் ணத்தை நாங்கள் வெகுகாலமாகவே கைவிட்டுவிட்டோம். ஆகையால் எங்களுக்கு நீதான் சரணமாகவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு பல மூலாதிகளையும் ராமனுக்கு ஆஹார மாக அர்ப்பணம் செய்துவிட்டு, பக்தியுடன் ராமனுக்கு எதி ரில் நின்றுவந்தார்கள்.

இவ்விதம் ராக்ஷஸர்களுடைய பாதையினால் கஷ்டப் படும் மஹர்ஷிகள் தங்கள் ப்ரார்த்தனையைச்சொல்ல மஹர்ஷி களுக்கு ராக்ஷஸர்களைக் கொன்று அபயப்ரதானம் செய் வதாக ராமனும் வாக்களித்த பின்பு, கரன், தூஷணன், த்ரி சிரஸ் முதலான பலவான்களான ராக்ஷஸர்களைக் கொல்லத் தனக் குச் சக்தியுண்டு என்பதை மஹர்ஷிகளுக்கு நிதர்சனமா க்க [illegible] ஒரு ராக்ஷஸனின் [illegible] கின்றார்.

விராத வதம்.

தண்டகாரண்யத்தில் கொஞ்சதூரம் ராமன் முன்பும், ஸீதை நடுவிலும், லக்ஷ்மணன் பின்பாகவும் நடந்துகொண்டு போகும் ஸந்தர்ப்பத்தில், விராதன் என்று பெயருள்ள ஒரு ராக்ஷஸனை பகவானான ஸ்ரீராமன் பார்த்தார். அந்த ராக்ஷஸனே மஹா க்ரூரமான சரீரத்துடன் மலைபோல் விளங்கி வந்தான். அவனுடைய முகமும், வயிறும் பயங்கரமாகக் காணப்பட்டன. மூன்று ஸிம்மங்கள், நான்கு புலிகள், இரண்டு செந்நாய்கள், பத்து பிந்தும்ருகங்கள் இவைகளை த்வம்ஸம்செய்து இரும்பால் செய்யப்பட்ட சூலத்தில் அவைகளைக் கோத்துக்கொண்டு பரம அட்டஹாஸத்துடன் அந்த ராக்ஷஸனானவன் ராமருடைய ஸமீபம் ஓடிவந்தான்.

स कृत्वा भैरवं नादं चालयन्निव मेदिनीम् ।
अङ्केनादाय वैदेहीमपक्रम्य ततोऽब्रवीत् ॥
युवां जटाचीरधरौ सभार्यौ क्षीणजीवितौ ।
प्रविष्टौ दण्डकारण्यं शरचापासिधारिणौ ॥
कथं तापसयोर्वां च वासः प्रमदया सह ।
अधर्मचारिणौ पापौ कौ युवां मुनिदूषकौ ॥
अहं वनमिदं दुर्गं विराधो नाम राक्षसः ।
चरामि सायुधो नित्यमृषिमांसानि भक्षयन् ॥
इयं नारी वरारोहा मम भार्या भविष्यति ।
युवयोः पापयोश्चाहं पास्यामि रुधिरं मृधे ॥

𑌸 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍈𑌰𑌵𑌂 𑌨𑌾𑌦𑌂 𑌚𑌾𑌲𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌕𑍇𑌨𑌾𑌦𑌾𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌮𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌤𑌤𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥
𑌯𑍁𑌵𑌾𑌂 𑌜𑌟𑌾𑌚𑍀𑌰𑌧𑌰𑍌 𑌸𑌭𑌾𑌰𑍍𑌯𑍌 𑌕𑍍𑌷𑍀𑌣𑌜𑍀𑌵𑌿𑌤𑍌 ।
𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍌 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌚𑌾𑌪𑌾𑌸𑌿𑌧𑌾𑌰𑌿𑌣𑍌 ॥
𑌕𑌥𑌂 𑌤𑌾𑌪𑌸𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌸𑌃 𑌪𑍍𑌰𑌮𑌦𑌯𑌾 𑌸𑌹 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍌 𑌪𑌾𑌪𑍌 𑌕𑍌 𑌯𑍁𑌵𑌾𑌂 𑌮𑍁𑌨𑌿𑌦𑍂𑌷𑌕𑍌 ॥
𑌅𑌹𑌂 𑌵𑌨𑌮𑌿𑌦𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌂 𑌵𑌿𑌰𑌾𑌧𑍋 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 ।
𑌚𑌰𑌾𑌮𑌿 𑌸𑌾𑌯𑍁𑌧𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍃𑌷𑌿𑌮𑌾𑌂𑌸𑌾𑌨𑌿 𑌭𑌕𑍍𑌷𑌯𑌨𑍍 ॥

𑌇𑌯𑌂 𑌨𑌾𑌰𑍀 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾 𑌮𑌮 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌯𑍁𑌵𑌯𑍋𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌪𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌰𑍁𑌧𑌿𑌰𑌂 𑌮𑍃𑌧𑍇 ॥

ஸ க்ருத்வா பைரவம் நாதம் சாலயந்நிவ மேதிநீம் ।
அங்கேநாதாய வைதேஹீமபக்ரம்ய ததோப்ரவீத் ॥
யுவாம் ஜடாசீரதரௌ ஸபார்யௌ க்ஷீணஜீவிதௌ ।
ப்ரவிஷ்டௌ தண்டகாரண்யம் சரசாபாஸிதாரிணௌ ॥
கதம் தாபஸயோர்வாம் ச வாஸ: ப்ரமதயா ஸஹ ।
அதர்மசாரிணௌ பாபௌ கௌ யுவாம் முனிதூஷகௌ ॥
அஹம் வநமிதம் துர்கம் விராதோ நாம ராக்ஷஸ: ।
சராமி ஸாயுதோ நித்யம்ருஷிமாம்ஸாநி பக்ஷயந் ॥
இயம் நாரீ வராரோஹா மம பார்யா பவிஷ்யதி ।
யுவயோ: பாபயோச்சாஹம் பாஸ்யாமி ருதிரம் ம்ருதே ॥

என்ற ச்லோகங்களால், பயங்கரமான சப்தத்தை சப்தித்துக் கொண்டு பூமியையும் நடுங்கச் செய்துகொண்டு, ஸீதா தேவியைத் தூக்கி முதுகில் போட்டுக்கொண்டு வெகு தூரத்திற்கு அப்பால் போய் ராமனைப் பார்த்துக் கோரமான வார்த்தைகளைப் பேசினான். "ஜடையை தரித்துக்கொண்டு மரவுரியைக் கட்டிக்கொண்டு, இந்த அரண்யத்தில் ப்ரவேசித்த நீங்கள் யார்? உங்களுடைய உயிர் போனதாகவே நீங்கள் தீர்மானம் செய்துகொள்ளலாம்! வில், பாணம், கத்தி இவைகளையும் தரித்துக்கொண்டு வருகிறீர்களே. அதனால் ராக்ஷஸர்களைக் கொன்று ஜயிக்கலாம் என்ற அஹங்காரமா? மஹர்ஷிகளைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு, இரண்டு புருஷர்கள் ஒரு ஸ்த்ரீயுடன் வருகிறீர்களே! அது மஹா பாபம் அல்லவா! உங்களால் ரிஷிகளுக்கே கீர்த்தி போய்விடும்! உங்களைப்போன்றவர்கள் இந்த அரண்யத்தில் ப்ரவேசிப்பது ந்யாயமாகாது. இந்த அரண்யமோ மிகவும் பயங்கரமானது. நானோ விராதன் என்ற ராக்ஷஸன். மஹர்ஷிகளுடைய மாம்ஸங்களைப் பக்ஷிப்பதே என் ஸ்வபாவமாகும். உங்கள் இருவர்களையும் கொன்றுவிட்டு, இந்த ஸ்த்ரீயை எனக்குப் பார்யையாக வைத்துக்கொள்ளப் போகிறேன்" என்று பருஷமான வார்த்தைகளைப் பேசி ராமனை அவமதித்தான்.

இவ்விதம் விராதன் என்ற ராக்ஷஸன் ராமனைப் பார்த்துப் பேசும் வார்த்தைகளுக்கு உண்மையான பொருளை அடியில் கண்டவாறு அறியவும்:—

மஹேச்வரதீர்த்தீய வ்யாக்யானத்தில் இந்த ரஹஸ்யத்தைக் காணலாம்.

'விராதன் என்ற ராக்ஷஸனே தன்னுடைய ராக்ஷஸ பாவத்திற்குக் காரணமான பாபங்களை நாசம் செய்துகொண்டு மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தை அடையவேண்டும் என்ற எண்ணத்துடன்தான், ஸீதாதேவியினிடம் லோகத்திற்குத் தாயாரான மஹாலக்ஷ்மீ என்ற பக்தியைச் செலுத்திச் சரணாகதி செய்தான் என்ற தன்றி ஸீதாதேவியினிடம் காம மோஹத்தை அடையவில்லை' என்பது ஸ்காந்த மஹாபுராணத்திலுள்ள ப்ரமாண வாக்யங்களால் குறிப்பிடப்படுகிறது.

सोपितां जानकीं दृष्ट्वा शीघ्रं सञ्जातविक्रमः ।
इयं परा महाशक्तिः सेयं स्वर्गस्यकारणम् ॥
अस्या विबोधः मोक्षेऽपि कारणं बन्धनेपि च ।
तस्मादिमां भजिष्यामि दृष्ट्या प्राप्तम्हिदर्शनम् ॥
इति दर्शनमात्रेण विमुक्ताघौघपञ्जरः ।
भक्तियुक्तो जहारैनां सीतां चैतन्यरूपिणीम् ॥

𑌸𑍋𑌪𑌿𑌤𑌾𑌂 𑌜𑌾𑌨𑌕𑍀𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌇𑌯𑌂 𑌪𑌰𑌾 𑌮𑌹𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌸𑍇𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥
𑌅𑌸𑍍𑌯𑌾 𑌵𑌿𑌬𑍋𑌧𑌃 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑌨𑍍𑌧𑌨𑍇𑌪𑌿 𑌚 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌮𑌾𑌂 𑌭𑌜𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂𑌹𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥
𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌘𑍌𑌘𑌪𑌞𑍍𑌜𑌰𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌜𑌹𑌾𑌰𑍈𑌨𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌮𑍍 ॥

ஸோபிதாம் ஜாநகீம் த்ருஷ்ட்வா சீக்ரம் ஸஞ்சாதவிக்ரம: ।
இயம் பரா மஹாசக்தி: ஸேயம் ஸ்வர்கஸ்யகாரணம் ॥
அஸ்யா: விபோத: மோக்ஷேபி காரணம் பந்தநேபி ச ।
தஸ்மாதிமாம் பஜிஷ்யாமி த்ருஷ்ட்யா ப்ராப்தம்ஹிதர்சநம் ॥
இதி தர்சநமாத்ரேண விமுக்தாகௌகபஞ்சர: ।
பக்தியுக்தோ ஜஹாரைநாம் ஸீதாம் சைதந்யரூபிணீம் ॥

என்ற ஸ்காந்த மஹாபுராண ச்லோகங்களைக் கவனிக்கும் வித்வான்களுக்கு விராதனுடைய வார்த்தைகள் ஸ்ரீராம

சந்த்ரமூர்த்தியின் ஸ்துதிகளாகப் பாஸிக்குமன்றி, விபரீத மாகத் தோன்றாது. ஸீதாதேவியை விராதன் பார்த்த மாத்ரத்திலேயே ஸகல பாபங்களினின்றும் விடுபட்டவனாகி 'எதிரில் புலப்படும் இந்த ஸ்த்ரீயானவள் ப்ராக்ருத மான ஸ்த்ரீயல்ல; பராசக்தியே. இந்தத் தேவியினுடைய உபா ஸனத்தால் மோக்ஷத்தை அடையலாம். இவளை உபாஸிக் காதவர்களுக்கு எப்பொழுதும் ஸம்ஸாரஸாகரத்தில துக் கத்தை யநுபவிக்கும்படிதான் கஷ்டம் நேரிடும். ஆகையால் நான் இந்தப் பரதேவதையைப் பக்தியுடன் பஜிக்கப்போகி றேன். நிரம்பவும் மேலான சிச்சக்தி என்று சொல்லப்படு கிற பராம்பிகையும் இவள்தான்' என்று தீர்மானித்து ஸீதை யினுடைய அருகில் வரப் பயந்துகொண்டு கொஞ்சதூரத்தி லேயே நின்று தேவிக்குச் சரணாகதி செய்துவிட்டு, ராமலக்ஷ் மணர்களைப் பார்த்து, ஸ்துதிக்கின்றான். அதாவது :—

अङ्केनादाय वैदेहीं अपक्रम्य ततोऽब्रवीत् ।

𑌅𑌙𑍍𑌕𑍇𑌨𑌾𑌦𑌾𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌅𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌤𑌤𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।

அங்கேநாதாய வைதேஹீம் அபக்ரம்ய ததோப்ரவீத் ।

என்ற ச்லோகத்தில் ஸீதையை अङ्केन (𑌅𑌙𑍍𑌕𑍇𑌨) (அங்கேந) = முதுகில் आदाय (𑌆𑌦𑌾𑌯) (ஆதாய) = தூக்கிக்கொண்டு என்ற பொருளை அறியக்கூடாது. அந்த ச்லோகத்தில் अङ्केन, आदाय (𑌅𑌙𑍍𑌕𑍇𑌨 𑌆𑌦𑌾𑌯) (அங்கேந, ஆதாய) என்று பதச்சேதமும் செய்து கொள்ளக்கூடாது. अङ्के अनादाय (𑌅𑌙𑍍𑌕𑍇 𑌅𑌨𑌾𑌦𑌾𑌯) (அங்கே அநாதாய) என்று பதத்தைப் பிரித்துக்கொள்ள வேண்டும். அந்த விராதன் என்ற ராக்ஷஸன் ஸீதையினு டைய अङ्के अनादाय (𑌅𑌙𑍍𑌕𑍇 𑌅𑌨𑌾𑌦𑌾𑌯) (அங்கே அநாதாய) = அவளைத் தொடுவதற்குப் பயந்து, अपक्रम्य (𑌅𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯) (அப க்ரம்ய) = வெகுதூரத்திற்கப்பால் ஓடி ततः (𑌤𑌤𑌃) (தத:) = அங்கிருந்தபடியே अब्रवीत् (𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍) (அப்ரவீத்) = சொன் னான் என்றே அந்த வாக்யத்திற்கு அர்த்தத்தை க்ரஹித்துக் கொள்ளவேண்டும். ராமலக்ஷ்மணர்களைப் பார்த்து, "நீங் கள் இருவர்களும் யார்?" என்று முன்பாக ப்ரச்னம் செய தான். सभार्यौ (𑌸𑌭𑌾𑌰𑍍𑌯𑍌) (ஸபார்யௌ) என்ற பதத்தால் सभायां आर्यौ सभार्यौ (𑌸𑌭𑌾𑌯𑌾𑌂 𑌆𑌰𑍍𑌯𑍌 𑌸𑌭𑌾𑌰𑍍𑌯𑍌) (ஸபாயாம் ஆர்யௌ ஸபார்யௌ) என்று ஸமாஸம் செய்துகொள்ளும்

பக்ஷத்தில் "உங்கள் இருவர்களையும் பார்த்தால் பெரிய மஹாஸபையில் அக்ரதாம்பூலம் கொடுத்துப் பூஜிக்கத் தக்க மஹான்கள் என்று என் புத்தியில் உதிக்கின்றதே! அது அவ்விதம்தானா!" என்று விராதன் வினவினான்.

தவிரவும், "பாணம், வில், கத்தி இவைகளைக் கையில் தரித்துக்கொண்டு தண்டகாரண்யத்தில் ப்ரவேசம் செய்திருப்பதிலிருந்தே உங்கள் இருவர்களையும் क्षीणजीवितौ (க்ஷீணஜீவிதௌ) (க்ஷீணஜீவிதௌ) என்று நான் அறிகின்றேன். क्षीणं अरीणां जीवितं याभ्यां तौ (க்ஷீணம் அரீணாம் ஜீவிதம் யாப்யாம் தௌ) (க்ஷீணம் அரீணாம் ஜீவிதம் யாப்யாம் தௌ) என்ற ஸமாஸத்தால், "மஹர்ஷிகளுக்கு சத்ருக்களான ராக்ஷஸர்களுடைய உயிரை நாசம் செய்வதற்காகவே முனிவேஷதாரிகளாக நீங்கள் இருவர்களும் தண்டகாரண்யத்திற்குள் ப்ரவேசம் செய்திருக்கிறீர்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன், அது உண்மைதானா?" अधर्मचारिणौ अधर्मं चरतः भक्षयतः नाशयतः (அதர்மசாரிணௌ அதர்மம் சரத: பக்ஷயத: நாசயத:) (அதர்மசாரிணௌ அதர்மம் சரத: பக்ஷயத: நாசயத:) என்ற ஸமாஸத்தால் चरभक्षणे (சரபக்ஷணே) (சரபக்ஷணே) என்ற வ்யாகரண தாதுவை அநுஸரித்து லோகத்தில் தத்காலத்தில் ஏற்பட்ட அதர்மத்தை நாசம் செய்து, ஸநாதன தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அவதரித்த அவதார புருஷர்களே நீங்களிருவர்களும் என்பதை நான் அறிந்தேன். உங்களிருவர்களையும், உங்களிருவர்களுக்கும் நடுவில் பாலிக்கும் ஸ்த்ரீயையும் நான் கவனிக்கும்பொழுது, அஷ்டாக்ஷரீ என்ற மஹாமந்த்ரத்தின் முதல் அக்ஷரமான ॐ (ஓம்) (ஓம்) என்ற ப்ரணவமே நீங்களோ என்று உங்களைப் பார்க்கும்பொழுது எனக்கு [illegible] அ (அ) (அ) காரத்திற்கும் म (ம) (ம) காரத்[illegible] உ (உ) [illegible] இருக்குமானதால், अ (அ) [illegible] அநுஸரித்து, ராமன் (அ) [illegible] இருப்பதை அநுஸரித்து முதலிலும், [illegible] கடைசி எழுத்து என் [illegible] (ம) [illegible] கடைசியிலுமாகப் போகும் [illegible] அநுஸரித்து, லக்ஷ்மணன் கடைசியிலுமாகப் போகும் [illegible] க்ரமத்தைப் பார்த்தால், [illegible], இம்மூவர்களும் ப்ரணவத்தின் [illegible] என்று அறியக்கூடும். எனக்கும் [illegible] மஹா புண்யமூர்த்திகளோ நீங்கள்! [illegible] தோன்றுகிறது.

[illegible]

போய்விட்டன. [illegible] விராதனை [illegible]

ஸன். மஹா பாபத்தைச் செய்த காரணத்தால் இவ்வித மான ஜன்மத்தை அடைந்தேன். தங்களுடைய நடுவில் பாஸித்துவரும் இந்த ஸ்த்ரீயோ தன் காந்தியினாலும் தேஜோ விசேஷத்தாலும் ஆர்யையாக (ச்ரேஷ்டையாக)ஸர்வ ஜனங்களுக்கும் உபாஸிக்கத் தகுந்த பரதேவதையாக பாஸிக் கிறாள். भार्या (ஹாயஜா) (பார்யா) என்ற சப்தத்திற்கு भया कान्त्या आर्या श्रेष्ठा (ஹயா காந்த்யா ஆர்யா ச்ரேஷ்டா) (பயா காந்த்யா ஆர்யா ச்ரேஷ்டா) என்ற ஸமாஸத்தால் த்வனிக்கும் பொருளே என் புத்தியிலுதிக்கின்றது. ஆகையால் உங்களுடைய பரம புண்யமான கைகளால் என்னை வதித்து, ராக்ஷஸ ஜன் மத்திலிருந்தும் எனக்கு விமோசனம் வரும்படி அனுக்ரஹம் செய்யவேண்டும்" என்று சொல்லிவிட்டு, சரணாகதியும் செய்து, "எனக்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் புண் யத்தை நான் ஒன்றும் செய்யாமற்போனாலும், அரண்யத்தில் மிகவும் அழகான பாதாரவிந்தங்களோடு ஸஞ்சாரம் செய்யும் தங்களைப் பார்க்கும்பொழுது என் மனமானது நிரம்பவும் வருந்துகிறது. தங்களுடைய இஷ்டமான தேசத்திற்குச் செல்ல விரும்பினால் என் தோளில் உங்களிருவர்களை யும் ஏற்றிக்கொண்டு சேர்க்கிறேன். ஸீதை மெள்ள மெள்ள நடந்துவரட்டும் ஸீதாதேவியை நான் தூக்கிச் செல் வது என்பது தர்மசாஸ்த்ர விரோதமானது. தங்களிருவர் களையும் நான் வஹிக்கலாம்" என்று சொல்லிவிட்டு ராமனை யும், லக்ஷ்மணனையும் இருதோளில் தூக்கிக்கொண்டு, விரா தன் வெகு வேகமாக அரண்யத்தில் சென்றான். ராம லக்ஷ்மணர்களும், காலால் நடக்கும் ச்ரமமில்லாமையால், கொஞ்சதூரம் போகட்டும் என்ற எண்ணத்துடன் ஸம்மதித் திருந்தாலும் ஸீதாதேவியானவள் விராதனுடைய வேகத்தை யநுஸரித்துப் போகமுடியாமல் பின்தங்கி விட்டதால், பயங் கரமான அரண்யத்தில் ஸ்த்ரீ ஸ்வபாவத்தை யநுஸரித்துப் பயந்து, "ராமா! லக்ஷ்மணா!" என்று கதறினாள். அதைக் கேட்ட ராமனும், லக்ஷ்மணனும், "நாம் இனி பேசாமல் இருக்கக்கூடாது" என்று நினைத்து, ராமன் விராதனுடைய வலது கையையும், லக்ஷ்மணன் அவனுடைய இடது கையை யும் வெட்டித் தள்ளினார்கள். விராதன் கீழே விழுந்தா லும் மரிக்கவில்லை. ராமலக்ஷ்மணர்கள் முஷ்டியினால் விரா தனைக் குத்திக்கொல்ல யத்னம் செய்தார்கள். ஆகிலும் அவன் சாகவில்லை. ஆகிலும், அந்த விராதன் மரித்ததற்கு மேலான துக்கத்தை யநுபவிக்கும் காரணத்தைக் கொண்டு ராமனைப் பார்த்துத் தைன்யமான ஸ்வரத்துடன் சொன்ன

தாவது. "ராமா! நான் பூர்வ ஜன்மத்தில் கந்தர்வஜாதியில் சேர்ந்தவன். குபேரனுடைய போக பத்னியான ரம்பையி னிடத்தில் நான் ஸங்கமம் செய்த தோஷத்தால் குபேரன் என்னை "ராக்ஷஸனுகப் போகக்கடவாய்" என்று சபித்து விட்டான். நான் காம விகாரத்தாலும் ரம்பையிடம் ஸங்க மம் செய்யவில்லை. தேவஸபையில் வீணுகானம் நான் செய்துகொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில், என்னுடைய கான ரஸத்தில் ரம்பையானவள் பரவசத்தையடைந்து என்னைப் பலாத்காரம் செய்து, என்னிடம் ஸங்கமம் செய்ய அவள் விரும்பினுள். அதனுல் எனக்கு அவ்விதமான ஸம்பவம் ஏற்பட்டுவிட்டது. அதனுல் குபேரன் மஹாகோப மடைந்து என்னை இவ்விதம் சபித்துவிட்டான். நான் இந்த ராக்ஷஸ ஜன்மத்திலேயோ ஜயன் என்ற ஒரு ராக்ஷஸ ராஜனு டைய தர்மபத்னியான சதஹ்ருதை என்ற ராக்ஷஸியினிடத் தில் புத்ரனுகப் பிறந்து இவ்விதம் கஷ்டப்படுகிறேன். இந்த அரண்யத்தில் எவ்வளவோ ரிஷிகளை நான் கொன்ற பாபி. தங்களைத் தோளில் வஹித்துக்கொண்டுபோன புண்யவசத் தால் எனக்கு இவ்விதம் பூர்வஞானம் ஏற்பட்டு இந்த வ்ருத் தாந்தங்களைச் சொல்லுகிறேன். தாங்கள் மஹாவிஷ்ணு என்பதையும் தங்களுடன் வரும் லக்ஷ்மணன் ஆதிசேஷ பகவான் என்பதையும், இந்தத் தேவி மஹாலக்ஷ்மீ என் பதையும் நான் அறிந்துவிட்டேன். நான் தும்புருவாக இருந்த பூர்வஜன்மத்திலும் இந்தத் தேவியினுடைய உபாஸனுபலத் தால்தான் வீணை வித்யையில் நான் பயிற்சியை அடைந்து, யோகத்தில் ப்ரஸித்தமாயும் விளங்கி வந்தேன். அந்தத் தேவியை நான் இப்பொழுது தர்சனம் செய்து என் ஜன் மத்தை ஸபலமாகச் செய்து கொண்டுவிட்டேன். ராக்ஷஸ னுக இருந்துவரும் தருணத்திலோ தபோபலத்தால் அஸ்த்ர சஸ்த்ரங்களால் எனக்கு வதம் வேண்டாம் என்று நான் ப்ரம்மாவிடமிருந்து வரத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆகையால் தாங்கள் என் கையை வெட்டினுலும், முஷ்டி யினுல் குத்தினுலும், என்ன செய்தாலும் நான் சாகமாட் டேன் அந்தக் குபேரன் மூலமாகவே தங்களனுக்ரஹத்தால் சாபமோக்ஷத்தையும் நான் அடைந்தவன். பெரிய குழியாக வெட்டி, அதில் என்னைத் தள்ளி கற்களாலும், மண்ணுலும் அந்தக் குழியை மூடிவிட்டால் என் உயிர் தானுகவே போகும்; நானும் மோக்ஷத்தை யடைந்துவிடுவேன். அது தான் என்னை வதிப்பதற்கு உபாயமாகும். அவ்விதம் எனக்கு அநுக்ரஹத்தைச் செய்துவிட்டுத் தங்களுடைய மேலான தத் வத்தை யறிந்த சரபங்க மஹர்ஷி என்ற ஒரு மஹாநுபாவன்

இதோ ஸமீபத்தில் ஆச்ரமத்தில் விளங்கி வருகிறார். அவருக்கும் தாங்கள் தர்சனம் கொடுத்து அநுக்ரஹம் செய்ய வேண்டும்' என்று சொல்லிவிட்டு, விராதன் நிரம்பவும் வணக்கத்தையடைந்தான். பகவானான ஸ்ரீராமனும், லக்ஷ்மணன் மூலமாக பெரிய குழியை வெட்டி, அதில் விராதனைத் தள்ளிக் கற்களாலும், மண்ணாலும் அதை மூடினார். உடன் அந்த ராக்ஷஸனும் தானாகவே உயிரை விட்டு விட்டு ஆகாரத்தில் தேஜோமயமான திவ்ய தேஹத்துடன், திவ்ய விமானத்தில் ஏறிக்கொண்டு வைகுண்டத்திற்குச் சென்றான். இந்த விராதனுடைய மோக்ஷத்தை ராமாயணத்தில் படிக்கிறவர்களோ, கேட்பவர்களோ, ஸகல பாபங்களும் தொலைந்து, ஜன்மத்தைச் சுத்தம் செய்துகொள்கிறார்கள் என்ற மஹாபலமும் ஸ்காந்த மஹாபுராணத்தில் சொல்லியிருக்கிறது.

यो विराध वधं नित्यं शृणोतिश्रावये तव।
तस्य पापानि सर्वाणि विनष्टानि न संशयः ॥

யொ விராய வயஂ நித்யஂ ஶ்ரு॒ணொதிஶ்ராவயெ தவ ।
தஸ்ய வாவாநி ஸவ௯ாணி விநஷ்டாநி ந ஸஂஶயஃ ॥

யோ விராத வதம் நித்யம் ச்ருணோதிச்ராவயே தவ ।
தஸ்ய பாபாநி ஸர்வாணி விநஷ்டாநி ந ஸம்சய: ॥

என்ற ஸ்காந்த மஹாபுராண வாக்யமே அதற்கு ப்ரமாணமாகும்.

விராதனை வதம் செய்து மஹர்ஷிகளுக்கு நன்மையைச் செய்துவிட்டு, சரபங்க மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு ராமன், லக்ஷ்மணனுடனும், ஸீதையுடனும் சென்றார். சரபங்காச்ரமத்திற்கு ராமன் போகும் ஸந்தர்பத்திலோ தேவேந்த்ரனானவன் திவ்யமான ரதத்துடனும் பரிஜனங்களுடனும் சரபங்க ஆச்ரமத்திற்கு வந்து, சரபங்காச்ரமத்திற்கு ஸமீபத்திலேயே ரதத்திலிருந்து தான் இறங்கி, பூமியில் பாதம் படாமல் ஆகாசத்திலேயே நின்றுகொண்டு வந்தான். ஸகலவிதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் குடை, சாமரம் முதலான ராஜ லக்ஷணங்களால் சூழப்பட்டும் விளங்கி வந்த இந்த்ரனைப் பகவானான ஸ்ரீராமன் கவனித்தார். இந்த்ரனுடைய ஸமீபத்தில் பச்சைவர்ணமுள்ள நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட திவ்ய ரதமும் காணப்பட்டது. அதையும்

ராமன் கவனித்தார். தான் பார்த்ததும், லக்ஷ்மணனிடமும் "சரபங்க மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு இந்த்ரனுடைய வரவு ஏற்பட்டது எக்காரணத்தை உத்தேசித்தோ தெரியவில்லை. லக்ஷ்மணா, ஸீதையுடன் நீ இந்த ப்ரதேசத்திலேயே நின்று வா. நான் மறைவாகச் சென்று இந்த்ரனுடைய வரவுக்குக் காரணத்தைத் தெரிந்துகொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு ராமன் சரபங்காச்ரமத்திற்குள் ப்ரவேசிக்க ஆரம்பித்தார். அதற்குள், இந்த்ரனும் ராமனுக்குத் தெரியாமல் மறைந்துகொண்டு சரபங்க மஹர்ஷியை ஏகாந்தமான ஸ்தலத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் மஹர்ஷியிடம் சொல்லுகிறான்.

इहोपयात्यसौ रामो यावन्मां नाभिभाषते ।
निष्ठां नयतु तावत्तु ततो मां द्रष्टुमर्हति ॥
जितवन्तं कृतार्थं च द्रष्टाहमचिरादिमम् ।

𑌇𑌹𑍋𑌪𑌯𑌾𑌤𑍍𑌯𑌸𑍌 𑌰𑌾𑌮𑍋 𑌯𑌾𑌵𑌨𑍍𑌮𑌾𑌂 𑌨𑌾𑌭𑌿𑌭𑌾𑌷𑌤𑍇 ।
𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌨𑌯𑌤𑍁 𑌤𑌾𑌵𑌤𑍍𑌤𑍁 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥
𑌜𑌿𑌤𑌵𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌹𑌮𑌚𑌿𑌰𑌾𑌦𑌿𑌮𑌮𑍍 ।

இஹோபயாத்யஸௌ ராமோ யாவந்மாம் நாபிபாஷதே ।
நிஷ்டாம் நயது தாவத்து ததோ மாம் த்ரஷ்டுமர்ஹதி ॥
ஜிதவந்தம் க்ருதார்தம் ச த்ரஷ்டாஹமசிராதிமம் ।

"மஹர்ஷே! ராமன் தங்களுடைய ஆச்ரமத்திற்கு வருவதாகத் தெரிகிறது. இப்பொழுது நான் ராமனுடன் பஹிரங்கமாகப் பேசத் தயாராக இல்லை. நான் பேசும் பக்ஷத்தில் ராமன் மஹாவிஷ்ணு என்பது ப்ரஸித்தமாகிவிடும். ராவணனும் அதையறிந்து ராமனைச் சரணாகதி செய்து தான் ஜீவித்துவிடுவான். அப்படியானால் ராவணவதம் என்ற அவதாரநோக்கம் நிறைவேறாமல் போய்விடும்; தேவகார்யமும் பலிக்காமல் போய்விடும். ராவணவதத்திற்குப் பிறபாடுதான் ராமனை நான் பார்ப்பதாக உத்தேசம். ராமனை விட்டால் ராவணனை வதம் செய்வதற்கோ மற்றவர்களுக்குச் சக்தி கிடையாது. ஆகையால் தேவகார்யம் முடிந்தபிற்பாடு நாங்கள் இருவர்களும் ஸந்தித்துக்கொள்கிறோம். தங்களுடைய ஸமீபம் நான் வந்த கார்யமோ தங்களை ப்ரம்ம லோகம் அழைத்துப் போவதற்கே. தங்களுடைய தபோ

மஹிமையினால் விஷ்ணு முதலான தேவர்கள் பரம ஸந்தோஷத்தை யடைந்து ஸத்யலோகத்தில் ஸர்வலோகத்திற் கும் ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரம்மா அமர்ந்து பரிபாலனம் செய்யும் ஸ்தானத்தில் தாங்கள் இருக்கவேண்டுமென்று தங் களுக்கு அந்த ஸ்தானத்தை அளித்திருக்கிறார்கள். ப்ரம்ம பீடம் மிக்வும் துர்லபமான ஸ்தானம் என்று தாங்கள் அறியக்கூடும். ஆகையால் தாங்கள் இந்த க்ஷணத்திலேயே என்னுடன் இந்த ரதத்தில் ஏறிக்கொண்டு ப்ரம்மலோகம் வந்து உத்யோகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். என்பதைத் தெரிவிக்கவே நான் வந்தேன்" என்று சொல்லிவிட்டு தேவேந்த்ரனானவன் சரபங்க மஹர்ஷியை வெகு ப்ரகாரமாக பூஜித்து ஆதரித்தான். பரத்வாஜ மஹர் ஷியோ ஸமீபத்தில் வந்துகொண்டிருக்கும் அப்ராக்ருதமான மங்களவிக்ரஹத்தோடு கூடின ஸ்ரீராமனையும் ஸீதாதேவியை யும் லக்ஷ்மணஸ்வாமியையும், தபோ மஹிமையினால் ஞான த்ருஷ்டியைக்கொண்டு அறிந்தவனாதலால், ராமனுடைய ஸந்தர்சனத்தைக் காட்டிலும், ப்ரம்மபட்டமும் பெரிதல்ல என்று அந்த ஸ்தானத்தை வெறுத்து "எனக்கு அது தேவை யில்லை" என்று இந்த்ரனிடம் தனது பரம வைராக்யத்தை வெளிப்படுத்தினார்.

ब्रह्मलोक तृणीकार: वैराग्यस्य अवधिर्मत:

ப்ரஹ்மலோக த்ருணீகார: வைராக்யஸ்ய அவதிர்மத:

ப்ரஹ்மலோக த்ருணீகார: வைராக்யஸ்ய அவதிர்மத:

என்ற ரீதியாக ப்ரம்மலோகத்தையும் காய்ந்த புல்லாக நினைப் பதுதான் வைராக்யத்தின் பரமகாஷ்டை என்று தெரிகிற படியால் அவ்விதமான மேலான வைராக்யமே தாரக ப்ரம்ம மாகிய ஸ்ரீராமனுடைய ஸர்தர்சனத்தில் முக்யமான ஸாதன மாயும் ஏற்படுகிறபடியால் ராமனுடைய ஸாக்ஷாத்காரத்தில், சரபங்க மஹர்ஷியானவர் உத்தமாதிகாரி என்பது வெளி யாகிறது. இந்த்ரனும் தன்னால் கூடுமானவரையிலும் சர பங்க மஹர்ஷியை ப்ரலோபப்படுத்திப் பார்த்தும் அவரு டைய மனமானது ராமனுடைய ஸந்தர்சனத்திலேயே ஈடு பட்டிருப்பதைத் தெரிந்து மனம் மகிழ்ந்து இவரைத் திருப்ப முடியாது என்ற தீர்மானத்துடன் ப்ரம்மலோகம் திரும் பிப் போய்விட்டான். உடனே ராமனும் லக்ஷ்மணன் ஸீதை இருவர்களோடும்கூட சரபங்க மஹர்ஷியினுடைய ஆச்ரமத் திற்குள் ப்ரவேசித்தார். மஹர்ஷியோ அந்த ஸமயத்தில் அக்னிஹோத்ர சாலையில் அக்னியை உபாஸித்துக்கொண்டு

வந்தார். ராமன், ஸீதையுடனும் லக்ஷ்மணனோடும் சரபங்க மஹர்ஷியினுடைய இருபாதங்களையும் தொட்டு நமஸ்காரம் செய்து, மஹர்ஷியினுடைய ஆக்ஞையின் பேரில் ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு மஹர்ஷியைப் பார்த்து, இந்த்ரனுடைய ஆகமன வ்ருத்தாந்தத்தை ப்ரச்னம் செய்தார். மஹர்ஷியும், "ராமா! அத்யுக்ரமான தபஸ்ஸால் என்னால் ப்ரம்மலோகமே என் வசமாக ஜயிக்கப்பட்டுவிட்டது. பகவானான தங்களை உபாஸிக்காதவர்களுக்கு எந்த ஸ்தானம் கிடைப்பதரிதோ அதை நான் தங்களுடைய உபாஸனபலத்தால் ஜயித்துவிட்டேன. அந்த ஸ்தானத்தை எனக்குக் கொடுக்க ப்ரம்மாவினால் அனுப்பப்பட்ட தேவேந்த்ரனானவன் என்னிடம் அந்த வ்ருத்தாந்தத்தைத் தெரிவித்து, அழைத்துப் போக வந்தான். வந்த இந்த்ரன்தானோ அல்லது ப்ரம்மாவோ, இந்த்ரனுடைய வேஷத்துடன் வந்திருக்கவும் கூடும். நான் ஞான சக்ஷுஸ்ஸால் உன்னுடைய ஆகமனத்தை யறிந்து, அந்த ப்ரம்மலோகத்திற்குப் போக மனமில்லாமல் என்னை அழைக்க வந்த இந்த்ரனை எனக்கு ப்ரம்மலோகம் தேவையில்லை என்று சொல்லித் திருப்பியனுப்பிவிட்டேன். பரமதார்மிகனான உன்னுடைய ஸந்தர்சனத்தைக்காட்டிலும் என்னுடைய புத்தியில் ப்ரம்மலோக வாஸம் பெரிதாகத் தோன்றவில்லை.

यत्र पूर्वे साध्यास्सन्ति देवाः ([illegible]) (யத்ர பூர்வே ஸாத்யாஸந்தி தேவா:) என்ற ச்ருதியில் சொல்லியபடி நித்யஸூரிகளால் ஸேவிக்கப்பட்ட த்ரிபாத்விபூதி என்ற உத்க்ருஷ்டமான வைகுண்டலோகத்தை உன்னுடைய அநுக்ரஹத்தால் நான் அடைய விரும்புகிறேன். அந்த லோகமானது ப்ரம்மலோகத்திற்கும் மேலானது என்பது ஸர்வ சாஸ்த்ர ஸம்மதமானது. பகவத்கீதையிலும்

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
यामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥

[illegible]

[illegible] புநராவர்த்திநோऽர்ஜுந: ।
யாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே ॥

என்று ப்ரம்மலோகம் சென்றவனுக்கும் மறுபடியும் பிறப்பு உண்டு என்று தெரிகிறபடியால், அந்த ப்ரம்மலோகத்தில் சென்று வாஸம் செய்ய என் மனம் வராமல், எந்த லோகம் சென்றால் மறுபடியும் பிறப்பு இராதோ அந்த லோகம், பர ப்ரம்மமாகிய நானே, அல்லது பரப்ரம்மமாகிய நீயோ அந்த லோகமாவதால் அதுதான் மேலான லோகம் என்ற தீர்மானத்துடன் (நான்) அந்த லோகம் போய் ஆனந்தத்தை அநுபவிக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன், உன்னுடைய கடாக்ஷ வீக்ஷணத்தையடைய உன்னுடைய ஆகமனத்தை எதிர்பார்த்துவந்தேன்.

அந்த லோகத்திற்கு வைகுண்டமென்றே ஸர்வசாஸ்த்ரத்திலும் பெயர் ப்ரஸித்தமாக விளங்கிவருகிறது.

अक्षया नरशार्दूल मया लोका जिताः शुभाः ।
ब्राह्मयाश्च नाकपृष्ठयाश्च प्रतिगृह्णीष्व मामकान् ॥

𑌅𑌕𑍍𑌷𑌯𑌾 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌮𑌯𑌾 𑌲𑍋𑌕𑌾 𑌜𑌿𑌤𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌨𑌾𑌕𑌪𑍃𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌮𑌾𑌮𑌕𑌾𑌨𑍍 ॥

அக்ஷயா நரசார்தூல மயாலோகாஜிதா: சுபா: ।
ப்ராஹ்ம்யாச்ச நாகப்ருஷ்ட்யாச்ச ப்ரதிக்ருஹ்ணீஷ்வ மாமகாந் ॥

பரப்ரம்மமாகிய லோகத்தை விரும்பும் எனக்கு கர்மாக்களால் யாதொரு உபகாரமும் இல்லாததாலும், அந்த ஸத்கர்மாக்களால் என்னால் ஜயிக்கப்பட்ட ப்ரம்மலோகம் முதலான லோகங்களில் எனக்கு ஆசையில்லாததாலும், என்னுடைய ஸகல புண்யகர்மாக்களையும் உன்னிடம் அர்ப்பணம்செய்துவிடுவேன். ப்ரம்மலோகத்தில் என்னால் அநுபவிக்கக்கூடிய பலங்கள் எவைகள் உண்டோ, அவைகளெல்லாம் வெகு காலம் ஸ்திரமாக இருக்கக்கூடுமாறுலும், த்ரிபாத்விபூதி என்ற பரப்ரம்மமாகிய லோகத்தில் உள்ள ஆனந்தத்தை அநுபவிக்க விருப்பமுள்ளவனாக நான் இருக்கும் காரணத்தால் உன்னுடைய திருபாதங்களில் அவைகளை நான் அர்ப்பணம் செய்துவிட்டேன். அதாவது, நான் செய்த ஸகல கர்மாக்களும் உன்னுடைய கைங்கர்ய ரூபங்களாகவே பர்யவஸிக்கின்றன. எனக்கு அவைகளால் யாதொரு பலமும் வேண்டாம். நிஷ்காமமாகக் கர்மாவை அனுஷ்டிப்பது என்பதும், பலத்தில் ஆசையில்லாமலும், 'நான் செய்கிறேன்' என்ற அஹங்காரம் இல்லாமலும் செய்யும் காரணத்தால், அந்த கர்மாக்கள் பகவானுடைய கைங்கர்ய ரூபமாகவே பர்யவஸிக்கின்றன" என்றார்.

कामतः अकामतोवाऽपि यत्करोमि शुभाऽशुभम् ।
तत्सर्वं त्वयिसंन्यस्तं त्वत्प्रयुक्तः करोम्यहम् ॥
नाहंकर्ता सर्वमेतद्ब्रह्मैवकुरुते तथा ।
एतद्ब्रह्मार्पणं प्रोक्तं ऋषिभिः तत्त्वदर्शिभिः ॥

𑌕𑌾𑌮𑌤𑌃 𑌅𑌕𑌾𑌮𑌤𑍋𑌵𑌾𑌽𑌪𑌿 𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑌿 𑌶𑍁𑌭𑌾𑌽𑌶𑍁𑌭𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑍋𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
𑌨𑌾𑌹𑌂𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ।
𑌏𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌋𑌷𑌿𑌭𑌿𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 ॥

காமத: அகாமதோவாபி யத்கரோமி சுபாசுபம் ।
தத்ஸர்வம் த்வயிஸம்ந்யஸ்தம் த்வத்ப்ரயுக்த: கரோம்யஹம் ॥
நாஹம் கர்தா ஸர்வமேதத் ப்ரஹ்மைவ குருதே ததா ।
ஏதத்ப்ரஹ்மார்பணம் ப்ரோக்தம் ரிஷிபி: தத்வதர்சிபி: ॥

என்று கூர்மபுராண வசனப்படி, ஒருவன் சுபத்தையோ, அசுபத்தையோ, எந்தக் கர்மாவையும் தான் ஒரு பலத்தில் ஆசையுள்ளவனாகவோ, ஆசையில்லாதவனாகவோ செய்தால், 'நான் ஸ்வயமாகச் செய்யவில்லை, அந்தர்யாமியான பகவான் ப்ரேரணை செய்துதான் நான் செய்கிறேன், எல்லாம் பகவானுடைய செயல்' என்ற தீர்மானத்துடனிருந்தால், அந்த ஸகல கர்மாக்களும் பகவானிடத்திலேயே அர்ப்பணம் செய்யப்பட்டதாக ஆகிவிடுகின்றன. இதுதான் பகவதர்ப்பணம் என்பதின் பொருளாகும். பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யப்பட்ட கர்மாக்களுக்கு பலமோ, அனந்தமாயும் அக்ஷயமாயும் ஏற்படுகிறது. அந்தக் கர்மாக்களுக்கும் மோக்ஷம் என்ற பரமபலத்தில் பர்யவஸானம் ஏற்படுகிறபடியால், மோக்ஷம் என்ற பலத்திற்கு மேலான பலம் இல்லாத காரணத்தைக் கொண்டு ப்ரஹ்மார்ப்பணம் செய்து செய்யப்பட்ட கர்மாக்கள் அனந்தமான பலத்தைக் கொடுக்கக்கூடியதாக ஆகிவிடுகின்றன. இந்த க்ரமத்தை அநுஸரித்துத்தான் சரபங்க மஹர்ஷியும் ஸகல கர்மாக்களையும் பகவதர்ப்பணம் செய்தார். இவ்விதம் பரமபக்தியுடன் ப்ரார்த்திக்கும் சரபங்க மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்ட ராமனும், மஹர்ஷிக்கு பதில் சொல்லுகிறார்.

अहमेवाहरिष्यामि सर्वाँल्लोकान्महामुने ।
आवासं त्वहमिच्छामि प्रदिष्टमिह कानने ॥

𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ।
𑌆𑌵𑌾𑌸𑌂 𑌤𑍍𑌵𑌹𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌦𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌹 𑌕𑌾𑌨𑌨𑍇 ॥

அஹமேவாஹரிஷ்யாமி ஸர்வலோகாந்மஹாமுநே ।
ஆவாஸம் த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிஹகாநநே ॥

"மஹர்ஷே! தங்களால் பரமபக்தியுடன் செய்யப்பட்ட ஸகல தபஸ்ஸையும் என்னிடம் தாங்கள் அர்ப்பணம் செய்துவிட்டீர்கள். அதை நானும் மனதுடன் ஸந்தோஷமாய் பெற்றுக்கொண்டுவிட்டேன். அந்த ஸகல கர்மாக்களுக்கும் அக்ஷயமான மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தம் தங்களை அடையும்படி செய்யவும் நான் கடமைப்பட்டவனாகிவிட்டேன். ப்ரம்மஸாரூப்யமோ, ப்ரம்மாத்மாவஸ்த்தானமோ, தங்களுக்கு தங்களிஷ்டப்படி கைக்கெட்டிவிட்டது. அதில் ஸந்தேஹமேயில்லை. ஆகிலும் நான் ஸீதையுடனும், லக்ஷ்மணனுடனும் அரண்யத்தில் தங்களால் குறிப்பிடப்படும் ஆச்ரமத்தை வாஸஸ்தானமாக வைத்துக் கொள்ள இச்சிக்கின்றேன். அதைக் குறிப்பிட்டுத் தாங்கள் தெரிவிக்கவேண்டும்" என்று பகவானான ஸ்ரீராமன் 14 ஸம்வத்ஸரங்கள் அரண்யத்தில் வாசம் செய்ய சரபங்க மஹர்ஷியால் ஸ்தானம் குறிப்பிடப்படவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார். ராமருடைய ஸந்நிதியில் சரபங்க மஹர்ஷியானவர் யோகாக்னியில் ப்ராரப்த சரீரத்தை த்யாகம் செய்துவிட்டு, தான் விதேஹ கைவல்யத்தை அடைய வேண்டுமென்றுள்ள சரபங்க மஹர்ஷியினுடைய அபிப்ராயத்தை அறிந்த ராமன் 'இவ்வித மஹிமையுள்ள சரபங்க மஹர்ஷிக்கு, இப்பொழுதே மோக்ஷத்தைக் கொடுத்து இவரை வைகுண்டத்திற்கு அனுப்பிவிட்டால் இவரைப்போலொத்த பாகவதோத்தமனுடைய ஸந்நிதியானது 14 வருஷங்கள் அரண்யத்தில் ஏற்படுவது துர்லபம்' என்று நினைத்து, "தங்களோடு ஏகோபித்து வாஸம் செய்வதில்தான் என் மனமானது இஷ்டப்படுகிறது. ஆகிலும் தங்களுடைய கைவல்யத்திற்கு நான் தடையாக இருப்பது ந்யாயமாகாது. ப்ராரப்த சரீரத்தை ப்ரம்மமேத ஸம்ஸ்கார விதியை அநுஸரித்து அக்னியில் த்யாகம் செய்துவிட்டு ப்ரம்ம பாவாபத்தி என்ற கைவல்யத்தைத் தாங்கள் அடைவதில் பரிபூர்ணமாக அனுக்ஞை செய்துவிட்டேன். தங்களுடைய மனம்போல் குறிப்பிடும் தேசமே, தங்களோடு வஸித்தால் எவ்வித ஆனந்தம் ஏற்படுமோ, அதை எனக்குக் கொடுக்கக் கூடும்! ஆகையால் தாங்கள் தங்களுக்கு அபிமதமான

தேசத்தை நான் பதினான்கு வருஷங்கள் இந்த அரண்யத்தில் வஸிக்க குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் சரபங்க மஹர்ஷியினிடம், ஸ்ரீராமன் आवासं त्वहमिच्छामि प्रदिष्टमिह कानने (ஆவாஸம் த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிஹ கானநே) (ஆவாஸம் த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிஹ காநநே) என்று ப்ரகாரம் தெரிவித்துக் கொள்கிறார். இதனால், 'பாகவதாள் வஸிக்கும் தேசம்தான் பகவானுடைய தேசமாக ஆகும். பாகவதாள் வஸிக்காத இடத்தில் பகவான் தான் பரிபூர்ணமான ஸாந்நித்யத்தோடு வாஸிப்பதில்லை' என்பது வெளியாகிறது. साकाशीति नचाकाशीति भुवि सायोध्येति नाध्यास्यते । (ஸாகாசீதி நசாகாசீதி புவி ஸாயோத்யேதி நாத்யாஸ்யதே) (ஸாகாசீதி நசாகசீதி புவி ஸாயோத்யேதி நாத்யாஸ்யதே) எந்த தேசத்தில் பகவானுடைய ஸாந்நித்யத்திற்குக் காரணமான பாகவதாளுடைய வாஸம் இருந்து வருகிறதோ, அதுதான் அயோத்யை என்றும், எந்த இடத்தில் ப்ராதஸ்ஸ்நானம் முதலான ஸத்கர்மாக்களைச் செய்யும் மஹான்கள் வஸிக்கிறார்களோ அந்த இடம்தான் கங்காதேவிக்கு வாஸஸ்தானமான காசீ க்ஷேத்ரமாகும் என்றும் தெரிகிறபடியால், பகவானுடைய தத்வத்தை அறிந்த பாகவதோத்தமர்கள் வாஸம்செய்யும் ஸ்தலமே பரமாத்மாவினுடைய வாஸஸ்தானமாகுமானதால், சரபங்க மஹர்ஷியாகிய பரம பாகவதனுடைய வாஸஸ்தானத்தைத்தான் வஸிக்கும் இடமாக பகவான் விரும்புவதாகத் தெரியவருகிறது. அல்லது பாகவதோத்தமர்களுடன் வாஸம் செய்யமுடியாதபோனாலும், பாகவதோத்தமர்கள் குறிப்பிட்ட இடத்தில் பரிபூர்ணமான பகவத் ஸாந்நித்யம் ஏற்படும் என்றும் தெரிகிறது. இதனால் மோக்ஷத்தை அடைய விரும்பும் ஒரு புருஷன் தனது அந்த்யகாலத்தில், பகவானுடைய பரிபூர்ணமான ஸந்நிதி இருக்குமிடத்தில்தான் வஸிக்கவேண்டும்; பகவானுடைய ஸந்நிதியோ, பாகவதர்கள் வஸிக்கும் இடத்திலேயோ, அல்லது அவர்களால் குறிப்பிடப்படும் ஸ்தலத்திலேயோ வஸித்திருக்கும் என்பது வெளியாகிறது. இதை கவனிக்கும் புண்ய ஜனங்கள், அவர்கள் வாஸம் செய்யவேண்டிய ஸ்தலம் எது என்பதை தீர்மானித்துக் கொள்ளலாம்.

இவ்விதம் ராகவனுடைய வார்த்தைகளைக் கேட்ட சரபங்க மஹர்ஷியும், பரம விநயத்துடன் ராமனைப் பார்த்து "ராமா! இந்த ஆச்ரமத்திலிருந்து கொஞ்ச தூரம் தெற்காகப் போனால் ஸுதீக்ஷ்ணர் என்ற ஒரு மஹர்ஷியான

வர் விளங்கி வருகிறார். அவர் பரம தார்மிகர், தேஜஸ்வி, தபஸ்வியுமாவார். அந்த ஆச்ரமத்திற்கு நீ சென்றால், அந்த மஹர்ஷியானவர் பதினன்கு ஸம்வத்ஸரங்கள் நீ அரண்யத்தில் வாஸம் செய்ய ஸகலவிதமான ஸௌகர்யமும் ஏற்படக்கூடிய வாஸஸ்தலத்தைக் கல்பித்துக் கொடுப்பார். இதோ ப்ரவாஹித்துவரும் மந்தாகினீ நதியை எதிர்த்துக் கரையோடு கொஞ்சதூரம் செல்லும் பக்ஷத்தில் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குப் போய்ச் சேரலாம். ஒரு க்ஷணகாலம் மாத்ரம் என்னுடைய ஆச்ரமத்தில் பூர்ண ஸாந்நித்யத்தை நீ அடையவேண்டும். உன் ஸந்நிதியில் இந்த ப்ராரப்த சரீரத்தை நான் த்யாகம் செய்கிறேன்” என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய அக்னிஹோத்ராக்னியை ஜ்வலிக்கச் செய்து, பரிஸ்தரணாதிகளால் அலங்கரித்து, ஆஜ்யத்தால் ப்ரம்மமேத விதியை அநுஸரித்து மந்த்ரங்களால் ஹோமம் செய்துவிட்டு சரபங்க மஹர்ஷி ராமனுடைய எதிரில் அக்னியில் ப்ரவேசம் செய்துவிட்டார்.

यद्युत्कण्ठा तदैवासौ ब्रह्ममेधानलंव्रजेत् ।
नाभिवक्त्रात्मगानग्नीनवरोप्य यथास्थलम् ॥

𑌯𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌣𑍍𑌠𑌾 𑌤𑌦𑍈𑌵𑌾𑌸𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍇𑌧𑌾𑌨𑌲𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ।
𑌨𑌾𑌭𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌗𑌾𑌨𑌗𑍍𑌨𑍀𑌨𑌵𑌰𑍋𑌪𑍍𑌯 𑌯𑌥𑌾𑌸𑍍𑌥𑌲𑌮𑍍 ॥

யத்யுத்காண்டா ததைவாப்ஸௌ ப்ரஹ்மமேதாநலம்வ்ரஜேத் ।
நாபிவக்த்ராத்மகாநக்நீநவரோப்ய யதாஸ்தலம் ॥

என்ற சாஸ்த்ரமூலம் பகவானுடைய ப்ராப்தியில் அபிலாஷையானது சீக்ரமாக ஏற்படவேண்டுமென்று இருக்கும் பக்ஷத்தில் தானே தனக்கு ப்ரம்மமேத ஸம்ஸ்காரம் செய்துகொண்டு அந்த அக்னியில் சரீரத்தை ஹோமம் செய்துவிடவேண்டும் என்று தெரிகிறபடியால், அந்த சாஸ்த்ரப்படி சரபங்க மஹர்ஷியும் அநுஷ்டித்தார். அதிலும் பகவானை ஸ்ரீராமனுடைய ஸந்நிதியில் இந்த யக்ஞத்தை அநுஷ்டித்தார். அந்த மஹானுபாவனுடைய புண்ய மஹிமையை எவ்விதம் என்று யாரால் எடுத்துரைக்க முடியும்! அவருடைய சரீரத்தையோ அக்னியானது பஸ்மமாகச் செய்துவிட்டது. அந்த மஹர்ஷியும் அக்னியினுடைய நடுவிலிருந்தும், ஸுமார் முப்பது வயதுள்ள ஒரு திவ்ய புருஷனாக திவ்ய தேஜஸ்ஸோடு ஆவிர்பவித்து தேவயானம் என்று சொல்லப்படும் அர்ச்சிராதிமார்க வழியாக ப்ரம்மலோகம் சென்றார்.

[illegible] அடைந்த முக்தியை க்ரமமுக்தி என்று [illegible]. அர்ச்சிராதி மார்க்கம் என்று சொல்லப்[illegible] [illegible]வபான வழியாக ப்ரம்மலோகம் சென்று, அங்கு ப்ரம்மஸபையில் ப்ரம்மாவினால் பூஜிக்கப்பட்டு, கல்பம் முடியும் வரையிலும் ப்ரம்மலோகத்திலேயே வாஸம் செய்து விட்டு, கல்பத்தினுடைய முடிவுகாலத்தில் ப்ரம்மஞானத்தை அடைந்து, அதன்மூலம் ப்ரம்மமாகிய லோகம் என்ற சுத்த ப்ரம்மபாவத்தை அடைவது என்பதே க்ரமமுக்தி என்று சொல்லப்படும். ஸகுணப்ரம்மோபாஸகர்கள் மோக்ஷத்தை அடையும் வழியும் இதுதான். சரீர வியோக காலத்தில் உபாஸகர்களுடைய ப்ராணனானது ஸுஷும்னா நாடிவழியாக மூர்த்தா என்று சொல்லப்படும் சிரஸ் பாகத்திற்கு வந்து, சிரஸ்ஸினுடைய நடுவிலுள்ள மிகவும் ஸூக்ஷ்மமான த்வாரம் வழியாக ஸூர்ய ரச்மியில் ஸம்பந்தப்படுகின்றது.

ते अर्चिषं अभिसम्भवन्ति अर्चिषोऽहरन्ह आपूर्यमाण पक्षं आपूर्यमाणपक्षाद्यान् षडुदङ्ङेति मासांस्तान् मासेभ्यः सम्वत्सरं, सम्वत्सरादादित्यं आदित्यात् चन्द्रमसं, चन्द्रमसो विद्युतं, तत्पुरुषोमानवः सः एनान् ब्रह्मगमयति ॥

[illegible]

தே அர்சிஷம் அபிஸம்பவந்தி அர்சிஷோஹரஹ்ந ஆபூர்யமாண பக்ஷம் ஆபூர்யமாணபக்ஷாத்யாந் ஷடுதங்ஙேதி மாஸாம்ஸ்தாந் மாஸேப்ய: ஸம்வத்ஸரம், ஸம்வத்ஸராதாதித்யம் ஆதித்யாத் சந்த்ரமஸம், சந்த்ரமஸோ வித்யுதம், தத்புருஷோமாநவ: ஸ: ஏநாந் ப்ரஹ்மகமயதி ॥

என்ற ச்ருதிவாக்யமே அர்ச்சிராதி மார்க்கத்தில் ப்ரமாணமாகும். ஜ்யோதிர் லோகத்திற்கு அதிபதியான தேவர்கள் [illegible] உபாஸகர்களை தன் லோகத்திற்கு அழைத்துப்போகி[illegible]ர்கள் [illegible] [illegible] லோகத்திற்கு அதிபதியான [illegible]தேவர்க[illegible] [illegible] [illegible]ற்கு வரவேற்கிறார்கள். அங்கிருந்து [illegible] லோகம், அவ்விடமிருந்தும் உத்தராயண [illegible] [illegible] லோகம், பிறகு ஸூர்ய [illegible] [illegible] லோகம் [illegible] [illegible] உபாஸகர்களை [illegible]போகிறார்கள். அந்தந்த லோகத்திற்கு

அதிபதியான தேவர்களால் மிகவும் பக்திபுரஸ்ஸரமாக பூஜிக்கப்பட்டு, இந்த உபாஸகர்கள் ஆதரிக்கப்படுவார்கள். வித்யுல் லோகத்தில் இவர்கள் தங்கி இருக்கும்பொழுதே ப்ரம்ம லோகாதிபதியான ப்ரம்மாவே வித்யுல் லோகத்திற்குத் தானே நேராக வந்து இந்த உபாஸகர்களை ப்ரம்ம லோகத்திற்கு அழைத்துச் செல்லுகிறார். ப்ரம்ம லோகத்திலோ இந்த உபாஸகர்கள் தன்னிஷ்டப்படி அப்ராக்ருதமான போக போக்யாதிகளை அனுபவித்துக்கொண்டு பரமஸுகமாக காலத்தைக் கழிக்கிறார்கள். ஸுஷும்ன நாடிவழியாக ப்ராணவியோகமான உபாஸகர்கள்தான் இந்த பெருமையை அடைய முடியும். ஸுஷும்னநாடி வழியாகத்தான் ப்ராண வியோகம் ஏற்பட்டது என்பதையும் வியோக காலத்தில் அவர்களுடைய தலையின் நடுபாகத்திலுள்ள ஸூக்ஷ்மமான வெடிப்பைக்கொண்டு அன்யர்களும் அறியக்கூடும். அந்த மஹானுபாவர்களுக்கு துக்கஸாகரமான இந்த ஸம்ஸார வாழ்க்கையில் மறுபடி ஜன்மாவே கிடையாது. न स पुनरावर्तते (𑌨 𑌸 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇) (ந ஸ புநராவர்ததே) என்ற ச்ருதியே அதில் ப்ரமாணமாகும். இதுதான் க்ரமமுக்தியை அடைந்தவர்களுடைய வைபவம் என்றதைப் பற்றியது. தனது ஆத்மாவை ப்ரம்மமாக அடைந்த ஞானிகளுக்கோ முகதர்சனாவதில் இந்த மார்க்கமும் தேவையில்லை. ப்ராணனும் எந்த வழியாகப் போகவேண்டும் என்ற நியமும் இல்லை அவர்களுக்கு ப்ராணன் வெளியிலும் போவதில்லை. ஞானாக்னியிலேயே ப்ராணனோ, மற்ற இந்த்ரியங்களோ, எல்லா லிங்கசரீரமும் சாம்பலாகிவிடுகின்றன. அவர்களுக்கு ப்ரம்ம ப்ராப்தியானது இந்த லோகத்திலேயே ஏற்படும்.

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः ।
अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते ॥

𑌯𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌮𑌾 𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌅𑌥 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய ஹ்ருதிச்ரிதா: ।
அதமர்த்யோம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே ॥

என்ற ச்ருதியோ ஞானிகளுடைய முக்தியில் ப்ரமாணமாகும். ஞானிகளுடைய முக்தியைத்தான் ஸத்யோமுக்தி என்று சொல்லுவார்கள். ப்ராரப்த சரீரம் இருக்கும் பொழுதே ஞானாக்னியினால் மனதை ஆச்ரயித்திருக்கும்

கர்மங்களை எரித்துவிட்டு பரப்ரம்மப்ராப்தியை அடைவது என்பதுதான் ஸத்யோமுக்தியாகும். இவ்விதம் முக்தி யடைந்த ஞானிகளுக்கு, தன் சரீரத்தில் அவர்களுடைய த்ருஷ்டியை அநுஸரித்து தோற்றமில்லாமல் போனாலும் இதர புருஷர்களுடைய த்ருஷ்டியை அநுஸரித்து அவர்களுக்கு சரீரம் இருப்பதுபோல் காணப்படுவதான காரணத்தைக் கொண்டு அவர்களை ஜீவன் முக்தர்களென்றும் ச்ருதிகள் வர்ணிக்கின்றன அந்த ஜீவன்முக்தர்களை மூன்று ப்ரகாரமாக பிரித்து சாஸ்த்ரங்கள் வர்ணிக்கின்றன. वरन् वरीयान्, वरिष्ठन् (வரந் வரீயாந் வரிஷ்டந்) (வரன் வரீயான் வரிஷ்டன்) என்று அவர்களை சாஸ்த்ரமானது பிரித்திருக்கிறது. அநேக வருஷங்கள் ஸ்வரூபானந்தத்தில் அமர்ந்திருக்கும் காரணத்தால் ப்ரபஞ்ச வாழ்க்கையை மறந்தவர்களானாலும், திடீரென்று ப்ராரப்த வசத்தால் ஸமாதியிலிருந்தும் தானாகவே வெளியில் வந்து ப்ரபஞ்ச வாழ்க்கையில் கலந்துகொண்டவர்கள்போல் நடித்துக் காட்டும் மஹான்களை வரன் என்றும், அந்யர்களுடைய நிர்ப்பந்தத்தால் ப்ரபஞ்ச வாழ்க்கையில் கலந்துகொண்டவர்கள்போல் நடிக்கும் மஹானுபாவனை வரீயன் என்றும்; ஸ்வயமாக உலக வாழ்க்கையில் ஈடுபடாமலும், அந்யர்களுடைய நிர்ப்பந்தத்தாலும் உலக வாழ்க்கையில் ஈடுபடாமலும் ஸதாகாலமும் ஸ்வரூபானந்தத்திலேயே மூழ்கிக் கொண்டிருக்கும் மஹாநுபாவனை வரிஷ்டன் என்றும் பிரித்து வித்வான்கள் வ்யவஹாரம் செய்கிறார்கள். இவ்விதமான ஜீவன் முக்தி நிலையோ ரொம்பவும் உயர்ந்ததானது. வேதாந்த விசார ஜன்யமான ஞானத்தால்தான் அந்த நிலை ஏற்படக்கூடியது. ப்ரக்ருதத்தில், சரபங்க மஹர்ஷியையோ, ஞானிகளுடைய கோடியில் சேர்க்கமுடியாது. அவ்விதமானால் அவர் செய்துகொண்ட ப்ரம்மமேத ஸம்ஸ்காரமும், அக்னியில் சரீர த்யாகம் செய்ததோ, இந்தக் கர்ம கலாபங்களுக்கு அவகாசம் ஏற்பட ந்யாயமில்லை. அதனால் சரபங்க மஹர்ஷியை ஸகுணப்ரம்மோபாஸகர்களுக்குள் முதன்மையாகத்தான் குறிப்பிடவேண்டும். உபாஸகர்களுடைய கதியைத்தான் அவருக்கும் பலமாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸகுண ப்ரம்மத்தை உபாஸிக்கிற விஷயத்திலோ அவர் ரொம்பவும் மேன்மையுள்ளவர் என்பதில் ஆக்ஷேபணையே இல்லை. ஆகையால் அவருக்கு பகவான் க்ரம முக்தியைத்தான் அளித்தார். ஸத்யோ முக்தியை அளிப்பதற்குப் பாத்ரமோ இந்த சரபங்க மஹர்ஷியினாலேயே ராமனிடம் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட ஸுதீக்ஷ்ண மஹர்ஷி என்ற மஹாநு

பாவனே. சரபங்க மஹர்ஷியோ உபாஸகர். ஸுதீக்ஷ்ண மஹர்ஷியோ ஞானி. ஆகையால் சரபங்க மஹர்ஷியை அர்ச்சிராதி மார்க்கவழியாக ப்ரம்ம லோகத்திற்கு அனுப்பினார்.

ஸுதீக்ஷ்ண மஹர்ஷியின் ஆச்ரமம் வருகை

ஸ்ரீ ராமன், ஸீதையுடனும் லக்ஷ்மணனோடும் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குச் செல்ல மனமுள்ளவரானார். அந்த ஸமயத்தில் ராமனை தர்சனம் செய்ய நாலாபக்கங்களிலிருந்தும் அநேக மஹர்ஷிகள் வந்து சூழ்ந்துகொண்டார்கள். வாலகீயர்கள், வைகானஸர்கள், ஸமப்ரக்ஷர்கள், மரீசிபர்கள் என்ற பெயருள்ள ஹிரண்ய கர்பனுடைய மானஸபுத்ரர்களான ரிஷிகள் அபூர்வமான தேஜஸ்ஸோடு கூடினவர்களாகிக்கொண்டு ராமனை வந்து தர்சனம் செய்தார்கள். அவர்களில் சில ரிஷிகள் கீழே விழுந்து காய்ந்த சருகுகளை ஆஹாரம் செய்பவர்களும், ஜலத்தை மாத்ரம் ஆஹாரமாய்க் கொள்பவர்களும், வாயுவை பக்ஷிப்பவர்களும், இவ்விதமாக பரமாச்சர்யத்தைக் கொடுக்கும் ஸ்வபாவமுள்ளவர்களாக விளங்கினார்கள். அந்த மஹர்ஷிகளோ ஒருவருக்கொருவர் ராமனைப் பார்க்க வரும் காலத்தில் அபூர்வமான வார்த்தையைப் பேசிக்கொண்டு வந்தார்கள் அதாவது: ஸத்தாயும், சித்தாயும், ஆனந்தமாயும் அனந்தமாயும், ப்ரக்ஞானகனமாயும், ஸ்வப்ரகாசமாயும், விளங்கிவரும் ஸர்வ வேதாந்த வேத்யமான பரப்ரம்மம்தான் ககுத்ஸ்த வம்சத்தில் அவதாரம் செய்து நமது பாக்ய வசத்தால், அப்ராக்ருதமான திவ்ய மங்களத்துடன் நம்முடைய த்ருஷ்டிக்கு யோக்யமாக விளங்கிவருகிறது. நமது தபஸோ, தானமோ, இப்பொழுதுதான் ஸபலமாயிற்று. பொருளில்லாதவனுக்கு பொருள் அகப்பட்டால் எவ்வளவு ஆனந்தம் ஏற்படுமோ அதுபோல் ராமனை தர்சனம் செய்து பரமானந்தத்தை நாம் அடைவோம். நமது ஜன்மாவை ஸபலமாகச் செய்துகொள்வோம். க்ருதார்த்தர்களாக ஆவோம், என்று கர்ஜித்துக்கொண்டு நாலா திக்குகளிலிருந்தும் கூட்டம், கூட்டமாக மஹர்ஷிகள் வந்து சரபங்காச்ரமத்திலிருந்து ராமன் வெளியில் வரும் ஸமயத்தில் ராமனுக்குச் சரணாகதி செய்து, பஹுப்ரகாரமாக தங்கள் தங்கள் மநோரதத்தை ராமனிடம் தெரிவித்துக்கொண்டார்கள்.

स ब्रह्मयाश्रिया जुष्टाः दृढयोगाः समाहिताः ।
शरभङ्गाश्रमे रामं अभिजग्मुश्च तापसाः ॥

𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌃 𑌦𑍃𑌢𑌯𑍋𑌗𑌾𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑌰𑌭𑌙𑍍𑌗𑌾𑌶𑍍𑌰𑌮𑍇 𑌰𑌾𑌮𑌂 𑌅𑌭𑌿𑌜𑌗𑍍𑌮𑍁𑌶𑍍𑌚 𑌤𑌾𑌪𑌸𑌾𑌃 ॥

ஸ ப்ரஹ்மயாச்ரியாஜுஷ்டா: த்ருடயோகா: ஸமாஹிதா: ।
சரபங்காச்ரமே ராமம் அபிஜக்முச்ச தாபஸா: ॥

என்று சொல்லியபடி ஸகலமான மஹர்ஷிகளும் வேதாந்த விசாரம் செய்து ப்ரம்மவித்யையை தினந்தோறும் அத்யயனம், அத்யாபனம என்ற உபாயததால் பரிபாலனம் செய்து வருகிற காரணத்தால், ஏற்பட்ட ப்ரம்மதேஜஸினுல் ஜ்வலிக்கிருர்கள். மிகவும் த்ருடமாக பக்குவதசையடைந்த ஞானிகளும் அவர்களே. யமம், நியமம, ஆஸனம், ப்ராணுயாமம், ப்ரத்யாஹாரம், தாரணம், த்யானம், ஸமாதி, என்ற 8 விதமான அங்கங்களோடு கூடின யோக க்ரமத்தில் ரொம்பவும் பயிற்சியடைந்த ஸித்த புருஷர்களாகவும் விளங்கி வருகிருர்கள். அவர்களுடைய மனதோ ஏகாக்ரபூமியிலும், நிரோத பூமியிலும்தான் ஸஞ்சாரம் செய்வதாகத் தெரிகிறது. மூடம், சித்தம், விக்ஷிப்தம், ஏகாக்ரம, நிரோதம என்று ஐந்து ப்ரகாரமாக மனதின் அவஸ்தையானது பிரிக்கப்பட்டிருக்கின்றன பர ப்ரம்மத்தினிடத்திலும் ஆஸக்தி விசேஷமில்லாமல் லோகத்திலும், அபிமானம் இல்லாமல் இருக்கும் ப்ராணிகளுடைய மனதை மூடமென்றும், ப்ரம்மவாஸனையே யில்லாமல், லோக வாஸனையிலேயே முழுகியிருக்கும் ப்ராணிகளுடைய மனது சித்தமென்றும், லோகவாஸனையிலேயே அதிக காலம் மனது முழுகியிருந்தாலும், நடுவில் நடுவில் கொஞ்சம் ப்ரம்ம வாஸனை உள்ள மனதை விக்ஷிப்தம் என்றும், எப்பொழுதுமே ப்ரம்மவாஸனையுள்ள மனதை ஏகாக்ரம் என்றும். ப்ரம்மஸ்வரூபத்தில் ஸ்வரூபநாசத்தையடைந்த மனதை நிருத்தமென்றும் யோகசாஸ்த்ரத்தில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 5 விதமான மனோபூமிகளுக்குள் ப்ரக்ருதத்தில் ராமனுடைய ஸந்நிதியில் காணப்படும் ரிஷிகளோ ஏகாக்ர பூமியிலோ, நிருத்த பூமியிலோதான் நிஷ்டையோடு கூடின மஹர்ஷிகளாகக் காணப்படுகிருர்கள்.

இவ்வித மஹிமையுள்ள மஹர்ஷிகள் ராமனை சரணமடைந்து ராமரிடம் ப்ரார்த்தித்துக் கொள்கிருர்கள். "ஹே ராமா! தேவர்களுக்குள் இந்த்ரனைப்போல், ஸகல மனிதர்

களுக்கும் நீ ப்ரதானமாக விளங்கி வருகிறாய். மூன்று லோகத்திலும் உன்னுடைய யசஸ்ஸும், பராக்ரமும் பரவி விளங்கி வருகின்றன. நாங்கள் தங்களிடம் ஒரு யாசனம் செய்து கொள்ளப்போகிறோம் அந்த யாசனையோ ராக்ஷஸர்களை நிக்ரஹம் செய்யவேண்டுமென்பதைக் குறிப்பிட்டதாகும். நாங்கள் சொல்லும் வார்த்தையைப் பொறுமையுடன் கேட்டு எங்களை ரக்ஷிக்கவேண்டும். எந்த அரசன் ப்ராணிகளிடமிருந்து கரத்தை க்ரஹித்துக்கொண்டு ப்ராணிகளை ரக்ஷிக்காமல் உதாஸீனமாக இருக்கிறானோ அந்த அரசனுக்கு அதர்மம்தான் ஏற்படும். தன்னுடைய உயிரைப்போலும், தன்னுடைய புத்ரர்களைப்போலும் தன் ப்ரஜைகளை எந்த அரசன் ரக்ஷிக்கிறானோ அவன் அழிவற்ற கீர்த்தியை அடைந்து, சரீரம் போனபின்பு ப்ரம்மலோகம் சென்று அங்கும் ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறான். ப்ராணிகள் செய்யும் தவத்திலோ நாலில் ஒரு பங்கு அரசனைச் சேறுகிறது. இங்கு கூடியிருக்கும் நாங்களோ மஹா தபஸ்விகள். எங்களுடைய தபஸில் அரசனான உனக்கும் பங்கு உண்டு. வானப்ரஸ்தாச்ரமத்தை அடைந்த மஹர்ஷிகளோ திரள் திரளாக இங்கு கூடியிருக்கிறார்கள். ' இந்தக் கூட்டமானது உன்னையே நாதனாகவும், வரிக்கின்றது. இந்த அரண்யத்தில் ராக்ஷஸர்களோ உன்னுடைய ப்ரஜைகளான இந்த ரிஷிகளைச் செய்யும் ஹிம்ஸையை சொல்ல ஸாத்யமில்லை. பம்பா நதீ தீரங்களிலும் மந்தாகினீ நதிதீரத்திலும், சித்ரகூட பர்வதத்திலும் நாங்கள் வஸித்து வருகின்றோம். உன்னுடைய ஆகமனத்தை யறிந்து ராக்ஷஸர்களுடைய பாதையை ஸஹிக்கமுடியாமல் உன்னை சரணமடைந்து இதைத் தெரிவிக்க இங்கு வந்துள்ளோம். எங்களை ரக்ஷிக்கவேண்டும். நீ நகரத்திலுள்ளவனானாலும், வனத்திலுள்ளவனானாலும் நீயே எங்களுக்கு அரசன். உன் தேசமோ பூமண்டலம் பூராவுமே. அதில் வஸிக்கும் நாங்களும் உன் தேசவாஸிகளாகவே ஆவோம். नान्यःपन्था विद्यते अयनाय (நாந்ய:பந்தா வித்யதே அயநாய) என்ற ச்ருதியை அநுஸரித்து மோக்ஷத்திற்கு உன்னைவிட்டால் வேறு வழியில்லை. ராக்ஷஸ பாதையினின்றும் விடுதலையை அடைவதற்கு வேறு வழியில்லை. ஆகையால் எங்களைக் கைவிடாமல் ரக்ஷிக்க வேண்டும்'' என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

மஹர்ஷிகளுடைய வார்த்தையைக் கேட்ட ராமனும் மிகவும் விநயத்துடன் மஹர்ஷிகளுக்கு பதிலளிக்கிறார். '' தபஸ்விகளே! தாங்கள் என்னிடம் இவ்வளவு விநயத்துடன் யாசிக்கவேண்டியதவச்யமேயில்லை! தங்களுடைய

கிங்கரன் என்றே என்னை யறியவேண்டும். தங்களால் எவ்விதமாக ஆக்ஞை எனக்கு ஏற்பட்டாலும் அதை உடன் செய்துதான் தீருவேன். தங்களுக்கு ஸௌக்யத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற ஒரு வ்யாஜத்தைக் கைக்கொண்டு இந்த கோரமான தண்டகாரண்யத்திற்கு வந்தேன். பரம சேஷியான எனக்கு சேஷபூதர்களான தங்களுடைய ஸம்ரக்ஷணம் அவச்யமானதல்லவா? தபஸ்விகளுக்கு சத்ருக்களான ராக்ஷஸர்களை நாசம் செய்து, தபஸ்விகளுக்கு அபயத்தைக் கொடுக்கவே என்னுடைய வரவு என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம். நானே, என் ப்ராதாவான லக்ஷ்மணனும் இருவர்களுடைய பராக்ரமத்தை ராக்ஷஸர்களும் பார்ப்பார்கள்; தாங்களும் அநுபவிக்கப் போகிறீர்கள்" என்று சொல்லி விட்டு,

दत्त्वाऽभयं चापि तपोधनानां धर्मेधृतात्मा सहलक्ष्मणेन ।
तपोधनैश्चापि समाज्यवृत्तः सुतीष्णमेवाभिजगाम वीरः ॥

தத்வாஅபயம் சாபி தபோதநாநாம்
    தர்மேத்ருதாத்மா ஸஹலக்ஷ்மணேந ।
தபோதநைச்சாபி ஸமாஜ்யவ்ருத்த:
    ஸுதீக்ஷ்ணமேவாபிஜகாம வீர: ॥

தத்வாபயம்சாபி தபோதநாநாம் தர்மேத்ருதாத்மா ஸஹலக்ஷ்மணேந ।
தபோதநைச்சாபி ஸமாஜ்ய வ்ருத்த: ஸுதீக்ஷ்ணமேவாபிஜகாம வீர: ॥

என்றபடி மஹர்ஷிகளுக்கு ராக்ஷஸவதம் மூலமாக அபயத்தைத் தருவதாக ப்ரதிக்ஞை செய்துவிட்டு பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தில் நிச்சயமான மனதுடன் கூடினவராகக்கொண்டு லக்ஷ்மணனுடனும், ஸீதையுடனும் அந்த மஹர்ஷிகளாலும் வேதகோஷ புரஸ்ஸரமாக ஸ்வாகதிக்கப்படுகிறவராய்க் கொண்டு, ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குச் சென்றார்.

சரபங்க மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திலிருந்து ப்ரஸ்தானமாகி மந்தாகினீ நதியைத் தாண்டி, ஒரு பெரிய மலையைக் கடந்து பலவிதமான வ்ருக்ஷங்களாலும் சூழப்பட்டு ரமணீயமாய் விளங்கிவரும் தபோவனத்திற்குள் லக்ஷ்மணன், ஸீதை இருவர்களுடன் ஸ்ரீராமன் ப்ரவேசித்தார்.

அந்த தபோவனத்தில் அநேக புஷ்பச்செடிகளாலும், லதா குஸுமங்களாலும், கனிவர்க்கங்களாலும் அலங்கரிக்கப்பட்டு மிகவும் அழகாக விளங்கிவரும் ஸுதீக்ஷ்ண மஹாரிஷியினுடைய ஆச்ரமத்தை ஸ்ரீராமன் தர்சனம் செய்தார். அந்த ஆச்ரமத்திற்குள் புலித்தோல் மேல் வீராஸனருடனும், மிகவும் வயதில் முதிர்ந்தவருமாயும், ஞானத்தாலும், தபஸாலும் வ்ருத்தனுயும், நிர்விகல்ப ஸமாதியில் ஸ்வரூபானந்தத்தை அநுபவித்து வருபவருமாயும், விளங்கிவரும் ஸுதீக்ஷ்ண மஹரிஷியை ஸ்ரீராமன் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அபிவாதனம் சொல்லி, ஸீதையையும் நமஸ்கரிக்கச் சொல்லி, லக்ஷ்மணனும் நமஸ்காரம் செய்த பிறபாடு அஞ்ஜலிபந்தத்துடன் நின்றுகொண்டு தங்களுக்கு அநுக்ரஹம் செய்யவேண்டுமாக ஸ்ரீராமன் மஹரிஷியினிடம் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்.

ஸுதீக்ஷ்ண மஹரிஷியும் ஸமாதி கலைந்து விழித்துக் கொண்டு திவ்ய ஸௌந்தர்யத்தோடு எதிரில் விளங்கிவரும் ராமனைப் பார்த்துப் பரமாச்சர்யத்தை அடைந்தார். தனனுடைய கைகளால் ராமனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஆனந்த பாஷ்பத்தையும் பெருக விட்டுக்கொண்டு "ராமா! ஸுகமாக மார்க்கத்தில் வந்து சேர்ந்தாயா? உன்னுடைய பாத தூளி பட்டமாத்ரத்தால் இந்த ஆச்ரமம் மிகவும் புண்யமான ஆச்ரமமாக ஆகிவிட்டது. உன்னை ப்ரதீக்ஷித்துக் கொண்டுதான் நான் இந்த ஆச்ரமத்தில் இந்த ப்ராரப்த சரீரத்தை தரித்துக்கொண்டு இருந்துவருகிறேன். என்னுடைய தபோ மஹிமையினால், எனக்கு ப்ரம்மலோகத்தில் பதவி கிடைக்கக்கூடியதாக இருந்தும் உன்னுடைய ஸாக்ஷாத்காரத்திற்கு அது ஒரு விக்னமென்று நினைத்து அதை உதறித் தள்ளிவிட்டேன். சரபங்க மஹரிஷியை வஞ்சித்ததுபோல் என்னையும் வஞ்சிக்க தேவேந்த்ரன் இந்த ஆச்ரமத்திற்கு வந்தான். இந்த்ரனையோ, இந்த்ரனால் கொடுக்கப்படும் லோகத்தையோ த்ருணமாகவே நான் நினைத்தேன். உன்னுடைய ஸ்வரூப தர்சனத்தைக் காட்டிலும் எனக்கு அவைகள் மேலல்ல. என் தபோ மஹிமையினால் எனக்குக் கிடைத்த லோகங்கள் எவைகளுண்டோ அவைகளைக்கூட உன் வசமாக ஒப்புவித்துவிட்டேன். அந்த லோகங்களிலும் ஸீதையுடன் உன் இஷ்டம்போல் நீ ஸஞ்சாரம் செய்யலாம்" என்று சொல்லிவிட்டு ஸுதீக்ஷ்ண மஹரிஷியானவர் ராமனிடம் தன்னுடைய வினய பாவத்தை ப்ரதர்சனம் செய்தார்.

ராமனும், மஹர்ஷிக்குப் பதில் சொன்னார். "தங்களால் நிதியைப்போல் என்னிடம் அர்ப்பணம் செய்துவைத்திருக்கும் ஸகல புண்ய கர்மாக்களுக்கும் மஹா பலத்தை அநுபவிக்கும்படி தங்களைச் செய்கிறேன். உண்மையில் ஸர்வ கர்ம பல தாதா என்று என்னைத் தாங்கள் அறிந்த விஷயத்தில் தங்களுடைய ஞானத்தின் பயிற்சியைப் பற்றி ஸந்தோஷப்படுகிறேன். தற்காலத்தில், அவித்யையினுடைய ஸம்பந்தத்தால் சுத்த, புத்த, முக்த, ஸ்வரூபமாகிய ஸ்வாராஜ்யத்திலிருந்தும் ப்ரஷ்டனைப்போல் நானாகி, அந்த அவித்யையின் ஸம்பந்தத்தால் ஸம்ஸாரி போலவும், மூடர்களுடைய த்ருஷ்டிக்குத் தோன்றுபவனாகி, கார்ஹஸ்த்ய தர்மத்தைக் கைக்கொண்டவனாக மாத்ர மன்னியில், தத்காலத்தில் வானப்ரஸ்தாச்ரமத்தை அவலம்பித்தவன் போலவும், பித்ருவாக்யபரிபாலனம் என்ற தர்மத்தை அநுஷ்டிக்கிறவன் போலவும் மாயாலோகத்தில் நாட்டியம் செய்து வருகிறேன். அதை அநுஸரித்துத் தாங்களும் நடந்துகொள்வீர்களென்று நம்புகிறேன். சரபங்க மஹர்ஷியோ தங்களுடைய பெருமையைப் பற்றி மிகவும் உயர்ந்ததாக என்னிடம் சொல்லியிருக்கிறார். தங்களுக்கு ஸர்வக்ஞத்வ சக்தியும் உண்டு என்பதையும் நான் அறிவேன். நான் பதினான்கு வருஷங்கள் வனத்தில் வஸித்தாகவேண்டும். நான ஸீதையுடன் ஏகாந்தமாக வாஸம் செய்வதற்கு தாங்கள் ஒரு ஸ்தலத்தைக் குறிப்பிட்டுக் காட்டி எனக்கு அநுக்ரஹம் செய்யவேண்டுமாக நான் வேண்டிக்கொள்கிறேன்" என்று பகவானை ஸ்ரீராமன் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினிடம் தெரிவித்துக்கொண்டார்.

இவ்விதம் ராமனுடைய வார்த்தையைக்கேட்ட ஸுதீக்ஷ்ண மஹர்ஷியும், மதுரமான வார்த்தையால் ராமனுக்கு பதிலளிக்கிறார். "ராமா! என்னுடைய ஆச்ரமமே நீ வாஸம் செய்வதற்கு மிகவும் அநுகூலமானது. ரிஷிகளுடைய ஆச்ரமங்களும் ஆங்காங்கு ஸமீபத்தில் விளங்குகின்றன. இந்த என்னுடைய ஆச்ரமத்திலுள்ள என்னுடைய அநேக சிஷ்யர்கள் உனக்கு பரிசர்யை செய்து தங்களுடைய ஜன்மாவை ஸபலமாகச் செய்துகொள்ள ஸித்தமாயிருக்கிறார்கள். ஆயினும், சில ராக்ஷஸர்கள் மாய வேஷம் தரித்துக்கொண்டு இங்கு ஸஞ்சரிக்கும் வழக்கமுண்டு. அதை உத்தேசிக்கும்பொழுது, தாங்கள் ஸீதையுடன் இங்கு வஸிப்பது உசிதமாகுமா என்று ஸந்தேஹம் ஏற்படுகிறது. யாராவது துஷ்ட ராக்ஷஸன் அழகான மான்போல் வேஷம் தரித்துக்கொண்டு

வந்து, ஸீதையை அபஹாரம் செய்துகொண்டுபோய்விட்டால் அதனால் உனக்கு ஏற்படும் துக்கத்திற்கு நானல்லவா காரணமாக நேரும்! அதை உத்தேசிக்கும்பொழுது தாங்கள் இங்கு வஸிப்பது அவ்வளவு உசிதமில்லை. ம்ருகங்களுடைய பாதையைத் தவிர மற்ற எல்லாவிதத்திலும் இந்த ஆச்ரமத்தில் ஸௌகர்யம் நிறைந்திருக்கிறது" என்று சொன்னார்.

அதைக் கேட்ட ராமனே, "மஹர்ஷே! அதற்காகத் தாங்கள் கொஞ்சமேனும் சங்கையை அடையவேண்டாம். இங்கு வரும் ஸகல ம்ருகங்களையும் நான் த்வம்ஸம் செய்துவிடுகிறேன். இந்த ஆச்ரமத்திற்கு இனி ம்ருகங்களால் பாதையேயில்லாமல் செய்ய நான் ஸித்தமாயிருக்கிறேன். ஆகிலும், தாங்கள் அஹிம்ஸை என்ற தர்மத்தைக் கைக்கொண்டவர்களானதால் தங்களுடைய எதிரில் நான் ம்ருகங்களைக் கொல்லும்பொழுது, தங்களுடைய மனதிற்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியவனாவேன். ஒரு தேசத்திலும், ஒரு காலத்திலும், ஒரு வஸ்துவையும், ஒரு ப்ரயோஜனத்தை கருதியும், சரீரத்தாலோ, வாக்கினாலோ, மன்தாலோ, ஹிம்ஸிக்கக் கூடாதென்றல்லவா சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன! அந்த அஹிம்ஸை என்ற வ்ருதத்தை ஸார்வபௌம வ்ரதம் என்று யோகிகள் சொல்லுவார்கள். அந்த வ்ரதத்தையோ தாங்கள் கைகொண்டவர்கள். தங்களுடைய ஸந்நிதியில், பிறப்பில் வைரம் உள்ள ப்ராணிகள்கூட பரஸ்பரம் த்வேஷத்தை விட்டுவிட்டு ஸௌஹார்த்தத்தைக் கொண்டாடுமல்லவா! இவ்வித மஹிமையுள்ள தங்களுடைய ஸந்நிதியில் ம்ருகங்களை ஹிம்ஸை செய்வதில் என் மனதும் கொஞ்சம் சங்கையைத்தானடையும். க்ஷத்ரியனை எனக்கு அது ஸஹஜமானாலும், தங்கள் ஸந்நிதியில் அவ்விதம் செய்ய நான் தயங்குகிறேன். ஆகிலும் இரண்டொரு தினம் மாத்ரம் நான் தங்கள் ஆச்ரமத்தில் தங்கிவிட்டு, நான் புறப்பட்டுவிடுகிறேன். நான் வஸிப்பதற்குத் தகுதியான இடம் வேறு ஏதாவது தங்களுக்குத் தோன்றினால் அதைச் சொல்லும் பக்ஷத்தில் அந்த இடத்திலேயே வஸிக்கலாமென்று என் மனதில் உதிக்கின்றது" என்று மஹர்ஷியினிடம் சொல்லிவிட்டு ஸ்ரீராமன் ஸாயங்கால ஸந்தியை உபாஸிக்க மந்தாகினி நதீதீரம் சென்றார்.

நதியில் சென்று பச்சிம ஸந்தியை உபாஸித்துவிட்டு அன்றிரவு மாத்ரம் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில் வஸிப்பதாக ஸங்கல்பித்தார். வேறு ப்ரதேசம் சென்று ம்ரு

கம்போல் வேஷம் தரித்துக்கொண்டு வந்த ராக்ஷஸர்களையும், த்வம்ஸம் செய்து மஹர்ஷிகளுடைய ஆச்ரமங்களுக்கு நிர்ப்பந்தத்தை உண்டுபண்ண வேண்டுமென்று தீர்மானித்தார்.

ततः शुभं तापसभोज्यमन्नं स्वयं सुतीष्णः पुरुषर्षभाभ्यां ।
ताभ्यां सुबसत्कृत्य ददौ महात्मा सन्ध्यानि वृत्तौ रजनीमवेक्ष्य ॥

தத: ஶுபம் தாபஸபோஜ்யமந்நம்
ஸ்வயம் ஸுதீக்ஷ்ண: புருஷர்ஷபாப்யாம் ।
தாப்யாம் ஸுஸத்க்ருத்ய ததௌ மஹாத்மா
ஸந்த்யாநி வ்ருத்தௌ ரஜநீமவேக்ஷ்ய ॥

தத: சுபம் தாபஸபோஜ்யமந்நம் ஸ்வயம் ஸுதீக்ஷ்ண: புருஷர்ஷபாப்யாம்
தாப்யாம் ஸுஸத்க்ருத்ய ததௌ மஹாத்மா ஸந்த்யாநி வ்ருத்தௌ
ரஜநீமவேக்ஷ்ய ॥

ஸுதீக்ஷ்ண மஹர்ஷியும் ராமனுக்கு ஸந்த்யோபாஸனை முதலான ஸத்கர்மாக்கள் முடிந்த பிறபாடு ராமன் லக்ஷ்மணன் ஸீதை மூன்று பேர்களையும் அன்றிரவு தன் ஆச்ரமத்தில் ஸத்காரம் செய்து பூஜித்தார். தபஸ்விகள் புஜிக்கக் கூடிய திவ்யமான பலங்களையும் கிழங்குகளையும் ராமனிடம் பக்தியுடன் அர்ப்பணம் செய்து, ஆதரித்தார். ராமனும் ஸ்வயமாகவே ஸுதீக்ஷ்ண மஹர்ஷி தன்னை ஆதரிக்கும் பெருமையைப் பார்த்து அந்த மஹர்ஷியினால் கொடுக்கப்பட்டும் பலங்களையும் தான் அன்றிரவு ஆஹாரமாக உட்கொண்டுவிட்டு லக்ஷ்மணனுக்கும் கொடுத்து புஜிக்கச் சொன்னார். ராமன் புஜித்த பிறபாடு, ஸீதாதேவியும் பலாதிகளையே ஆஹாரம் செய்துவிட்டு அன்றிரவு முழுமையும் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில் ஸுகமாகக் காலத்தைக் கழித்தார்.

மறுநாள் காலையில் ப்ரபாத காலத்தில் எழுந்திருந்து மந்தாகினீ நதி ஜலத்தில் ஸ்நானம் விதிவத்தாகச் செய்து ஸந்த்யோபாஸனம் முதலான ஸத்கர்மாக்களையும் அநுஷ்டானம் செய்துவிட்டு, அக்னிபகவான், ஸூர்யபகவான், முதலான தேவதைகளையும் பூஜித்துவிட்டு, ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஸமீபம் வந்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளைச் செய்துவிட்டு, தான் ப்ரஸ்தானம் செய்வதற்கு மஹர்ஷியினுடைய அநுக்ஞையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

" மஹர்ஷே ! எனக்கு அநுக்ரஹம் செய்து, உத்தரவுகொடுக்க வேண்டும். அநேக மஹர்ஷிகள் தன் தன் ஆச்ரமத்திற்கு நான் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆகையால் ரிஷிகளுடைய ஆச்ரமங்களுக்கும் நான் சென்றுவிட்டு சீக்ரத்தில் மறுபடியும் தங்களுடைய ஆச்ரமத்திற்கு வந்து தர்சனம் செய்கிறேன் " என்று சொல்லிவிட்டு மஹர்ஷிக்கு நமஸ்காரம் செய்தார். மஹர்ஷியும் சுபமான ஆசீர்வாதங்களைச் செய்து ராமனை ஆலிங்கனம் செய்துகொண்டு, உச்சி முகர்ந்து பார்த்து, பரமஸந்தோஷத்துடன் அனுப்பினார். ராமனும் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆக்ஞையைப் பெற்றுக்கொண்டு மஹர்ஷிகள் கூட்டம் கூட்டமாக தன்னை அநுஸரித்துவர, ப்ரஸ்தானமானார். இரண்டு அம்பராத் தூணிகளை தான் தரித்துக்கொண்டு, கோதண்டம் என்ற வில்லையும் கையிலேந்திக்கொண்டு, கத்திகளையும் கையில் தரித்துக்கொண்டும், ராமன் லக்ஷ்மணன் இருவர்களும் யுத்த வீரர்களைப்போல் ப்ரஸ்தானமானார்கள்.

श्रीमन्तौ रूपसम्पन्नौ दीप्यमानौ स्वतेजसा ।
प्रस्थितौ धृतचापौ तौ सीतया सह राघवौ ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑍌 𑌰𑍂𑌪𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍌 𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑍌 𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾 ।
𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌧𑍃𑌤𑌚𑌾𑌪𑍌 𑌤𑍌 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌹 𑌰𑌾𑌘𑌵𑍌 ॥

ஸ்ரீமந்தௌ ரூபஸம்பந்நௌ தீப்யமாநௌ ஸ்வதேஜஸா ।
ப்ரஸ்திதௌ த்ருதசாபௌ தௌ ஸீதயா ஸஹ ராகவௌ ॥

மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திலிருந்து வெளியில் புறப்படும்பொழுது வீர ஸ்ரீயும், ஸௌந்தர்ய லக்ஷ்மீயும், பராக்ரமும், அளவிடமுடியாமல் ராம லக்ஷ்மணர்களிடம் பாஸித்து வந்தன. வில்லைக் கையில் தரித்துக்கொண்டு, கத்தியுடன் புறப்படும் ராம லக்ஷ்மணர்களுடைய அபூர்வமான ஸந்நிவேச விசேஷங்களையும், அவர்கள் நடுவில் போகும் ஸீதையினுடைய அப்ராக்ருதமான வைபவங்களையும் தர்சனம் செய்ய ஸாமன்யமான ஜனங்களுக்கு பாக்யம் கிடைக்காது. சென்ற ஜன்மாக்களில் மஹத்தான தபஸைச் செய்த புண்யவான்கள் தான் பார்த்து ஆனந்தித்தார்கள். வில் முதலான ஆயுதங்களை, ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திலேயே வைத்து விட்டு மற்ற ஆச்ரமமண்டலங்களைத் தர்சனம் செய்து திரும்பி வந்து, அவைகளை க்ரஹித்துக் கொள்ளலாம் என்றுதான் ராமனும் நினைத்திருந்தார். ஸீதாபிராட்டியினு

டைய அபிப்ராயமும் அதுவேதான். ஆகிலும் अरिष्टगच्छपन्थानं (அரிஷ்டம் கச்ச பந்தாநம்) (அரிஷ்டகச்சபந்தானம்) என்ற ச்லோகத்தால் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியானவர் போகும் அரண்யத்தில் ராக்ஷஸர்களுடைய ஸஞ்சாரம் அதிகமானதால், 'பார்த்துக் கவனித்துக்கொண்டு போ' என்று சொன்னதிலிருந்தும், ஸீதாதேவியோ மார்க்கத்தில் எவ்விதம் ஏற்படுமோ என்று நினைத்து அம்பராத்தூணி, வில், கத்தி இவைகளைத் தானுகவே எடுத்து ராமனுடைய கையில் கொண்டுவந்து கொடுத்தாள். அன்னியில், ரிஷிகளுடைய ஆச்ரமங்களுக்குச் செல்லும் ராமனுக்கு ஆயுதபாணியாகப் போகவேண்டிய தேவையேயில்லை. மார்க்கத்தில் ஏற்படக்கூடிய ராக்ஷஸ உபத்ரவத்தை நிவ்ருத்தி செய்வதற்குத்தான் ஆயுதபாணிகளாகச் சென்றார்கள்.

सुतीक्ष्णेनाभ्यनुज्ञातं प्रस्थितं रघुनन्दनम् ।
हृद्यया स्निग्धया वाचा भर्तारमिदमब्रवीत् ॥

ஸுதீக்ஷ்ணேநாப்யநுஜ்ஞாதம் ப்ரஸ்திதம் ரகுநந்தநம் ।
ஹ்ருத்யயா ஸ்நிக்தயா வாசா பர்த்தாரமிதமப்ரவீத் ॥

ஸுதீக்ஷ்ணேநாப்யநுக்ஞாதம் ப்ரஸ்திதம் ரகுநந்தநம் ।
ஹ்ருத்யயா ஸ்நிக்தயா வாசா பர்த்தாரமிதமப்ரவீத் ॥

என்ற ச்லோகத்தால் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தினின்றும் ஆயுதபாணியாக ராமன் ப்ரஸ்தானம் செய்ததைப் பார்த்து ஸீதையானவள் சொல்லுகிறாள்.

“ராமா! ஆயுதபாணியாக ராக்ஷஸர்கள் நிரம்பிய அரண்யத்தில் நீ ப்ரவேசிக்கும் பக்ஷத்தில் ராக்ஷஸர்களோடு விரோதம் ஏற்படுமென்பது நிச்சயம்தான். அந்தகாரணத்தால் உனக்கும் நமக்கும் பிரிவு ஏற்படும்படியும் நேர்ந்துவிடும். ஆகையால் ஆயுதம் ஒன்றுமில்லாமல் அரண்யத்தில் ப்ரவேசிப்பது தான் எனக்கு உசிதமாகத் தோன்றுகிறது” என்று ராமனுடைய மனதிற்கு திருப்தியை உண்டுபண்ணக் கூடியதாயும், யுக்திக்கு ஒத்ததாயும் சொல்லுகிறாள். ராமனோ ரிஷிகளுக்கு எதிரில் ராக்ஷஸர்களைக் கொல்வதாகப் ப்ரதிக்ஞை செய்துவிட்டார். தான் செய்த ப்ரதிக்ஞைக்கோ, ஒருநாளும் குறைவு வராமலே ராமனும் நடத்திக்கொள்வார். அப்படியானால் ராக்ஷஸர்களுடன் ராமனுக்கு விரோதம் ஏற்படுவது ஸித்தமானது. நம்மையும் யாராவது ராக்ஷஸன் அபஹரித்துக்

கொண்டுதான் போவான். அதனால் ராமன் மிகுந்த கஷ்டத்தைத் தான் அநுபவிப்பார் என்ற மனோவருத்தத்துடன் ஸீதை சொல்லுகிறாள்.

अयं धर्मः सुसूक्ष्मेण विधिना प्राप्यते महान् ।
निवृत्तेन तु शक्योऽयं व्यसनात्कामजादिह ॥
त्रीण्येव व्यसनान्यत्र कामजानि भवन्त्युत ।
मिथ्या वाक्यं परमकं ततो गुरुतरावुभौ ॥
परदाराभिगमनं विना वैरं च रौद्रता ।

𑌅𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍇𑌣 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌤𑍁 𑌶𑌕𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌤𑍍𑌕𑌾𑌮𑌜𑌾𑌦𑌿𑌹 ॥
𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑍇𑌵 𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑌾𑌮𑌜𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌤 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌕𑌂 𑌤𑌤𑍋 𑌗𑍁𑌰𑍁𑌤𑌰𑌾𑌵𑍁𑌭𑍌 ॥
𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌵𑍈𑌰𑌂 𑌚 𑌰𑍌𑌦𑍍𑌰𑌤𑌾 ।

அயம் தர்ம: ஸுஸூக்ஷ்மேண விதிநா ப்ராப்யதே மஹாந் ।
நிவ்ருத்தேந து சக்யோயம் வ்யஸனாத் காமஜாதிஹ ॥
த்ரீண்யேவ வ்யஸநாந்யத்ர காமஜாநி பவந்த்யுத ।
மித்யாவாக்யம் பரமகம் ததோ குருதாராவுபௌ ॥
பரதாராபிகமநம் விநா வைரம் ச ரௌத்ரதா ।

அதாவது :—"ராமா! நீ அநுஷ்டிப்பதாக ஸங்கல்பம் செய்திருக்கும் தர்மமோ ரொம்பவும் பெரிய தர்மமாகும். ஜிதேந்த்ரியாளான மஹர்ஷிகள் ரொம்பவும் ரஹஸ்யமான மார்க்கத்தைக் கைகொண்டு தர்ம தத்வங்களை தீர்க்கமாயும் விசாரித்து அநுஷ்டிக்கவேண்டியதான தர்மமாகும். காமனால் ஜயிக்கப்பட்ட புருஷன் எவனோ அந்த புருஷனால் இந்த தர்மத்தை அநுஷ்டிக்க முடியாது. காமனால் ஜயிக்கப்பட்ட புருஷன் அநுஷ்டிக்கப்படும் தர்மம் அதர்மமாகத்தானாகும். பாபத்திற்குத்தான் காமம் காரணமாகுமன்னியில் புண்யத்திற்குக் காரணமாகாது. அவ்விதம் காமத்தால் ஏற்படும் துக்க ஹேதுவான பாபமோ, மூன்று ராசிகளுக்குள்ளடங்கியவை: (1) பொய் சொல்லுவது (2) பர ஸ்த்ரீகளிடத்தில் ஸங்கமனம் செய்வது (3) காரணமில்லாமல், பிறரை ஹிம்ஸிப்பது. தங்களிடமோ இந்த மூன்றிலும், 'பொய் சொல்வது' என்பது நடந்ததுமில்லை; நடக்கப்போவதுமில்லை;

அது எனக்கு அநுபவஸித்தம்தான். சித்ரகூட பர்வதத்தில் ஜாபாலி மஹர்ஷியானவர் நாஸ்திக மதத்தை அவலம்பித்தும் தங்களை ராஜ்யத்திற்கு திருப்பி அழைக்க யத்னம் செய்த காலத்தில் தாங்கள் கொஞ்சமேனும் ஸத்யத்திலிருந்து தவறாமல் நடந்துகொண்ட ஸந்தர்ப்பத்திலேயே ஸத்ய ஸந்தன் என்று தங்களை நான் தெரிந்துகொண்டு விட்டேன்.

பர ஸ்த்ரீகளிடத்தில் ஸங்கமனம் செய்வது என்பதும் தங்களிடத்தில் ஒரு ஸந்தர்ப்பத்திலும் ஏற்பட ந்யாயமில்லை. தாங்கள் எப்பொழுதும் ஸ்வதாரத்திலேயே நிரதனாக இருக்கக்கூடியவர். தர்மத்தையே சரணமடைந்தவர். அவ்விதமிருக்கும்பொழுது ஏகபத்னீ வ்ரதனான தங்களுக்கு பர தார ஸ்பர்சம் எங்கு ஏற்படப்போகிறது? தங்களை அரண்யத்திற்கு அனுப்பின ஸபத்னீ மாதாவான கைகேயீதேவி கூட தன் புத்ரனான பரதன் 'எதற்காக ராமனை நீ அரண்யத்திற்கு அனுப்பினாய்? ஏதாவது பர தாரங்களை இச்சித்தாரா? அதுபோலொத்த ஸரியான காரணம் இல்லாதபோனால் ராஜ்ய பதவிக்கு அர்ஹமில்லை என்று சொல்லமுடியாதே! ஜ்யேஷ்ட புத்ரனல்லவா? ச்ரேஷ்டமான குணங்களோடும் கூடினவல்லவா?' என்று கேட்கும்பொழுது அந்த கைகேயீ தேவியே பரதனிடத்தில் தங்களுடைய ப்ரம்மசர்யத்தின் கௌரவத்தை ரொம்பவும் பாராட்டிப் பேசியிருப்பதாக நான் சித்ரகூட பர்வதத்தில் பரபரப்பாகக் கேள்விப்பட்டேன். न रामः परदारान् वै चक्षुर्भ्यामपि पश्यति (ந ராம: பரதாராந் வை சக்ஷுர்ப்யாமபி பச்யதி) (ந ராம: பரதாராந் வை சக்ஷுர்ப்யாமபி பச்யதி) என்ற வாக்யத்தால் ராமன் பர ஸ்த்ரீகளை கண்ணால்கூட பார்த்ததில்லை என்று சொன்னதாகவும் கேள்விப்பட்டேன். அவள் சொல்லி எனக்கு தெரிய வேண்டிய அவச்யமுமில்லை. தாங்கள் ஸ்வதாராநிரதன் ஏக பத்னீ வ்ரதன் என்பதே அந்த உண்மையை ப்ரகாசப்படுத்த வில்லையா! தாங்கள் ஜிதேந்த்ரியன். அதில் ஸந்தேஹமே யில்லை. ஸத்யமும், ப்ரம்மசர்யமும் தங்களிடம் குடியிருந்து வருகின்றன.

ஆகிலும், ரௌத்ரம் என்ற சப்தத்தால் சொல்லப்படும் இதரர்களுடைய ப்ராணனை அபஹரிப்பதான ஹிம்ஸை என்ற பாபமானது தங்களிடம் இருக்குமோ என்று எனக்கு ஸந்தேஹம் உண்டாகிறது. காரணமில்லாமல் இதரர்களுடைய உயிருக்கு ஹானியுண்டாக்கக்கூடிய ஹிம்ஸையைச் செய்வதைப்போல் மஹா பாபம் வேறொன்றுமேயில்லை. மஹர்

ஷிகளுக்கு எதிரில் ராக்ஷஸர்கள் மறிப்பதற்காகவே நான்
தண்டகாரண்யத்திற்கு வந்தேன் என்று தாங்கள் சொன்ன
திலிருந்தும் எனக்கு இவ்விதமான ஸந்தேஹம் உண்டா
கிறது. அதற்கநுகுணமாகவே தாங்களும் லக்ஷ்மணனும்
ஆயுதபாணிகளாக தண்டகாரண்யத்தில் ப்ரவேசம் செய்
திருக்கிறீர்கள். இவ்விதம் ப்ரஸ்தானமான தங்களைப் பார்க்
கும்பொழுது என் மனதில் மிகுந்த கவலை ஏற்படுகிறது.
தாங்களோ, செய்த ப்ரதிக்ஞையைக் கைவிடமாட்டீர்கள்.
ராக்ஷஸர்களை வதம் செய்தே தீருவீர்கள். பரம தார்மிகனான
தால் வைரமில்லாமல் ராக்ஷஸர்களைக் கொல்லவும் மாட்டீர்
கள். ராக்ஷஸர்களைக் கொல்வதற்கு ராக்ஷஸர்களுடன் த்வே
ஷத்தை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டும் அந்த வைரத்
திற்கு மூலகாரணத்தை ஸம்பாதித்தாகவேண்டும். அது என்
தலையில்தான் வந்து வெடியுமோ! என்று எனக்கு ஸந்தேஹம்
ஏற்படுகிறது. என் தலையில் பழிவந்தால் நாம் என்ன
செய்வோம் என்ற கவலைமட்டுமில்லை; உன்னால் என்னுடைய
விரஹத்தை ஸஹிக்கமுடியுமா? நீ என்ன செய்வாய்?
நீ வேறு பத்னியை ஸ்வீகரித்துக்கொள்ளலாம் என்றாலோ,
எனக்கு மனோதைர்யம் ஏற்படும். நீயோ ஏகபத்னி வ்ரத
னாக இருக்கிறாய். இவைகளை யோஜிக்கும்பொழுது என்
மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் நான் தவிக்கிறேன். ஆகை
யால் இந்த ஸந்தர்ப்பத்தில் நான் சொன்னதை நீ கேட்கத்
தான் வேண்டும். ஆகையால் கோரமான அரண்யத்தில் ப்ர
வேசிப்பது உசிதமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.
ஏதோ மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில் எங்கேயாவது ஸுக
மாகக் காலத்தைக் கழித்து, பதினான்கு ஸம்வத்ஸரங்கள்
ஆனவுடன் அயோத்திக்குத் திரும்புவதுதான் நலம் என்று
தோன்றுகிறது. நம்மால் ஒருவருக்கும் யாதொரு பீடையும்
ஏற்படவேண்டாம், கையில் ஆயுதமிருந்தால் நிச்சயமாக
யாரையாவது ஹிம்ஸித்த பாபம் வந்தே சேரும்.

क्षत्रियाणां च हि धनुः हुताशस्य च इन्धनानि च ।
समीपतः स्थितं तेजः बलं उच्छ्रयते भृशम् ॥

க்ஷத்ரியாணாம் ச ஹி தநு: ஹுதாசஸ்ய ச இந்தநாநி ச ।
ஸமீபத: ஸ்திதம் தேஜ: பலம் உச்ச்ரயதே ப்⁴ருசம் ॥

க்ஷத்ரியாணும் ச ஹி தநு: ஹுதாசஸ்ய ச இந்தநாநி ச ।
ஸமீபத: ஸ்திதம் தேஜ: பலம் உச்சயதே ப்ருசம் ॥

அக்னியினுடைய ஸமீபத்தில் உலர்ந்த விரகுகள், செடி கொடிகளும் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை அந்த அக்னி எப்படி பொசிக்கியே தீருமோ, அதுபோல் க்ஷத்ரியனுடைய கையில் இருக்கும் ஆயுதமானது, எங்கேயாவது ராக்ஷஸர்களையோ, மருகங்களையோ கண்டால் ஹிம்ஸையைச் செய்து க்ஷத்ரியினுடைய பலத்தை வ்ருத்தி செய்துதான் வைக்கும். ஆயுதபாணியாக இருக்கும் புருஷன் ஹிம்ஸை என்ற பாபத்தைச் செய்தவனுகவே ஆவான் என்பதில் ஒரு உதாஹரணம் சொல்லுகிறேன்; ராமா! நீ கேட்கவேண்டும்.

ஒரு மஹர்ஷியானவர் முன் காலத்தில் ஒரு அரண்யத்தில் மஹத்தான தபஸ்ஸைச் செய்து வந்தார். அந்த மஹர்ஷியினுடைய தபஸ்ஸைப் பார்த்து இந்த்ரனுக்கு தன்னுடைய ஸ்தானத்தை இவர் ஜயித்துவிடுவாரோ என்ற அஸூயை ஏற்பட்டு இவருடைய தபஸூக்கு விக்னத்தைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தான். அவ்விதமே ஒரு தினத்தில், தேவேந்த்ரனானவன் காட்டில் விறகு வெட்டிப் பிழைக்கும் ஒரு கூலியாள்போல் வேஷம் போட்டுக்கொண்டு, கையிலும் ஒரு பெரிய அறுவாளை எடுத்துக்கொண்டு, இந்த மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தான். மஹர்ஷியைப் பார்த்து, "காட்டில் நான் விறகு வெட்டிப் பிழைக்கறவன், இவ்வளவு நாழியாக நான் அங்காங்கு ஸஞ்சாரம் செய்து ச்ரமப்பட்டேன்; வீடு சென்று பசிக்கு ஆஹாரம் செய்துவிட்டு வரலாம் என்ற உத்தேசம். அதுவரையிலும் இந்த அறுவாளை இந்த ஆச்ரமத்தில் வைத்து விட்டுப் போகிறேன்" என்று சொன்னான். மஹர்ஷியும் ரொம்பவும் ஸாதுவானதால் அதன் உண்மையை அறிய மனதிற்கு விசாரம் செய்ய அவகாசம் கொடுக்காமல் 'சரி' என்று ஸம்மதித்துவிட்டார். அவனும் மஹர்ஷியினுடைய ஸமீபத்தில் தன் கையில் தரித்து வந்த பெரிய அறுவாளை வைத்துவிட்டு 'இதை ரக்ஷிக்கவேண்டும்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். ஸ்வர்க்கலோகம் சென்று தன் மனோரதம் பூர்த்தியாய்விட்டது என்றும் ஸந்தோஷத்தை அடைந்தான். மஹர்ஷியோ அது முதல் அந்த அறுவாளை ரக்ஷிப்பதான விஷயத்திலேயே யத்னமுள்ளவருக ஆனுர்! 'இதுவோ அன்யனுடைய ஸொத்து; நம்மிடம் அவன் ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிருன். நான் ஸமாதியிலமர்ந்திருந்தால் யாராவது மற்ெருரு வேடன் இதை அபஹரித்துக்கொண்டு போய்விடுவான். அந்தப் பழி நம்மிடமல்லவா ஏற்படும்! முன்பே நான் இங்கு வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கவேண்

டும். அப்படியோ சொல்லத் தவறிவிட்டோம். ஆகையால் இந்த அறுவாளுக்கு ஸொந்தமான மனுஷ்யன் வந்து அதைத் திரும்ப எடுத்துப்போகும் வரையில் நான் தான் ரக்ஷிப்பதில் கடமைப்பட்டவன்' என்று எண்ணி ஸமாதியில்கூட கண் மூடாமலே திறந்துகொண்டு அறுவாளை கவனித்துக்கொண்டு வந்தார். ஆச்ரமத்தை விட்டு வெளியில் போகும் ஸந்தர்ப்பங்களிலும், ஸ்நானம் செய்யப்போகும் காலத்திலும் பல, மூலாதிகளை க்ரஹிக்க போகும் காலத்திலும், இந்த அறுவாளை கையிலெடுத்துக்கொண்டே போவார். ஒரு க்ஷணம் கூட அறுவாளில்லாமல் அவர் இருப்பதில்லை.

இவ்விதமிருக்கும்பொழுது ஒரு நாள் இவருக்கு பசி அதிகமாக ஏற்பட்டுவிட்டது. இவருடைய எதிரில் காட்டிலுள்ள அபூர்வமான சில ம்ருகங்கள் தென்பட்டன. 'நமது கையில்தான் பெரிய வாள் இருந்துவருகிறதே! இந்த ம்ருகங்களை நான் ஹிம்ஸித்து ஏன் மாம்ஸத்தை உட்கொள்ளக்கூடாது?' என்ற புத்தி அவருக்கு ஏற்பட்டுவிட்டது. பரம தர்மமான தபஸில் புத்தி செல்லாமல், அதர்மமான ஹிம்ஸையிலேயே அந்த மஹர்ஷிக்குப் புத்தியானது ப்ரவர்த்தித்தது. அதற்கு காரணமோ அவரிடம் உள்ள அறுவாளென்றே சொல்லவேண்டும். அப்படியே அந்த மஹர்ஷியும் தினந்தோறும் ம்ருகங்களைக் கொன்று, மாம்ஸங்களை புஜிக்கிறவராக ஆன காரணத்தால் மஹாபாபியாக ஆனார். சரீரம் போன பிற்பாடு, ரௌரவம் முதலான நரகங்களிலும் அவர் துக்கத்தை யநுபவித்தார் என்ற வ்ருத்தாந்தமானது புராதனமானதாகும். நான் மிதிலா நகரத்தில் குழந்தை பருவத்திலிருக்கும்போது, என் தகப்பனார் மூலம் இந்தக் கதையைக் கேட்டு அறிந்தேன்.

अग्निसंयोगवद्धेतुः शस्त्रसंयोग उच्यते ([illegible]) (அக்னிஸம்யோகவத்தேது: சஸ்த்ரஸம்யோகோச்யதே) அக்னி ஸம்பந்தமானது பதார்த்தங்களை பஸ்பமாகச் செய்வதற்கு எப்படிக் காரணமோ அதுபோல் சஸ்த்ர ஸம்பந்தமும், சஸ்த்ரங்களை தரிக்கிறவனை நாசம் செய்யக் காரணமாகிவிடும் என்பது நிச்சயமானது.

இவைகளை யோசிக்கும்பொழுது தங்களிடமோ, லக்ஷ்மணனிடமோ இந்த ஸந்தர்ப்பத்தில் "அஸ்த்ர, சஸ்த்ரங்கள் எதற்காக என்று?', என் புத்தியில் தோன்றுகிறது. அரண்யத்தில் வஸிக்கும் நாம் அஹிம்ஸையைக் கை கொண்டால்

அலங்காரமல்லவா! உன்னிடத்திலுள்ள ஸ்நேஹத்தாலும் பஹுமானமான புத்தியினாலும் உனக்குத் தெரிந்த விஷயத்தை நான் நினைவூட்டினேனே யன்றியில், புதிதாக தர்மத்தை உபதேசம் செய்கிறேன் என்று நினைக்கக்கூடாது. ஆகையால் நமக்கு நேரில் ராக்ஷஸர்கள் அபராதம் செய்யாமலிருக்கும்பொழுது நாம் ராக்ஷஸர்களை ஹிம்ஸை செய்வது உசிதமாக என் புத்தியில் தோன்றவில்லை. ராக்ஷஸர்கள் நமக்கு என்ன அபராதம் செய்தார்கள் என்று யோசிக்கவேண்டும். அப்படி அபராதம் தென்பட்டால் வேறு உபாயாந்தரத்தால் அதை நிவ்ருத்தி செய்துகொள்ள மார்க்கம் இல்லாத போனால் மாத்ரம், ஆயுத ப்ரயோகத்தைச் செய்ய வேண்டும்.

अकुर्वन्तोपि पापानि शुचय: पापसंश्रयात् (𑌅𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍋𑌪𑌿 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌶𑍁𑌚𑌯𑌃 𑌪𑌾𑌪𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌤𑍍) (அகுர்வந்தோபி பாபாநி சுசய: பாபஸம்ச்ரயாத்) என்ற ரீதியாக யாராவது ஒருவன் அபராதம் செய்தவன் தென்படும் பக்ஷத்தில் அவனுக்காக அவனைச் சேர்ந்தவர்கள் அனபராதிகளா யிருக்கும் பக்ஷத்தில் அவர்களையும் கொல்லுவதென்பது கொஞ்சமேனும் ந்யாயமாகாது. ஆகையால் யோசித்துச் செய்யவேண்டிய கார்யமிது.

க்ஷத்ரியர்களுக்கு ஆயுதங்கள் அவச்யந்தான். அதைக் கொண்டுதான் துஷ்ட ஜனங்களை வதித்து தீன ஜனங்களை ரக்ஷிக்கமுடியும். ஆகிலும், அதற்கு இப்பொழுது ஸந்தர்ப்பமில்லை. சஸ்த்ரத்தை தரிப்பதற்கும், வனத்தில் வாஸம் செய்வதற்கும் ஒரு ஸமயத்திலும் ஒத்துவராது. க்ஷத்ரியனுடைய தர்மமும் தபஸ்ஸும், ஒன்றுக்கொன்று விரோதமுள்ளதென்பதைத் தாங்கள் அறிந்தவர்களே. மஹர்ஷிகளுடைய வாஸஸ்தானமாகிய இந்த தேசத்தில் அஹிம்ஸை என்ற தர்மத்தை நாம் கைகொண்டு வஸிப்பதுதான் உசிதமாகும். பதினான்கு ஸம்வத்ஸரங்கள் ஆனபிறகு ராஜ்யம் சென்று, அபிஷேகம் செய்துகொண்ட பிற்பாடு இந்த க்ஷத்ரிய தர்மத்தை அனுஷ்டிக்கலாம். தங்களை அரண்யம் போகும்படி ஆக்ஞாபித்த தாய் தந்தைகளுக்கும், தாங்கள் அரண்யத்தில், மஹர்ஷியைப்போல் வஸித்து வந்தால்தான் ஸந்தோஷம் உண்டாகும்.

धर्मादर्थः प्रभवति धर्मात्प्रभवते सुखम् ।
धर्मेण लभते सर्वं धर्मसारमिदं जगत् ॥

𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍇 𑌸𑍁𑌖𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌲𑌭𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌰𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

தர்மாதர்த்தப்ரபவதி தர்மாத் ப்ரபவதே ஸுகம் ।
தர்மேண லபதே ஸர்வம் தர்மஸாரமிதம் ஜகத் ॥

என்ற சாஸ்த்ரப்படி, தர்மானுஷ்டானத்தால்தான் ஸகல புருஷார்த்தங்களும் மனிதனுக்கு ஸித்திக்கவேண்டும். தர்மத்தால்தான் ஸுகமும் ஏற்படும். ஸமஸ்தமும், தர்மத்தையே மூலாகாரணமாக உடையவை. ஜகத்தே தர்மத்தின் ஸாராம்சம் என்று தான் சொல்லவேண்டும். சரீரத்தை அநேக வ்ரதங்களைச்செய்து க்ருசமாகச்செய்துகொண்டுதான் தர்மத்தை ஸம்பாதிக்கவேண்டுமன்னியில், ஸுகமாக இருந்து தர்மத்தை ஸம்பாதிக்கமுடியாது. ஆகையால், ஸகல புருஷார்த்தத்துக்கும் ஸாதனமான தர்மத்தை, எப்பொழுதும் அரண்யத்தில் வஸிக்கும்வரையில் அனுஷ்டிப்பதைத் தவிர வேறு க்ஷத்ரிய தர்மத்தை இப்பொழுது அனுஷ்டிப்பது உசிதமல்ல.

स्त्री चापलादेतदुदाहृतं मे धर्मं च वक्तुं तव कः समर्थः ।
विचार्य बुद्ध्या तु सहानुजेन यद्रोचते तत्कुरु मा चिरेण ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌚𑌾𑌪𑌲𑌾𑌦𑍇𑌤𑌦𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌂 𑌮𑍇 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂
𑌤𑌵 𑌕𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑌃 ।
𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌸𑌹𑌾𑌨𑍁𑌜𑍇𑌨 𑌯𑌦𑍍𑌰𑍋𑌚𑌤𑍇
𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁 𑌮𑌾 𑌚𑌿𑌰𑍇𑌣 ॥

ஸ்த்ரீ சாபலாதேதகுதாஹ்ருதம் மே தர்மம் ச வக்தும் தவ க:ஸமர்த்த: ।
விசார்ய புத்த்யா து ஸஹாநுஜேந யத்ரோசதே தத்குரு மா சிரேண ॥

ராமா! நான் ஸ்த்ரீயானதினால் சாபல்யத்தால் இதை நான் உன்னிடம் தெரிவித்துக்கொண்டேன். உனக்கெதிரில் தர்மத்தை யாரால் உபதேசிக்கமுடியும்? லக்ஷ்மணனோடுகூட இந்த ஸமயத்தில் செய்யவேண்டிய கார்யம் இன்னதுதான் என்பதை விசாரித்து, எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அதை அனுஷ்டிப்பதிலும் நான் த்ருப்தி உள்ளவள்தான்.

ஸகல ராக்ஷஸர்களையும் நாசம் செய்து ஸஜ்ஜனங்களை ரக்ஷிப்பதென்பதைச் செய்யவே தாங்கள் முன்வரும் பக்ஷத்தில், தங்களுக்கு நேரிடையாக அபராதம் செய்யாத ராக்ஷஸர்களை கொன்றீர்கள் என்ற அபவாதம் தங்களுக்கு வராமலிருக்கும்படி, க்ஷத்ரிய தர்மத்தை அனுஷ்டிப்பதால் அது எனக்கு ஸம்மதம்தான். அதாவது, இந்த கூடமான தாத்பர்யத்தால் அபராதம் செய்யாத ராக்ஷஸர்களைத் தாங்கள் கொல்லமாட்டீர்கள், 'என்னை அபஹரித்துக்கொண்டு போனான்' என்ற அபராதத்தை ராக்ஷஸர்களிடம் ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களைக் கொன்று ஸஜ்ஜனங்களைத் தாங்கள் ரக்ஷிக்க இஷ்டப்படும் பக்ஷத்திலும், ராக்ஷஸர்களுடைய அபராதத்தில் நான் மூலகாரணமாக ஆவதிலும், எனக்கு ஸம்மதம்தான்" என்பதை ஸீதாதேவியானவள் ஸூசிப்பிக்கின்றாள் நிரபராதியான ராக்ஷஸர்களைக் கொல்வது ந்யாயமில்லை என்பதுதான் ஸீதையின் அபிப்ராயமாகும்.

இவ்விதம் ஸீதையின் அபிப்ராயத்தை அறிந்த ராமனோ, 'நாம் ஸத்யத்தைக் கைவிடககூடாது. மஹர்ஷிகளுக்கு எதிரிலோ, ராக்ஷஸர்களை வதிப்பதாக ப்ரதிக்ஞை செய்திருக்கிறோம். ப்ரதிக்ஞையும் நிறைவேற வேண்டும். அபராதமன்னியில் ராக்ஷஸர்களையும் கொல்லக்கூடாது. ஸீதாபஹாரத்தை ராக்ஷஸர்களிடம் காட்டி அவர்களைக் கொல்வதென்ற விஷயத்திலும், நமக்கு ஸம்மதம்தான். ஸீதாபஹாரத்தை ஸஹித்துக்கொண்டாவது, ராக்ஷஸர்களை வதைத்து மஹர்ஷிகளுக்கு நன்மையைச் செய்து, ப்ரதிக்ஞையை ஸத்யமாகச் செய்துகொண்டோம் என்ற கீர்த்தி நமக்கு ஏற்பட்டால் போதுமானது' என்றதை எண்ணி ராமன் ஸீதையைப் பார்த்து "ஹே ஸீதே! நீ சொன்னதெல்லாம் என் மனதிற்கு ரொம்பவும் த்ருப்தியைக் கொடுக்கின்றன. சாஸ்த்ரத்திற்கு ஸம்மதமானவை. குலாசாரத்தையும் காப்பாற்றுகின்றன. உன்னுடைய முகமாகவே ஸஜ்ஜனங்களை ரக்ஷிப்பதற்கே, க்ஷத்ரியர்கள் ஆயுதத்தை தரிக்கின்றார்கள் என்ற தர்மத்தையும் நான் அறிந்தவன். எவ்வளவு மஹர்ஷிகள் ராக்ஷஸர்களுடைய பாதையை ஸஹிக்க முடியாமல் நம்மை சரணமடைந்தார்கள். அம்மஹர்ஷிகளோ, தங்களுடைய தபோ பலத்தால் தண்டகாரண்யத்தில் வஸிக்கும் ராக்ஷஸர்களை த்வம்ஸம் செய்ய சக்தியுள்ளவர்களாக இருந்தாலும், அநேக காலமாக அனுஷ்டித்து வந்த தபஸ்ஸை வீணாக்கிக் கொள்ள இஷ்டமில்லாதவர்களாக இருக்கிறார்கள். என்

னுடைய ஸ்வரூபமோ ரக்ஷக ஸ்வரூபம். அவர்களோ ரக்ஷ்ய ஸ்வரூபபூதர்கள். மஹர்ஷிகளுக்கும் எனக்கும் ஏற்பட்ட ரக்ஷ்யரக்ஷகபாவஸம்பந்தத்திற்கு ஹானிவராமலிருக்க என்னை அவர்கள் சரணமடைந்தார்கள். நானும் அவர்களுக்கு எதிரில், ராக்ஷஸர்களை வதம் செய்து உங்களுக்கு நன்மையைச் செய்வதற்காகவே பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மோபதேசத்தால் தண்டகாரண்யத்தில் ப்ரவேசம் செய்திருக்கிறேன். என்னை ஆச்ரயித்த மஹர்ஷிகளுக்கு விரோதிகளே என் விரோதிகளானதால் ராக்ஷஸர்களை வதிப்பதில் எனக்கு நேரில் ராக்ஷஸர்கள் என்ன அபராதம் செய்தார்கள் என்று நீ கேட்பது ந்யாயமாகாது. யார்தான் பகவானுக்கு நேரில் அபராதத்தைச் செய்யமுடியும்? பக்தர்களுக்கு அபராதத்தைச் செய்தவர்கள்தான் பகவானுக்கே அபராதிகளாக ஆகிறார்கள். ஆகையால் ரிஷிகளுக்கு ராக்ஷஸர்கள் செய்ததும் தீங்கே, எனக்கு அவர்கள் அபராதம் செய்தவர்களாக ஆகிறபடியால் அவர்களை நான் கொல்லலாம். அது தர்மம்தான். க்ஷத்ரிய ஜாதியில் பிறந்தாலே போதும் அவனுக்கும் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தில் அதிகாரமுண்டு. ராஜ்யாபிஷேகம் செய்துகொண்டவனுக்குத்தான் அதிகாரமுண்டு என்று ந்யமமில்லை. என் விஷயத்திலோ, பிறகு ராஜ்யாபிஷேகம் நடக்கப்போகிறது. ஆகையால் ராக்ஷஸர்களை வதித்து, மஹர்ஷிகளை ரக்ஷிக்கும் விஷயத்தில் நான் செய்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றித்தான் ஆவேன. ப்ரதிக்ஞையை மாற்றுவதில் நான் இஷ்டமுள்ளவனல்ல. அந்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவதில் எவ்விதமான கஷ்டங்கள் எனக்கு நேர்ந்தாலும் நான் அதை ஸஹித்துக் கொள்வதற்கும் தயாராகத்தான் இருந்துவருகிறேன்" என்று ஸீதையினிடம் தன்னுடைய ஸத்ய ப்ரதிக்ஞையைத் தெரிவித்துக் கொண்டார்.

अप्यहं जीवितं जह्यां त्वां वा सीते सलक्ष्मणाम् ।
न तु प्रतिज्ञां संश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः ॥
तदवश्यं मया कार्यं ऋषीणां परिपालनम् ।
अनुक्तेनापि वैदेहि प्रतिज्ञाय तु किं पुनः ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் ।
ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ॥
தத³வஶ்யம் மயா கார்யம் ருஷீணாம் பரிபாலநம் ।
அநுக்தேநாபி வைதே³ஹி ப்ரதிஜ்ஞாய து கிம் புந: ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் ।
ந து ப்ரதிக்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ॥
ததவச்யம் மயா கார்யம் ருஷீணாம் பரிபாலநம் ।
அநுக்தேநாபி வைதேஹி ப்ரதிக்ஞாய து கிம் புந: ॥

"ஹே ஸீதே! आत्मानं सर्वदा रक्षेत् दारैरपि धनैरपि (ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷேத் தாரைரபி தநைரபி) ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷேத் தாரைரபி தநைரபி) என்று சொல்லியபடி பொருள், ஸ்த்ரீ முதலான ப்ரிய வஸ்துக்களை இழந்தாலும், அவைகளைத் துச்சம் என்று இழந்து, தனது ஆத்மாவை ஆபத்தினின்றும் ரக்ஷித்துக்கொள்ளவேண்டும் என்பதனால் உன்னைக் காட்டிலும், லக்ஷ்மணனைக் காட்டிலும், அயோத்யா ராஜ்யத்தைக் காட்டிலும், ஸர்வலோகங்களைக் காட்டிலும், எனக்கு ப்ரியமான என்னுடைய உயிரை நான், இழந்துகொள்ளும்படி நேரிட்டாலும், உயிரையும் இழந்துகொள்வேனன்றி ப்ரதிக்ஞையைக் கைவிடமாட்டேன். அதுபோலவே आत्मा स्वानुगतिः आत्मनः (ஆத்மா ஸ்வாநுகதி: ஆத்மந:) (ப்ராதா ஸ்வோ ஹ்ருதி: ஆத்மந:) என்ற சாஸ்த்ரப்படி எனக்கு வேறுபடாத ஸ்வரூபத்துடன் கூடின ஸஹோதரனான லக்ஷ்மணனை இழந்துகொள்ளும்படி நேர்ந்தாலும் அதற்கும் ஸம்மதிப்பேன். ப்ரதிக்ஞையைக் கைவிட என் மனம் ஒவ்வாது. அதுபோலவே, अर्धो वा एष आत्मनः यत्पत्नी प्राणेभ्यो हि गरीयसी (அர்த்தோ வா ஏஷ ஆத்மந: யத்பத்நீ ப்ராணேப்யோ ஹி கரீயஸீ) (அர்த்தோ வா ஏஷ ஆத்மந: யத்பத்நீ ப்ராணேப்யோ ஹி கரீயஸீ) என்ற சாஸ்த்ரப்படி புருஷனுடைய பாதி உடலாகச் சொல்லப்பட்டிருக்கும் தர்மபத்னியான உன்னையும் என் ப்ராணனுக்கும் மேலாக பாவித்து வந்த நான் த்யாகம் செய்வதற்கு ஸமயம் நேர்ந்தாலும், த்யாகம் செய்யவும் ஸித்தமாக இருந்துவருகிறேன். ப்ரதிக்ஞையை மாத்ரம் கைவிடமாட்டேன். ப்ரதிக்ஞைக்கு விரோதமானால், என் உயிரே எனக்கு மேலாகத் தோன்றாமலிருக்கும்பொழுது, உன்னையோ லக்ஷ்மணனையோ இவர்களையா லக்ஷ்யம் செய்யப்போகிறேன்? ஜாதி, குல கோத்ர மற்ற வழியில் போகும் ஒரு மனிதனுக்கெதிரில் நான் ஒரு ப்ரதிக்ஞை செய்தாலும் அந்த ப்ரதிக்ஞையையும் நிறைவேற்றித்தான் தீருவேன். அவ்விதமிருக்கும்பொழுது ப்ராம்மணர்களான மஹர்ஷிகளுக்கெதிரில் செய்த ப்ரதிக்ஞையை எவ்விதம் த்யாகம் செய்ய முடியும்? எவ்விதமான ஆபத்து வந்தாலும் அந்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவதில்தான

நான் ஊக்கமுள்ளவனாக இருப்பேன் என்பதை நீ அறியவும். என்னுடைய அவதார ப்ரயோஜனமான துஷ்ட நிக்ரஹத்தை முன்னிட்டு ஏற்படும் சிஷ்டபரிபாலனத்தை மஹர்ஷிகள் என்னிடம் ப்ரார்த்திக்கும்படி நான் வைத்துக்கொண்டதே என்னுடைய அபராதமாகும். அவ்விதமிருக்கும்பொழுது அவர்கள் வந்து நேரில் கேட்டுக்கொண்டு நான் ப்ரதிக்ஞை செய்துகொடுத்த பிறபாடு, அந்தக் கார்யத்தை நான் முடிக்காமலிருப்பதற்கு எந்த சாஸ்த்ரமும் அவகாசம் கொடுக்காது. ஆகையால் அவச்யம் ப்ரதிக்ஞையை நிறைவேற்றித்தருவேன். நீயும் இந்த தத்வத்தை அறிந்தவள்தான். என்னிடத்தில் உனக்குள்ள ஸ்நேஹத்தால் ப்ரக்ருதமான ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவதில் உனக்கும் நமக்கும் ஒரு விரஹம் ஏற்பட்டுவிடுமே என்று நினைத்து நீ சொல்லுகிறாயே அன்னியில் என் அபிப்ராயத்திற்கு விரோதமாக நீ பேசுவதாக நான் நினைக்கவில்லை. இந்த ப்ரஸங்கம் மூலமாக என்னிடத்தில் உனக்கிருக்கும் அளவற்ற ப்ரேமையை ப்ரகாசப்படுத்தினதால் நான் ரொம்பவும் ஸந்தோஷமடைகிறேன். நீ பேசின வார்த்தைகளில் தர்மத்திற்கு ப்ராதான்யத்தைக் கொடுத்துக்கொண்டே பேசினாய். அதுவும், कर्मणैवहि संसिद्धिं आस्थिता: जनकादय: (கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா: ஜநகாதய:) (கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா: ஜநகாதய:) என்று ப்ரஸித்திபெற்ற ஜனகமஹாராஜனுடைய குலத்தில் நீ அவதரித்ததற்கு நீ செய்யும் உபந்யாஸம் ரொம்பவும் பொருத்தமானது. ப்ரதிக்ஞையை நிறைவேற்றும் நிமித்தமாக தாற்காலிகமாக உனக்கும் நமக்கும் விரஹம் (பிரிதல்) ஏற்படக்கூடுமானாலும், அதிசீக்ரத்தில் அதற்குப் பரிஹாரம் ஏற்படும்படியான ஆநுகூல்யமும், தைவானுக்ரஹத்தால் நமக்கு ஏற்படும் என்பதை நீ தீர்மானித்துக் கொண்டு மனதை ஸமாதானம் செய்துகொள்ளவேண்டும்.

इत्येवमुक्त्वा वचनं महात्मा सीतां प्रियां मैथिल राजपुत्रीम् ।
रामो धनुष्मान्सह लक्ष्मणेन जगाम रम्याणि तपोवनानि ॥

இத்யேவமுக்த்வா வசநம் மஹாத்மா ஸீதாம் ப்ரியாம்
மைதில ராஜபுத்ரீம் ।
ராமோ தநுஷ்மாந்ஸஹ லக்ஷ்மணேந ஜகாம ரம்யாணி
தபோவநாநி ॥

இத்யேவமுக்த்வா வசநம் மஹாத்மா ஸீதாம் ப்ரியாம் மைதிலராஜபுத்ரீம் ।
ராமோ தநுஷ்மான்ஸஹ லக்ஷ்மணேந ஜகாம ரம்யாணி தபோவநாநி ॥

என்று சொல்லி ஸீதையை ஸமாதானப்படுத்திவிட்டு ஸீதையுடனும், லக்ஷ்மணனுடனும் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினிடமிருந்து ஆக்ஞையையும் பெற்றுக்கொண்டு ப்ரஸ்தானமாகி, அநேக மஹர்ஷிகளுடைய ஆச்ரம மண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டு வரும் தண்டகாரண்யத்தில் ஸ்ரீராமன் ஸஞ்சரித்தார்.

மஹர்ஷிகளும், வேத சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட எந்தக் கர்மாக்களும், அபாயத்தோடு கூடினவைகளே; அதாவது அந்தக் கர்மாக்களை நாம் அநுஷ்டித்துவிட்டால் ச்ரேயஸ்ஸை அடையலாம் என்பதை நிச்சயமாக நம்பக் கூடியவைகளல்ல. ராமனுடைய ஸேவையோ, நிரபாயமான உபாயமாகும் நிச்சயமாக ச்ரேயஸ்ஸை அடையலாம். ராம ஸேவையைச் செய்த மனிதனிடம் எவ்விதமான தோஷங்களிருந்தாலும் दोषोयद्यपि तस्यस्यात् सतां एतदगर्हितं (𑌦𑍋𑌷𑍋𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌤𑌾𑌂 𑌏𑌤𑌦𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌂) (தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாம் ஏததகர்ஹிதம்) என்றபடியும், नस्मरति अपकाराणां शतमपि आत्मवत्तया (𑌨𑌸𑍍𑌮𑌰𑌤𑌿 𑌅𑌪𑌕𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑌤𑌮𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌵𑌤𑍍𑌤𑌯𑌾) (நஸ்மரதி அபகாராணும் சதமபி ஆத்மவத்தயா) என்று சொல்லியபடியும், பகவானை ஸ்ரீராமன் அந்த தோஷங்களைப் பொருட்படுத்தமாட்டார். அதனால் புருஷனுக்கு புருஷார்த்தங்களை அடைய தடையும் ஏற்படாது என்று தீர்மானித்து மஹர்ஷிகளும் திரள் திரளாக ராமனை அநுஸரித்துப் போய்க்கொண்டு தன் தன் ஆச்ரமத்திற்குள் வந்து ராமன் அநுக்ரஹிக்கவேண்டுமென்ற ப்ரார்த்தனையுடனும்ன் வேத கோஷத்தோடு ராமனை அநுஸரித்துப் போகின்றார்கள். பகவான் தண்டகாரண்யத்தில் போய்க்கொண்டிருக்கும் அழகை கவியானவர் மிகவும் சிறப்புடன் கூடினதாக வர்ணிக்கின்றார். அதாவது:

अग्रतः प्रययौ रामः सीता मध्ये सुमध्यमा ।
पृष्ठतस्तु धनुष्पाणिः लक्ष्मणोऽनुजगाम ॥

𑌅𑌗𑍍𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌯𑍌 𑌰𑌾𑌮𑌃 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 ।
𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍁 𑌧𑌨𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍁𑌜𑌗𑌾𑌮 ॥

அக்ர த: ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா ।
ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணி: லக்ஷ்மணோ நுஜகாம ॥

என்ற ச்லோகத்தால் "ओं नमो नारायणाय" (ஓம் நமோ நாராயணாய) (ஓம் நமோ நாராயணாய) என்ற அஷ்டாக்ஷரீ மஹாமந்த்ரத்தின் அர்த்தமே ராமனுடைய ஸஞ்சாரத்தால் ப்ரகாசிக்கின்றது. அந்த அஷ்டாக்ஷரீ மந்த்ரத்தின் முத லெழுத்தான 'ஓம்'காரத்தின் अ (அ) (அ) காரமானது முதல் எழுத்தாகும். அக்காரணத்தால்தான் ராமன் முன்பு செல்கிறார். रामः (ராம:) (ராம:) என்ற பதமானது 'ஸர்வ ஜனங்களையும் ரமிக்கச் செய்கிறவன்' என்ற பொருளை வெளிப்படுத்துகிறது. ப்ராணிகளுக்கு உயிர் நிலையைக் கொடுத்து ரக்ஷிக்கிறவன்தான் ரமிக்கச் செய்கிறவனாக ஆகு வான். அதனால் 'உயிர்நிலையை ப்ராணிகளுக்குக் கொடுக்கிறவனும், ஸர்வ ப்ராணிகளுக்கும் மூலகாரணமாக ஆகிறவனும், ரக்ஷகனாக ஆகிறவனுமே இந்த ராமன்' என்று வெளியாகிறது. रमायाः अयं रामः (ரமாயா: அயம் ராம:) (ரமாயா: அயம் ராம:) என்ற ஸமாஸத்தால் ரமை என்ற மஹா லக்ஷ்மியினுடைய ஸம்பந்தமும் இந்த ராமனிடத்தில் இருந்து வருகிறது என்று தோன்றுகிறபடியால் லக்ஷ்மீபதி என்ற பொருளும் வெளியாகிறது. ப்ரணவத்தின் இரண்டாவது எழுத்தான उ (உ) (உ) காரம் अ (அ) (அ) காரத்திற்கும், म (ம) (ம) காரத்திற்கும் நடுவிலுள்ள எழுத்தானதினால், அந்த उ (உ) (உ) காரத்தின் பொருளாயும் புருஷாகார பூதை யாயும் உள்ள ஸீதாதேவியானவள் நடுவில் செல்லுகிறாள் என்பதும் ப்ரணவத்தின் அர்த்தத்திற்குப் பொருத்தமா யிருக்கிறது. म (ம) (ம) காரத்தின் பொருளை லக்ஷ்மணன் என்று சொல்லவேண்டும். லக்ஷ்மண: என்ற பதத்தில் मन ज्ञाने (மந ஜ்ஞாநே) (மந ஞானே) என்ற தாதுவை அநு ஸரித்து பகவத் தத்வத்தை அறிந்தவர்களுக்குள் முதன்மை யான ஞானியே இந்த லக்ஷ்மணனாழ்வார் என்பது ப்ர காசிக்கிறது. இவ்விதமாக, ஞானத்தை மாத்ரம் அடைந் தவரல்ல, பகவானுடைய நிரந்தரமான கைங்கர்யத்திலும் ஈடுபட்ட பரம பாகவதன இந்த லக்ஷ்மண ஸ்வாமிதான் என் பதையும் धनुष्पाणिः (தநுஷ்பாணி:) (தனுஷ்பாணி:) என்ற பத மானது ப்ரகாசப்படுத்துகிறது. अनुजगाम (அநுஜகாம) (அநு ஜகாம) என்ற பதத்தால் ராமனை அநுஸரித்துப் போகிறார் என்று வெளியாகிறபடியால் பகவானுடைய நித்ய பர தந்த்ரன்தான் லக்ஷ்மணஸ்வாமி என்பதையும் ஸூசிப்பிக் கின்றதுபோல் ஆகிறது. ओं नमो नारायणाय (ஓம் நமோ

நாராயணாய) (ஓம் நமோ நாராயணுய) என்ற மந்த்ரமே அஷ்டாக்ஷரீ மஹாமந்த்ரமாகும். ॐ (ஓ) (ஓம்) என்ற ப்ரணவத்திலோ மஹாவிஷ்ணு, லக்ஷ்மீதேவி, ஆதிசேஷன் என்ற மூன்று தத்துவங்களையும். முன்பு ப்ரகாசப்படுத்தப் பட்டன. नारायण (நாராயண) (நாராயண) என்ற சப்தத்தால் ஜலத்தையே வாஸஸ்தானமாக உடைத்தானவன் என்ற தாத்பர்யம் வெளியாகும்.

आपो नरा इति प्रोक्ता आपो वै नरसूनवः ।
तायदस्यायनं प्रोक्तं तेन नारायणस्मृतः ॥

ஆபொ நரா இதி ப்ரொக்தா ஆபொ வை நரஸூநவஃ ।
தாயதஸ்யாயநம் ப்ரொக்தம் தெந நாராயணஸ்ம்ருதஃ ॥

ஆபோ நரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: ।
தாயதஸ்யாயநம் ப்ரோக்தம் தேந நாராயணஸ்ம்ருத: ॥

என்ற ஸ்ம்ருதியை அநுஸரித்து நரன் என்ற சப்தத்திற்கு மஹாவிஷ்ணு என்று அர்த்தமானதாலும், அந்த மஹாவிஷ்ணுவினுடைய முதல் ஸ்ருஷ்டி ஜலமானதாலும், தன்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அந்த ஜலத்தில் ப்ரளய காலத்தில் தான் வாஸம் செய்வதாலும், மஹாவிஷ்ணுவிற்கு நாராயணன் என்ற பெயர் ஏற்பட்டது. இதை அநுஸரித்துத்தான் एको हवै नारायण आसीत् (ஏகொ ஹவை நாராயண ஆஸீத்) (ஏகோ ஹவை நாராயண ஆஸீத்) என்ற ச்ருதியும் உத்கோஷிக்கின்றது. नरतिइति नरःप्रोक्तः परमात्मा सनातनः (நரதி இதி நரஃப்ரொக்தஃ பரமாத்மா ஸநாதநஃ) (நரதி இதி நர:ப்ரோக்த: பரமாத்மா ஸநாதந:) என்ற வாக்யமும் नरः (நரஃ) (நர:) என்ற பதத்திற்கு பகவான்தான் என்ற அர்த்தத்தை அறிந்து கொள்ள ப்ரமாணமாகும். नॄ नये (ந்ரு நயெ) (ந்ரு நயே) என்ற தாதுவாலும், ஜீவகோடிகளுக்கு அவரவர்களுக்குக் கர்மாவுக்குத் தக்கபடி பலத்தைப் பிரித்துக் கொடுக்கிறவன் என்ற பொருள் விளங்குகிறபடியால் फलमतः अपपत्तेः (பலமதஃ உபபத்தெஃ) (பலமத: அபபத்தே:) என்ற ந்யாயத்தை அநுஸரித்து கர்மபல தாதாவான பகவானே நாராயணன் என்ற சப்தத்தால் சொல்லப்படுவான் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஜலத்தில் ஒரு புருஷன் எப்படி வாஸம் செய்ய முடியும் என்ற தாத்பர்யத்தை உதாஹரண மூலமாக நிரூ

பணம் செய்ய வேதத்திற்கு உப ப்ரும்மணமான இந்த ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராமன் ஸஞ்சாரம்செய்யும் ஆரண்யத்தில் மாண்டகர்ணி மஹர்ஷியினுடைய வ்ருத்தாந்தமானது சொல்லப்படுகிறது. அதாவது:—

மஹர்ஷிகளுடன் ராமன் ஆரண்யத்தில் போகும்பொழுது நடுமார்க்கத்தில் ஒரு பெரிய தடாகத்தை ராமன் பார்த்தார். அது ரொம்பவும் அகலமாயும், நீண்டதாகவும், அம்ருதம் போல் பரிசுத்தமான ஜலத்தால் நிரம்பினதாயும் இருந்தது. ஜலத்திற்குள்ளிருந்து விசித்ரமான வாத்யகோஷங்கள் ராமனுடைய காதில் கேட்டன. அதைக் கேட்டு ஆச்சர்யத்தையடைந்த ராமனும், தர்மப்ருத் என்ற மஹர்ஷியினிடம், "மஹர்ஷே! இது என்ன ஆச்சர்யமாயிருக்கிறது! தடாகத்திற்குள் ரமணீயமான வாத்ய கோஷங்கள் உத்கோஷித்துக் கொண்டிருக்கின்றனவே! அதன் காரணமென்ன?" என்று கேட்க, தர்மப்ருத் என்ற மஹர்ஷியும், "ராமா! மாண்டகர்ணீ என்ற மஹர்ஷி யொருவர் இங்கு தபஸ் செய்து வந்தார். அதை தேவர்கள் அறிந்து ஸ்வர்க்கத்தை அவர் வசப்படுத்திக்கொண்டு விடுவாரோ என்ற பயத்தால் அப்ஸர ஸ்த்ரீகளை அனுப்பி அவருடைய தவத்திற்கு விக்னத்தை செய்தார்கள். அந்த மஹர்ஷியும் அந்த அப்ஸரஸ்ஸுக்களுடைய ச்ருங்காரரஸ ப்ரதானமான விலாஸத்தில் மயங்கி, அந்த ஸ்த்ரீகளுக்கு வசமாகிவிட்டார். உடன் தன் தபஸ்ஸால் ப்ரம்மாவினுடைய வர பலத்தை முன்னிட்டுக்கொண்டுப் பெரிதான இந்த ஸரஸ்ஸை நிர்மாணம்செய்து, அந்த ஸரஸ்ஸிற்குள் மாடகூட ப்ராஸாதாதிகளால் அலங்கரிக்கப்பட்ட திவ்யமான க்ரஹத்தையும் நிர்மாணம் செய்துகொண்டு, அந்த அப்ஸரஸ்ஸுக்களோடு க்ரீடித்துக்கொண்டு வருகிறார். அந்த அப்ஸரஸ்ஸுக்கள் ஐந்து பேர்களானதால், இந்த தடாகத்திற்கு பஞ்சாப்ஸரஸ் என்று பெயர் ஏற்பட்டது. அந்த ஸ்த்ரீகள் ஜலத்திற்குள் மஹர்ஷிக்கு எதிரில் செய்யும் கானவித்யையின் கௌசலம்தான் மார்க்கத்தில் போகும் ப்ராணிகளுடைய மனதை அபஹரிக்கின்றது" என்று சொன்னார். ராமனும் அதைக்கேட்டு ஆச்சரியத்தை யடைந்து தானும் அந்த ஸரஸ்ஸிற்கு நமஸ்காரம் செய்துவிட்டு, ஸீதா பிராட்டியையும், லக்ஷ்மணனையும் நமஸ்காரம் செய்யச்சொல்லி, ஸரஸ்ஸை ப்ரதக்ஷிணமாகச் சென்று மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு விஜயமானார்.

இந்தக் கதையால் 'ஜீவகோடிகளுக்குள் ஒரு ஜீவனே தபோமஹிமையினால் ஜலதிற்குள் வஸித்துக்கொண்டு திவ்ய

ஸுகானுபவத்தோடு விளங்கிவருகிறார் என்றால், நித்ய ஸித்தமான ஐச்வர்யத்தோடுகூடின பகவான் ஸமுத்ர ஜலத்தில் ஆதிசேஷ பகவானின் உடலில் சயனம் செய்துகொண்டு யோக நித்ரையில் ப்ரளயகாலத்தில் அமர்ந்திருப்பார்' என்பதை யார் தான் ஒப்புக்கொள்ள முடியாது! வேதத்திலுள்ள नारायण (நாராயண) (நாராயண) என்ற சப்தத்திற்கு உபப்ரமாணமாக, அதாவது அத்தாக்ஷியாக, மேற்சொன்ன கதையை அறிந்துகொள்ளவேண்டும்.

இதனால் 'மஹா ப்ரளய காலத்தில் ஸகல ஜகத்தையும் தனது மாயையில் உபஸம்ஹாரம் செய்துகொண்டு, அந்த மாயையை ஜலரூபமாக ப்ரவாஹிக்கச் செய்து, அந்த ஜலத்தில் ஆதிசேஷனாகிய பர்யங்கத்தில் லக்ஷ்மீதேவியோடுகூட ரமித்துக்கொண்டு யோக நித்ரையில் பரிபூர்ணமான தேஜஸ்ஸுடன் விளங்கிவரும் அகண்டமான பகவானின் பொருட்டு நான் நமஸ்கரிக்கின்றேன்' என்று அஷ்டாக்ஷரீ மஹாமந்த்ரத்தின் அர்த்தமானது ப்ரகாசிக்கின்றது. இந்த அர்த்தத்தை அநுஸந்தானம் செய்துகொண்டு, அஷ்டாக்ஷரீ மஹா மந்த்ரத்தை ஜபிப்பவர்கள் ஸகலவிதமான புருஷார்த்தத்தையும் தன் வசப்படுத்திக்கொள்வதோடுங்கூட பகவானுடைய ஸாரூப்யத்திற்கும் தான் முக்யாதிகாரிகளாக ஆவார்கள் என்பது ஸித்தமாகிறது. இவ்விதமான வைபவத்தை ராமனுடன் அநுஸரித்துச் செல்லும் மஹர்ஷிகளே அநுபவித்தவர்கள்.

பகவானான ராமன், ஸீதையுடனும், லக்ஷ்மணனுடனும், மஹர்ஷிகளுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி அந்தந்த ரிஷிகளுடைய ஆச்ரமங்களில் சில நாட்களாகவும், சில மாஸங்களாகவும் வாஸம்செய்துவிட்டு தன்னுடைய அரண்ய வாஸம் பதினான்கு வருஷங்களுக்குள், பதிமூன்று வருஷங்களைக் கடத்தி விட்டு, பதினான்காவது வருஷ ஆரம்பத்தில் திரும்பவும் ஸுதீக்ஷ்ண மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கே வந்து, அந்த மஹர்ஷியினுடைய அநுக்ரஹத்தால் பஞ்சவடீ தீரம் சென்று, அங்கு கோதாவரீ நதிக்கரையில் லக்ஷ்மணனால் நிர்மாணம் செய்யப்பட்ட அழகான குடீரத்தில், ஸீதையுடன் ஸுகமாக வாஸம் செய்யத் தீர்மானித்தார். பஞ்சவடீதீரம் போகும் நடுவழியில் அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ப்ராதாவான இத்மவாஹர் என்ற மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திலும் சில தினங்கள் தங்கி விட்டு, பிறகு அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆச்ரமம் சென்று அகஸ்த்ய மஹர்ஷியினாலும் விதிவத்தாகத் தான்

பூஜிக்கப்பட்டு, இந்த்ரன் மூலமாக அகஸ்த்ய மஹர்ஷிக்குக்
கிடைத்த அவருடைய ஆச்ரமத்தில் அவரால் பூஜிக்கப்பட்டு
வந்த அபூர்வமான ஒரு தநுஸ் (வில்) பாணங்களால் நிரம்பிய
அம்பராத்தூணி ஒரு கத்தி இவைகளையும் அகஸ்த்ய மஹர்ஷி
பரம ஸந்தோஷத்துடன் தனக்குப் பரிசாக அளித்ததையும்
பெற்றுக்கொண்டார். அகஸ்த்யமஹர்ஷியினுடைய ஆச்ரமத்
தில் ஸகல தேவதைகளுடைய ஆலயங்களையும் பார்த்த
ராமன் ஆச்சர்யத்தை அடைந்து, சிவாலயம் மாத்ரம்
அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில்
காணுமல் இருந்த ஆச்சர்யத்தைத் தான
டைந்து அகஸ்த்ய மஹர்ஷியைப் பார்த்து "சிவாலயம் இல்
லாததற்குக் காரணம் என்ன?" என்று ராமன் கேட்டார்.
அகஸ்த்ய மஹர்ஷியும் "ராமா! க்ஷுத்ர தேவதைகளுடைய
நடுவில் பரிபூர்ணமான அகண்ட வஸ்துவான சிவனுடைய
ஆலயத்தை நிர்மாணம் செய்து அந்த ப்ரபுவை பரிச்சேதப்
படுத்துவதில் எனக்கிஷ்டமில்லை. அவன் ஸர்வ வ்யாபியான
தால் அந்த ப்ரபுவை அகண்டமாகவே நான் த்யானம் செய்து
வருகிறேன்" என்று ஸமாதானம் சொல்ல, அதைக் கேட்க
ராமனும், ஸீதையும், லக்ஷ்மணனும் பரம ஸந்தோஷத்தை
யடைந்து, பிறகு அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆசிர்வாதத்
துடன் பஞ்சவடீ தீரத்திற்கு வந்தார்கள்.

சூர்ப்பணகையின் மானபங்கம்

பஞ்சவடீ தீர்த்தத்திலோ, லக்ஷ்மணஸ்வாமியினுல் நிர்மா
ணம் செய்யப்பட்ட குடீரத்தில் வாஸம் செய்துகொண்டு
ஸ்ரீராமன் மிகவும் ஸுகமாகக் காலத்தைக் கழித்தார். ஐந்து
ஆலமரங்களின் நிழல் ஸௌக்யத்தையும், கோதாவரீ நதியின்
அழகான தீர்த்தத்தின் மஹிமையையும் அனுபவித்துக்
கொண்டு ராமன் பரமானந்தத்தை அடைந்தார். அநேக
மஹர்ஷிகளும் தினந்தோறும் ராமனுடைய ஸமீபம் வந்து
ப்ரம்ம விசாரம் செய்துகொண்டு வந்தார்கள்.

இவ்விதமிருக்கும் தருணத்தில், சூர்ப்பணகை என்ற பெய
ருடன் கூடின ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீ ராமனுடைய
ஆச்ரமத்திற்குள் பலாத்காரமாக ப்ரவேசித்து, ராமனை
அவள் பர்த்தாவாக அடைய விரும்பினுள். ஸீதையைக் காட்
டிலும், தான் நிரம்பவும் அழகில் சிறந்தவள் போலவும், யுவதி
போலவும், ராமனிடம் தன் மஹிமையை ப்ரகாசம் செய்து
கொண்டு, ஸீதையை த்யாகம் செய்துவிட்டுத் தன்னையே பாணி
க்ரஹணம் செய்துகொள்ளும்படி ராமனை வற்புறுத்தினுள்.

कृतदारोऽस्मि भवति भार्येयं दयिता मम ।
त्वद्विधानां तु नारीणां सुदुःखा ससपत्नता ॥

𑌕𑍃𑌤𑌦𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑍍𑌯𑍇𑌯𑌂 𑌦𑌯𑌿𑌤𑌾 𑌮𑌮 ।
𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌦𑍁𑌃𑌖𑌾 𑌸𑌸𑌪𑌤𑍍𑌨𑌤𑌾 ॥

க்ருததாரோஸ்மி பவதி பார்யேயம் தயிதா மம ।
த்வத்விதானாம் து நாரீணாம் ஸுது:கா ஸஸபத்நதா ॥

அதைக் கேட்ட ராமன், சூர்ப்பணகையைப் பார்த்துச் சொல்கிறார் :—

"நான் பத்னியுடன் இருந்து வருகிறேன். ஸீதை என்ற என் பத்னியை, த்யாகம் செய்துவிட்டு, வேறு ஒரு ஸ்த்ரீயை பரிணயம் செய்துகொள்வதில் இஷ்டமில்லாதவனுகவுமிருந்துவருகிறேன். உன்னைப்போலொத்த ரூபவதியான ஸ்த்ரீயைப்பற்றி இந்த ஸீதையைப் பரிணயம் செய்துகொள்வதற்கு முன்பாகவே தெரிந்திருந்தால், ஸீதையைப் பரிணயம் செய்துகொள்ளாமலிருந்திருப்பேன். இந்த விஷயத்தை நான் தெரிந்துகொள்ளாமலிருந்தது இப்பொழுது என் மனதிற்கு வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. உன்னையும் கல்யாணம் செய்துகொண்டு இரண்டாவது பத்னியாகவைத்துக்கொள்ளலாமென்ருலோ; உன்னைப்போலொத்த அழகுள்ள ஸ்த்ரீக்குப் போட்டியான சக்களத்தி மற்ெருருவள் இருக்கக் கூடாதென்று என்னுடைய ஸித்தாந்தமாகும். ஸாபத்ந்யம் என்ற தோஷமானது ஸ்த்ரீகளுக்கு மிகவும் துக்கத்தைக் கொடுக்கக் கூடியது. ஆகையால் என்னை நீ பர்த்தாவாக விரும்புவதில் ப்ரயோஜனமில்லை. என் தம்பி லக்ஷ்மணன் என்ற பெயருடன்கூடினவன் மிகவும் பராக்ரமசாலி. அவனே, கல்யாணமானவனானாலும், அவனுடைய பத்னியைப் பின்னேடு அழைத்துக்கொண்டுவரவில்லை. அதனால், அவனை நீ பர்த்தாவாக ஸ்வீகரித்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஸாபத்ந்ய தோஷமானது உனக்கு ஏற்பட ந்யாயமில்லை. அதனால், நீ அவ்விதம் செய்வதே எனக்கு உசிதமாகத் தோன்றுகிறது" என்று சூர்ப்பணகையைப் பார்த்து ஸ்ரீராமன் பரிஹாஸமாகச் சொன்னார்.

உடன், சூர்ப்பணகை அதை உண்மைதான் என்று நினைத்து, ராமனை விட்டுவிட்டு, லக்ஷ்மணனின் ஸமீபம்

சென்று, லக்ஷ்மணனைப் பார்த்து, "என்னை நீ கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்" என்று வற்புறுத்தினாள். லக்ஷ்மணனும் அதைக் கேட்டு, மந்தஹாஸத்துடன், "உன்னுடைய அழகும், யௌவனமும் லோகத்தில் மிகவும் நிகரற்றதாக விளங்கிவருகிறது! அப்படியிருக்கும்பொழுது, ஸ்வதந்த்ரனை ஒரு அரசன்தான் உனக்கு பர்த்தாவாக ஆகவேண்டும். நானோ, ராமனுக்குத் தம்பியாய் ராமனுக்கு ஊழியம் செய்யும் என்னை நீ பர்த்தாவாக அடைந்தால் உன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கு அது உசிதமாகத் தோன்றவில்லை. ஆகையால் நீ மறுபடியும் ராமனிடமே சென்று, மறுபடியும் நீ வற்புறுத்தினால் உன்னையே அவர் ஸ்வீகரித்துக்கொள்வார். உன்னைப் பார்த்த பிறகு அவருக்கு ஸீதையினிடம் வெறுப்பு ஏற்பட்டுவிடுமென்பதில் ஸந்தேஹமேயில்லை" என்று சொல்லிவிட்டு, சூர்ப்பணகையினுடைய மனதிற்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ண, லக்ஷ்மணஸ்வாமியானவர் இந்த ஸந்தர்ப்பத்தில், ஸீதையைக் கடுமையாக நிந்திக்கிறதுபோல் ஒரு நடனம் செய்தார். அதாவது:

एनां विरूपामसतीं करालां निर्णतोदरीम् ।
भार्यां वृद्धां परित्यज्य त्वामेवैष भजिष्यति ॥
को हि रूपमिदं श्रेष्ठं संत्यज्य वरवर्णिनि ।
मानुषीषु वरारोहे कुर्याद्भावं विचक्षणः ॥

ஏநாம் விரூபாமஸதீம் கராலாம் நிர்ணதோதரீம் ।
பார்யாம் வ்ருத்தாம் பரித்யஜ்ய த்வாமேவைஷ பஜிஷ்யதி ॥
கோ ஹி ரூபமிதம் ச்ரேஷ்டம் ஸந்த்யஜ்ய வரவர்ணிநி ।
மாநுஷீஷு வராரோஹே குர்யாத்பாவம் விசக்ஷண: ॥

ஏநாம் விரூபாமஸதீம் கராலாம் நிர்ணதோதரீம் :
பார்யாம் வ்ருத்தாம் பரித்யஜ்ய த்வாமேவைஷ பஜிஷ்யதி ॥
கோ ஹி ரூபமிதம் ச்ரேஷ்டம் ஸந்த்யஜ்ய வரவர்ணிநி :
மாநுஷீஷு வராரோஹே குர்யாத்பாவம் விசக்ஷண: ॥

என்றதனால் ஸீதையைக் கீழாகவும், சூர்ப்பணகையை உயர்ந்தவளாகவும் வைத்து லக்ஷ்மணன் பேசுகிறார்.

இந்த ச்லோகத்தில் மேலாகத் தோன்றுகிற பொருளைக் கவனித்தாலோ, மேற்சொன்ன அபிப்ராயத்தைத்தான் அறிந்துகொள்ளமுடியும். "ஸீதையோ, புருஷனுக்கு மிகவும் வெறுப்பைக் கொடுக்கக்கூடிய ஸௌந்தர்யத்துடன் கூடினவள். ஸ்த்ரீ ஜாதிக்குரிய லாவண்யம் ஒன்றுமே அவளிடம் இல்லை. பெருத்த வயிறுடன் கூடினவள். வயதிலும் மிகவும் முதிர்ந்தவள். நீயோ, மிகவும் சிறு வயதுடன் கூடினவள். க்ருசமான இடையுடன் கூடினவள். உத்தம ஸ்த்ரீகளுக்கு உசிதமான அவயவ விசேஷங்களுடன் கூடினவள். உன் ஸௌந்தர்யத்தைப் பார்த்து யாரும் உன்னிடம் மயங்காமலிருக்க முடியாது. ஆகையால் உன்னைப் பார்த்த மாத்ரத்தில், காம சாஸ்த்ரத்தின் மர்மத்தை அறிந்த எவன்தான், நீயாகவே பர்த்தாவாக அடைய விரும்பும்போது, உன்னை ஸ்வீகரித்துக்கொள்ளமாட்டான்! ஸீதையைத் தள்ளிவிட்டு ராமன் உன்னை அவச்யம் பத்னியாக ஸ்வீகரித்துக்கொள்வார்" என்று லக்ஷ்மணன் கூடமாகப் பேசி, சூர்ப்பணகையை மறுபடியும் ராமனுடைய ஸமீபம் போகும்படி செய்துவிட்டார். மேற்சொன்ன ச்லோகத்தின் ஆபாஸமான அர்த்தம் இதுவே.

லக்ஷ்மணஸ்வாமியினுடைய வாயிலிருந்தும் ஸீதாதேவியைப் பற்றி இவ்விதம் நிந்தையான வார்த்தை வரலாமா என்று ஆலோசித்தாலோ, அவர்களுடைய புத்தியில் லக்ஷ்மணஸ்வாமியினுடைய உண்மையான அபிப்ராயமும் ப்ரகாசிக்கக்கூடும்.

அதாவது, மேற்சொன்ன ச்லோகத்தில் विरूपां (𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌂) (விரூபாம்) என்ற பதத்திற்கு விசேஷமான ஸௌந்தர்யத்துடன் கூடினவள்; அதாவது, மூன்று லோகத்திலும் ஸீதைக்கு ஸமானமான அழகுடன் மற்றொரு ஸ்த்ரீயைப் பார்க்க முடியாது என்றும், அவ்விதமே असतीं (𑌅𑌸𑌤𑍀𑌂) (அஸதீம்) என்ற பதத்திற்கு न विद्यते अन्यासती यस्याः तां असतीं (𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌅𑌨𑍍𑌯𑌾𑌸𑌤𑍀 𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌤𑌾𑌂 𑌅𑌸𑌤𑍀𑌂) (ந வித்யதே அந்யாஸதீ யஸ்யா: தாம் அஸதீம்) என்ற ஸமாஸத்தால் மஹா பதிவ்ரதையும் இந்த ஸீதை ஒருவளேதானென்றும், करालां (𑌕𑌰𑌾𑌳𑌾𑌂) (கராளாம்) என்ற பதத்திற்கு ஸாமுத்ரிகா சாஸ்த்ரத்தில், ஸ்த்ரீகளுடைய உயர்வான நிலையை எவ்வளவு அடி இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ,

அதற்குக் கொஞ்சமேனும் விரோதமில்லாத வளர்ப்போடு கூடினவள் என்றும், निर्णतोदरीं ([illegible]) (நிர்ணதோ தரீம்) என்ற பதத்திற்கு மிகவும் சிறுத்த இடையுடன்கூடின வள் என்றும் वृत्तां ([illegible]) (வ்ருத்தாம்) என்ற பதத்திற்கு ஞானத்திலோ, கல்யாணகுணங்களிலோ உயர்ந்த ஸ்வபாவ முள்ளவளாயுமுள்ள ஸீதை என்ற பார்யையை அடைந்த ராமன் ஸகல விதத்திலும் விருத்தமான ஆசாரத்துடன்கூடிய உன்னைப் பார்யையாக அடைய எப்படித்தான் ஸம்மதிப்பார்? உன்னை நிரஸனம் செய்துவிட்டு ஸீதையைத்தான் ராமன் ரக்ஷிப்பார். பயனில்லாமல் அட்டஹாஸம் செய்ய வேண்டாம்' என்றுதான் லக்ஷ்மணனுடைய வாஸ்தவமான அபிப் ராயமாகும்.

அந்த லக்ஷ்மணனுடைய ஆந்த்ரமான அபிப்ரா யத்தை அறியாத சூர்ப்பணகையோ, லக்ஷ்மணனும் தன்னு டைய அபிப்ராயத்திற்கு ஒத்து வருகிறார் என்ற ஸந்தோ ஷத்துடன் மறுபடியும் ராமனிடம் சென்று ராமா! "இந்த மனுஷ்ய ஸ்த்ரீயைக் கொன்றுவிட்டு உன்னை நான் பர்த்தா வாகவும் அடைந்து இந்த அரண்யத்தில் கொஞ்சமேனும் பய மில்லாமல் ஸஞ்சரிக்கப் போகிறேன் பார்" என்று கர்ஜித்துக் கொண்டு பரம கோபத்துடன் ஸீதையை பக்ஷிக்கிறதற்கு ஸீதையினுடைய ஸமீபம் சென்றாள். அந்தக் காக்ஷியானது ஆகாசத்தில் சந்த்ரனுடைய தர்மபத்னியான ரோஹிணீ தேவியினிடம் ஜ்வாலையில்லாத நெருப்புக் கட்டைக்கு ஸமானமாகத் தோன்றும் இடிபோல் தோன்றினது. அதைப் பார்த்தவுடன் ராமன் லக்ஷ்மணனை அழைத்து, "லக்ஷ்மணா! துர்ஜனங்களோடு பரிஹாஸ வார்த்தை பேசக்கூடாது. ஸீதையை கவனித்துக்கொள்ள வேண்டும். இந்த சூர்ப் ணகையை மானபங்கப்படுத்தி உடன் வெளியில் அனுப்பிவா. கொஞ்சமேனும் காலவிளம்பம்கூடாது" என்று பகவான் ஆக் ஞாபித்தார். உடன் லக்ஷ்மணனும் கத்தியை உருவிக் கொண்டு சூர்ப்பணகையின் ஸமீபம் சென்று அவளுடைய இரண்டு காதுகளையும், மூக்கையும் அறுத்துவிட்டு ஆச்ரமத் திற்கு வெளியில் விரட்டிவிட்டார்.

கர வதம்

சூர்ப்பணகையும் பரம துக்கத்துடன் ரக்தஸாரவங் களைப் பெருக விட்டுக்கொண்டு வெகு வேகமாக ஓடித் தன்னுடைய ப்ராதாவான கரனிடத்தில் இந்த வ்ருத்தாந் தத்தை தெரிவித்துக் கதறினாள். கரனே சூர்ப்பணகையி

டால், அவர்கள் ராமனுடைய கல்யாணகுணங்களைத்தான் வர்ணிப்பார்களன்னியில், அவர்கள் புத்தி விபரீதமான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்காது.

सुप्तप्रमत्तकुपितानां भावज्ञानं दृष्टं (ஸுப்தப்ரமத்தகுபிதாநாம் பாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்) (ஸுப்தப்ரமத்தகுபிதாநாம் பாவக்ஞாநம் ஹ்ருஷ்டம்) என்ற ந்யாயத்தை அனுஸரித்து, 'தூங்குகிறவன் மதமுள்ளவன், கோபமுள்ளவன், இவர்கள் தன் ஹ்ருதயத்திலுள்ளதை மறைத்துப் பேசவேண்டுமென்று நினைத்தாலும், அந்த உள் அபிப்ராயம் அவர்களுக்குத் தெரியாமலேயே வெளியில்வந்துவிடும்' என்ற ப்ரகாரம், ப்ரக்ருதத்தில் சூர்ப்பணகையானவள் காம மதத்தை அடைந்திருப்பதோடு கூட, காது மூக்குப் போன காரணத்தால் கோபத்தையும் அடைந்திருப்பதினால்,அவளுடைய மனதிலுள்ளது அப்படியே வெளியில் வந்துவிட்டது. தன் காதையும், மூக்கையும் அறுத்து அவமதித்த ராமனையும் லக்ஷ்மணனையும் பருஷமாகப் பேசாமல் தருணௌ என்று வர்ணிக்கிறாள்.

காம பாரவச்யத்தை அடைந்த ஸ்த்ரீகளுடைய மனதை ஆகர்ஷணம் செய்வதில் புருஷனுடைய யௌவனம் முக்யமான ஸாதனமானதால் தருணௌ என்ற சப்தத்தால் ராமன், லக்ஷ்மணன் இருவர்களும் ஸ்த்ரீகளை வசம் செய்யக்கூடிய யௌவனத்தால் அலங்கரிக்கப்பட்டவர்கள் என்பது வெளியாகிறது. ராமன், லக்ஷ்மணன், இருவர்களிடமும் சூர்ப்பணகைக்குப் பாப ஸம்பந்தம் பொதுவாக ஏற்பட்டதினால் தருணௌ என்ற த்விவசனாந்தமான பதமானது இருவர்களையும் குறிப்பிடுகிறது. ராமன், லக்ஷ்மணன் என்ற இருவர்களும் வயதினால் மாத்ரம் ஸமானமான வைபவமுள்ளவர்கள் என்பதில்லை. மற்ற அவயவ விசேஷங்களுடைய சோபாவிசேஷம் என்ற ஸௌந்தர்யத்திலும் ஸமானமான வைபவமுள்ளவர்கள் என்பதை ரூபஸம்பந்நௌ என்ற பதத்தால் குறிப்பிட்டுச் சொல்லுகிறாள். காமன் முதலான ஸுந்தர புருஷர்களும் அந்த ராம லக்ஷ்மணர்களுடைய ஸௌந்தர்யத்திலிருந்து பிச்சை எடுத்துத் தானும் ஸௌந்தர்யத்தை ஸம்பாதித்துக் கொண்டவர்கள். ரூபஸம்பந்நௌ என்ற ஸ்தலத்தில் ஸௌந்தர்யத்தால் அலங்கரிக்கப்பட்டவர்கள் என்ற அர்த்தத்தை க்ரஹிக்காமல் ஸம்பந்தரூபௌ என்று அந்த பதத்தை மாற்றிக்கொண்டு, உத்பத்தியிலேயே ஸித்தமான ஸௌந்தர்ய நிதிகள் என்ற பொருளை க்ரஹிக்கவேண்டும். இதனால் उत्पन्नं द्रव्यं क्षणं अगुणं तिष्ठति (உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணம்

அகுணம் திஷ்டதி) (உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணம் அகுணம் திஷ்டதி) என்ற ந்யாயத்திற்கு ராம லக்ஷ்மணர்களின் ஸௌந்தர்ய விஷயத்தில் அவகாசமில்லை என்பதும் ப்ரகாசமாகிறது. தருணௌ என்றதினால் யௌவனமும், ரூபஸம்பந்நௌ என்றதனால் ஸௌந்தர்யமும் ராம லக்ஷ்மணனிடம் இருப்பதுபோல், ஸௌகுமார்யமும் அவர்களிடம் காணப்படுகின்றன. அவர்களுடைய சரீரத்தின் ஸ்பர்சமோ கடினமாகக் காணப்படுகிறதில்லை. புஷ்பம்போல் மிகவும் ம்ருதுவாயும், சீதளமாயும், ஸுகந்தியாயு மிருக்கக்கூடியது. இவ்விதமான ஸ்பர்ச விசேஷமும் காமிகளான ஸ்த்ரீகளுடைய மனதை ஆகர்ஷணம் செய்யக்கூடியது. இவ்விதம் யௌவனம், ஸௌந்தர்யம், ம்ருது ஸ்பர்சம், முதலான உத்தம குணங்கள் இருந்தாலும் ரதிஸுகத்தின் பரகாஷ்டையில் ச்ரமத்தை அடையக்கூடிய பலமில்லாதவர்களோ என்று நினைக்க வேண்டாம். இருவர்களும் மஹா பலிஷ்டர்கள். रामस्तु सीतयासार्धं विजहार बहूनृतून् (ராமஸ்து ஸீதயாஸார்த்தம் விஜஹார பஹூந்ருதூந்) (ராமஸ்து ஸீதயாஸார்தம் விஜஹார பஹூந்ருதூந்) என்று சொன்ன ரீதியை அனுஸரித்து, அநேக காலங்கள் ஸ்த்ரீயோடு க்ரீடித்தாலும் ச்ரமலேசமில்லாதவர்கள் என்று வெளியாகிறது இதுவும் ஸ்த்ரீகளை வசம் பண்ணக்கூடிய மற்றொரு உபாயமாகும்.

தவிரவும், சோபையில் ஸமுதாய சோபை என்றும், அவயவ சோபை என்றும் இருவகை உண்டு. பொதுவாக ஒரு அவயவ விசேஷங்களையும் குறிப்பிட்டுப் பார்க்காமல் தோன்றுகிற அழகை ஸமுதாய சோபையென்றும்; அந்தந்த அவயவங்களைக் குறிப்பிட்டுக் கவனிக்கும்பொழுது ஏற்படுகிற அழகை அவயவ சோபை என்றும் கவிகள் வர்ணிக்கிற வழக்கமுண்டு. முன் ச்லோகத்தின் பூர்வார்த்தத்தால் ஸமுதாய சோபையைச் சொல்லிவிட்டு, உத்தரார்த்தத்தால், அவயவ சோபை சொல்லப்படுகிறது. पुण्डरीकविशालाक्षौ (புண்டரீகவிசாலாக்ஷௌ) (புண்டரீகவிசாலாக்ஷௌ) என்ற பதத்தால் நேத்ர ஸௌந்தர்யமானது சொல்லப்படுகின்றது. संरक्तनयना घोरा: (ஸம்ரக்தநயநா கோரா:) (சம்ரக்தநயநா கோரா:) என்ற ந்யாயத்தை அனுஸரித்து தமோகுணத்தினுடைய உத்ரேகத்தால் எப்பொழுதும் நித்ரை, ஆலஸ்யம் முதலான தோஷத்தோடு கூடினதாகவோ, ரஜோ குணத்தினுடைய உத்ரேகத்தால் எப்பொழுதும் சிவப்பாகவோ, ராக்ஷஸர்களுடைய நேத்

யாக்ஞவல்க்ய ஸுதாராஜந் த்ரயஸ்த்ரைலோக விச்ருதா: |
சந்த்ரகாந்த மஹாமேத விஜயா ப்ராஹ்மணோத்தம: ||
கரச்ச தூஷணச்சேதி த்ரிசிரா ப்ரஹ்மவித்தமா: |
ஆஸந் ஸ்தேஷாம்ச சிஷ்யாச்ச சதுர்தச ஸஹஸ்ரதா ||

என்றது முதலான வாக்யங்களைக் கவனித்தால், கரன், தூஷணன் இவர்களுடைய பூர்வ வ்ருத்தாந்தத்தை ஸுலபமாக அறியக்கூடும்.

யாக்ஞவல்க்ய மஹர்ஷியின் புத்ரர்கள் மூன்று பேர்கள். சந்த்ரகாந்தன், மஹாமேதன், விஜயன் என்ற பெயரால் லோகத்தில் ப்ரஸித்தி அடைந்தவர்கள். அவர்கள் மூவர்களும் ப்ரும்ஹநிஷ்டர்கள். அப்படியே மூவர்களுக்கும் கநிஷ்டபகினீ ஸுபகா என்ற பெயருள்ள ஒரு கன்னிகையும். இவள் வேதாந்தத்தில் மிகவும் பரிநிஷ்டிதையான புத்தியோடு கூடியவள். அந்த மூன்று புத்ரர்களிடத்திலும் வேத வேதாந்த சாஸ்த்ரங்களின் உண்மையை க்ரஹிக்க அந்தேவாஸிகளாக இருந்தவர்கள் பதினாலாயிரம் பேர்கள். எப்பொழுதும் அவர்கள் ப்ரஹ்ம விசாரம் செய்துகொண்டே காலத்தை நயனம் செய்யும் ஸ்வபாவம் அவர்களிடம் இயற்கையாகவே ஏற்பட்டது.

இவ்விதமுள்ள மஹான்களுக்கும் காலவசத்தாலோ, அல்லது பாவி கார்யவசத்தாலோ விஷ்ணு த்வேஷம் ஏற்பட்டது. மஹாவிஷ்ணுவானவர் க்ஷீரப்தியில் (பாற்கடல்) தேவாஸுரர்களுக்கு ஸந்தி செய்துவிட்டு அம்ருதமதனம் செய்யச்சொன்ன கதையோ, பிறகு அந்த விஷ்ணுவானவர் மோஹினி அவதாரம்செய்து தேவர்களுக்கு மாத்ரம் அம்ருதத்தைப் பரிவேஷணம்செய்து அஸுரர்களை வஞ்சித்த கதையோ, இதிஹாஸ புராணங்களில் ப்ரஸித்தமானவையே. அந்த ஸமயத்தில் ப்ரக்ருதத்தில் சொன்ன யாக்ஞவல்க்யரின் புத்ரர்களான சந்த்ரகாந்தன், மஹாமேதன், விஜயன் என்ற மூவர்களுக்கும் மஹாவிஷ்ணுவினிடத்திலுள்ள தேவபக்ஷபாதத்தை ஸஹிக்காமல் அந்த அம்ருதத்தை அபஹரணம் செய்யத் தீர்மானித்தார்கள். இவர்களுக்குப் பரமசிவன் உபாஸ்யமான தேவதையானதினால் பரமசிவனும் ப்ரத்யக்ஷமாக தர்சனம் கொடுத்து 'விஷ்ணு த்வேஷம் வ்ருத்தியாகும் கார்யத்தைச் செய்யாதீர்கள்' என்று தடை செய்தார். சிவனுடைய வார்த்தையையும் யாக்ஞவல்க்ய புத்ரர்கள் உல்லங்கனம் செய்துவிட்டு, அதிலும் சந்த்ரகாந்தனாகிய முதல் பிள்ளை க்ரூரமான பாவத்

தோடு ராக்ஷஸ சரீரத்தை எடுத்துக்கொண்டு தேவர்களின் ஸொத்தான அம்ருதத்தை அபஹரித்துக்கொண்டு வந்தான். அதற்கு சிஷ்யர்களான பதினாலாயிரம் பேர்கள், ப்ராதாக்கள், ஸுபகை என்ற பகினி, இவர்களும் உடந்தையாக இருந்தார்கள். இந்த விஷயத்தில் பரமேச்வரனுக்கே மஹத்தான கோபம் ஏற்பட்டு அவர்களை சபித்து விட்டார்.

धनं हरतियोदैवं राक्षसोभवति ध्रुवम् ।
तस्य तस्यैव देवस्य धनं भवति नान्यथा ॥
योन्यथा कुरुते विप्रः सोपिराक्षस वंशजः ।

𑌧𑌨𑌂 𑌹𑌰𑌤𑌿𑌯𑍋𑌦𑍈𑌵𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍋𑌭𑌵𑌤𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ॥
𑌯𑍋𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌸𑍋𑌪𑌿𑌰𑌾𑌕𑍍𑌷𑌸 𑌵𑌂𑌶𑌜𑌃 ।

தநம் ஹரதியோதைவம் ராக்ஷஸோபவதி த்ருவம் ।
தஸ்ய தஸ்யைவ தேவஸ்ய தநம் பவதி நாந்யதா ॥
யோந்யதா குருதே விப்ர: ஸோபிராக்ஷஸ வம்சஜ: ।

என்ற ஸ்ம்ருதி வசனத்தை அனுஸரித்து யாக்ஞவல்க்யருடைய பிள்ளையான சந்த்ரகாந்தனை அழைத்து "இனிமேல் நீ என் பக்தனாகமாட்டாய், தேவ ஸ்வாபஹாரியாகிவிட்டாய், நீ அந்த பாபத்தினால் ராக்ஷஸ ஜன்மாவை அடைய வேண்டும்" என்று சபித்து விட்டார். சந்த்ரகாந்தன் முதலியவர்களும் பரமசிவனுடைய பாதத்தில் ப்ரபத்தி செய்து தங்களுடைய அபராதத்தை க்ஷமித்துக்கொண்டு சாப விமோசனத்தை விரும்பும்பொழுது பரமசிவன், विष्णुर्दाशरथिर्भूत्वा मोक्षयिष्यति सुव्रत (𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑍁𑌵𑍍𑌰𑌤) (விஷ்ணுர்தாசரதிர்பூத்வா மோக்ஷயிஷ்யதி ஸுவ்ரத) என்றபடி "மஹாவிஷ்ணுவானவர் ராமாவதாரம் செய்யுங்காலத்தில் உன்னை ராக்ஷஸபாவத்திலிருந்து விமோசனம் செய்துவைப்பார். स्मृतिश्चमद्भवानूनं काले काले भविष्यति (𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍍𑌚𑌮𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍂𑌨𑌂 𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿) (ஸ்ம்ருதிச்சமத்பவாநூநம் காலே காலே பவிஷ்யதி) என்றபடி என்னுடைய அருளால் உனக்கு ராக்ஷஸபாவத்திலும் பூர்வ விக்ஞான

மானது லோபத்தை [illegible] விருத்தி [illegible] என்று பரமசிவன் அனுக்ரஹித்தார். இவ் [illegible] மஹாபாரம் சேஷத்ரபத்தில் [illegible].

ப்ரக்ருதத்தில், சூர்ப்பணகை [illegible] இவர்கள் மூலமாக [illegible] னுக்கு பரமேச்வரனுடைய [illegible] ஏற்பட்டு, ராமனை விஷ்ணு [illegible] போர் செய்வதென்ற வ்யாஜத்தால் [illegible] னும் ராக்ஷஸபாவத்திலிருந்து [illegible] மென்ற எண்ணத்துடன் [illegible] ராம னோடு யுத்தம் செய்ய [illegible] கரன் ராமனோடு போர் செய்ய [illegible], அங் காங்கு பருஷமாக [illegible] பேசுவதுபோல் தோன்றினும் [illegible] அவைகள் பூர்வ [illegible] ஹீனமான வார்த்தைகள் [illegible] அங் காங்கு ஸூக்ஷ்மார்த்திகள் [illegible] கூடும்.

பூன் சொன்னது. சூர் [illegible] ருந்தும் கரன் என்ற [illegible] வ்ருத்தாந்தத்தை [illegible] களைப் போர்செய்து [illegible] மான [illegible] களான [illegible] அவர்கள் [illegible] சாலையை நோக்கி [illegible] னும் அறைப்பார்த்து [illegible] ஸ்த்ரீமூலம் [illegible] திறது. ராக்ஷஸர் [illegible] தாய [illegible] கொன்று [illegible] வீரர்களை [illegible] வந்து [illegible] முறையிட்டு [illegible] விடுகிறேன். நீ [illegible] ஸாம்ராஜ்ய [illegible] ணத்தால் இந்த [illegible] கடமைப்பட்டவன். [illegible] நானே செய்து, என்னுடைய [illegible]

எதிரில் ப்ரகாசிக்க வேண்டுமென்று என்னுடைய எண்ண மிருப்பதனால் அதற்கு நீ யாதொருவிதமான தடையும் செய் யாமல் இந்த யுத்த விஷயத்தில் மாத்ரம் நீ உபரதியை அடைந்து, 'ஸீதையை ஸம்ரக்ஷிப்பது' என்ற என்னுடைய வாக்கை நீ பரிபாலனம் செய்வதே இந்த ஸமயத்தில் ஒரு பெரிய கைங்கர்யமாக ஆகும்" என்று சொல்லிவிட்டு ஸீதையை குகைக்குள் அமரும்படிசெய்து, லக்ஷ்மணனையும் குகையின்வாசலில் காவலாளியாக நிறுத்திவிட்டு பகவானான ஸ்ரீராமன் தன்னுடைய எதிரில் அட்டஹாஸம் செய்துவந்த பதினான்கு ராக்ஷஸர்களையும் பாண ப்ரயோகம்செய்து வதித் தார். இந்தப் பதினான்கு ராக்ஷஸர்களுடன் வந்து அங்கு ஒளிந்துகொண்டு இவர்களுடைய மரணத்தைப் பார்த்து அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்த சூர்ப்பணகை மறுபடி யும் கரனிடம் ஓடிக் கரனைப் பார்த்துக் கதறுகிறாள்.

अहमस्मि समुद्विग्ना विषण्णा च निशाचर ।
शरणं त्वां पुनः प्राप्ता सर्वतोभयदर्शिनी ॥

അഹമസ്മി സമുദ്വിഗ്നാ വിഷണ്ണാ ച നിശാചര ।
ശരണം ത്വാം പുനഃ പ്രാപ്താ സര്‍വ്വതോഭയദര്‍ശിനീ ॥

அஹமஸ்மி ஸமுத்விக்நா விஷண்ணா ச நிசாசர ।
சரணம் த்வாம் புந: ப்ராப்தா ஸர்வதோ பயதர்சிநீ ॥

"ஹே ராக்ஷஸ! ராமனோடு போர் செய்ய உனக்கு சக்தி யிருக்கிறதோ, இல்லையோ, நீ யுத்தம் செய்து ஜயிப்பதில் எனக்கு ஸந்தேஹந்தான் ஏற்படுகிறது. ராமனோடு யுத்தம் செய்யச் சென்ற பதினான்கு ராக்ஷஸர்களையும் ராமன் கொன்ற வைபவத்தைப் பார்த்து [illegible] ரொம்பவும் பயத்தை அடைகிறேன். [illegible] விரோதமானது லோகத்தில் [illegible] குமோ என்றும் தோன்றுகிறது [illegible] வெளியில் ப்ரகாசப்படுத்தியவள் [illegible] [illegible] வந்து [illegible] அடைகிறேன் [illegible] தையும் [illegible] பரிஹார [illegible] கொண்டு [illegible] இருவருடன் [illegible] பலங்களைத் [illegible] ராமனோடு யுத்தம் செய்யும்படி சூர்ப்பணகை [illegible]

செய்து விட்டான். வாலும் பரம [illegible] யுத்தத் திற்குக் கிளம்பும்போது சூர்ப்பணகையைப் [illegible]

तवानयानयसक्तः कोऽन्योऽस्तु [illegible] ।
न शक्ष्यते धारयितुं लक्ष्मणस्य इतो [illegible] ।
न रामं नयने वीक्षितुं श्रीमतो [illegible] ।
आत्मदुश्चरितैः प्राणान् हत्वा योऽस्य विना [illegible]
[illegible]ःसंस्थितमपि लक्ष्मणस्य विमुच्यताम् ।
अहं रामं सह भ्रात्रा नयामि [illegible] ।

[illegible]

[illegible]

என்று சுக்ரீவனிடம் கூறுகிறார் [illegible].

"ஹே சுக்ரீவனே! உன்னை [illegible] எனக்கு ஏற்படும் கோபத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. என் கோபமானது [illegible] குகிறது. [illegible] அனைவரையும் [illegible] செய்து [illegible] கப்போகிறேன். [illegible] டாம். [illegible] லக்ஷ்மணனுடன் யமலோகம் அனுப்புகிறேன்."

என்று தன்னுடைய பௌருஷத்தை ப்ரகாசப்படுத்திக் கொண்டு சூர்ப்பணகைக்கு பரம உத்ஸாஹத்தையும் உண்டு பண்ணுவதுபோல் நடித்துவிட்டு, யுத்தத்திற்கு உத்ஸாஹ மாய்க் கிளம்புகிறவன்போல் வெளிக்கு அபிநயம் பண்ணு கிறவனானாலும், உண்மையில் முன்பு எழுதப்பட்ட கரன், தூஷ ணன் இவர்களுடைய வ்ருத்தாந்தத்தைக் கவனித்தால் மேற் சொன்ன ச்லோகங்கள் முழுமையும் ராமனுடைய ப்ரசம்ஸை யை ப்ரகாசப்படுத்துவதன்னியில் கொஞ்சமேனும் நிந்தைக் கிடமில்லாமலாகிறது. ஸூக்ஷ்மதர்சிகள் அதைக் கவனிக்க வேண்டும். அடியில் கண்டபடி அந்த உண்மையைக் கொஞ் சம் அறியவும்.

அதாவது, "ஹே சூர்ப்பணகே! உன் மூலம் ராமனுக்கு நான் விரோதியாக ஆகிவிட்டேனே என்றதை நினைத்து அதற்கு மூலகாரணமான உன்னிடமேற்படுகிற கோபமானது உப்புக் கடலைப்போல் பொங்குகிறபடியால் என்னால் அடக்க முடியவேயில்லை! மஹா புருஷர்களிடம் நீ செய்த அபசாரத்தை நினைத்தால் உன்னை ஏன் கொல்லக் கூடாதென்றும் தோன்றுகிறது? ஆகிலும், உனக்கும் நமக்கு முன்ன பந்து மர்யாதையை அவலம்பித்து பேசாமலிருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது" என்ற பச்சாத்தாப மானது [illegible] (தவாவராதஜ ஹவ:) (தவாவமாநப்ரபவ:) என்ற வாக்யங்களால் வெளியாகிறது.

கவிரவும். "ப்ராக்ருத ஜனங்களுக்கு ராமன் *மனிதன் போல் தோன்றினாலும், உண்மையில் ஸச்சிதானந்தரூபமான மஹாவிஷ்ணுவானதினால் 'அவன் மனிதன்தானே, நாம் அவ னைத் தோற்கடிக்கலா'மென்று நான் கனவிலும் நினைக்க வில்லை. அந்த மஹானுபாவன்தான் என்னை த்வம்ஸம் செய்துவிடுவார். உன்னுடைய துர்வ்யாபாரத்தால் என்னு டைய ஸகல ஸம்பத்துக்களும் நஷ்டமாகிவிட்டன. ஜீவனும் சரீரத்தைவிட்டு வெளியில் போகும்படியான நிலையில் வந்து விட்டது. என் ப்ராதாக்களுடன் ராமனிடம் சென்று அவ ருடைய திவ்யரூபத்தையும் தர்சனம் செய்துவிட்டு அந்த தர்சன மஹிமையினால் ஸகல பாபங்களிலிருந்தும் நான் விமுக்தனாகி,

[illegible] हृदि स्थितः ।

[illegible] ॥

[illegible]

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: ।
தம் வேதிதவ்ய: [illegible] மா கங்காம் மா குருந் கம: ॥

என்றபடியும் [illegible] = [illegible] ([illegible] = [illegible])
(யமயதி = அந்தர்யாமி) என்ற வ்யாஸ ஸூத்
த்ரமும் ஸர்வ வ்யாபகனான பகவானுடைய [illegible]
யத்தை [illegible] அடைகிறான். [illegible] ஜலத்
தைப் போல் [illegible] விடுகிறது.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ॥

என்று சாஸ்த்ரத்தை [illegible]
பரம தாத்பர்ய விஷயீபூதமான [illegible]
தெரியும்பொழுது, [illegible]
இந்த ப்ரபந்தம் [illegible]
[illegible].

முன் சொன்ன [illegible]
மாறுதும், [illegible], தான்
சத்ருபாவத்தோடு [illegible]

ளோடும் பதினாலாயிரம் பேர்கள் ராக்ஷஸர்களோடும் ராமனுடைய ஆச்ரமத்திற்கு எதிரில் வந்து போர்செய்ய ஆரம்பித்தான். ராமனும், இரண்டு நாழிகை ஸாவ காசத்தில் கரனுடைய பரிஜனங்களையும் ப்ராதாக்களையும் வதித்துவிட்டு, கரனையும் ஸம்ஹாரம்செய்து, ஸகல ப்ராணி களுக்கும் பரமானந்தத்தைக் கொடுத்தார்.

स पपात खरो भूमौ दह्यमानः शराग्निना ।
रुद्रेणेव विनिर्दग्धः श्वेतारण्ये यथान्तकः ॥

[illegible]
[illegible]

ஸ பபாத கரோ பூமௌ தஹ்யமாந:சராக்நிநா !
ருத்ரேணைவ விநிர்தக்த: ச்வேதாரண்யே யதாந்தக: !!

ராமன் தன்னுடைய கோதண்டம் என்ற தனுஸ்ஸை நாண்கயிறு போட்டுப் பூட்டி ஆக்னேயாஸ்த்ரம் என்ற ஒரே பாணத்தால் கரனை வதைத்து பூமியில் விழும்படி செய்தார். மார்க்கண்டேயனை ரக்ஷிப்பதற்காக ச்வேதாரண்யம் என்ற க்ஷேத்ரத்தில் பரமேச்வரன் யமனைக் காலால் உதைத்துத் தள்ளி ஸம்ஹாரம் செய்ததுபோல், ராமனும் கரனை ஸம் ஹாரம் செய்தார் என்ற உதாஹரண பூர்வகமாகச் சொன் னதிலிருந்து, யமனுக்கு ஸமானமான பலத்தோடு கூடியவன் கரன் என்பது விதிதமாகிறது. அதனால் 'ராமனைப் பூஜிக்கிற வர்கள் ம்ருத்யு பயத்தை அடையவேண்டாம்' என்பதும் வெளியாகிறது.

[illegible] என்ற [illegible] ஒரு [illegible] பர்வதத்தில் [illegible] செய்து [illegible] வந்தார். [illegible] விட்டான். [illegible] "ஹே ஸ்வா [illegible] சொல்லிய வார்த்தை [illegible] அடைவதற்காக [illegible]" என்று கேட்க,

பரமேச்வரனும் அந்த ப்ரார்த்தனைக் கிணங்கி, அந்த ம்ருத்யுவை இடது காலால் உதைத்து ஸம்ஹாரம் செய்தார். இந்த கதையானது கூர்மபுராணம் உத்தரகண்டத்தில் 36-வது அத்யாயத்தில் ப்ரஸித்தமாகத் தெரிகின்றது. இதனால் नहि कल्याणकृत् कश्चित् दुर्गतिं तात गच्छति (நஹி கல்யாணக்ருத் கஸ்சித் துர்கதிம் தாத கச்சதி) (நஹி கல்யாணக்ருத் கச்சித் துர்கதிம் தாத கச்சதி) என்ற பகவத் வாக்யத்தை அநுஸரித்து ச்ரேயோ மார்க்கத்தில் ப்ரவர்த்தித்த மனிதர்களுக்கு நடுவில் யாதொருவிதமான விபத்தும் ஏற்படாது என்பதற்கு அத்தாக்ஷியாக ஆகிறது. श्वेतारण्ये (ச்வேதாரண்யே) (ச்வேதாரண்யே) என்ற பதத்திற்கு மார்க்கண்டேய சரித்ரத்தை அநுஸரித்து ச்வேதாரண்ய க்ஷேத்ரத்தில் என்று அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். இரண்டாவது பக்ஷத்தில் 'ச்வேதர் என்ற மஹர்ஷியானவர் தபஸ் செய்த அரண்யத்தில்' என்ற அர்த்தத்தை கூர்மபுராணக் கதையை அநுஸரித்துச் செய்துகொள்ளவேண்டும். எவ்விதமானாலும் ஸத்கர்மாவில் ப்ரவர்த்தித்த ஸத்புருஷர்களுக்கு ஏற்படும் ம்ருத்யு பர்யந்தமான ஆபத்துக்கூட அகாலத்தில் நிவர்த்தி செய்து வைத்து ஸத்புருஷர்களுக்கு யாதொருவிதமான பீடையுமில்லாமல் அனுக்ரஹித்து காப்பாற்றுகிற ராமனுக்கு இயற்கையான உத்தம குணம் என்பது மேலே சொல்லப்பட்ட த்ருஷ்டாந்தத்தால் வெளியாகிறது.

இவ்விதம் மஹர்ஷிகளுக்கு விரோதிகளான கரன், தூஷணன், த்ரிசிரஸ், இவர்களை ஸ்ரீராமன் முஹூர்த்தகாலத்தில் ஒரே பாணத்தால் ஸம்ஹாரம் செய்து மஹர்ஷிகளுக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்துவந்த ராமனுடைய செய்கையை யாராலும் புகழ்ந்து சொல்லமுடியாது. இந்தத் தருணத்தில் [illegible] ராமன் [illegible] மஹா ஸமரத்தில் ராமனும் [illegible] பின்வாங்கியதாகத் [illegible] தெரியாத சில ஜனங்கள், [illegible] பலாபலத்தை [illegible]. அதற்காக ஸ்ரீ மஹர்ஷியின் ஸூக்தியையே. அதாவது,

[illegible] ।

[illegible] ॥

𑌤𑌮𑌾𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 𑌸𑌂𑌰𑌬𑍍𑌧𑌂 𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋 𑌰𑍁𑌧𑌿𑌰𑌾𑌪𑍍𑌲𑍁𑌤𑌮𑍍 ।
𑌅𑌪𑌾𑌸𑌰𑍍𑌪𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌿𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ॥

தமாபதந்தம் ஸம்ரப்தம் க்ருதாஸ்த்ரோ ருதிராப்லுதம் ।
அபாஸர்பத்ப்ரதிபதம் கிஞ்சித்த்வரிதவிக்ரம: ॥

என்ற ச்லோகத்தையே மூலப்ரமாணமாக நிரூபிக்கின்றுர்கள். அவ்விதம் ஸ்ரீராமனிடமும் தோஷாரோபணம் செய்வதற்கு, ஆரோபம் செய்கிறவர்களின் அக்ஞானந்தான் காரணமாகும். எங்கும் ஆரோபத்தில் ஆரோபயிதாவின் அக்ஞானம்தான் காரணம் என்பது ப்ரஸித்தமானது. கரனே வெகு வேகமாக ஓடி வருகிறுன். அவனுடைய சரீர முழுமையும் ராமபாணத்தால் அடிபட்டு, ராமனுக்கு அவனுடைய சரீரத்தில் பாணப்ரயோகம்செய்ய அவகாசம் கொடுக்காமல், சரீரத்தோடு சரீரம் ஒட்டும்படி கிட்ட நெருங்கி வந்துவிட்டான். அவன் சரீரத்தில் பெருகுகிற ருதிரகந்தத்தை ஆக்ராணம் செய்வது மிகவும் துஸ்ஸஹமாக ஆகிவிட்டது. பாண ப்ரயோகத்திற்கும் இடமில்லாமல் நெருங்கிவிட்டான். ராமனே அஸ்த்ர சஸ்த்ர வித்யையில் மிகவும் சிக்ஷிதன் ஆனதால் 'இரண்டொரு அடி பின்வாங்கினுல்தான் பாணப்ரயோகம்செய்து இந்தக் கரனை வதம்செய்யலாம்' என்று அறிந்தவன், மேற்சொன்ன காரணங்களைக்கொண்டு இரண்டொருஅடி பின்வாங்கத்தான் வாங்கினுர். அதனுல் ராமனிடம் யாதொரு தோஷமும் சொல்லமுடியாது. சூரன் பின் வாங்கக்கூடாதென்பதை ஒப்புக்கொள்கிறேும் ஆகிலும் सर्वोपलक्षणोह्यन्यथानुपपत्तिः (𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃) (ஸர்வோபலக்ஷணோஹ்யந்யதாநுபபத்தி:) என்ற ந்யாயத்தை அனுஸரித்து, இரண்டோரடி பின்வாங்காமல் போனுல் அவனைக் கொல்வதில் காரணங்கள் அகப்படாததினுல் இரண்டோரடி பின்வாங்கினதும் சூரனுக்கும் தோஷம் ஆகாததே. अन्यथा (𑌅𑌨𑍍𑌯𑌥𑌾) (அந்யதா) பின்வாங்காமல்போனுல் अनुपपत्तिः (𑌅𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃) (அநுபபத்தி:) கரனைக் கொல்ல முடியாது என்றதுதான் மேற்சொன்ன வாக்யத்தின் அர்த்தமாகும். இது அர்த்தாபத்தி ப்ரமாணத்தில் சேர்ந்தது. சில ஸந்தர்ப்பத்தில் அர்த்தாபத்தி ப்ரமாணமும் எல்லா ப்ரமாணங்களுக்கும் மேலானதாக ஆகிவிடக்கூடும். கேவல வ்யதிரேகி அனுமானம் என்றும் சிலர் இதைச் சொல்வார்கள். இதற்கு உதாஹரணத்தைக் கவனிக்கவும். ஒரு மனிதன் தான் பெரிய யோகியைப் போல் வேஷதாரியாக இருந்து

கொண்டு உலகத்தை வஞ்சித்து, ஸர்வ ஜனங்களாலும் பூஜிக்கப்படுகிறவனாக இருந்துவருகிறான். அவன் போஜனமே செய்வதில்லை என்ற ப்ரஸித்தியும் அடைந்துவிட்டான். அதனாலேயே அவனிடம் ப்ராணிகளுக்கு நாளுக்கு நாள் பெரிய ப்ரமம் ஏற்பட்டுவருகிறது. சரீரத்தின் பருமனும், தேஜஸ் ஸௌமோ நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்து வருகின்றன. இவனோ ஆஹாரம் உட்கொள்ளுகிறதில்லையே! இவ்வளவு பருமன் எப்படி ஏற்பட்டது என்று ஸந்தேஹம் வர, இந்த அர்த்தாபத்தி ப்ரமாணத்தை அங்கு வித்வான்கள் உபயோகப்படுத்துகிறார்கள். [illegible] ( ) (அந்யதானுபபத்தி:) என்று அர்த்தாபத்தியின் ஸ்வரூபம் முன்பு சொல்லப்பட்டது. அதை ப்ரக்ருதத்தில் உபயோகிக்கும்பொழுது [illegible] ( ) (அந்யதா) ரஹஸ்யமாக போஜனமில்லாமற்போனால் [illegible] ( ) (அநுபபத்தி:) தேஹத்திற்கு இவ்வளவு வளர்ச்சி ஏற்படாது. எப்போது நிமிஷா நிமிஷம் இந்த யோகியின் தேஹத்தில் வளர்ச்சி அதிகமாகி வருகிறதோ, அப்பொழுது இவன் வெளிக்கு போஜனம் செய்யாதவன் போல் நடித்தாலும், ரஹஸ்யமாக புஜிக்கவே புஜிக்கிறான் என்று இந்த ந்யாயத்தால் அந்த யோகியினிடம் ரஹஸ்ய போஜனத்தைக் கல்பிக்கிறார்கள்.

இதுபோலத்தான் ப்ரக்ருதமான [illegible], அந்த ந்யாயத்தை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். இரண்டொரு அடி பின்பற்றாமல் போனால், பாண ப்ரயோகம் செய்ய அவகாசமில்லாமற்போகிறபடியால், [illegible], அஸ்த்ர வித்யையை குருகுல வாஸம் செய்து, நல்ல விநயத்தை அடைந்தவர்களாயிருந்தால், இரண்டொரடி ப்ரக்ருத ஸந்தர்ப்பம் போன்ற ஸந்தர்ப்பத்தில் பின்வாங்கிக்கொண்டுதான் யுத்தம் செய்வார்கள். [illegible] ([illegible]) (க்வசிதிஸங்கடவிஷயே ஸங்கடானாம் [illegible]மபஸர்பமிதி) என்ற சாஸ்த்ரமும் [illegible] மஹா சூரர்களும் கொஞ்சம் பின் வாங்கி [illegible] என்ற மர்யாதையை அநுஜ்ஞை செய்து [illegible] செய்கிறது. ஆகையால், ராமனிடம் [illegible] மான தோஷத்திற்கும் இடமில்லை. [illegible] ([illegible]) (அபாஸர்பதப்ர[illegible]) என்ற

வாக்யத்தில் ஸ்லிஷ்ட் (प्रतिपदं) (ப்ரதிபதம்) என்ற பதத்திற்கு 'ப்ரதீபம்-திர்யக்' என்று மஹேச்வர தீர்த்தியர் வ்யாக்யானம் செய்கிறார். இதை அனுஸரித்தால் கரனானவன் ரக்த ஸ்ராவங்களைப் பெருகவிட்டுக்கொண்டு, அஸ்த்ர மோக்ஷத்திற்கு அவகாசம் கொடுக்காமல் ராமனுடைய ஸமீபத்தில் மிகவும் நெருக்கமாக வந்ததிலிருந்து அஸ்த்ர விமோசன அவகாச லாபத்திற்காக இரண்டோரடி குறுக்காக விலகிக்கொண்டாரே தவிர, பின் வாங்கவில்லை, இதைக் கவிகள் சார்தூல கதியென்று சொல்லுவார்கள் சார்தூலமென்றால் புலியாகும். அந்தப் புலியானது, அரண்யத்தில் ஒரு மனிதனைப் பார்த்தவுடன், அவனிடம் பாய்வதற்கு இரண்டொரு நிமிஷமாகும். மனிதனும் அதற்காகப் பயப்படாமல் அதன் எதிரில் நின்றே ஜீவித்துக்கொள்ளலாம். அந்த மனிதனைப் பார்த்தவுடன் புலியானது லக்ஷ்யம் தவறாமல் அவனைப் பிடிக்கும் எண்ணத்துடன் இரண்டொரு நிமிஷம் ஸாவதான மனஸோடு மார்க்கத்தைக் கவனித்துக்கொண்டு பாய்வதற்குக் கிளம்பினவுடன், அந்த மனிதன் குறுக்காக விலகிவிட்டானேயானால் அந்த புலியானது நேராக மார்க்கத்தின் வெகு தூரத்திற்கப்பால் போய் விழுந்து விடும். இப்படிப் புலியைப் புத்தியாலே புருஷன் ஜயிப்பதுண்டு. அதுபோல்தான ப்ரக்ருதத்தில் ராமனும் மிகவும் ஜாக்ருதையான கரனுடைய தேஹம் தன் சரீரத்தில் படாமலிருப்பதற்கும், அஸ்த்ர விமோசனத்திற்கு அவகாசம் கிடைப்பதற்கும், குறுக்காகக் கொஞ்சம் விலகிக்கொண்டார் என்று சொல்லிவிட்டால் பலாயன மோக்ஷத்திற்கு அவகாசமே ராமனிடம் ஏற்படாது. இவ்விதமான தாத்பர்யத்திற்கு மஹேச்வர தீர்த்தீய வ்யாக்யானமே மூலமாகும்.

தவிரவும், கரன், தூஷணன், த்ரிசிரஸ், முதலானவர்கள் யாக்ஞவல்க்யருடைய புத்ரர்களென்று முன்பு சொல்லப்பட்டது. மஹாபாரத ரீதியாக இந்த மூன்று பேர்களுக்கும் ஒரு ப்ரகாரமாக பெயர்களும் குறிப்பிடப்பட்டன. [illegible] அனுஸரித்தே, ஆத்மபந்து, ச்ருதபந்து, வேதபந்து என்று இவர்களின் பெயர் விளங்குகின்றன. [illegible] இவர்களின் பகினி, கல்யாணி என்று பெயரால் குறிப்பிடப்படுகிறாள். இவர்கள் பிறந்த பிறகு யாக்ஞவல்க்ய ரிஷி குமாரர்களுக்கு அத்யாத்ம வித்யையை கற்றுக்கொடுத்துக்கொண்டு காலநயனம் செய்துவந்தார்கள். ஆகிலும் [illegible] உத்ரேகத்தால் விஷ்ணு த்வேஷம் அதிகரித்து ராக்ஷஸர்களாக ஆகும்படி நேர்ந்துவிட்டது, என்பர்.

शिवस्य हृदयं विष्णुः विष्णोश्च हृदयं शिवः ।
हरिरेव शिवस्साक्षात् शिव एव हरिस्स्वयम् ॥

𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃 ।
𑌹𑌰𑌿𑌰𑍇𑌵 𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ: ।
ஹரிரேவ சிவஸ்ஸாக்ஷாத் சிவ ஏவ ஹரிஸ்வயம் ॥

என்றவை முதலான வாக்யங்களால் சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் பேதமில்லாதகாரணத்தைக்கொண்டு, விஷ்ணு சாபத்திற்குக் காரணமானவர்கள் சிவ சாபத்திற்கும் காரணமாகிவிட்டார்கள். பிறகு சிவன், விஷ்ணு இருவர்களையும் ப்ரபத்தி செய்து இரு தத்வமும் ஒரு தத்வமாக வந்து இருவர்களுக்கு ராக்ஷஸ பாவத்திலிருந்து விமோசனத்தை உண்டு பண்ணும்படியான ஸந்தர்ப்பமும் வாய்த்தது. அதனால்தான் ராமன் தேஹத்தில் ஹரி, ஹரன் என்ற இரண்டு தத்வங்களும் அடங்கியிருக்கின்றன. இதை அறிந்த ஸர்வக்ஞனை வஸிஷ்ட பகவான் நாமகரணம் செய்யுங் காலத்திலேயே விஷ்ணுவின் தத்வத்தை ப்ரகாசம் செய்கிற ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாக்ஷரீ மஹா மந்த்ரத்திலிருந்து ரா என்ற அக்ஷரத்தையும் சிவதத்வத்தை ப்ரகாசம் செய்கிற நம:சிவாய என்ற மஹா மந்த்ரத்திலிருந்து ம என்ற அக்ஷரத்தையும் எடுத்து ராம என்று ஸ்ரீராமனுக்கு நாமகரணம் செய்தார். இதனால் சிவனும் விஷ்ணுவும் சேர்ந்த அகண்ட தத்வமே ஸ்ரீராமன் என்று சொல்லப்படும். ராமனிடத்திலும், ந்ருஸிம்ஹமூர்த்தியினிடத்திலும் சிவாம்சம் உள்ளதென்பதை எந்த வாதிகளும் தடுக்கமுடியாது. ப்ரதோஷ காலத்தில் விஷ்ணுவை ஸேவிக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிற ஆந்ஹிகக்காரர்களும் न प्रदोषे हरिं पश्येत् नृसिंहं राघवं विना (𑌨𑌪𑍍𑌰𑌦𑍋𑌷𑍇 𑌹𑌰𑌿𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌵𑌿𑌨𑌾) (நப்ரதோஷே ஹரிம் பச்யேத் ந்ருஸிம்ஹம் ராகவம் விநா) என்று ப்ரதோஷ காலத்திலும், ந்ருஸிம்மனையும், ராமனையும் ஸேவிக்கும்படி வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகையால் ராமனிடம் நிஷ்கள பரசிவ ஸ்வரூபம் விளங்கி வருகிறதென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

ப்ரக்ருதத்தில் உள்ள கரனைக் கொல்லுவதற்கே மேல் சொன்ன ஔடங்வுதயான கதையை அனு

ஸரித்து அந்த இரண்டு தேவதைகளையும் ஒரு தத்வமாய் அவதரித்தாகவேண்டிய அவச்யமாயிருக்கிறது. तमापतन्तं (தமாபதந்தம்) (தமாபதந்தம்) என்ற ச்லோகத்திலேயே कृतास्त्रः (க்ருதாஸ்த்ர:) (க்ருதாஸ்த்ர:) என்ற விசேஷணத்தாலும், त्वरितविक्रमः (த்வரிதவிக்ரம:) (த்வரிதவிக்ரம:) என்ற விசேஷணத்தாலும் ராமனிடத்தில் மேற்சொன்ன இரண்டு அம்சமும் இருந்துவருகிறதென்று தெரிகிறது. कृतास्त्रः (க்ருதாஸ்த்ர:) (க்ருதாஸ்த்ர:) என்றால் அஸ்த்ர வித்யையில் சிக்ஷிதன் என்று பொருளாகும். இந்த வைபவமோ த்ரிபுராஸுரனோடு யுத்தம் செய்யுங்காலத்தில் பரமேச்வரனிடம் தான் ஸகல தேவர்களாலும் பார்க்கப்பட்டது. இந்த ராமாயணத்திலேயே ராமனே, एतदस्त्रबलं दिव्यं मम वा त्र्यम्बकस्य वा (ஏததஸ்த்ரபலம் திவ்யம் மம வா த்ர்யம்பகஸ்ய வா) (ஏததஸ்த்ரபலம் திவ்யம் மம வா த்ரயம்ப கஸ்யவா) என்ற ச்லோகத்தால் தான் அஸ்த்ரவித்யா குசலன் என்பதற்குப் பரமேச்வரனைத்தான் த்ருஷ்டாந்தமாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் ப்ரக்ருத ச்லோகத்தில் க்ருதாஸ்த்ர: என்ற பதத்தால் பரமேச்வரன் என்று வெளியாகிறது. त्वरितविक्रमः (த்வரிதவிக்ரம:) (த்வரிதவிக்ரம:) என்ற பதத்தால் மஹாவிஷ்ணுவென்பதும் ப்ரகாசிக்கின்றது. மஹாபலி சக்ரவர்த்தியினிடம் மூன்றடியை வாமனாவதாரத்தில் யாசித்து, அதிலிருந்தும் மூன்று லோகங்களையும் வ்யாபரித்த மஹாவிஷ்ணுவிற்கு த்ரிவிக்ரமன் என்ற பெயர் ப்ரஸித்தமானது. இதனால் க்ருதாஸ்த்ரனுயும் உள்ள ராமன், ப்ரதிபதம் அபாஸர்ப்பத் என்று அங்வயிக்கிறபடியால் ராமனானவன் கரனுக்கு உன்னுடைய சாபவிமோசனத்திற்கு அனுக்ரஹம் செய்த சிவன், விஷ்ணு, என்று இருவர்களும்தான் நான்; க்ஷத்ரியனல்ல. என்பதை போதிக்க प्रति पदं = पदं प्रति (ப்ரதி பதம் = பதம் ப்ரதி) (ப்ரதி பதம் = பதம் ப்ரதி) சிவ விஷ்ணுவாத்மகமான தன் அகண்டஸ்வரூபத்தைக்குறித்து ஹரிஹராத்மகமான தனது நிஜ ஸ்வரூபத்தைக் கரனுக்கு தர்சனம் செய்து வைப்பதற்காக மாயாமயமான தனது விக்ரஹத்தை अपासर्पत् (அபாஸர்பத்) (அபாஸர்பத்) கொஞ்சம் மறைத்துக் கொண்டார் என்பதே மேற்சொன்ன வாக்கியத்தின் வ்யங்க்யார்த்தமாகத் தோன்றுகிறபடியால் பலாயனம் முதலிய தோஷங்களுக்கு ராமனிடம் கொஞ்சமேனும் அவகாசமேயில்லை.

முன் சொன்னபடி மஹர்ஷிகளுக்கு சத்ருவான கரன் என்ற ராக்ஷஸனைப் பரிஜனங்களுடன் த்வம்ஸம் செய்து லோகத்திற்கு நன்மையைச்செய்துவைத்ததைநினைத்து ஸகல மஹர்ஷிகளும் பரம ஸந்தோஷமடைந்து ராஜர்ஷிகள் ப்ரம்மரிஷிகள் இவர்கள் ராகவனுடைய ஸமீபம் வந்து ராமனை வெகுப்ரகாரமாக திவ்ய புஷ்பங்களால் பூஜித்து ஸ்தோத்ரம் செய்தார்கள். பிறகு ரிஷிகளும் ராமனைப்பார்த்து "ஹேராம! தேவேந்த்ரனும் சில நாட்களுக்கு முன்பு சரபங்காச்ரமத்திற்கு வந்திருந்தது க்ரூரனை கரனை வதிக்கவேண்டுமென்று உன்னிடத்தில் தெரியப்படுத்திக் கொள்வதற்காகத்தான் என்பதை அறியவும். ஆகிலும் தேவ ரஹஸ்யமானதால் ராவணவதத்திற்குப் பிறகு உன்னை தர்சனம் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் மஹர்ஷியினிடம் தான் வந்த காரணத்தை ஸூசிப்பித்து விட்டு உன்னைப்பார்க்காமலே திரும்பிப் போய்விட்டான். மஹர்ஷிகளும் தன் தன் ஆச்ரமத்திற்கு உன்னை அழைத்துப் போகும் வ்யாஜத்தால் ஜனஸ்தானத்திற்கு ஸமீபத்திலுள்ள பஞ்சவடீ தீரார்யங்கம் அழைத்துவந்தார்கள். தேவர்களுடைய கார்யமும் மஹரிஷிகளுடைய மனோரதமும் பரிபூர்ணமாகிவிட்டன. தண்டகாரண்யத்தில் மஹர்ஷிகள் நிச்சங்கையாக இனிமேல் தபஸ்ஸைச் செய்வார்கள்" என்று வெகுப்ரகாரமாக ராமனை ச்லாகித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த ஸமயத்தில் தேவர்கள், சாரணர்கள், கந்தர்வர்கள் முதலானவர்களும் திரள்திரளாக ஆகாசமார்க்கத்தில் வந்துநின்றுகொண்டு தேவதுந்துபிவாத்யத்தையும்கோஷித்து தேவலோக பாரிஜாதபுஷ்பங்களை ராமனுடைய சிரஸ்ஸில் வர்ஷித்தார்கள். ஒன்றரை முஹூர்த்தத்திற்குள் அஸஹாயனாக ராமன் மஹாபயங்கரஸ்வபாவத்தோடுகூடிய பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும், கர, தூஷண, த்ரிசிரஸ், மூன்று பேர்களையும் வதித்ததோ மிகவும் ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்து வருகிறது. இதுபோலொத்த அத்புதமான கர்மாவை ராமன் ஸாக்ஷாத்விஷ்ணுவாக இருந்தால்தான் செய்யமுடியும். இந்த ஒரு கர்மாவே ராமன் ஸாக்ஷாத் விஷ்ணு என்று தீர்மானிப்பதில் அஸாதாரணமான லிங்கமாகும். இவ்விதம் ராமனை ப்ரசம்ஸை செய்துவிட்டு ஸகலமான தேவர்களும் தம் தம் லோகம் சென்றார்கள்.

இந்த ஸந்தர்ப்பத்தில் லக்ஷ்மணஸ்வாமியும் ராமனுடைய விஜயத்தைப் பார்த்துப் பரம ஸந்தோஷத்துடன் மலையினுடைய குஹையிலிருக்கும் ஸீதையை அழைத்

துக்கொண்டு ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தார். ராமனும் யுத்தம் செய்த இடத்திலிருந்தும் ஜயசாலியாக மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டு லக்ஷ்மணஸ்வாமியாலும் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு ஆச்ரமத்திற்குள் வந்தார். அந்த ஸந்தர்ப்பத்தில் மஹா ஸமரத்தில் விஜயத்தை அடைந்த தன் பர்த்தாவான ராமனைப் பார்த்து ஸீதா தேவியானவள் அனுபவித்த ஆனந்தத்தை வால்மீகி மஹர்ஷியே ப்ரகாசப்படுத்துகிறார். ஸீதாதேவியோ முன்பு பதினாலாயிரம் பேர்கள் ராக்ஷஸர்களோடு கூடின கரன், தூஷணன், த்ரிசிரஸ் மூன்று பேர்களோடும் தனியாக இருக்கும் ராமன் என்ன செய்வாரோ என்று பயத்தை அடைந்திருந்தாள். இப்பொழுதோ, ராமன் ஜயித்தவுடன் வீரகுலமான ஜனக குலத்தில் தான் பிறந்த காரணத்தால் வீர தாரதம்யத்தை அறிந்தவளாகி, 'ராமனைப் போல் பதினான்கு லோகங்களிலும் மற்றொரு அரசனை வீரன் என்றும் சூரன் என்றும் சொல்லமுடியாது. இந்த மஹா புருஷனை நாம் பர்த்தாவாக அடையும்படியான தவத்தைச் செய்து பாக்யவதியாக ஆனோம்! நமது ஜன்மாவே ஸபலமான ஜன்மா' என்று எண்ணி பரமபக்தியோடும், வெகுமான புத்தியோடும் பர்த்தாவான ராமனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஸந்தோஷத்தை அடைந்தாள்.

तं दृष्ट्वा शत्रुहन्तारं महर्षीणां सुखावहम् ।
बभूव हृष्टा वैदेही भर्तारं परिषस्वजे ॥

தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் ।
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥

தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம் ।
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥

என்ற ச்லோகத்தால் கரவதத்திற்குப் பிறகு ராமனை ஸீதை ஆலிங்கனம் செய்துகொண்டு அனுபவித்த ஆனந்தத்தை ப்ரகாசப்படுத்துகிறார், तं दृष्ट्वा (தம் த்ருஷ்ட்வா) (தம் த்ருஷ்ட்வா) முன்பு அளவு கடந்த ராக்ஷஸர்களால் சூழப்பட்ட மஹா ஸமரத்தின் நடுவில் தனியாக அகப்பட்டுக்கொண்டு தன் கண்ணுக்குப் புலப்படாமலிருந்த ராமனை இப்பொழுது ஸீதாதேவியானவள் நேரில் கண்ணால் பார்த்து, தவிரவும்,

वीरव्रणेन विगळद्रुधिरेण रोमकूपोल्लसद्भिरपि घर्मपयःकणौघैः ।
कोदण्डदण्डमवलम्ब्य विनीयवर्म किञ्चित्परिश्रमभृतं प्रियमीक्षमाणा ॥

𑌵𑍀𑌰𑌵𑍍𑌰𑌣𑍇𑌨 𑌵𑌿𑌗𑌳𑌦𑍍𑌰𑍁𑌧𑌿𑌰𑍇𑌣
𑌰𑍋𑌮𑌕𑍂𑌪𑍋𑌲𑍍𑌲𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑌪𑌿 𑌘𑌰𑍍𑌮𑌪𑌯𑌃𑌕𑌣𑍌𑌘𑍈𑌃 ।
𑌕𑍋𑌦𑌣𑍍𑌡𑌦𑌣𑍍𑌡𑌮𑌵𑌲𑌮𑍍𑌬𑍍𑌯 𑌵𑌿𑌨𑍀𑌯𑌵𑌰𑍍𑌮
𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌮𑌭𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾 ॥

வீரவ்ரணேந விகளத்ருதிரேண
ரோமகூபோல்லஸத்பிரபி கர்மபய:கணௌகை: ।
கோதண்டதண்டமலம்ப்ய விநீயவர்ம
கிஞ்சித்பரிச்ரமப்ருதம் ப்ரியமீக்ஷமாணா ॥

என்றபடி, மஹாஸமரத்தில் கரனால் ப்ரயோகம் செய்யப் பட்ட பாணங்களும் ராமனுடைய விக்ரஹத்தில் விழுந்திருக் கக் கூடுமானதால், அங்காங்கு ராமனுடைய சரீரத்திலும் பாணங்களின் கூர்முனை பட்டுக் காயங்கள் காணப்படுகின் றன. அதற்கு வீரவ்ரணம் என்று கவிகள் சொல்லுவார்கள். அப்படிக் காணப்படும் வ்ரணங்களில் சில ரணங்களி லிருந்து ரத்தங்களும் ப்ரவாஹித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளால் ராமனுடைய மங்களவிக்ரஹமும், வ்யாபரித்த தாகக் காணப்படுகிறது. மஹாஸமரத்தில் ஏற்பட்ட ச்ரமத் தால் ரோமகூபங்களிலிருந்து வேர்வை ஜலங்களும் பிந்து பிந்துவாகக் காணப்படுகின்றன. கவசத்தைக் கழற்றிக் கொண்டு கையில் கோதண்டத்தையும் அவலம்பித்துக் கொண்டு, ஒருவனுக யுத்தம் செய்த காரணத்தால் 'ஹா' என்று ச்ரமத்துடன் நின்று வரும் ப்ரியமான பர்த்தாவைப் பார்த்து,

तं दृष्ट्वा (𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾) (தம் த்ருஷ்ட்வா) மஹா ஸமரத்தில் ஸம் பந்தப்பட்டகாரணத்தால் காட்டிலுள்ள செடிகளால் தன்னு டைய ஜடையைத் தூக்கிக் கட்டிக்கொண்டு இடுப்பிலுள்ள மறையுரியையும் நழுவாமல் இருக்கிக்கட்டிக்கொண்டுபாணங் களால் நிறைந்த அம்பராத்தூணியைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு, யுத்தம் முடிந்து போன காரணத்தால் கோபம் அடங்கி மலர்ந்த தாமரஸ புஷ்பம் போல் ப்ரஸன்னமான முகத்தோடுகூடினவராயும், குஹையிலிருந்து ஸீதையும் லக்ஷ் மணனும் வருகிறார்களா என்பதையும் கவனித்துக்கொண்டு,

மறுபடியும் கரனைச்சேர்ந்தவர்கள் யுத்தத்திற்கு வருவார்களோ, என்று கவனத்துடனும் விளங்கிவரும் ராமனைப் பார்த்து,

இல்லாவிடில் तं दृष्ट्वा (𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾) (தம் த்ருஷ்ட்வா) முன்பு வீரனென்று காதால் கேட்கப்பட்டவனையும், இப்பொழுது வீரனுடைய கார்யத்தைச் செய்து தான் மஹாவீரன்தான் என்பதை ருஜூப்படுத்தினவனையுமுள்ள ராமனைப் பார்த்து,

शत्रुहन्तारं (𑌶𑌤𑍍𑌰𑍁𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂) (சத்ருஹந்தாரம்) என்று ராமனுக்குள்ள விசேஷத்தால் மஹாஸமரத்திலேற்பட்ட ஹனனக்ரியைக்கு கரன் முதலான சத்ருக்கள்தான் கர்மாவாக ஆனார்களே தவிர, தான் அந்த க்ரியையில் எப்போதும் கர்த்தாவாகத் தானிருந்து வந்தார். அதாவது சத்ருக்களை அடிக்கிறவராவாரன்னியில், சத்ருக்களால் அடிக்கப்பட்டவராக ராமன் ஆகவேயில்லை. அதிலும், हन्तारं (𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂) (ஹந்தாரம்) என்ற பதத்தால் சத்ருக்களை பாணத்தால் அடித்தடித்து த்வம்ஸம் செய்வதுதான் அன்யர்களுடைய த்ருஷ்டிக்குப் புலப்பட்டதன்னியில், அம்பராத்துணியிலிருந்து பாணத்தை எடுப்பதோ, ஸந்தானம் செய்வதோ யாருக்கும் புலப்படவில்லை. அதிலும் शत्रुहन्तारं (𑌶𑌤𑍍𑌰𑍁𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂) (சத்ருஹந்தாரம்) என்ற பதத்தில் சத்ரு என்ற பதத்தைக்கவனிக்கும் பொழுது, இந்தயுத்தத்தைப்பார்ப்பதற்காகதேவர்கள், கந்தர்வர்கள், ஸித்த புருஷர்கள் முதலானவர்கள் திரள் திரளாக வந்து பூமியிலும், ஆகாசத்திலும் நான்கு பக்கங்களிலும் நின்றுகொண்டிருந்தாலும் ராமன் செய்யும் பாணப்ரயோகம் ராக்ஷஸர்களான சத்ருக்களின் சரீரத்தில் தான் விழுந்தது. அன்னியில் அனபராதியான ஸஜ்ஜனங்களுடைய சரீரத்தில் விழுவதில்லை. இதனால், तं दृष्ट्वा शत्रु हन्तारं (𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂) (தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்) என்ற வாக்யம் முடிய தாத்பர்யத்தைக் கவனிக்கும் பக்ஷத்தில் துஷ்ட நிக்ரஹம் என்ற பகவானுடைய அவதார ப்ரயோஜனமானது ஸித்திக்கின்றது.

महर्षीणां सुखावहं (𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌂) (மஹர்ஷீணாம் ஸுகாவஹம்) இந்த வாக்யத்தால் சிஷ்ட பரிபாலனமும் ஸித்திக்கின்றது. அதாவது, ராமனே மஹாவிஷ்ணுவானதினால் ரக்ஷக ஸ்வரூபமாகும். மஹர்ஷிகள் முதலானவர்களோ ரக்ஷ்யர்களாவார்கள். மஹர்ஷி முதலிய ப்ராணிகளுக்கும் பகவானை ராமனுக்கும் ரக்ஷ்ய-ரக்ஷகபாவ ஸம்பந்தமானது ஏற்

பட்டது. அது நித்ய ஸம்பந்தமானதால் ஒரு நாளும் அதற்கு ஹானி ஏற்படக்கூடாது. ரக்ஷ்யகோடியில் சேர்ந்தவர்கள் தனக்கு ஏதாவது ஆபத்துவரும் பக்ஷத்தில் அந்த ஆபத்திலிருந்தும் தான் முக்தனுகிற விஷயத்தில் தன்னிடமே ஸாமர்த்யமிருந்தாலும் அதை உபயோகப்படுத்தமாட்டார்கள். அப்படி உபயோகப்படுத்தினுல் ரக்ஷகனுன பகவானை அபேக்ஷிக்கவில்லை என்பதாகிவிடும். அதிலிருந்து பகவானுக்கும் தனக்குமுள்ள ரக்ஷ்யரக்ஷகபாவஸம்பந்தம் அழிந்துபோனதாகிவிடும். அது வேத சாஸ்த்ர ஸம்மதமாகாது. அதற்காக மஹான்கள் தனக்கு என்ன ஆபத்து வந்தாலும் அதை நிவர்த்தி செய்துகொள்ளத் தன்னிடம் தபோ மஹிமை யிருந்தாலும் அதை உபயோகப்படுத்தாமல் ஸஹன சக்தியோடு, பகவானுன ரக்ஷகனைத்தான் அபேக்ஷித்துக்கொண்டிருப்பார்கள். தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளும் கரன் முதலிய ராக்ஷஸர்கள் மூலம் தங்களுக்கு எவ்வளவு தீங்குகள் ஏற்பட்டும் அந்த ராக்ஷஸர்களை த்வம்ஸம் செய்ய அவர்கள் அனுஷ்டானம் செய்த தவத்தில் ஒரு அல்பமான தபஸ் போதுமானுலும், ரக்ஷ்ய-ரக்ஷகபாவத்திற்கு ஹானி வரக்கூடாதென்ற எண்ணத்துடன் ராமனுடைய ஆகமானத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போர்ப்பட்ட மஹர்ஷிகளுக்கு ரக்ஷகனுன ஸ்ரீராமன் தன்னுடைய வ்யாபாரத்தையே ப்ரதீக்ஷித்துக்கொண்டு தன் ஆக்ஞையையே எதிர்பார்த்துக்கொண்டு வரும் காரணத்தால் கரன், தூஷணன் முதலான ராக்ஷஸர்களைக் கொன்று, அந்த மஹர்ஷிகளுக்கு பரம ஸௌக்கியத்தை உண்டு பண்ணினுர். एहि पश्य शरीराणि (ஏஹி பஶ்ய ஶரீராணி) (ஏஹி பச்ய சரீராணி) என்று, அந்த மஹர்ஷிகள் ராக்ஷஸர்கள் மூலம் தங்களுக்கேற்பட்ட தன் தன் சரீரத்தினுடைய துரவஸ்தையைக் காட்டினதிலிருந்தும், அவர்களுடைய தேஹத்தினுடைய துரவஸ்தைகளையும் போக்கி அவர்களின் தேஹத்தின் துர்கந்தாதிகளையும் நிவர்த்தி செய்து, துக்கவாடையற்ற சாச்வதமான ஆனந்த விசேஷத்திற்கு, அந்த மஹர்ஷிகளை ராமன் பாத்ரவிசேஷமாகச் செய்தார். இவ்விதம் महर्षीणां सुखावहः (மஹர்ஷீணாம் ஸுகாவஹ:) (மஹர்ஷீணும் ஸுகாவஹம்) என்ற வாக்யத்தால் சிஷ்டபரிக்ரஹம் என்ற அவதார ப்ரயோஜனமும் ஸித்திக்கின்றது.

बभूवहृष्टा वैदेही (பபூவஹ்ருஷ்டா வைதேஹீ) (பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ) என்றதால் விதேஹ குலத்தில்

அவதரித்த ஸீதாதேவியானவள் ராமன் மஹாஸமரத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிற காலத்தில், அளவுக்கடங்காத சத்ருக்களுடையகூட்டத்தில் ராமன் ஏகாகியாக அகப்பட்டுக் கொண்டகாரணத்தால் ராமனுடைய உயிர் எவ்விதமான நிலையில் இருக்கிறதோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். இப்பொழுது ராமனை நேரில் பார்த்தமாத்ரத்தால் ராமனுடைய ஸத்தையை நிச்சயம்செய்துகொண்டு தன்னுடைய ஸத்தையாகிய தன் உயிரையும் தான் அடைந்தவளானாள். ஸர்வ ஜகத்திற்கும் உயிருக்கு உயிரான ராமனுடைய உயிரை நிச்சயம் செய்துகொண்ட பிறகு, தானும் ஸத்தையை அடைந்தவளாக ஆனாள். आत्मा वै पुरुषस्य दाराः (ஆத்மா வை புருஷஸ்ய தாரா:) (ஆத்மாவை புருஷஸ்ய தாரா:) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, தாரங்களைப் புருஷனுடைய ஸ்வரூபமாகச் சொல்லியிருப்பதினால், புருஷனுடைய உயிர் நிலைத்தால்தான் ஸத்ரீகளுடைய உயிரும் நிலைக்குமானதால், யுத்தத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற ராமனுடைய உயிரைப் பற்றி ஸந்தேஹப்பட்டுக்கொண்டு தானும் உயிரை இழந்தவள் போல் இருந்த ஸீதை, ராமனைப் பார்த்து, ராமனுடைய உயிரில் ஸந்தேஹம் தெளிந்து, நிச்சயமேற்பட்டபடியால், தானும் புதிதாகப் பிறந்தவள்போலாயினாள்

தவிரவும், बभूव (பபூவ) (பபூவ) என்றதனால் भू प्राप्तौ (பூப்ராப்தௌ) (பூப்ராப்தௌ) என்ற தாதுவை அனுஸரித்து, ஸீதையானவள் மஹாஸமரத்தில் ஜயித்த ராமனைப் பார்த்து தானாகவே பரபரப்போடு குஹையிலிருந்து ராமனை வந்தடைந்தாள் என்ற தாத்பர்யத்தையும் சொல்லலாம். सति धर्मिणि धर्माः (ஸதி தர்மிணி தர்மா:) (ஸதி தர்மிணி தர்மா) என்ற ந்யாயத்தை அனுஸரித்து, 'ஆச்ரயமாகிய தர்மியின் ஸ்வரூபம் ஸித்தித்த பிறகுதான் தர்மங்கள் ஸித்திக்கும்' என்ற ரீதியாக ராமனுடைய ஸத்தா லாபத்தால் ஸீதையும் ஸத்தா லாபத்தை யடைந்து, ஆச்ரயமாகிய தான் ஸித்தித்த பிற்பாடு ஆனந்தம் என்ற தர்மமும் அந்த ஸீதையென்ற தர்மியினிடத்தில் ப்ரகாசிக்கின்றது என்பதை हृष्टा (ஹ்ருஷ்டா) (ஹ்ருஷ்டா) என்ற பதத்தால் கவியானவர் ப்ரகாசப்படுத்துகிறார். ராமனுடைய ஜயத்தைப் பார்த்து ஸீதையானவள், தனக்குள் அனுபவிக்கிற அளவுகடந்த ப்ரீதிக்கு அறிகுறி போல் சரீரத்திலும் மயிர்க்கூச்சலோடு கூடினவளாக (அதாவது புளகாங்கிதமான சரீரத்தோடு கூடினவளாக) ஆனாள்.

இவைகளுக்குக் காரணமோ, ஸீதையானவள் விதேஹ குலத்தில் பிறந்ததேதாகும். விதேஹ குலத்தில் பிறந்தவர்களோ मिथिलाधिपतिर्वीर: (மிதிலாதிபதிர்வீர:) (மிதிலாதிபதிர்வீர:) என்றதால் வீரர்களாகச் சொல்லப்படுவார்கள். அந்த குலத்தில் பிறந்த காரணத்தால் ஸீதாதேவியானவள், வீரனுடைய தாரதம்யத்தை அறிந்தவளாகிருள். ப்ரக்ருத யுத்தத்திலிருந்தும் ராமனை மஹா வீரனென்று அறிந்து, அவள் அனுபவித்த ஆனந்தத்தை அளவிடமுடியாது என்று வெளியாகிறது. இவ்விதமான தாத்பர்யத்தை बभूव हृष्टा वैदेही (பபூவஹ்ருஷ்டா வைதேஹீ) (பபூவஹ்ருஷ்டா வைதேஹீ) என்ற வாக்யமானது ப்ரகாசப்படுத்துகின்றது. भर्तारं परिषस्वजे (பர்தாரம் பரிஷஸ்வஜே) (பர்தாரம் பரிஷஸ்வஜே) மேற்சொன்ன ப்ரகாரம் அளவுகடந்த ப்ரேமையினுல் பரிபூர்ணமான சரீரத்தோடு கூடின ஸீதையானவள், ஸ்வயமாகவே ராமனை ஆலிங்கனம் செய்துகொண்டாள். भर्ता (பர்த்தா) (பர்த்தா) என்றதால் தன் பர்த்தா என்ற எண்ணம் மாத்ரம் ஸீதைக்கில்லை. ஸர்வ லோகத்தையும் பரிக்கிற ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவென்று எண்ணத்தை ஸீதை அடைந்தாள். ராமன் ஸர்வலோக பர்த்தா என்ற காரணத்தால் ஸீதை, நாமும் ஸர்வலோக மாதாவாக ஆகிவிட்டோம் என்று கருதி தனனுடைய குழந்தைகளாகிய ஸர்வ ப்ரஜைகளையும் கரன் முதலான [illegible] களைக்கொன்று ரக்ஷித்த ஸந்தோஷத்தால் லோகத்தில் தன் வயிற்றில் பிறந்த குழந்தையினிடம் அபிமானமுள்ள தன் பர்த்தாவை அந்த ஸ்த்ரீயானவள் தானுகவே [illegible] கொள்வாளோ, அதுபோல் ராமனை ஸீதாதேவியானவள் ஆலிங்கனம் செய்துகொண்டாள். மஹாஸமரத்தில் [illegible] பாணவர்ஷம் வர்ஷித்ததிலிருந்தும் ஏதாவது பாணங்கள் ராமனுடைய விக்ரஹத்தில் பட்டு க்ஷதம் ஏற்பட்டிருக்கும். அந்த இடங்களைப் பரம ஸௌக்யத்தைக் கொடுக்கக்கூடியதாயும், மந்தோஷ்ணமாயும் உள்ள தன்னுடைய இரண்டு [illegible] களால் முன்பக்கம், பின்பக்கம், பார்ச்வங்கள் இவைகளில் [illegible] டுத் தொட்டு ஆலிங்கனம்செய்துகொண்டாள். [illegible] சூரனானதால் கரனுடைய பாணங்கள் ராமனுடைய [illegible] தில் விழக்காரணமில்லாமல் போனுலும் [illegible] ஷத்திற்கு ஸமானமாக கரன் பாணப்ரயோகம் செய்த [illegible] பதனுல் ஏதாவது இரண்டொரு பாணங்கள் ராமனுடைய சரீரத்தில் விழுந்திருக்கலாம். அந்த காயத்தை [illegible] மான தன்னுடைய ஸ்தனங்களால் ஸீதாதேவி யானவள் சிகித்ஸை செய்தாள். மஹர்ஷிகளை ராமன் [illegible]

தார் என்ற ப்ரீதியோடு ஸீதாதேவியானவள் ராமனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். இதுதான் மேல் சொன்ன ச்லோகத்தின் ஆபாதமான தாத்பர்யமாகும். வ்யங்க்யமர்யாதையை அநுஸரித்து தத்வார்த்தத்தையோ அடியில் கண்டபடி அறியவும்.

அதாவது, ப்ரக்ருதத்தில் ராமன் ஸகல வேதாந்த வேத்யனை தாரகபரப்ரஹ்மமே. ஸீதாதேவியோ ஜீவதத்வமாகும். இந்த ஜீவனுக்கு ப்ரம்ஹத்தைவிட்டுப்பிரிவு ஒரு காலத்திலும் கிடையாதென்று சாஸ்த்ரங்கள் முறையிட்டாலும், பொய்யான ப்ரபஞ்ச வாழ்க்கையில் அளவற்ற பற்றுதல் ஏற்பட்டு அந்த பரப்ரும்ஹத்தை அநுசிந்தனம் பண்ண அவகாசம் ஏற்படாத காரணத்தைக் கொண்டு, இந்த ஜீவனுக்கு ப்ரம்மத்தை விட்டுப் பிரிவு ஏற்பட்டு விட்டது. அதனால் கர்ம பரதந்த்ரமான சரீரத்தில் ஹ்ருதயகுஹைக்குள் ஜீவன் அகப்பட்டுக்கொண்டு பரதந்த்ரனாகக் கஷ்டப்படுகிறான். குஹைக்குள் ஸீதை இருந்தாள் என்றதனால், ஹ்ருதய குஹைக்குள் ஜீவன் என்ற அர்த்தத்தை க்ரஹிக்கவும் அந்த ஜீவனுக்கு ஹ்ருதயகுஹையிலிருந்து வெளிவந்து முன்போல் ராமனாகிய ப்ரம்ஹத்தின் ஸமீபத்திலேயே இருந்துகொண்டு அமானுஷமான திவ்ய போக ப்ரவாஹத்தை அனுபவித்து வரவேண்டுமானால், அதற்கு ஆசார்ய புருஷனுடைய அநுக்ரஹமே முக்கிய காரணமாகும். அந்த ஆசார்ய புருஷனுடைய ஸ்தானத்தில் லக்ஷ்மணனை க்ரஹித்துக் கொள்ளவும். ஜீவனுக்கு ப்ரம்ஹ ப்ராப்தியில் ஏற்படுகிற விரோதிகள்தான் அஹங்கார மமகாராதிகள். அவர்களைத்தான் ப்ரக்ருதத்தில் கரதூஷண த்ரிசிரஸ்ஸாகச் சொல்லப்படும். ஆசார்ய முகமாக பரமோபதேசியான ப்ரப்ரம்ஹத்தை ச்ரவண மனனதிகளால் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு அந்த வித்யா பலத்தால் அஹங்கார மமகாராதிகளான ராக்ஷஸர்களை நாசஞ் செய்துகொண்டு நித்ய ஸூரிகளுடைய மஹா ஸபையில் திவ்ய அலங்கார பூஷிதனாகி விளங்கிவரும் தத்பதார்த்தமான பரமாத்மாவை அடைந்து திவ்ய போக பரீவாஹத்தை அனுபவித்து வருகிறாள் என்ற வ்யங்க்யார்த்தமானது இந்த ச்லோகத்தால் பாஸிக்கின்றது. ராமாயணம் உத்தம காவ்யமானதால் வாச்யார்த்தத்தையும் அதிக்ரமித்து வ்யங்க்யார்த்தமானது பாஸிக்கவேண்டியது அவச்யமாகும். இல்லாவிடில் இதற்கு உத்தம காவ்யத்வம் ஸம்பவிக்காமல் போய்விடும். பரதந்த்ர பரக்ஞர்களான மனுஷ்யர்களுக்கோ, ராமாயணத்தில் ஒவ்வொரு பதத்திற்கும் இன்னதுதான் அபிப்ரா

[illegible] ப்ராக்ஞர்களான வ்யாக்யாதாக்கள்
[illegible] அறிந்துகொள்ள வேண்டும். ஸ்வ
[illegible] மஹாபுருஷர்களாயுமுள்ள வ்யாக்யா
[illegible] ராமாயணத்தில் வ்யங்க்ய மர்யா
[illegible] நித்த வேண்டுமென்று குறிப்
[illegible] தத்வத்தை இங்கு ப்ரகாசப்

[illegible] ராவணன் கர வதத்தை அறிதல்— [illegible] யோசனை.

[illegible] கரனை ஸமூலமாகக் கொன்று
[illegible] செய்து, மஹர்ஷிகளுக்கு
[illegible] கொடுத்ததைப் பார்த்துக் கரனுடைய
[illegible] அகம்பனன் என்ற ஒரு ராக்ஷஸன்
[illegible] லங்கா நகரத்தின் அதிபதியான ராவண
[illegible] ராமலக்ஷ்மணனைப் போர்செய்து த்வம்ஸம்
[illegible] மென்ற எண்ணத்துடன் ஜனஸ்தா
[illegible] சொல்லி, ராவணனுக்கு க்ரோதா
[illegible] அகம்பனன் ராவணனைப்
[illegible] 'ராஜனே! ராமனை யுத்தம்செய்து
[illegible] அவனுடைய ஸமீபத்தில் ஸீதை
[illegible] ஸ்த்ரீரத்னம் பார்யை
[illegible] அந்த ஸ்த்ரீக்கு ஸமானமான
[illegible] தேவஜாதிகளிலோ, கந்தர்வ
[illegible] பார்க்கமுடியாது. ஆகை
[illegible] அபஹாரம் செய்து
[illegible] ஸீதையை விட்டுப் பிரிந்த துக்கத்தால்
[illegible] விட்டுவிடுவார். அதைத் தவிர
[illegible] ராமனை ஜயித்து ஜனஸ்
[illegible] அவனுடைய ப்ராதாக்களுக்கு நீ
[illegible] வேண்டும்' என்று ஸீதா
[illegible] என்ற ராக்ஷஸன் ராவணனுக்கு
[illegible] அதைக் கேட்டு ஸீதையை
[illegible] ஸீதாபஹாரத்தை உண்டு
[illegible] செய்தான்.

[illegible] ராமனுக்கு [illegible]
[illegible] செய்யுங்காலத்தில் ஒரு ஸங்
[illegible] ராவணனும் பேசிக்

கொண்ட வ்ருத்தாந்தத்தையும் சொல்லிக்கொண்டு வந்தார். அதாவது, "ராமா! உன் பத்னியான ஸீதாதேவியை அபஹரித்ததற்கு மூலகாரணம் உனக்குத் தெரிந்திருக்கக்கூடும். ஆயினும் வ்யவஹாரதசையை அபேக்ஷித்து நான் உனக்குச் சொல்லுகிறேன். முன்பு க்ருத யுகத்தில் ப்ரம்ஹ புத்ரனை ஸனத்குமார ஸ்வாமியை ராவணன் ஒரு ஸமயம் ஸந்தித்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச்செய்த பிறகு ராவணன் பரம வினயத்துடன் ஸனத்குமார ஸ்வாமியினிடம் ப்ரச்னம் செய்தான். 'ஹே குரோ, ராக்ஷஸர்களும் அஸுரர்களும் தானவர்களும் அநேகம்பேர்கள் மஹாவிஷ்ணுவிற்கு எதிரில் யுத்தம் செய்து விஷ்ணுவினால் கொல்லப்பட்டு மறித்திருக்கிறார்களே! அவர்கள் என்ன கதியை அடைந்திருக்கிறார்கள்? மஹாவிஷ்ணு அவர்களை எதற்காகத்தான் கொன்றார்?' என்று கேட்டான். ஸனத்குமார ஸ்வாமியும் அதற்கு பதில் சொன்னார்.

ये ये हताश्चक्रधरेण राजन् त्रैलोक्यनाथेन जनार्दनेन ।

ते ते गतास्तन्निलयं नरेन्द्राः क्रोधोऽपि देवस्य वरेण तुल्यः ॥

யெ யெ ஹதாஶ்சக்ரயரெண ராஜந் த்ரைலொக்யநாயெந
ஜநாத௩நெந ।

தெ தெ மதாஸ்தந்நிலயம் நரெந்த்ராः க்ரொயொவி
தெவஸ்ய வரெண துல்யः ॥

யே யே ஹதாச்சக்ரதரேண ராஜந் த்ரைலோக்யநாதேந ஜநார்தநேந ।

தே தே கதாஸ்தந்நிலயம் நரேந்த்ரா: க்ரோதோபி தேவஸ்ய
வரேண துல்ய: ॥

என்று "த்ரைலோக்ய நாயகனும் சக்ரபாணியாயுமுள்ள மஹாவிஷ்ணுவினால் எவரெவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களாகிறார்களோ அவரவர்கள் அபராஜிதமான வைகுண்டத்தையே அடைகிறார்கள். பகவானுடைய கோபமும் பகவானுடைய ப்ரஸாதத்திற்கு ஸமானமானது தான்" என்று சொன்னார். ராவணனும்,

श्रुत्वा ततस्तद्वचनं निशाचरः सनत्कुमारस्य मुखाद्विनिर्गतम् ।

तदा प्रहृष्टस्सबभूव विस्मितः कथंनुयास्यामि हरिं महाहवे ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑌃 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯
𑌮𑍁𑌖𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌮𑍍 ।
𑌤𑌦𑌾 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌸𑌬𑌭𑍂𑌵 𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌃 𑌕𑌥𑌂𑌨𑍁𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿
𑌹𑌰𑌿𑌂 𑌮𑌹𑌾𑌹𑌵𑍇 ॥

ச்ருத்வா ததஸ்தத்வசநம் நிசாசர: ஸநத்குமாரஸ்ய முகாத்விநிர்கதம் ।
ததா ப்ரஹ்ருஷ்டஸ்ஸபபூவ விஸ்மித: கதம்நுயாஸ்யாமி ஹரிம்
மஹாஹவே ॥

என்றபடி ஸனத்குமாரஸ்வாமியின் வார்த்தையைக் கேட்டவுடன், மஹத்தான ஆச்சர்யத்தை அடைந்து, 'நாமும் எப்படி விஷ்ணுவிற்கு விரோதியாகிப் பெரிய யுத்தத்தில் விஷ்ணுவினால் கொல்லப்பட்டு முக்தனாகுவோம்?' என்று நினைத்து மிகவும் கவலையுடன் ஸனத்குமாரஸ்வாமியினுடைய எதிரிலேயே நின்று வந்தான். ஸனத்குமாரஸ்வாமியும் ராவணனைப் பார்த்துச் சொன்னார் :—

मनसश्चेप्सितं यत्तद्भविष्यति तदाहवे ।
सुखीभव महाबाहो किञ्चित्कालं प्रतीक्षय ॥
अथवा राक्षसेन्द्रत्वं यदीदं प्रष्टुमिच्छसि ।
कथयिष्यामि ते सर्वं श्रूयतां यदि रोचते ॥
कृते युगे व्यतीते वैमुखे त्रेतायुगस्यतु ।
हितार्थं देवमर्त्यानां भविता नृपविग्रहः ॥
इक्ष्वाकूणां च यो राजा भाव्यो दशरथोभुवि ।
तस्यसूनुर्महातेजा रामोनाम भविष्यति ॥
एवं श्रुत्वा महाबाहुः राक्षसेन्द्रः प्रतापवान् ।
त्वया सह विरोधेच्छुः चिन्तयामास राघव ॥
सनत्कुमारात्तद्वाक्यं चिन्तयानो मुहुर्मुहुः ।
रावणोमुमुदे मोहात् युद्धार्थी विचचारह ॥
एतदर्थं महाबाहो रावणेन दुरात्मना ।
सुता जनकराजस्य हृता राम महामते ॥
लङ्कामानीय यत्नेन मातेव परिरक्षिता ।

𑌮𑌨𑌸𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌤𑌥𑌾𑌹𑌵𑍈 ।
𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌲𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 ॥
𑌅𑌥𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌤𑍍𑌵𑌂 𑌯𑌦𑍀𑌦𑌂 𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ।
𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌯𑌦𑌿 𑌰𑍋𑌚𑌤𑍇 ॥
𑌕𑍃𑌤𑍇 𑌯𑍁𑌗𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑍇 𑌵𑍈 𑌮𑍁𑌖𑍇 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑍁𑌗𑌸𑍍𑌯 𑌤𑍁 ।
𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍇𑌵𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌨𑍃𑌪𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥
𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍂𑌣𑌾𑌂 𑌚 𑌯𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌭𑌾𑌵𑍍𑌯𑍋 𑌦𑌶𑌰𑌥𑍋 𑌭𑍁𑌵𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌸𑍂𑌨𑍁𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌨𑌾𑌮 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥
𑌏𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍 ।
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌸𑌹 𑌵𑌿𑌰𑍋𑌧𑍇𑌚𑍍𑌛𑍁𑌃 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌰𑌾𑌘𑌵 ॥
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌨𑍋 𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌃 ।
𑌰𑌾𑌵𑌣𑍋 𑌮𑍁𑌮𑍁𑌦𑍇 𑌮𑍋𑌹𑌾𑌤𑍍 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑍀 𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ॥
𑌏𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌰𑌾𑌵𑌣𑍇𑌨 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌸𑍀𑌤𑌾 𑌜𑌨𑌕𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌹𑍃𑌤𑌾 𑌰𑌾𑌮 𑌮𑌹𑌾𑌮𑌤𑍇 ॥
𑌲𑌙𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑍀𑌯 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌤𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 ॥

மநஸச்சேப்ஸிதம் யத்தத்பவிஷ்யதி ததாஹவை ।
ஸங்க்ஷிப்ய மஹாபாஹோ கிஞ்சித்காலம ப்ரதீக்ஷ்ய ॥
அதவா ராக்ஷஸேந்த்ர த்வம் யதீதம் ப்ரஷ்டுமிச்சஸி ।
கதயிஷ்யாமி தே ஸர்வம் ச்ரூயதாம் யதிரோசதே ॥
க்ருதே யுகே வ்யதீதே வை முகே த்ரேதாயுகஸ்யது ।
ஹிதார்த்தம் தேவமர்த்யாநாம் பவிதா ந்ருபவிக்ரஹ: ॥
இக்ஷ்வாகூணாம் யோ ராஜா பாவ்யோ தசரதோ புவி ।
தஸ்ய ஸூநுர் மஹாதேஜா ராமோ நாம பவிஷ்யதி ॥
ஏவம் ச்ருத்வா மஹாபாஹு: ராக்ஷஸேந்த்ர: ப்ரதாபவாந் ।
த்வயா ஸஹ விரோதேச்சு: சிந்தயாமாஸ ராகவ ॥
ஸநத்குமாராத்தத்வாக்யம் சிந்தயாநோ முஹுர்முஹு: ।
ராவணோமுமுதே மோஹாத் யுத்தார்த்தீ விசாரஹ ॥
ஏததர்த்தம் மஹாபாஹோ ராவணேந துராத்மநா ।
ஸீதா ஜநகராஜஸ்ய ஹ்ருதா ராம மஹாமதே ॥
லங்காமாநீய யத்நேந தாம்சைவ பரிரக்ஷிதா ।

“ராவணா, நான் முன்பு சொன்னதிலிருந்து உனக்கு விஷ்ணுவோடு விரோதித்துக்கொண்டு, பெரிய யுத்தத்தில் அவரால் கொல்லப்பட்டு நாம் எப்படி மறிப்போம் என்று ஆலோசிக்

கிறாய். உன் மனதில் உள்ளது சீக்ரம் நிறைவேறும். சிறிது காலத்தை ப்ரதீக்ஷித்து வா. அதை வ்யக்தமாய் என் மூலம் தெரிந்துகொள்ள உனக்கு இச்சையிருந்தால் அந்த ரஹஸ்யத்தையும் சொல்கிறேன் கேள். க்ருதயுகம் முடிந்து த்ரேதாயுக ஆரம்பத்தில் இக்ஷ்வாகு வம்சத்தில் உதிக்கப் போகிற தசரதர் என்ற அரசனுக்கு, பகவானை விஷ்ணு புத்ரனாக அவத்ரித்து, ராமன் என்ற திருநாமத்துடன் தேவர்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் க்ஷேமத்தை அளித்துக் கொண்டு விளங்கிவரப்போகிறார். அவரோடு உனக்கு விரோதம் ஸித்தித்து அந்த ராமனால் ஹதனாயும் ஆகி வைகுண்டத்தை அடைவாய்'' என்று ராவணனுக்கு ஸனத்குமாரஸ்வாமி உபதேசம் செய்தார். இந்த ரஹஸ்யத்தை அகஸ்த்யபகவான் ராமனிடம் ப்ரகாசப்படுத்தி "ராம, அந்த ஸனத்குமாரர் வாக்யத்தைக் கேட்டதிலிருந்து தான் ராவணன் உன்னோடு விரோதத்தை எதிர் பார்த்துக்கொண்டு ஸீதையை அபஹரித்தான். லங்கையில் அசோகவனத்தில் ஸீதையைக் கொண்டுபோய் ஸ்தாபித்து மாத்ரு புத்தியோடும் மிகவும் ச்ரத்தா பக்தியோடும் ஸீதையானவள் ரக்ஷிக்கப்பட்டுவந்தாள்'' என்ற ரஹஸ்யத்தை ராமனுக்கு அகஸ்தியர் சொன்னார். இதற்கு மூலமோ ஸனத்குமார—ராவண ஸம்வாதரூபமான கதையாகும். இது உத்தர ராமாயணத்தில் ப்ரஸித்தமானது. அங்குள்ள ச்லோகங்களுள் இங்கு சில ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதை அனுஸரித்து ராவணன் பூர்வஞானியானதினாலும் அகம்பனன் என்ற ராக்ஷஸன் ஸீதாபஹாரம் செய்யும்படி சொன்னவுடன் பூர்வ வ்ருத்தாந்தமானது ராவணனுக்கு ஸ்ம்ருதிக்கு வந்து 'ராக்ஷஸபாவத்திலிருந்தும் நாம் விமோசனத்தை அடைவதற்கு இது ஒரு பெரிய ஸந்தர்ப்பமாகும்' என்று நினைத்து அகம்பனனுடைய வார்த்தையை மிகவும் பஹுமானபுத்தியோடு ஏற்றுக்கொண்டு "அகம்பனா நீ சொல்வது ஸரியான உபாயமாகும். நாளையதினம் காலையில் ஸீதாபஹாரத்தைச் செய்யக் கிளம்புகிறேன். ஸாரதியும் நானும் [illegible] கார்யத்தை முடித்துவருகிறோம்'' என்று சொல்லி, அகம்பனனை அனுப்பிவிட்டான்.

மறுநாள்காலையில் ஸீதாபஹாரத்தை உத்தேசித்து ப்ரஸ்தானமாகி, மாரீசனையும் தனக்கு ஸஹாயத்திற்கு [illegible]ழைத்துப் போகும் உத்தேசத்துடன் தாடகையின் பிள்ளையான மாரீசனுடைய ஆச்ரமத்திற்குச் சென்றான். மாரீசனும் ராவணனை

வரவேற்று ஆஸனம் கொடுத்து உட்காரவைத்து வந்த கார்யத்தை ப்ரச்னம் செய்தான். ராவணனும் 'தசரத ராஜனுடைய புத்ரர்களான ராம லக்ஷ்மணர்கள் ஜனஸ்தானத்தை ஸமூலமாய் அழித்துவிட்டதையும், அதற்கு பதிலாக ராமனோடு தான் நேரில் யுத்தம் செய்ய சக்தியில்லாததாலோ வேறு காரணத்தாலோ, அதை வெளிப்படுத்தாமல் 'அந்த ராமனுடைய பத்னியான ஸீதையை நான் அபஹரித்துவரப் போகிறேன். அது விஷயத்தில் நீ எனக்கு ஸஹாயம் செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான்.

மாரீசன் ராவணனைப் பார்த்து, "நீ இவ்விதம் ஸீதாபஹாரத்தில் ப்ரவ்ருத்திப்பது பெரிய ஆபத்தில் முடியும். ராமனுடைய பாணத்தின் வேகம் எவ்வித கார்யத்தைச் செய்யும் என்று எனக்கல்லவா தெரியும்! ஆகையால் நீ ராமனிடம் விரோதித்துக்கொள்ளாமல், இந்த லங்கா நகரத்தில், உன் தாரத்தினிடம் ஸுகமாக ரமித்துவா. ராமனும் தன் பார்யையுடன் வனங்களில் ரமித்துவரட்டும். ஆகையால் நீ, லங்கா நகரத்திற்குத் திரும்பிச் செல்" என்றான். ராவணனும் மாரீசனுடைய ஹிதோபதேசத்தைக் கேட்டு, லங்கா நகரத்திற்கே திரும்பிச் சென்றான்.

ஸ்ரீ ராமனை வதிக்க ராவணனின் யோசனை

சூர்ப்பணகை மூலம் 'ஜனஸ்தானமானது அடியோடு அழிந்துவிட்டது' என்றறிந்து அதற்குக் காரணம் ராம, லக்ஷ்மணர்கள்தானகையால் அவர்களை உடனே வதித்து, நமது ப்ராதாக்களான கரன், தூஷணன், த்ரிசிரஸ் மூன்று பேர்களுக்கும் த்ருப்தியை உண்டுபண்ணிவைப்பது நமது கடமையாகும்' என்று நினைத்து, ராவணன் மிகவும் கோபத்தை அடைந்து 'ராமன் லக்ஷ்மணன் இருவர்களையும் எப்படி ஜயிப்பது?' என்று ஆலோஜித்தான். 'மஹா பராக்ரமசாலியான கரனையே அஸஹாயனகக் கொன்று ஜயத்தை அடைந்த ராமனை, நாம் போர் செய்து ஜயிக்கமுடியாது. ஏதாவது மாயாபலத்தை அவலம்பித்துத்தான் ஜயிக்கவேண்டும். ராமனுடைய தர்மபத்னியான ஸீதையை எப்படியாவது அபஹரித்துக்கொண்டுவந்துவிட்டால், ராமன் தானகவே உயிரை இழந்துவிடுவார். இதுதான் ஸரியான உபாயமாகும். ஸீதையை அபஹரிப்பதற்கோ, மஹா மாயாவியான மாரீசன் தான் நமக்கு ஸஹாயம் செய்யவேண்டும்' என்று தீர்மானித்து, ரதத்துடன் ப்ரஸ்தானமாகி, மாரீசனுடைய ஆச்ரமத்திற்குச் சென்றான்.

மாரீசனே, விச்வாமித்ரருடைய யாக ஸம்ரக்ஷண காலத்தில், ராமருடைய பராக்ரமத்தை அனுபவித்தவனானதினல், அதுமுதல், 'ராமரிடம் இனி நாம் விரோதித்துக்கொள்ளக் கூடாது' என்ற தீர்மானத்துடன், தபஸ்விகளுடைய வேஷத்தைத்தரித்துக்கொண்டு ஒரு ஆச்ரமத்தில் மஹா தபஸ்வியாக விளங்கிவந்தான்.

ராவண—மாரீச ஸம்வாதம்

तत्र कृष्णाजिनधरं जटावल्कलधारिणम् ।
ददर्श नियताहारं मारीचं नाम राक्षसम् ॥

𑌤𑌤𑍍𑌰 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌧𑌰𑌂 𑌜𑌟𑌾𑌵𑌲𑍍𑌕𑌲𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌦𑌦𑌰𑍍𑌶 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌂 𑌮𑌾𑌰𑍀𑌚𑌂 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌮𑍍 ॥

தத்ர க்ருஷ்ணஜிநதரம் ஜடாவல்கலதாரிணம் ।
ததர்ச நியதாஹாரம் மாரீசம் நாம ராக்ஷஸம் ॥

ராவணன் சென்று மாரீசனைப் பார்க்கும்பொழுதோ, மாரீசன் ராக்ஷஸனாகவே தோன்றவில்லை. தலையில் ஜடாபாரத்தைத் தரிக்கிறவனாயும், இடுப்பில் மரையுரியைத் தரித்துக்கொண்டும், மான் தோலின்மேல் வீராஸனமுடனாக உட்கார்ந்துகொண்டும், ராமருடைய திவ்ய ஸ்வரூபத்தை ஹ்ருதயபுண்டரீகத்தில் த்யானம் செய்துகொண்டு ஸமாதியில் அமர்ந்திருந்தான். ராவணன் சென்ற ஸந்தர்ப்பத்திலோ, மாரீசன் தெய்வீகமாக ஸமாதியிலிருந்து கண் விழித்துக்கொண்டான். உடன், ஆஸனத்திலிருந்து எழுந்திருந்து ராவணன் என்ற ராக்ஷஸ ராஜனை விதிவத்தாக வரவேற்று, அர்க்யம், ஆசமனீயாதிகளால் பூஜித்து த்ருப்தி செய்து வைத்துவிட்டு, ராவணனைக் குசலப்ரச்னம் செய்தான்.

कच्चित्सुकुशलं राजन् लङ्कायां राक्षसेश्वर ।
केनार्थेन पुनस्त्वं वै तूर्णमेवमिहागतः ॥

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑍁𑌕𑍁𑌶𑌲𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌕𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑍈 𑌤𑍂𑌰𑍍𑌣𑌮𑍇𑌵𑌮𑌿𑌹𑌾𑌗𑌤𑌃 ॥

கச்சித்ஸுகுசலம் ராஜந் லங்காயாம் ராக்ஷஸேச்வர ।
கேநார்த்தேந புநஸ்த்வம் வை தூர்ணமேவமிஹாகத: ॥

“ஹே ராவணு! நீ மிகவும் ஸம்ப்ரமத்துடன் வந்திருப்ப தாகத் தெரிகிறது. உன்னுடைய ராஜ்யஸ்ரீக்கு யாதொரு குறைவு மில்லாமலிருந்து வருகிறதா? க்ஷேமந்தானே?” என்று கேட்டான்.

இவ்விதம் கேட்ட மாரீசனுக்கு ராவணன் பதிலளித் ததோ:—“மாரீசா! நமது ஜனஸ்தானத்தை அயோத்யாபதி யான தசரத சக்ரவர்த்தியின் குமாரர்கள் பூண்டோடு அழித்துவிட்டார்கள். ஜனஸ்தானமே இருந்த இடம் தெரி யாமல்போய்விட்டது. கரன், தூஷணன், த்ரிசிரஸ் முதலான மூவர்களும், தேவர்கள் அஸுரர்கள் இவர்களையும் ஜயித்து, மஹா பராக்ரமசாலிகளாக விளங்கிவந்தது உனக்கு தெரியா ததல்ல! அவர்களைக் கூட வதித்து, ஜனஸ்தானத்தை ராக்ஷ ஸரில்லாத இடமாக ராமர் செய்துவிட்டார். அதனுல் ஏற்ப டும் இந்த துக்கத்தை என்னுல் ஸஹிக்க முடியவேயில்லை! ராமனேடு எதிர்த்து யுத்தம்செய்வதிலும் அவ்வளவு தைர்யம் ஏற்படவில்லை. ஆகையால் தாந்த்ரீகமான வழியைத் தேடித் தான் ராமனை ஜயிக்கவேண்டும். இந்த விஷயத்தில் உன் ஸஹாயத்தை நான் எதிர்பார்க்கிறேன். நீ தங்கத்தினுல் செய்யப்பட்ட மான்போல் உன்மாயாபலத்தைஅவலம்பித்துக் கொண்டு, ராமனுடைய பத்னியான ஸீதைக்கெதிரில் உன் னுடைய விலாஸாதிகளால் அவளுடைய மனதை அபஹ ரித்து, அவள் ராமனைப் பார்த்து, ‘இந்த மானை எனக்குப் பிடித்துக் கொடுக்கவேண்டும்’ என்று அவச்யம் வற்புறுத்தி, நீ வெகு தூரத்திற்கப்பால், ராமனை வஞ்சித்து ஓடிவிட்டால், நான் ஸீதையை அபஹரித்துக்கொண்டு வந்துவிடுகிறேன். பிறகு ஸீதையை விட்டுப் பிரிந்ததனுல், ராமன் க்ருசமாகிவிடு வார். அவருடைய பௌருஷம் முதலியனவகளும் குறைந்து விடும். பிறகு அவரை யுத்தம் செய்து ஜயிக்க ஸௌலப்ய மும் ஏற்படக்கூடும். ஆகையால், இந்த விஷயத்தில் நீ எனக்கு ஸஹாயம் செய்து, ப்ராதாக்களுடைய மரணநிமித்த மான துக்கத்தை நிவ்ருத்தி செய்துவைக்கவேண்டும். அதை உத்தேசித்துத்தான் நான் உன் அருகில் வந்தேன். நீ அதற்கு யாதொரு தடையும் செய்யக்கூடாது”.

இதைக் கேட்ட மாரீசனே, “ராமனேடு விரோதம் செய் யும்படியான காலகதி இவனுக்கு வந்துவிட்டதே! இது மிக வும் அந்யாயமல்லவா! யார் இவனுடைய புத்தியை இவ் விதம் துர் உபதேசத்தால் மாற்றிவிட்டார்கள் என்று தெரிய வில்லையே! இவன் ராமனேடு யுத்தம் செய்து எப்படி

ஜயிக்கமுடியும்? ராமனுடைய பாண வேகம் எனக்கல்லவா தெரியும்! ஆகையால் இந்த ஸங்கல்பம் மிகவும் கஷ்டமானது. இந்த ஸங்கல்பத்தினின்றும் ராவணனை எப்படியாவது நிவ்ருத்தி செய்துவைக்கவேண்டும்' என்று தீர்மானித்து ராவணனுக்கு மாரீசன் ஸதுபதேசம் செய்கிறான்.

सुलभाः पुरुषा राजन्सततं प्रियवादिनः ।
अप्रियस्य तु पथ्यस्य वक्ता श्रोता च दुर्लभः ॥

𑌸𑍁𑌲𑌭𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍𑌸𑌤𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।
𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌪𑌥𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥

ஸுலபா: புருஷா ராஜந்ஸததம் ப்ரியவாதிந: |
அப்ரியஸ்ய து பத்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப: ||

“ராவணா! லோகத்தில் யஜமானனை அனுஸரித்து அவனுக்கு ப்ரியமாகப் பேசுகிறவர்கள் வெகு பேர்கள் அகப்படுவார்கள். காலாந்தரத்தில் ராஜனுக்கு ஹிதத்தை வ்ருத்தி செய்து வைக்கும் வார்த்தையை சொல்லுகிறவர்கள் ச்ரவண காலத்தில் இந்த வார்த்தை ராஜனுக்கு அப்ரியம்போல் தோன்றும்படியாகத்தான் செய்வார்கள். ஆனால் அது அப்ரியமாக ஆகாது. ராஜாவின் புத்தி தோஷத்தால்தான் அந்த வார்த்தை அவனுக்கு அப்ரியமாகப்படும். ராஜனுடைய நன்மையை மாத்ரம் கருதி ஹிதத்தை போதிக்கிறவர்கள் உலகத்தில் ரொம்பவும் துர்லபமாகத்தானிருப்பார்கள். அப்படியவர்கள் ஹிதோபதேசம் செய்தாலும் அதை கேழ்க்கும் யஜமானனோ மிகவும் துர்லபம். தற்காலத்திலோ உன்னுடைய நீடித்த நன்மையைக் கருதி நான் உனக்கு சில வார்த்தைகளை தெரிவிக்கிறேன். அது உனக்கு இந்த ஸமயத்தில் அப்ரியமாகத்தானிருக்கும். ஆகிலும் அதற்காக நான் பயந்து சொல்லாமலிருக்கப் போவதில்லை. ராமனுடைய பெருமையை நீ கொஞ்சம்கூட அறியவில்லை.

न नूनं बुध्यसे रामं महावीर्यं गुणोन्नतम् ।

𑌨 𑌨𑍂𑌨𑌂 𑌬𑍁𑌧𑍍𑌯𑌸𑍇 𑌰𑌾𑌮𑌂 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌗𑍁𑌣𑍋𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ।

ந நூநம் புத்யஸே ராமம் மஹாவீர்யம் குணோந்நதம் |

மஹா பராக்ரமசாலியாயும், அளவிடமுடியாத கல்யாண குணங்களால் அலங்க்ருதனாயுமுள்ள ராமனை நீ அறியவில்லை.

உனக்கோ, ஸமஸ்தமான ராக்ஷஸர்களுக்கோ, மேன்மேலும் க்ஷேமத்தை அடையக்கூடிய அத்ருஷ்டமானது குறையாமலிருக்கவேண்டுமென்று என் ப்ரார்த்தனை. ராமனுக்குக் கோபம் வந்துவிட்டால், ராக்ஷஸப் பூண்டே லோகத்தில் இல்லாமல் செய்துவிடுவார். ஸீதாதேவியை அபஹாரம் செய்யவேண்டுமென்ற புத்தி உனக்கு ஏற்பட்டிருப்பதை நினைத்தால் உன்னுடைய அந்த்யகாலத்திற்குத்தான் ஸீதை அவதரித்திருக்கின்றுளோ! என்றும் தோன்றுகிறது. உன்நிமித்தமாக எனக்கும் ஆபத்து வந்துவிடுமோ! என்ற பயமும் ஏற்படுகிறது. இந்த துர்புத்தியுள்ள உன்மூலம் லங்காநகரமே அழிந்துவிடும். ராமனே ஸத்யம் என்ற விசேஷ தர்மத்தை ரக்ஷிப்பதற்காக அரண்யம் வந்திருக்கிறுரே தவிர, ராஜ்ய பதவிக்கு அர்ஹனில்லாமலோ, வேறு சத்ரு பயத்தாலோ வந்தவரில்லை. ஸகல வேதங்களிலும் சொல்லப்படும் தர்மம் உருவமெடுத்துக் கொண்டு ராமனுக வந்திருக்கிறது. அந்த ராமனுடைய தர்ம பத்தினியான ஸீதையை அபஹரிக்க வேண்டுமென்று நீ எண்ணுவது மிகவும் அதர்மமாகும். உன்னுல் ராமனை ஆச்ரயித்த ஸீதையை அபஹரிக்கவும் முடியாது ஆகையால் ராமனிடத்திலுள்ள குணங்களையும், உன்னிடமுள்ள தோஷத்தையும், உன் பலத்தையும், ராமனுடைய பலத்தையும் பிரித்து நன்றுக அறிந்து, ஸீதையை அபஹாரம் செய்வதினுல் நமக்கு ஹிதமா? அஹிதமா? என்பதையும் அறிந்து, இந்த ஸமயத்தில் நீ பேசாமலிருப்பதுதான் உனக்கு அழகு என்று எனக்குத் தோன்றுகிறது.

अहं तु मन्ये तव न क्षमं रणे समागमं कोसलराजसूनुना ।
इदं हि भूयः शृणु वाक्यमुत्तमं क्षमं च युक्तं च निशाचरेश्वर ॥

𑌅𑌹𑌂 𑌤𑍁 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌤𑌵 𑌨 𑌕𑍍𑌷𑌮𑌂 𑌰𑌣𑍇
𑌸𑌮𑌾𑌗𑌮𑌂 𑌕𑍋𑌸𑌲𑌰𑌾𑌜𑌸𑍂𑌨𑍁𑌨𑌾 ।
𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂
𑌕𑍍𑌷𑌮𑌂 𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑍇𑌶𑍍𑌵𑌰 ॥

அஹம் து மந்யே தவ ந க்ஷமம் ரணே ஸமாகமம் கோஸலராஜஸூநுநா ।
இதம் ஹி பூய: ச்ருணு வாக்யமுத்தமம் க்ஷமம் ச யுக்தம் ச நிசாசரேச்வர ॥

'கோஸலதேசத்திற்கு அதிபதியான ராமனேடு யுத்தம் செய்வது' என்ற உன் ஸங்கல்பமானது உசிதமில்லை என்று நான் எண்ணுகிறேன். ராமனுடைய பராக்ரமத்தைப் பற்றி மற்ருெரு கதையும் சொல்லுகிறேன் கேள்.

முன் காலத்தில் நான் ஆயிரம் யானைக்குள்ள பலத்துடன் கூடினவனாக இருந்துகொண்டு, அநேக ராக்ஷஸர்களால் சூழப்பட்டு, ஸுபாஹு என்ற என் ப்ராதாவுடனும் சேர்ந்துகொண்டு தண்டகாரண்யத்தில் அநேக ரிஷிகளைக் கொன்று, மாம்ஸங்களைப் புஜித்துக்கொண்டு ஸஞ்சாரம் செய்துவந்தேன். அந்த ஸந்தர்ப்பத்தில் விச்வாமித்ரர் என்ற ஒரு மஹர்ஷியானவர் ஒரு யக்ஞத்தை ஸங்கல்பம் செய்துகொண்டு ஆரம்பித்தார். அதை அறிந்த நான் ராக்ஷஸர்களுடன் யக்ஞசாலைக்குச் சென்று யக்ஞத்தை நிறைவேறாமல் செய்து மஹர்ஷிகளையும் அவமதித்து வந்தேன். இப்படி பல தடவை விச்வாமித்ர மஹர்ஷியானவர் திரும்பித் திரும்பி யக்ஞத்தை ஆரம்பித்தும், நான் அந்தந்த ஸமயங்களில் சென்று யக்ஞத்தை நாசம் செய்துவந்தேன். அந்த மஹர்ஷிக்கு, தன் தபஸ்ஸினால் என்னை பஸ்மமாகச் செய்யக்கூடிய சக்தி இருந்தாலும், ஸத்கர்மாவினுடைய மத்தியில் கோபத்திற்கு இடங்கொடுக்கக் கூடாதென்று நினைத்து என்னை சாபத்தால் பஸ்மமாகச் செய்யாமலே இருந்து வந்தார். அயோத்யாதிபதியான தசரதசக்ரவர்த்திக்கு ராமன் புத்ரனாக அவதரித்த பிறபாடு இந்த மஹர்ஷி தசரதராஜனிடம் சென்று, யக்ஞஸம்ரக்ஷணத்திற்காக ராமனை யாசித்தார். ராஜனோ புத்ரனைக் கொடுப்பதில் மனமில்லாதவராயிருந்தாலும், ராமனுடைய பெருமையைப்பற்றி விச்வாமித்ர மஹர்ஷி செய்த உபதேசத்திலிருந்தும், வஸிஷ்டருடைய அநுமதியினாலும், தசரதர் ராமனை விச்வாமித்ரருக்கு அர்ப்பணம் செய்தார். ராமருடன் லக்ஷ்மணஸ்வாமியும் ப்ராத்ரு ஸௌஹ்ருதத்தை அநுஸரித்துப் பின்தொடர்ந்துவந்தார். இவ்விதம் ராமர் லக்ஷ்மணர் இருவரையும் ஸித்தாச்ரமத்திற்கு அழைத்து வந்து, இருவர்களுடைய உதவியைக்கொண்டு யக்ஞத்தை நிறைவேற்றி விடலாமென்று நினைத்து, மறுபடியும் யக்ஞத்தை ஆரம்பித்தார். ராமன், லக்ஷ்மணன் இருவரும் தனுஷ்பாணிகளாக யக்ஞசாலையை ரக்ஷித்து வந்தார்கள். ஆறாவது தினமாகிய அவப்ருதத்தன்று வழக்கம்போல் நானும் ராக்ஷஸர்களால் சூழப்பட்டு, ஸுபாஹுவுடன் யக்ஞத்தை த்வம்ஸம் செய்வதற்காக அங்கு சென்றேன். ராமனைப் பார்த்து, அவருடைய மஹிமையை நான் அறியாமல், 'மிகவும் சிறுவயதுள்ள மனிதன்தானே' என்ற துர்புத்தியை அடைந்து, பாண வர்ஷங்களால் யக்ஞசாலையை எரிக்க ஆரம்பித்தேன். ரக்த வர்ஷத்தாலும், மாம்ஸ வர்ஷத்தாலும் அக்னி குண்டலங்களிலும் ஆபாஸமான நிலையை உண்டுபண்ணினேன். அந்த ஸந்தர்ப்பத்தில் ராமன், மிக

வும் கோபத்தை அடைந்து லக்ஷ்மணன் மூலமாக ஆக்னே யாஸ்த்ர ப்ரயோகம் செய்து ஸுபாஹுவை பஸ்மமாகச் செய்துவிட்டு, வாயவாஸ்த்ர ப்ரயோகத்தால் மற்ற ராக்ஷஸர்களையும் விரட்டி விட்டு, தான் ஸ்வயமாகவே என்னை நோக்கி மானவாஸ்த்ர ப்ரயோகம் செய்தார். அந்த மானவாஸ்த்ரத்தினுடைய செய்கைகளை இப்பொழுது நினைத்தாலும் நான் நடுங்குகிறேன்! ஆயிரம் யானையின் பலம் எனக்கு இருக்கிறதென்ற அஹங்காரம் அங்கு பலிக்கவில்லை. அந்த அஸ்த்ரமானது என்னை வெகு தூரத்திற்கப்பாலுள்ள ஸமுத்ரத்தில் ரொம்பவும் ஆழமான இடத்தில் மணல் வரை கீழே தள்ளி, பிறகு மேல்தூக்கி வந்தபிறகும் கீழ்தள்ளி மேல் தூக்கி வருவதுமாக வெகு கஷ்டப்படும்படி செய்தது. மிகவும் கஷ்டத்தால் ப்ரக்ஞையைக்கூட நான் இழந்துவிட்டேன். ஆனால் அந்த அஸ்த்ரம் என்னை கொல்லவில்லை. கொல்லாதற்கு காரணமோ இப்பொழுது நீ செய்யும் ஸீதாபஹாரத்திற்கு நான் ஸஹாயமாயிருந்துகொண்டு, லங்காநகரம் அடியோடு ஒழியவேண்டுமென்று ராமனுடைய ஸங்கல்பம் தானோ என்று தோன்றுகிறது! இல்லாவிடில், அந்த ஆபத்திலிருந்து பிழைத்துவர ந்யாயமில்லை. இவ்விதம் நான் ராமனுடைய பலத்தை அனுபவித்தவன். அது முதல் ராமவிரோதத்தைப் பாராட்டாமல், மஹர்ஷிகளுக்கும் பூஜ்யமான சரணாரவிந்தத்துடன் கூடின ராமனை உபாஸித்து வருகிறேன். ராமனுடைய பராக்ரமத்தை நான் அறிந்திருப்பது போல் நீ அறிந்தவனல்ல. ராமனோடு யுத்தம் செய்து நீ முன்னேற்றத்தை அடைய முடியாதென்பதை மறுபடியும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஸீதாபஹாரம் என்ற பாப கார்யத்தில் நீ ப்ரவ்ருத்திக்க வேண்டாம். நீ ஒருவன் ஸீதாபஹாரம் என்ற பாபத்தைச் செய்வதினால், லங்காநகரமே அழிந்துவிடும். ஸகல ராக்ஷஸர்களும் அழிந்து விடுவார்கள்.

अकुर्वन्तोपि पापानि शुचयः पापसंश्रयात् ।
परपापैर्विनश्यन्ति मत्स्या नागह्रदे यथा ॥

𑌅𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌶𑍁𑌚𑌯𑌃 𑌪𑌾𑌪𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌤𑍍 ।
𑌪𑌰𑌪𑌾𑌪𑍈𑌰𑍍𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾 𑌨𑌾𑌗𑌹𑍍𑌰𑌦𑍇 𑌯𑌥𑌾 ॥

அகுர்வந்தோபி பாபாநி சுசய: பாபஸம்ச்ரயாத் ।
பரபாபைர்விநச்யந்தி மத்ஸ்யா நாகஹ்ரதே யதா ॥

என்ற சாஸ்த்ரப்படி ஜனங்கள் மஹா புண்யவான்களாயிருந்தாலும் பரிசுத்தமான ஸ்வபாவமுள்ளவர் யிருந்தாலும், அவர்கள் பாபத்தைச் செய்த புருஷனுடைய ஸம்பந்தத்தை வைத்துக்கொள்ளக்கூடாது. அந்த பாப புருஷனுடைய ஸம்பந்தத்தால் புண்யவான்களும் அழிந்துவிடுவார்கள். ஸர்ப்பங்கள் இருக்கும் மடுவில் கருடபக்ஷவான் தனக்கு சத்ருவான ஸர்ப்பங்களை பக்ஷித்துவருகிறார். அதே மடுவில் மத்ஸ்யங்களிருக்கும் பக்ஷத்தில், அந்த மத்ஸ்யங்கள் கருடனுக்கு சத்ருவாகாதபோதிலும் கருடனுக்கு அபசாரம் செய்த பாப புருஷர்களான ஸர்ப்பங்களுடைய ஸம்பந்தத்தால் மத்ஸ்யங்களும் கருடனால் பக்ஷிக்கப்பட்டு அழிந்துவிடுகிறது. இது உலகத்தில் அனுபவ ஸித்தமானது. அதுபோல் கருடனை வாஹனமாக உடைத்தான ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவினுடைய அவதாரமான ஸ்ரீராமனுடைய அபசாரத்தால் நீ மஹாபாபியாகி, உன் ஸம்பந்தத்தால் மற்ற ராக்ஷஸர்களும் பூண்டோடு அழியும்படி நேர்ந்துவிடும். ஆகையால் அவ்விதமான அநீதியான மார்க்கத்தில் நீ ப்ரவ்ருத்திக்க வேண்டாம்.

परदाराभिमर्शात्तु नान्यत्पापतरं महत् ।
प्रमदानां सहस्राणि तव राजन्परिग्रहः ॥
भव स्वदारनिरतः स्वकुलं रक्ष राक्षस ।
मानमृद्धिं च राज्यं च जीवितं चेष्टमात्मनः ॥
कलत्राणि च सौम्यानि मित्रवर्गं तथैव च ।
यदीच्छसि चिरं भोक्तुं मा कृथा रामविप्रियम् ॥
निवार्यमाणः सुहृदा मया भृशं प्रसह्य सीतां यदि धर्षयिष्यसि ।
गमिष्यसि क्षीणबलः सबान्धवो यमक्षयं रामशरात्तजीवितः ॥

𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌭𑌿𑌮𑌰𑍍𑌶𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌤𑌰𑌂 𑌮𑌹𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌮𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑌵 𑌰𑌾𑌜𑌨𑍍𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥
𑌭𑌵 𑌸𑍍𑌵𑌦𑌾𑌰𑌨𑌿𑌰𑌤𑌃 𑌸𑍍𑌵𑌕𑍁𑌲𑌂 𑌰𑌕𑍍𑌷 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸 ।
𑌮𑌾𑌨𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌚 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌕𑌲𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌨𑌿 𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌗𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌯𑌦𑍀𑌚𑍍𑌛𑌸𑌿 𑌚𑌿𑌰𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌮𑌾 𑌕𑍃𑌥𑌾 𑌰𑌾𑌮𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥

நிவார்யமாண: ஸுஹ்ருதா மயா ப்ருசம் ப்ரஸஹ்ய
ஸீதாம் யதி தர்ஷயிஷ்யஸி ।
கமிஷ்யஸி க்ஷீணபல: ஸபாந்தவோ
யமக்ஷயம் ராமசராத்தஜீவித: ॥

பரதாராபிமர்சாத்து நாந்யத்பாபதரம் மஹத் ।
ப்ரமதாநாம் ஸஹஸ்ராணி தவ ராஜந்பரிக்ரஹ: ॥
பவ ஸ்வதாரநிரத: ஸ்வகுலம் ரக்ஷ ராக்ஷஸ ।
மாநம்ருத்திம் ச ராஜ்யம் ச ஜீவிதம் சேஷ்டமாத்மந: ॥
கலத்ராணி ச ஸௌம்யாநி மித்ரவர்கம் ததைவ ச ।
யதீச்சஸி சிரம் போக்தும் மா க்ருதா ராமவிப்ரியம் ॥
நிவார்யமாண: ஸுஹ்ருதா மயா ப்ருசம்
ப்ரஸஹ்ய ஸீதாம் யதி தர்ஷயிஷ்யஸி ।
கமிஷ்யஸி க்ஷீணபல: ஸபாந்தவோ
யமக்ஷயம் ராமசராத்தஜீவித: ॥

அந்ய ஸ்த்ரீகளுடைய ஸம்ஸர்கத்திற்கு மேலான பாபமே வேறு ஒன்றும் உலகத்தில் பெரிதல்ல. ஆகையால் அதில் நீ ப்ரவ்ருத்திக்க வேண்டாம். உனக்கோ ஆயிரக் கணக்காக தர்மதாரங்களோ போகதாரங்களோ இருந்து வருகின்றார்கள். அவர்களிடம் நீ ரமித்துக்கொண்டு ஸௌக்ய மாக இருந்துவா. ராமாபராதத்தைச் செய்து குலத்தை அழித்துக்கொள்ளவேண்டாம். மானம், ராஜ்யம், உயிர், இம்மூன்றையும் நீ பாதுகாத்து வரவேண்டுமானால் ராமா பராதத்தில் பரவ்ருத்திக்காதே. களத்ர வர்கமும், மித்ர வர் கமும், நீயும் நெடுநாள் ஜீவிக்கவேண்டுமென்ற இச்சை, இவ் வளவும் உனக்கிருந்தால் ராமனுக்கு அப்ரியத்தைச் செய் யாதே. இவ்வளவுதூரம் நான் உனக்குச் சொல்லியும் என் வார்த்தையை நீ கேழ்க்காமல் ஸீதாபஹாரம் செய்வது என்று ஸங்கல்பம் செய்துவிட்டால், நீ யமலோகம்தான் போவாய். இது நிச்சயம்தான். ராமனுடைய பாணங்கள் உன் ப்ராணங்களை அறுத்துவிடும். ஆகையால் வீண் பிடி வாதம் செய்யாமல் லங்கா நகரம் திரும்பிப்போ. ராமனு டைய பலம் எங்கே? உன் பலம் எங்கே? ராமன் விச்வா மித்ர மஹர்ஷியின் யக்ஞத்தை ரக்ஷித்த காலமோ ரொம்ப வும் பால்யமாயிருக்கும் காலமாகும். அந்த பால்யத்திலேயே ராமருடைய பராக்ரமம் அத்யாச்சர்யத்தைக் கொடுக்கக்கூடிய தென்று முன் விளக்கினேன்.

அப்பொழுது நான்பட்ட அவமானத்திலிருந்தே நான் தபஸ்வியாக ஆகவில்லை. அந்த வைரத்தை ஸ்மரித்துக் கொண்டு தாண்டகாரண்யத்தில் ஸஞ்சாரம் செய்து வந்தேன். அப்பொழுது ராமன் யௌவன காலத்தில் பித்ரு வாக்யம் என்ற தர்மத்தை நிலைநாட்ட ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் தண்டகாரண்யத்தில் வாஸம் செய்யும் காலத்திலும் நான் பூர்வ வைரத்தை ஸ்மரித்துக்கொண்டு மற்ற இரண்டு ராக்ஷஸர்களையும் எனக்கு ஸஹாயமாக அழைத்துக் கொண்டு, நான் உள்பட மூன்றுபேர்களும் மான் வேஷத்தை தரித்துக்கொண்டு ரிஷிகளுடைய மாம்ஸங்களையும் பக்ஷித்துக்கொண்டு யத்ருச்சையாக ராமனுடைய ஆச்ரமத்திற்கருகில் சென்றோம். பகவானான ராமனும் எங்களைப் பார்த்த மாத்ரத்தில், தன்னுடைய கோதண்டமென்ற வில்லிலிருந்து மூன்று பாணங்களை ப்ரயோகம் செய்தார். என்னுடன் வந்த இரண்டு ராக்ஷஸர்களுக்கோ ராமபாணத்தின் வேகத்தின் பெருமை தெரியாததினால் அந்த பாணங்களால் அடிபட்டு இறந்துவிட்டார்கள். நான் விச்வாமித்ரருடைய யாக காலத்தில் ராமபாணத்தின் வேகத்தை அனுபவித்தவனானதினால், நம்மால் ஸஹிக்கமுடியாதென்ற எண்ணத்துடன், மிகவும் தந்த்ரமாக பாணத்திற்கு இரையாகாமல் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன். அதற்குப் பிறகுதான் ராம வைரத்தை இனி பாராட்டக் கூடாதென்று நினைத்து, இவ்விதம் தபஸ்வியாக இருந்து வருகிறேன். இவ்விதம் பால்யம் முதல் ஸஹஜமான பராக்ரமத்துடன் கூடின ஸ்ரீ ராமனிடம் நீ விரோதித்துக்கொள்வது உனக்கு மிகவும் அனர்த்தத்தைக்கொடுக்கக்கூடியது. யாரோ உன் புத்தியைக் கெடுத்துவிட்டார்கள். ஆகையால் இந்த துர்வ்யாபாரத்திலிருந்து உன் புத்தியைத் திருப்பிக்கொண்டு, ராமனிடம் நிர்வைரமாக இருந்துகொண்டு, லங்கா நகரத்திற்குச் சென்று ராஜ்யத்தையும், ராக்ஷஸர்களையும் நீடித்தகாலம் பரிபாலனம் செய்துகொண்டு ச்ரேயஸ்ஸை அடையவேண்டுமென்பதுதான் என் கோரிக்கையாகும்" என்று மாரீசன் ராவணனுக்கு ஸத்புத்தியை உபதேசம் செய்தான். ராவணனோ

तं पथ्यहितवक्तारं मारीचं राक्षसाधिपः ।
अब्रवीत्परुषं वाक्यमयुक्तं कालचोदितः ॥
यत्किलैतदयुक्तार्थं मारीच मयि कथ्यते ।
वाक्यं निष्फलमत्यर्थमुप्तं बीजमिवोषरे ॥

𑌤𑌂 𑌪𑌥𑍍𑌯𑌹𑌿𑌤𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌾𑌰𑍀𑌚𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍𑌪𑌰𑍁𑌷𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃 ॥
𑌯𑌤𑍍𑌕𑌿𑌲𑍈𑌤𑌦𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌾𑌰𑍀𑌚 𑌮𑌯𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌮𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍁𑌪𑍍𑌤𑌂 𑌬𑍀𑌜𑌮𑌿𑌵𑍋𑌷𑌰𑍇 ॥

தம் பத்யஹிதவக்தாரம் மாரீசம் ராக்ஷஸாதிப: ।
அப்ரவீத்பருஷம் வாக்யமயுக்தம் காலசோதித: ॥
யத்கிலைததயுக்தார்த்தம் மாரீச மயி கத்யதே ।
வாக்யம் நிஷ்பலமத்யர்த்தமுப்தம் பீஜமிவோஷரே ॥

என்ற ச்லோகத்தால், மாரீசனை ச்லாஹித்துப் பேசாதபோனாலும் கூட மிகவும் நிந்தித்துப் பேசினான்.

"ஹே மாரீசா! நீ பேசிய வார்த்தைகள் ஒன்றுக்காவது அர்த்தமே ஸமஞ்ஜஸமாகாது. ப்ராந்தனுடைய ப்ரலாபம் போல்தானாகும். ஊஷர பூமியில் விரை விதைத்தால் அது எப்படி நிஷ்பலமாக ஆகுமோ, அதுபோல்தானாகிறது எனக்கு நீ செய்கிற உபதேசங்கள் எல்லாம். உன்னுடைய வாக்யத்தால் நான் திரும்பிவிடமாட்டேன். ராஜனுடைய ஸந்நிதியில் மந்த்ரியோ, மற்ற ப்ரஜைகளோ, ராஜனுடைய அபிப்ராயத்திற்கு விரோதமாகப் பேசுவது நீதி சாஸ்த்ரத்திற்கு ஸம்மதமாகாது. அப்படிப் பேசுகிறவர்களை ராஜன் இஷ்டப்பட்டால் சிரச்சேதம் பண்ணிவிடலாம். ராமனை ஏதோ ரொம்பவும் பெரியவனாக நீ பேசுகிறாயே! அவனுடைய ஆசாரத்திலிருந்துமே அவன் மிகவும் துர்பலனான மனிதன் என்று தெரிகிறது."

यस्त्यक्त्वा सुहृदो राज्यं मातारं पितरं तथा ।
स्त्रीवाक्यं प्राकृतं श्रुत्वा वनमेकपदे गतः ॥

𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌹𑍃𑌦𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌨𑌮𑍇𑌕𑌪𑌦𑍇 𑌗𑌤𑌃 ॥

யஸ்த்யக்த்வா ஸுஹ்ருதோ ராஜ்யம் மாதரம் பிதரம் ததா ।
ஸ்த்ரீவாக்யம் ப்ராக்ருதம் ச்ருத்வா வநமேகபதே கத: ॥

என்றதனால், ராமனை மிகவும் துர்பலன் என்று ராவணன் நிந்தித்துப் பேசுகிறான்.

"ஸ்த்ரீகளுடைய வாக்யத்தைப் போல் ஸார மற்றதான வாக்யம் வேறொன்றுமே யில்லை. சாஸ்த்ர விருத்தமாயும், லோக விருத்தமாயும், முன்பின் விரோதமுள்ளதாயும் உள்ள வாக்யத்தை ஆபாஸ வாக்யமென்று சொல்வார்கள். அவ்வித வாக்யத்திற்கு உதாஹரணத்தை தேடினால் ஸ்த்ரீகளுடைய வாக்யத்தைத் தான் சொல்ல வேண்டும். அதிலும் கைகேயிதேவியை ஒத்த ஸ்த்ரீகளோ கேவலம் ப்ராக்ருதமான ஸ்த்ரீகளாவார்கள். அவர்களுடைய வாக்யத்திற்குபுத்திமானான புருஷன் பெருமையைக் கொடுப்பானா? அவளுடைய வார்த்தையை பெரிதாகநினைத்து இந்த ராமன் தனக்குப் பூஜ்யர்களான தாய் தந்தைகளையும், அவர்களுடைய வயது முதிர்ந்து அசக்தர்களாக இருக்கும் ஸமயத்தில் த்யாகம் செய்துவிட்டு, அப்படியே தன் ஸுஹ்ருத்துக்கள், அகண்ட ராஜ்யலக்ஷ்மீ, எல்லாவற்றையும் இழந்துவிட்டு, கேவலம் பரதேசியைப்போல் காட்டில் வந்து கந்தமூலத்திற்குத் திண்டாடுகிற இந்த மனிதனை நீ ஒரு பெரிய மனிதனாக வர்ணித்துக்கொண்டு, என் புத்தியையும் மாற்றிவிடலாம் என்று நினைக்கிறாய்! அது ஸாத்யமாகாது."

இது நிற்க, அங்காங்கு கீழ்க்கதைகளில் ராமாயணத்தினுடைய கதாபாகத்தை வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து ராமனுடைய ப்ரசம்ஸாபரமாக சொன்னதுபோல், மேற்கண்ட ச்லோகத்திற்கும் தத்வார்த்தத்தைக் கவனிக்க வேண்டும்.

அதாவது, वनं एक पदे गतः (வநம் ஏக பதே கத:) (வநம் ஏக பதே கத:) என்ற வாக்யத்தால் वनं (வநம்) (வநம்) என்றால் ஜலம் என்ற பொருளை அறியவும். एकपदे (ஏகபதே) (ஏகபதே) என்றால் முக்யமான ஸ்தானம் என்று அறியவும். ஜலத்தையே முக்யமான ஸ்தானமாக அடைந்த ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் என்ற அர்த்தமானது த்வனிக்கிறது. "ஹே மாரீசா! நீ ராமனை ஒரு சூர புருஷன் என்று மாத்ரம் அறிந்திருக்கிறாய்; நானோ, एको ह वै नारायणः आसीत् (ஏகோ ஹவை நாராயண: ஆஸீத்) (ஏகோ ஹவை நாராயண: ஆஸீத்) என்ற ச்ருதியில் சொல்லியபடி ஸர்வஜகத்திற்கும் மூலகாரணமான ஆதிநாராயணன் என்றும் அறிந்தவன்.

ஆகையால், அந்த பகவானுடைய விஷயத்தில் நீ எனக்கு எந்த புத்திமதியையும் உபதேசம் பண்ணவேண்டாம். அந்த

பகவான் வைகுண்டத்தில் நித்ய ஸௌபாக்யத்துடன் விளங்கி வரும் காலத்தில் நானும், என் தம்பியான கும்பகர்ணனும் ஜயன், விஜயன் என்ற ப்ரஸித்தமான பெயருடன் பார்ஷதர்களாக இருந்துவந்தோம். ஸனகாதிகளுடைய சாபத்தால் தற்காலத்தில் ராக்ஷஸபாவத்தையடைந்து ப்ராக்ருத த்ருஷ்டியை அனுஸரித்து, ராமனுக்கு விரோதிகள் போல் விளங்கிவருகிறோம். ஸனகாதிகள் சபித்தவுடனேயே, லோகமாதாவான மஹாலக்ஷ்மியின் காலில் விழுந்து சாபவிமோசனத்தை ப்ரார்த்தித்துகொண்டோம். பரதேவதையும் ப்ரஸன்னமாகி 'நீங்கள் துக்கத்தை அடையவேண்டாம். பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை ஸ்தாபனம் செய்ய த்ரேதாயுகத்தில் பகவான் ராமனாக அவதாரம் செய்யப்போகிறார். நானும் ஜனகமஹாராஜாவின் வம்சத்தில் அவதரித்து, ராமனை விவாஹம்செய்துகொள்ளப்போகிறேன். பிறகு நாங்கள் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை நிலைநாட்ட அரண்யத்தில வாஸம்செய்வோம். அந்த ஸமயத்தில் என்னுடைய கடாக்ஷபாதம் உனக்கு முதலில் ஸித்தித்து அதன்மூலம் உனக்கு ராக்ஷஸபாவத்திலிருந்து விமோசனமும் ஏற்படும். பிறகு வைகுண்ட வாஸம் ஸித்திக்கும் என்று சொல்லிவிட்டு எங்களையும் ராக்ஷஸ ஜன்மாவை அடையும்படி ஆக்ஞாபித்துவிட்டு, கொஞ்சகாலங் கழித்து எங்களுடைய சாப விமோசனத்திற்காக மஹாலக்ஷ்மீ தன் பர்த்தாவான மஹாவிஷ்ணுவை பூலோகத்தில் அவதரிக்கும்படி வற்புறுத்தினாள். மஹாவிஷ்ணுவும் தன் தர்மபத்னியான லக்ஷ்மீயின் வாக்யத்தைக்கேட்டு ஸூர்யவம்சத்தில் தசரதரின் புத்ரனாக அவதாரம் செய்தார். இந்த அபிப்ராயத்தைதான் ராவணன் சொல்லுகிற ச்லோகத்தில் स्त्रीवाक्यं प्राकृतं श्रुत्वा (𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾) (ஸ்த்ரீவாக்யம் ப்ராக்ருதம் ச்ருத்வா) என்ற வாக்யங்களால் மஹர்ஷியானவர் ஸூசிப்பிக்கின்றார். स्त्री (𑌸𑍍𑌤𑍍𑌰𑍀) (ஸ்த்ரீ) என்ற சப்தமானது தர்ம பத்னியைத்தான் குறிப்பிடும். ஸ்த்ரீ சப்தம் தர்மபத்னியைத்தான் குறிப்பிடும் என்ற விஷயமானது அயோத்யாகாண்டத்தில், हृष्टाः खलु भविष्यन्ति रामस्य परमास्त्रियः (𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌖𑌲𑍁 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃) (ஹ்ருஷ்டா: கலு பவிஷ்யந்தி ராமஸ்ய பரமாஸ்த்ரிய:) என்ற மந்த்ரையினுடைய வாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்யும் ஸந்தர்ப்பத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ப்ரக்ருதத்தில் स्त्री (𑌸𑍍𑌤𑍍𑌰𑍀) (ஸ்த்ரீ) என்ற பதத்தால் தர்மபத்னியான லக்ஷ்மீதேவி என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவேண்டும்.

ப்ரக்ருதமோ, ராவண வதத்திற்காக பகவான் மனிதனாகப் பூலோகத்தில் அவதாரம் செய்ததேயாகும். அதனால் ப்ரக்ருத உபயோகியான லக்ஷ்மீதேவியின் வார்த்தையைக் கேட்டு, ஆதி நாராயணனன் இக்ஷ்வாகு வம்சத்தில் ராமனாக அவதரித்து, ராஜ்யமோ, ஸுஹ்ருத்துக்களோ, தாய் தந்தைகளோ, அவர்கள் தன்னுடைய அவதாரத்திற்கு உத்தேச்யமில்லாததினால், அவர்களை இழந்துவிட்டு, என்னுடைய வதத்தை பரம உத்தேச்யமாகக் கருதி, தன்னுடைய தர்மபத்னியான லக்ஷ்மீதேவியை நான் ஆராதித்து, அந்த தேவியின் கடாக்ஷபாதத்திற்கு விஷயமாகவேண்டும் என்ற எண்ணத்துடன் பஞ்சவடீ தீரத்தில் வாஸம் செய்துவருகிறார். ஜனஸ்தான விநாசமே அதற்கறிகுறிவாகும். அதை அறிந்துதான் நான் லோகமாதாவான ஸீதாதேவியை திவ்ய ரதத்தில் ஆரோபணம் செய்துவைத்து, அந்த தேவியை லங்கா நகரத்தில் ஸ்தாபனம் செய்து, வெகு ப்ரகாரமான உபசாரங்களால் பூஜித்துவிட்டுத் தேவியினுடைய கடாக்ஷத்திற்குப்பாத்ரனாகி, அதிலிருந்தும் ராமன் என்னை ராக்ஷஸபாவத்திலிருந்து விமோசனம் செய்துவைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் நான் இந்தக் கார்யத்தில் ப்ரவ்ருத்தித்தேனேயன்னியில், மூட ஜனங்களுடைய த்ருஷ்டியை அனுஸரித்து ஏற்படுகிற தாத்பர்யங்களெல்லாம் மிகவும் தப்பானது என்பதை நீ அறிய வேண்டும். அது விஷயத்தில் நீ ஸஹாயம் செய்தால் உனக்கும் ராக்ஷஸ பாவத்தினின்று விமோசனம் ஏற்பட்டு,

पशु: मनुष्य: पक्षीवा एचवैष्णव संश्रया: ।
तेनैवते प्रयास्यन्ति तद्विष्णो: परमं पदम् ॥

𑌪𑌶𑍁𑌃 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑌕𑍍𑌷𑍀𑌵𑌾 𑌯𑍇𑌚𑌵𑍈𑌷𑍍𑌣𑌵 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 ।
𑌤𑍇𑌨𑍈𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥

பசு: மநுஷ்ய: பக்ஷீவா ஏசவைஷ்ணவ ஸம்ச்ரயா: ।
தேனைவதே ப்ராயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥

என்ற ந்யாயப்படி நீயும் ஸத்கதியை அடையலாம் என்றுதான் ராவணன் சொன்ன यस्त्यक्त्वा सुहृदो राज्यं (𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌹𑍃𑌦𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂) (யஸ்த்யக்த்வா ஸுஹ்ருதோ ராஜ்யம்) என்ற ச்லோகத்தின் வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து ஏற்படும் அபிப்ராயமாகும்.

கதாபாகத்தை அனுஸரித்து, ராவணன், ஸீதாப ஹாரம் செய்வதற்காக மாரீசனை ஸஹாயமாக எதிர் பார்த்தான். மாரீசனே, ராவணனுக்கு ஸத்புத்தியை உப தேசம் செய்து, துர்மார்க்கத்திலிருந்து திருப்பவேண்டு மென்று எண்ணினாலும், அது ராவணனிடத்தில் பலிக்க வில்லை. ஒரே வீம்பாக ஸீதாபஹாரம் செய்துதான் ஆவது என்று ராவணன் தீர்மானித்ததிலும், कालचोदितः (𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃) (காலசோதித:) என்ற விசேஷணம்தான் காரண மாகும்.

தர்மராஜாவானவன், ராமனோடு ராவணன் ஸுஹ்ருத் பாவத்தை யடைந்து, நீடித்து வாழ ஸம்மதிக்காமல் விரோ தத்தையே வ்ருத்திசெய்துகொள்ள யத்னம் செய்தான் என் பது வெளியாகிறது. ராமனே தாரகப்ரம்மம் என்று அடிக் கடி சொல்லப்பட்டிருக்கிறது. तन्नप्रियं देवानां यदेतन्मनुष्याविद्युः (𑌤𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌯𑌦𑍇𑌤𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌃) (தந்நப்ரியம் தேவாநாம் யதேதந்மநுஷ்யாவித்யு:) என்ற ச்ருதியை அனு ஸரித்து மனிதர்களோ, ராக்ஷஸர்களோ, அஸுரர்களோ இவர் கள் ப்ரம்ம தத்வத்தை அறிய யத்னம் செய்கிறார்களென்றி ருந்தால், அது தேவர்களுக்கு ஸஹிக்காத கார்யமாகுமென்று தெரிகிறபடியாலும், தர்மராஜனானவன் தேவர்களுக்குள் ப்ர தானமான தேவனானதினால், இந்த ராவணன் ராமனாகிற தாரகப்ரம்மத்தை ஸுஹ்ருத்தாகச் செய்துகொண்டு, அக் காரணத்தால் அவனுக்கு ப்ராணவியோகம் ஏற்பட ந்யாய மில்லாமலாகி, கல்பஜீவியாக நீடித்து வாழ்வானே என்ற அஸூயையினால், ராவணனுக்கு ராம விரோதத்தை வ்ருத்தி செய்வது உசிதமாகும் என்பது कालचोदितः (𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃) (காலசோதித:) என்ற பதத்தால் வெளியாகிறது. மாரீசன் ராவணனுக்கு எவ்வளவோ புத்திமதியை உபதேசம் செய்தாலும் ராவணன் அதை பொருட்படுத்தவேயில்லை.

गुणदोषौ न पृच्छामि क्षमं चात्मनि राक्षस ।
मयोक्तं तव चैतावत्संप्रत्यमितविक्रम ॥

𑌗𑍁𑌣𑌦𑍋𑌷𑍌 𑌨 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌕𑍍𑌷𑌮𑌂 𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸 ।
𑌮𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌵 𑌚𑍈𑌤𑌾𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮 ॥

குணதோஷௌ ந ப்ருச்சாமி க்ஷமம் சாத்மநி ராக்ஷஸ ।
மயோக்தம் தவ சைதாவத்ஸம்ப்ரத்யமிதவிக்ரம ॥

"...டம், நான் ஸீதாபஹாரம் செய்வதினால் எனக்கு ...துணா தோஷங்களை விசாரிக்க வரவில்லை. நான் ...செய்யவேண்டும் என்பதை யோஜிக்கவும் வரவில்லை. ...என்ன தீர்மானம் செய்தேனே அதை நீ அனுஸரித்துத் ...வேண்டும். இந்த கார்யத்தில் எனக்கு நீ ஸஹாயம் ...வேண்டும். அதாவது, உன் மாயா பலத்தால் தங்கத் ...மானம் செய்யப்பட்ட மான்போல் புள்ளிமான் உரு ...எடுத்துக்கொண்டு ராமனுடைய ஆச்ரமத்தில் ஸீதா ...எதிரில் நீ துள்ளிக் குதித்து விளையாடவேண்டும். ...செய்தால்போதும். இதைக்காட்டிலும் அதிகமான ... நீ எனக்குச் செய்ய வேண்டாம். உன்னை ...மாத்ரத்தில் ஸீதாதேவியானவள் மிகவும் வ்யா ...மோஹத்தையடைந்து, ராமனைப் பார்த்து 'ராமா! இந்த ...பிடித்துத் தரவேண்டு'மென்று ஆசையுள்ளவளாகக் ...வாள். ராமனும் அதைக்கேட்டு உன்னைப் பிடித்துக் ...உன்னை விரட்டுவார். அந்த ஸமயத்தில் ஸ்ரீராமன் ...அகப்பட்டுகொள்ளாமல் வெகுதூரத்திற்கு அப்பால் ...ராமனே உன்னை விரட்டிக்கொண்டே வெகு ...வந்துவிடுவார். பிறகு ராமன் உன்னை ராக்ஷஸன் ...ந்து தன் பாணத்தால் கொன்றாலும் ஸரி, கொல் ...னாலும் ஸரி, நீ ராமனுடைய ஸ்வரம்போல் தீனமான ...ல் 'ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா!' என்று கதற ... அந்த வார்த்தையை ஸீதை கேட்டதும் ராம ...வார்த்தை அனுஸரித்து, லக்ஷ்மணனையும் ...வாள். ஸீதைமாத்ரம் தனியாக ஆச்ரமத்திலிருக் ...துவிடும். உடன் நான் அந்த ஆச்ரமத்திற்குச் ...ஸீதையை அபஹரித்து வந்துவிடுகிறேன். இது ...செய்யவேண்டிய ஸஹாயமாகும். இப்படி நீ எனக்கு ...ஸஹாயத்தைச் செய்தால், என் ராஜ்யத்தில் பாதியை ...தந்துவிடுகிறேன். இவ்விதம் நான் சொல்லு ...கேட்காமல் நீ உதாஸீனம் செய்தால் இப்பொழுதே ...உன்னை கொன்றுவிடுவேன்" என்று மாரீசனை ராவ ...மிகவும் பயமுறுத்தினான்.

...கேட்ட மாரீசனும் 'யாரோ ராவணனிடத்தில் ...கொண்ட ராக்ஷஸர்கள் அவனுடைய புத்தியைக் ...விட்டார்கள். ஆகையால் நான் என்ன சொல்லி ...அதை மனதில் வாங்கிக் கொள்ளவில்லை. இது ...பெரிய லங்காராஜ்யம் அழிந்துபோக ஏற்பட்ட ...காலம்தான்' என்று நினைத்து ராவணனைப் பார்த்து ...மும் சொல்லுகிறான்.

आनयिष्यसि चेत्सीतामाश्रमात्सहितो मया ।
नैव त्वमसि नाहं च नैव लङ्का न राक्षसाः ॥
निवार्यमाणस्तु मया हितैषिणा न मृष्यसे वाक्यमिदं निशाचर ।
परेतकल्पा हि गतायुषो नरा हितं न गृह्णन्ति सुहृद्भिरीरितम् ॥

𑌆𑌨𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌚𑍇𑌤𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌸𑌹𑌿𑌤𑍋 𑌮𑌯𑌾 ।
𑌨𑍈𑌵 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌨𑌾𑌹𑌂 𑌚 𑌨𑍈𑌵 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌨 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 ॥
𑌨𑌿𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌸𑍍𑌤𑍁 𑌮𑌯𑌾 𑌹𑌿𑌤𑍈𑌷𑌿𑌣𑌾
𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌸𑍇 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰 ।
𑌪𑌰𑍇𑌤𑌕𑌲𑍍𑌪𑌾 𑌹𑌿 𑌗𑌤𑌾𑌯𑍁𑌷𑍋 𑌨𑌰𑌾
𑌹𑌿𑌤𑌂 𑌨 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑌿 𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌭𑌿𑌰𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥

ஆநயிஷ்யஸி சேத்ஸீதாமாச்ரமாத்ஸஹிதோ மயா ।
நைவ த்வமஸி நாஹம் ச நைவ லங்கா ந ராக்ஷஸ: ॥
நிவார்யமாணஸ்து மயா ஹிதைஷிணா
ந ம்ருஷ்யஸே வாக்யமிதம் நிசாசர ।
பரேதகல்பா ஹி கதாயுஷோ நரா
ஹிதம் ந க்ருஹ்ணந்தி ஸுஹ்ருத்பிரீரிதம் ॥

"ராவணா! என் ஸஹாயத்தைகொண்டு ஸீதையை மாத்ரம் ஆச்ரமத்திலிருந்து அபஹரித்து வந்துவிட்டால் நீயும் ஜீவிக்கப்போவதில்லை; நானும் ஜீவிக்கப்போவதில்லை; ராக்ஷஸர்களும் மாண்டுபோய் விடுவார்கள்; லங்கையும் பஸ்மமாக ஆகிவிடும் என்றதை மனதில் த்ருடமாக வைத்துக்கொள். உனக்கு ஹிதத்தைக் கருதி நான் இந்த வார்த்தைகளைச் சொன்னேன். உனக்கு அது ஸம்ஹிக்கவில்லை. மரிக்க உத்ஸாஹமுள்ள புருஷர்கள் ஸ்நேஹிதர்கள் சொல்வதைக் கேழ்க்கிற வழக்கமில்லை தான்! உன் இஷ்டம்போல் செய். ஸரி போவோம் வா" என்று சொல்லிவிட்டு ராவணனுக்கு முன்பு மாரீசன் ராமாச்ரமத்திற்குச் சென்றான்.

ராவணனும் மாரீசனைத்தொடர்ந்து ரதத்துடன் சென்றான். மாரீசனே ராமாச்ரமம் சென்று ராமாச்ரமத்திற்கு ஸமீபத்தில் அழகான வாழைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு உபவனத்தைக் கண்டான். உடன் மாயையினால் தன் ராக்ஷஸ ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு தங்கத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட மான்போல் அழகான புள்ளிகளால் அலங்

தரிக்கப்பட்ட சரீரத்தை எடுத்துக்கொண்டு, அந்த உபவனத்தில் துள்ளி துள்ளி விளையாடி வந்தான். உண்மையான மான்களெல்லாம் இந்த மானைப் பார்த்துவிட்டு 'தங்கள் ஜாதியில் சேர்ந்தது' என்பதை நம்பாமல் மிரண்டு மிரண்டு ஓடின. இவ்விதமிருக்கும்பொழுது பாக்யாத் ஸீதாதேவியானவள் புஷ்பச்செடிகளில் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு நின்று வந்தாள். அந்த மான் ஸீதையின் கண்ணில் தென்பட்டது. ஸீதை அதைப் பார்த்தவுடன் மாயாமயமான அந்த ம்ருகமும் வெகு ப்ரகாரமாக விளையாடிக்கொண்டு ஸீதையை மோஹவலையில் சிக்கிக்கொள்ளும்படி செய்தது. உடன் ஸீதை ராமனை அழைத்து,

आर्यपुत्राभिरामोऽसौ मृगो हरति मे मनः ।
आनयैनं महाबाहो क्रीडार्थं नो भविष्यति ॥

𑌆𑌰𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑍋𑌽𑌸𑍌 𑌮𑍃𑌗𑍋 𑌹𑌰𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌨𑌃 ।
𑌆𑌨𑌯𑍈𑌨𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

ஆர்யபுத்ராபிராமோஸௌ ம்ருகோ ஹரதி மே மந: ।
ஆநயைநம் மஹாபாஹோ க்ரீடார்த்தம் நோ பவிஷ்யதி ॥

"ஹே ஆர்யபுத்ரா! ராமா! இதுவரையிலும் காணாததான இந்த ம்ருகம் என் மனதை அபஹரிக்கின்றது. ஆகையால் நீ எனக்கு சீக்ரம் பிடித்து கொடுக்கவேண்டும். நமது ஆச்ரமத்தில் நாம் க்ரீடிப்பதற்கு இந்த மான் உபயோகப்படும். இந்த மான் உயிருடன் அகப்பட்டால் நமது வனவாஸம் முடிந்த பிற்பாடு நமது நகரமான அயோத்திக்கும் கொண்டுபோகலாம். என் ஸகிகளோ, பந்துக்களோ, 'ஸீதை அரண்யத்திலிருந்து எந்த அபூர்வமான வஸ்துவைக்கொண்டு வந்தாள்' என்று கேட்டால், இந்த மானையே நாம் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்த மானைப் பார்த்தமாத்ரத்தில் அயோத்தியா ராஜ்யவாஸிகளே பரம ஆச்சர்யத்தை அடைவார்கள். கௌஸல்யாதேவி முதலான நமது மாத்ரு ஜனங்களோ, ஆர்யபுத்ரனே பரதனே, இவர்கள் எல்லோரும் இதைப் பார்த்து மிகவும் ஸந்தோஷத்தை அடைவார்கள். அப்படி ஜீவனோடு நமது கையில் அகப்படாதபோனாலும், இதனுடைய தோலோ மிகவும் அழகாயும் ம்ருதுவாயுமிருப்பதினால் ஜபாதிகளைச் செய்யுங்காலத்தில் ஆஸனமாகப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொள்ளலாம்" என்று சொன்னாள்.



இவ்விதம் ஸீதையின் வார்த்தையைக் கேட்ட ராமனும் மனிதனுடைய அவதாரத்தை நடித்துக்காட்ட, தானும் அந்த மாயா ம்ருகத்தினுடைய வலையில் அகப்பட்டுக்கொண்டவர் போல் பாவித்து லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்கிறார். "லக்ஷ்மணா! இந்த மானின் ஸௌந்தர்யத்தை நீ கவனித்தாயா? இதுபோலொத்த மானை இந்த பூலோகத்தில் ஓரிடத்திலும் பார்க்கமுடியாது. இந்த்ரனுடைய உதயானவனத்தில்கூட இதுபோலொத்த ம்ருகத்தைப் பார்ப்பது அபூர்வமாகும். ஸீதைக்கோ இந்த ம்ருகத்தினிடத்தில் மிகவும் ப்ரேமை ஏற்பட்டுவிட்டது. ஆகையால் நான் அந்த ம்ருகத்தைப் பிடித்து வரப்போகிறேன். ஜீவனுடன் பிடிக்க முடியாதபோனால் வதித்தாவது அதனுடைய சர்மாவை (தோலை) எடுத்து வருகிறேன். நான் போய் வருகிறவரையிலும் ஸீதையை நீ பத்ரமாகக் காப்பாற்றிவரவேண்டும். நமது ஸகல கார்யமும் ஸீதையின் அதீனம்தான் என்பது உனக்குத் தெரிந்தவிஷயம். ஆகையால் ராக்ஷஸ பூயிஷ்டமான இந்த ஆச்ரமத்தில் ஸீதையைத் தனியாக விடுவது ரொம்பவும் தவறுதலான கார்யமாகும். ஆகையால் நீ ஜாக்ருகனாக இருந்து ஸீதையை ரக்ஷித்துவர வேண்டும்.

प्रदक्षिणेनातिबलेन पक्षिणा जटायुषा बुद्धिमता च लक्ष्मण ।

भवाप्रमत्तः परिगृह्य मैथिलीं प्रतिक्षणं सर्वत एव शङ्कितः ॥

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨𑌾𑌤𑌿𑌬𑌲𑍇𑌨 𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌾
𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾 𑌚 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣 ।

𑌭𑌵𑌾𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤 𑌏𑌵 𑌶𑌙𑍍𑌕𑌿𑌤𑌃 ॥

ப்ரதக்ஷிணேநாதிபலேந பக்ஷிணா ஜடாயுஷா புத்திமதா ச லக்ஷ்மண !
பவாப்ரமத்த: பரிக்ருஹ்ய மைதிலீம் ப்ரதிக்ஷணம் ஸர்வத ஏவ சங்கித: ॥

மஹா ஸமர்த்தனையும், புத்திமானையும், பலிஷ்டனையும் உள்ள ஜடாயுவை நீ ஸஹாயமாக வைத்துக்கொண்டு ஸீதா தேவியை ஒவ்வொரு க்ஷணத்திலும் எந்த ராக்ஷஸர்கள் வந்து விடுவார்களோ என்ற எண்ணத்துடனும், பயத்துடனும், நீ ரக்ஷித்துவரவேண்டும்" என்று சொல்லிவிட்டு ராமன் அம்பராத்தூணிகளையும் எடுத்து மாட்டிக்கொண்டு கோதண்ட பாணியாக மானை நோக்கிச் சென்றார்.

மாயா ம்ருகமோ, வெகு தூரத்திற்கப்பால் ஓடி, ராமனுடைய கண்ணில் தென்படுவதுபோலும், மறைவது போலும் ராமனை வஞ்சித்துக்கொண்டு ஸஞ்சாரம் செய்தது. ராமனும் அந்த ம்ருகத்தின் தௌஷ்ட்யத்தைப் பார்த்து, 'இந்த மானனது, ம்ருகமாக இருக்க ந்யாயமில்லை. யாரோ ராக்ஷஸன்தான் ம்ருக ரூபத்தைத் தரித்துக்கொண்டு வஞ்சிக்கிறான்' என்று தீர்மானித்தார். உடன் ஸூர்ய ஜ்வாலையைப் போல் எரிக்கின்ற பாணத்தை ஸந்தானம் செய்து அந்த ம்ருகத்தை அடித்தவுடன், ம்ருக சரீரம் ஹதமாகிவிட்டது. ராக்ஷஸனுடைய ஸ்வரூபம் தென்பட்டது. அவனை மாரீசன் என்றும் தீர்மானித்தார். உடன் அவனையும் பாணத்தால் ஹ்ருதயத்தை பேதித்து ஹதம் பண்ணினார். ராமபாணத்தால் அடிபட்ட ராக்ஷஸ சரீரமோ ஒரு பனைமரம் உயரம் சென்று பூமியில் விழுந்து மடிந்தது. ப்ராண வியோகம் ஏற்படுகிற காலத்தில் ராமனுடைய ஸ்வரம்போல் 'ஹா ஸீதே! ஹா, லக்ஷ்மண' என்று தீன ஸ்வரத்தில் கதறிக்கொண்டு சரீரத்தை விட்டு விட்டு மரித்தான். உடன் திவ்ய ஸ்வரூபத்தோடு யோகிகளுடைய பதத்தையும் அடைந்தான். இவ்விதம் மாரீசனுடைய கதியை அறிந்த பகவானான ராமன் 'மாரீசன் போகும்பொழுது, நமது ஸ்வரம்போல் தீன பாவத்துடன் கதறிச் சென்றானே, இந்த வார்த்தை ஸீதையின் காதில் கேட்டிருந்தால், ஸீதையின் கதி எப்படியாகுமோ' என்று ராமன் மிகவும் கவலையை அடைந்தார். ஆகிலும் மனதை தைர்யப்படுத்திக்கொண்டு ஆச்ரமத்திற்குத் திரும்பி வந்தார்.

இங்கு ஆச்ரமத்திலோ, மாரீசனுடைய ஸ்வரத்தை ராமருடைய ஸ்வரம்போல் ஸீதை நினைத்து, ராமருக்குத் தான் ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்ற எண்ணத்துடன், ராமருடைய மார்க்கத்தை அனுஸரித்துப் பார்க்கும்படி லக்ஷ்மணனை ஏவினாள். "லக்ஷ்மண! ராமனுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுவிட்டதுபோல் தோன்றுகிறது. சீக்ரம் ராமனைப் போய்ப் பார். இந்த தீனமான சப்தத்தைக் கேட்டும் கூட நீ ராமனைப் பார்க்கப் போகாமலிருக்கிறாயே! ராமனுக்கு நீ பந்து என்று எப்படி நம்பமுடியும்?

सौमित्रे मित्ररूपेण भ्रातुस्त्वमसि शत्रुवत् ।

यस्त्वमस्यामवस्थायां भ्रातरं नाभिपत्स्यसे ॥

इच्छसि त्वं विनश्यन्तं रामं लक्ष्मण मत्कृते ।
लोभान्मम कृते नूनं नानुगच्छसि राघवम् ॥

𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌮𑌿𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑍇𑌣 𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌵𑌤𑍍 ।
𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌮𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌂 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌂 𑌨𑌾𑌭𑌿𑌪𑌦𑍍𑌯𑌸𑍇 ॥
𑌇𑌚𑍍𑌛𑌸𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣 𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 ।
𑌲𑍋𑌭𑌾𑌨𑍍𑌮𑌮 𑌕𑍃𑌤𑍇 𑌨𑍂𑌨𑌂 𑌨𑌾𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑌸𑌿 𑌰𑌾𑌘𑌵𑌮𑍍 ॥

ஸௌமித்ரே மித்ரரூபேண ப்ராதுஸ்த்வமஸி சத்ருவத் ।
யஸ்த்வமஸ்யாமவஸ்தாயாம் ப்ராதரம் நாபிபத்ஸ்யஸே ॥
இச்சஸி த்வம் விநச்யந்தம் ராமம் லக்ஷ்மண மத்க்ருதே ।
லோபாந்மம க்ருதே நூநம் நாநுகச்சஸி ராகவம் ॥

என்ற வாக்யங்களால், ஸீதாதேவியானவள் பரம கோபத்துடன் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்கிறாள்.

"லக்ஷ்மணா! நீ உண்மையில் ராமனுக்குச் சத்ரு. பந்துவைப்போல் நடித்துக்காட்டுகிறாய்! இவ்விதமான அவஸ்தையில்கூட நீ ராமனைப் போய்ப் பார்க்காமல் இங்கு நின்று வருகிறாயே? உன்னை நான் எப்படி நம்பமுடியும்? என்னை நீ அடைவதற்காக ராமனே மரித்துவிட்டால் தேவலை என்று எண்ணுகிறாய்" என்ற ப்ரகாரம் பருஷமான வார்த்தைகளைப் பேசி, லக்ஷ்மணனை அவமதித்தாள். லக்ஷ்மணனும் அவைகளைக்கேட்டு ஸீதையினுடைய வார்த்தையினால் மனோவ்யஸனத்தையும் அடைந்து, ராமனுடைய ப்ரபாவத்தை அறிந்தவரானதினாலும், 'ஸீதையைப் பரிபாலனம் செய்துகொண்டு ஆச்ரமத்திலேயே இரு' என்ற ராமருடைய ஆக்ஞையைப் பரிபாலிக்கக் கடமைப்பட்டவரானதினாலும், ஆச்ரமத்தை விட்டு விலகாமல் ஸீதையைப் பார்த்து மறுபடியும் சொல்லுகிறார்.

देवि देवमनुष्येषु गन्धर्वेषु पतत्रिषु ।
राक्षसेषु पिशाचेषु किंनरेषु मृगेषु च ॥
दानवेषु च घोरेषु न स विद्येत शोभने ।
यो रामं प्रति युध्येत समरे वासवोपमम् ॥
अवध्यः समरे रामो नैवं त्वं वक्तुमर्हसि ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தேவி தேவமநுஷ்யேஷு கந்தர்வேஷு பதத்ரிஷு ।
ராக்ஷஸேஷு பிசாசேஷு கிந்நரேஷு ம்ருகேஷு ச ॥
தாநவேஷு ச கோரேஷு ந ஸ வித்யேத சோபநே ।
யோ ராமம் ப்ரதி யுத்யேத ஸமரே வாஸவோபமம் ॥
அவத்ய: ஸமரே ராமோ நைவம் த்வம் வக்துமர்ஹஸி ॥

"ஹே ஸீதே! எதற்காக நீ வ்யஸனப்படுகிறாய்? என்னையும் பருஷமாகப் பேசுகிறாய்! தேவர்களோ, யக்ஷர்களோ, உரகர்களோ, பன்னகர்களோ ராக்ஷஸர்களோ, பிசாசுகளோ, யாராயிருந்தாலும் ராமருக்கு எதிரில் யுத்தத்திற்கு நிற்க சக்தியற்றவர்கள் என்றே சொல்லவேண்டும். ராமன் ஒருவராலும் மரிக்கத் தகுந்தவனாக ஆகமாட்டான். வீணாக நீ எதற்காக துக்கப்படவேண்டும்? அதிசீக்ரத்தில் ராமன் வந்துவிடுவார். நீ கொஞ்சமேனும் பயத்தை யடைய வேண்டாம்.

न्यासभूतासि वैदेहि न्यस्ता मयि महात्मना ।
रामेण त्वं वरारोहे न त्वां त्यक्तुमिहोत्सहे ॥

[illegible]
[illegible]

ந்யாஸபூதாஸி வைதேஹி ந்யஸ்தா மயி மஹாத்மநா ।
ராமேண த்வம் வராரோஹே ந த்வாம் த்யக்துமிஹோத்ஸஹே ॥

ராமனே, உன்னை என்னிடத்தில் ஒரு நிதியாக ஒப்புவித்து ரக்ஷிக்கும்படி ஆக்ஞாபித்திருக்கிறார். ஆகையால் உன்னைத் தனியாக விட்டுவிட்டுப் போவதில் நான் உத்ஸாஹமுள்ளவனாக இல்லை. அரண்யத்திலோ, ராக்ஷஸர்கள் நிரம்பியிருக்கிறார்கள். இந்தத் தருணத்தில் உன்னை நான் தனியாக விட்டுவிட்டு எப்படிப் போவது? கர வதத்திலிருந்துமே இங்குள்ள ராக்ஷஸர்கள் நமக்கு விரோதிகளாகிவிட்டார்கள்.

அதனால் எந்த நிமிஷத்தில், எந்த ராக்ஷஸர்கள், என்ன செய்வார்களோ! என்றும் சங்கையை அடையவேண்டியதாகயிருக்கிறது. இவ்விதமிருக்கும்பொழுது நான் எப்படி உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போவது?" என்று சொன்னார்.

இவ்விதம் லக்ஷ்மணஸ்வாமி சொன்ன பிறகும் ஸீதா தேவியானவள் கோபாவேசத்தால் லக்ஷ்மணஸ்வாமியை மறுபடியும் பருஷமாகவே பேசினாள் "நீ பரமதுஷ்டன்! தனியாக நீ ராமனை அனுஸரித்து வந்ததின் அபிப்ராயத்தை இப்பொழுதுதான் நான் அறிகிறேன். ராமன் போய்விட்டால் நான் உன்னை ஆச்ரயிப்பேனே என்ற எண்ணம் உனக்கு கனவிலும் வேண்டாம். ராமனை பர்த்தாவாக அடைந்த எந்த ஸ்த்ரீதான் மற்றொருவனைப் பர்த்தாவாக இச்சிப்பாள்? ராமனன்னியில் ஒரு க்ஷணம்கூட நான் ஜீவிக்கப்போவதில்லை. உனக்கு எதிரிலேயே என் ப்ராணனை த்யாகம் செய்கிறேன" என்ற ப்ரகாரம் வெகுவிதமாக லக்ஷ்மணனை அவமதித்துப் பேசினாள். லக்ஷ்மணஸ்வாமியும்,

स्वभावस्त्वेष नारीणामेवं लोकेषु दृश्यते ।

ஸ்வபாவஸ்த்வேஷ நாரீணாமேவம் லோகேஷு த்ருச்யதே ।

ஸ்வபாவஸ்த்வேஷ நாரீணாமேவம் லோகேஷு த்ருச்யதே ।

'இது லோகத்திலுள்ள ஸ்த்ரீகளின ஸ்வபாவம். அதை ஸீதையும் நடித்துக் காட்டுகிறாள். நாம் இதற்கு ஒன்றும் பதில் சொல்ல ந்யாயமேயில்லை. இந்த ஸீதாதேவியே எனக்கு உபாஸ்யமான தேவதையாகும். பரம சுத்த புருஷனை என்னை, ஸீதை இவ்விதம் பருஷமாகப் பேசுவதை வன தேவதைகள் அறியட்டும்! நான் என்ன செய்ய முடியும்? என்று நினைத்து, "ஹே ஸீதே! நீ எனக்கு தெய்வமானதினால் உனக்கு எதிரில் ஒன்றும் பேச எனக்கு யோக்யதையே இல்லை. ராமனுடைய பதத்தை அனுஸரித்தே நான் போகிறேன். வனதேவதைகள் உன்னை ரக்ஷிக்கட்டும். அசுபமானநிமித்தங்கள் அளவற்றனாகக் காணப்படுகின்றன. ராமனோடு சேர்ந்து இந்த ஆச்ரமத்திற்கு வந்த பிறகு உன் தர்சனத்திற்குப் பாக்யமிருந்தால் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு லக்ஷ்மணஸ்வாமி ஆச்ரயத்தை விட்டு வெளிக் கிளம்ப ஆரம்பித்தார்.

லக்ஷ்மண ஸ்வாமியானவர் இவ்விதம் சொல்லிவிட்டு ஆச்ரமத்திலிருந்து வெளிக் கிளம்பிப் போகும்பொழுதோ ஸீதாதேவியானவள் கண்ணீர் ஜலத்தைப் பெருகவிட்டுக் கொண்டு சொல்லுகிறாள். லக்ஷ்மணா! நான் தனியாக ஆச்ரமத்திலிருப்பதினால் ராக்ஷஸர்களுடைய வசமாக ஆகிவிடுவேனோ என்று நீ ஸ்வப்னத்தில்கூட நினைக்கவேண்டாம். அப்படி ஏதாவது விபத்து நேரிடும்போல் தோன்றினால் என் சரீரத்தை ராக்ஷஸர்கள் தொடும்படி நான் வைத்துக்கொள்ள மாட்டேன். உடன். நான் மறைந்துவிடுவேன்.

गोदावरीं प्रवेक्ष्यामि विना रामेण लक्ष्मण ।
आबन्धिष्येऽथ वा त्यक्ष्ये विषमे देहमात्मनः ॥
पिबाम्यहं विषं तीक्ष्णं प्रवेक्ष्यामि हुताशनम् ।
न त्वहं राघवादन्यं पदापि पुरुषं स्पृशे ॥

𑌗𑍋𑌦𑌾𑌵𑌰𑍀𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣 ।
𑌆𑌬𑌨𑍍𑌧𑌿𑌷𑍍𑌯𑍇𑌽𑌥 𑌵𑌾 𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌷𑌮𑍇 𑌦𑍇𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌪𑌿𑌬𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌵𑌿𑌷𑌂 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌨 𑌤𑍍𑌵𑌹𑌂 𑌰𑌾𑌘𑌵𑌾𑌦𑌨𑍍𑌯𑌂 𑌪𑌦𑌾𑌪𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑍇 ॥

கோதாவரீம் ப்ரவேக்ஷ்யாமி விநா ராமேண லக்ஷ்மண ।
ஆபந்திஷ்யேத வா த்யக்ஷ்யே விஷமே தேஹமாத்மந: ॥
பிபாம்யஹம் விஷம் தீக்ஷ்ணம் ப்ரவேக்ஷ்யாமி ஹுதாசநம் ।
ந த்வஹம் ராகவாதந்யம் பதாபி புருஷம் ஸ்ப்ருசே ॥

என்ற வாக்யங்களால், தான் மறையும் ப்ரகாரத்தைச் சொல்கிறாள். அதாவது :—

"கோதாவரி நதியில் விழுந்தாவது சரீரத்தை த்யாகம் செய்வேன். அல்லது சுருக்கு மாட்டிக்கொண்டு சரீரத்தை த்யாகம்செய்வேன். அல்லது விஷத்தை புஜித்தாவது தேஹத் த்யாகம் செய்வேன். ஸர்வ ப்ரகாரத்தாலும் முடியாத போனால் கடைசியாக அக்னி ப்ரவேசம் செய்துவிடுவேன். அன்னியில் ராமனைத் தவிர மற்ற புருஷனை காலால்கூட தொட்டுப் பார்க்கமாட்டேன். இது நிச்சயம்தான். அதற்காக லக்ஷ்மணா நீ யாதொருவித கவலையையும் அடையவேண்டாம்" என்று சொல்லிவிட்டு ஸீதையானவள் ரொம்பவும் உச்ச ஸ்வரத்துடன் அலறிக் கதறினாள்.

னும் பூஜ்யதா புத்தியோடு ரதாரோஹணம் செய்யும்படிச் செய்து, லங்காநகரம் சென்றான். இதுதான் ஸாதுவான அர்த்தமாகும். எவ்விதத்திலும் லோகமாதாவான ஸீதா தேவிக்கு யாதொருவிதமான க்ஷதியும் ஏற்படாமல் ப்ரபந்தத்திற்கு அர்த்தத்தைச் சொல்வது வித்வான்களுடைய கடமையாகும்.

ராவண—ஸீதா ஸம்வாதம்

கதாபாகத்தை அனுஸரித்தோ, ஸீதையை லக்ஷ்மண ஸ்வாமி வனதேவதைகளிடம் ஒப்புவித்துவிட்டு ஸீதைக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, ராமனுடைய மார்க்கத்தை அனுஸரித்துச் சென்றுவிட்டார். லக்ஷ்மணன் ஆச்ரமத்திலிருந்து வெளியில் சென்றவுடன், ராவணன் பரிவ்ராட் என்ற ஸந்யாஸியின் வேஷத்தை தரித்துக்கொண்டு ஆச்ரமத்திற்குள் ப்ரவேசித்தான். ராமன், லக்ஷ்மணன் இருவர்களுமில்லாமல் ஸீதை மாத்ரம் தனியாக இருக்கும்பொழுது ராவணன் ப்ரவேசித்ததைப் பார்க்க சந்த்ரனும் ஸூர்யனும் இல்லாமல் ஸந்த்யாதேவி மாத்ரம் வஸித்துக் கொண்டிருக்கும்பொழுது ஏற்படும் ஸந்தர்ப்பம்போல் இருந்தது. சந்த்ரனை விட்டுப் பிரிந்த ரோஹிணியைப்போல், ஸ்ரீராமசந்த்ரனை விட்டுப் பிரிந்த ஸீதாதேவியும், ராவணனை தான் தெரிந்துகொள்ளாததுபோல் நடித்துக்கொண்டு, யாரோ ஒரு பெரிய ராஜயோகி என்றே தீர்மானித்து ஆதித்யம் செய்ய ஆரம்பித்தாள். வனதேவதைகளும், வ்ருக்ஷங்களும், ராவணன் ப்ரவேசித்த மாத்ரத்தில், 'ஸீதைக்கு எவ்விதமான நிலை ஏற்படுமோ'! என்று நினைத்து ரொம்பவும் பயத்துடன் சலிக்காமலே நடுங்கின. வாயு பகவானும் கொஞ்சமேனும் சலிக்கவில்லை. கோதாவரி நதியும் ரொம்பவும் வேகமாகப் போகும் ஸ்வபாவமுள்ளதானாலும் ராவணனுடைய ப்ரவேசத்தைப் பார்த்து பயந்து மிகவும் மெதுவாகச் செல்லுவதற்கு ஆரம்பித்தது. ஸீதாதேவியும் ராவணனைப் பார்த்த மாத்ரத்தில் நடுக்கத்துடன், ராமனையே ஸ்மரித்துக்கொண்டு மனதில் கவலையை அடைந்தாள். ராவணனோ மிகவும் துர்ஜனமானாலும் பரம ஸாதுவான ஸந்யாஸியைப்போல் மெள்ள மெள்ள ஸீதையின் ஸமீபம் சென்றான். சித்ரா நக்ஷத்திரத்திற்கு அதிதேவதையினிடம், அதாவது ரோஹிணியினிடம், சனி பகவான் சென்றதுபோல் ராவணன் போகிற காலத்தில் தோன்றிற்று. ராவணன் ஸீதையைப் பார்த்து,

का त्वं काञ्चनवर्णाभे पीतकौशेयवासिनि ।
कमलानां शुभां मालां पद्मिनीव हि बिभ्रती ॥
ह्रीः कीर्तिः श्रीः शुभा लक्ष्मीरप्सरा वा शुभानने ।
भूतिर्वा त्वं वरारोहे रतिर्वा स्वैरचारिणी ॥

𑌕𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑍇 𑌪𑍀𑌤𑌕𑍌𑌶𑍇𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑌿 ।
𑌕𑌮𑌲𑌾𑌨𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌂 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑍀𑌵 𑌹𑌿 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀 ॥
𑌹𑍍𑌰𑍀𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌶𑍁𑌭𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌰𑌪𑍍𑌸𑌰𑌾 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑌨𑍇 ।
𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑍇 𑌰𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑍈𑌰𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ॥

கா த்வம் காஞ்சநவர்ணாபே பீதகௌசேயவாஸிநி ।
கமலாநாம் சுபாம் மாலாம் பத்மிநீவ ஹி பிப்ரதீ ॥
ஹ்ரீ: கீர்த்தி: ஸ்ரீ: சுபா லக்ஷ்மீரப்ஸரா வா சுபாநநே ।
பூதிர்வா த்வம் வராரோஹே ரதிர்வா ஸ்வைரசாரிணீ ॥

"நீ யாரம்மா? தங்கத்தால் வார்த்தெடுத்த உருவம்போலொத்த உருவத்துடன் கூடினவளாகயிருக்கிறாயே! மஹாலக்ஷ்மியா? அல்லது பூமாதேவியா? அல்லது கீர்த்திக்கு அதிஷ்டான தேவதையா? அப்ஸரஸ்ஸா? ரதி தேவியா? உன்னுடைய உண்மையை எனக்குச் சொல்லவேண்டும். என் மனதை நீ அபஹரிக்கின்றாய்! தத்வத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

ஸீதாதேவியும், ப்ராம்மணஸந்யாஸி வேஷதாரியாக இருக்கும ராவணனை, ஸந்யாஸிகளைப் பூஜிக்கவேண்டிய க்ரமப்படி பூஜித்துவிட்டுத் தன்னுடைய உண்மைகளை சொல்ல ஆரம்பித்தாள். ப்ராம்மணன், அதிலும் அதிதி, ஸந்யாஸி, அதனால் நாம் கபடமாகப் பேசக்கூடாதென்று தேவி நினைத்தாள். "ஹே ப்ராம்மணோத்தமரே! நான் மிதிலாதிபதிக்கு அதிபதியான ஜனக மஹாராஜாவின் பெண். ஸீதையென்று பெயர். அயோத்யாதிபதியான தசரதசக்ரவர்த்தியினுடைய ப்ரியபுத்ரனை ராமருடைய ப்ரியமான பார்யையாகிறேன். என்னைப் பாணியம் செய்துகொண்ட பிற்பாடு ராமன் அயோத்யா நகரத்தில் அமானுஷமான போகங்களை பன்னிரெண்டு வருஷ காலம் அனுபவித்துவிட்டு, ஸுகமாகக் காலத்தை நயனம் செய்தார். பதிமூன்றாவது வருஷ ஆரம்பத்தில் என் பர்த்தாவான ஸ்ரீராமனுக்கு தசரதசக்ரவர்த்தியானவர் ராஜ்யாபிஷேகம் செய்வதற்காக ஸங்கல்பம்

செய்து, ஸம்பாரங்களைச் சேகரித்தார். அதைப் பார்த்துக் கைகேயிதேவியானவள் ஏதோ காலாந்த்ரத்தில் சக்ரவர்த்தியினால் தனக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு வரங்களையும் அந்த ஸந்தர்ப்பத்தில் தனக்குத் தரவேண்டுமென்று விரும்பினாள். அந்த இரண்டு வரங்களுக்குள் தன் புத்ரனான பரதனுக்கு ராஜ்யாபிஷேகத்தை ஒன்றாயும், என் பர்த்தாவான ராமனுக்கு பதினான்கு வருஷங்கள் அரண்யத்தில் வாஸத்தை இரண்டாவதாயும் வரித்து,

एषमेजीवितस्यान्तः रामोयद्यभिषिच्यते ।

𑌏𑌷𑌮𑍇𑌜𑍀𑌵𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃 𑌰𑌾𑌮𑍋𑌯𑌦𑍍𑌯𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 ।

ஏஷமேஜீவிதஸ்யாந்த: ராமோயத்யபிஷிச்யதே ।

ராமனுக்கு பட்டாபிஷேகம் நடந்தால் அந்த அபிஷேக காலத்தைத் தன்னுடைய மரணகாலமாகத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஸாஹஸத்துடன் பர்த்தாவான தசரத சக்ரவர்த்தியை ஸத்யபாசத்தால் கட்டுப்படுத்தி, உபத்ரவம் செய்தாள். அந்த ஸமயத்திலோ என் பர்த்தாவான ராமனுக்கு இருபத்தைந்தாவது வயது நடைபெற்றது. எனக்கோ பதினெட்டாவது வயது நடைபெற்றது. என் பர்த்தாவான ராமனுடைய கல்யாண குணங்களைப்பற்றியோ தங்களைப் போலொத்த பரம ஹம்ஸர்களுக்கெதிரில் நான் வர்ணிக்க வேண்டிய அவச்யமே கிடையாது. தாங்கள் ஸ்வயமாகவே ஸமாதியில் அனுபவித்து அறிந்தவர்கள்.

रामेति प्रथितो लोके गुणवान्सत्यवाक्छुचिः ।

विशालाक्षो महाबाहुः सर्वभूतहिते रतः ॥

𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌛𑍁𑌚𑌿𑌃 ।

𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍋 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌃 ॥

ராமேதி ப்ரதிதோ லோகே குணவாந்ஸத்யவாக்சுசி: ।

விசாலாக்ஷோ மஹாபாஹு: ஸர்வபூதஹிதே ரத: ॥

ராமனை அறியாதவர்களே லோகத்தில் இல்லை. அனந்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டு, பூஜிக்கத் தகுந்த ஸ்வபாவத்தோடு கூடினவர். ஸத்யம் என்ற விசேஷ தர்மத்தில் மிகவும் ஈடுபட்டவர். உள், வெளி ஸம்சுத்தியோடு கூடினவர். உத்தம புருஷன் என்பதற்கு அடையாளமாக

ஸாமுத்ரிகா சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட ஸகல விசேஷ லக்ஷணங்களுடன் கூடினவர். ஆகிலும், இந்த உத்தம புத்ரனை அருகில் வைத்துக்கொண்டு அனுபவிக்க பாக்யமில்லாத் தசரதர், கைகேயிதேவியினுடைய ஸௌந்தர்யமாகிய வலையி லகப்பட்டுக்கொண்டு, ஸங்கல்பம் செய்த ராஜ்யாபிஷேகத் தையும் நிறுத்திவிட்டு, கைகேயிதேவியின் பிள்ளையான பரதனுக்குக் கொடுக்க யத்தனம் செய்தார். ராமனுக்கு ராஜ்யாபிஷேகத்தை நிறுத்தினது மாத்ரமில்லை! பதினான்கு வர்ஷங்கள் அரண்யத்தில் வஸிக்கும்படியும் ஆக்ஞாபனம் செய்தார். என் பர்த்தாவான ராமனோ தனக்குக் கிடைத்த ராஜ்யம் போய்விட்டதே என்ற விஷயத்தில் கொஞ்சமேனும் வருத்தத்தை யடையாமல், பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை அநுஷ்டிக்கும் வ்யாஜத்தால் ஸஜ்ஜன ஸம்ரக்ஷணம் என்ற பெரிய தர்மம் ஸித்திக்கிறது என்ற ஸந்தோஷத்துடன் பித்ருவாக்யத்தை ஸ்வீகரித்துக்கொண்டு ராஜ்யத்தை துச்சமாக நினைத்து, அரண்யத்திற்கு ப்ரஸ்தானமாகிவிட்டார். என் பர்த்தாவின் ஸ்வபாவமோ, உத்தம ஸ்வபாவமானதினால் பித்ருவாக்யத்தை உல்லங்கனம் செய்ய அவருக்கு புத்திவரவில்லை.

दद्यान्न प्रतिगृह्णीयात्सत्यं ब्रूयान्न चानृतम् ।
एतद्ब्राह्मण रामस्य ध्रुवं व्रतमनुत्तमम् ॥

𑌦𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌨𑍍𑌨 𑌚𑌾𑌨𑍃𑌤𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌵𑍍𑌰𑌤𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

தத்யாந்ந ப்ரதிக்ருஹ்ணீயாத்ஸத்யம் ப்ரூயாந்ந சாந்ருதம் ।
ஏதத்ப்ராஹ்மண ராமஸ்ய த்ருவம் வ்ரதமநுத்தமம் ॥

ராமனுக்கு, ஸத்பாத்ரத்தில் த்ரவ்யத்தை அர்ப்பணம் செய்வதுதான் ஸ்வபாவமன்னியில், தான் மற்றொருவரிடமிருந்து க்ரஹிக்கிற வழக்கமே கிடையாது. அதுபோலவே, ஸத்யத்தைச் சொல்லத்தான் தெரியுமன்னியில், அந்ருதத்தைப் பேசி மற்றவர்களை வஞ்சிக்கும் வழக்கமே ராமனிடத்தில் இல்லை. ஹே ப்ராம்மணோத்தமரே! இது ராமனுடைய அவச்யம் அனுஷ்டிக்கவேண்டிய வ்ரதமாகும். இக்காரணத்தால், ராஜ்யம் பெரிதாகத் தோன்றாமல், பித்ருவாக்யத்தையே பெரிதாகப் பாவித்து, அரண்யத்திற்கு வந்துவிட்டார். ராமன் அரண்யத்திற்கு ப்ரஸ்தானமானவுடன் லக்ஷ

மணன் என்ற பெயருள்ள ராமனுடைய ப்ராதாவும் ராமனுடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டவரானதினால், ராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல் ராமனை அனுஸரித்தே அரண்யத்திற்கு வந்தார். லக்ஷ்மணனே மஹா வீரன், சூரன், மஹா பராக்ரமசாலியும் ஆவர். யுத்தத்தில் அபௌருஷேயமான பராக்ரமத்தோடு கூடினவர். நான் ராமனையே தெய்வமாக நினைக்கும் ஸ்வபாவமுள்ளவளானதினால், பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவோடுகூட வஸிப்பதே தர்மமென்று நினைத்து, ராமனை அநுஸரித்து அரண்யத்திற்கே வந்துவிட்டேன். இவ்விதம் ராமன், லக்ஷ்மணன், நான், நாங்கள் மூவரும் ஆர்ஷமான தர்மத்தை ஆச்ரயித்து, வன்யமான ஆஹாராதிகளைக் கொண்டே ஜீவித்துக்கொண்டு, அரண்யத்தில் வாஸம் செய்துவருகிறோம். அதிசீக்ரத்தில் என் பர்த்தா வந்துவிடுவார். அவர் வந்தவுடன் ஆதித்யத்தைப் பெற்றுக் கொண்டு எங்களுக்குப் பரிபூர்ணமான அனுக்ரஹத்தையும் செய்துவிட்டுத் தாங்கள் போகவேண்டும்'' என்று மிகவும் விநயத்துடன் அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு ஸீதாதேவியானவள் ராவணனை ப்ரார்த்தித்துக்கொண்டாள்.

பிறகு,''தாங்கள் யார்? என்பதையும் எனக்குக் கொஞ்சம் தெரிவித்தால் ஸந்தோஷமாக இருக்கும்'' என்று ஸீதை கேட்டுக்கொண்டாள். இவ்விதம் ஸீதையினுடைய வாக்யங்களைக் கேட்ட பிற்பாடு ராவணன் ஸந்யாஸிவேஷதாரியாலும், மஹாபாப ஸ்வபாவமானதினால், தௌஷ்ட்யமான வார்த்தைகளைப் பேச ஆரம்பித்தான். தான் லங்கைக்கு அதிபதியான ராவணனென்றும், ஸகலவிதமான ராக்ஷஸர்களுக்கும் அரசன் என்றும், அஷ்டதிக் பாலர்களுடைய லோகமே தன் வசத்திலிருக்கிறதென்றும், தான் மஹா தபஸ்வியென்றும், தன்னுடைய பௌருஷத்தை ஸீதாதேவிக்கெதிரில் ச்லாஹித்துவிட்டு,

त्वां तु काञ्चनवर्णाभां दृष्ट्वा कौशेयवासिनीम् ।
रतिं स्वकेषु दारेषु नाधिगच्छाम्यनिन्दिते ॥

த்வாம் து காஞ்சநவர்ணாபாம் த்ருஷ்ட்வா கௌசேயவாஸிநீம் ।
ரதிம் ஸ்வகேஷு தாரேஷு நாதிகச்சாம்யநிந்திதே ॥

த்வாம்து காஞ்சன வர்ணாபாம் த்ருஷ்ட்வா கௌசேய வாஸிநீம் ।
ரதிம் ஸ்வகேஷு தாரேஷு நாதிகச்சாம்ய நிந்திதே ॥

என்ற வாக்யத்தால், "ஹே ஸீதே! உன் சரீர காந்தியைப் பார்த்தால், தங்கத்திற்குக்கூட அவ்வளவு மேனி இராது என்று நிச்சயமாகச் சொல்லலாம். உன் சரீரத்தின் அழகையும், நீ உடை தரித்துக்கொண்டிருக்கும் பெருமையையும் பார்த்த மாத்ரத்திலேயே, மண்டோதரி முதலான என்னுடைய சொந்த தாரங்களிடம் ரதிஸௌக்யத்தை அனுபவிக்க இச்சையில்லாதவனாகிவிட்டேன்" என்று தன்னுடைய காமாதுரதையையும் ஸூசனம் செய்து, ஸீதையை ப்ரலோபப் படுத்தினான். ஸீதாதேவியோ, அந்த வார்த்தையைக் கேட்ட மாத்ரத்தில் நடுநடுங்கி. 'இவனை யாரோ ஸந்யாஸி என்று நம்பி நாம் மோசம் போய்விட்டோமே! லக்ஷ்மணன் சொன்னதெல்லாம் வாஸ்தவமாகவே ஆகிவிட்டதே' என்று பயந்துகொண்டு.

अयोमुखानां शूलानामग्रे चरितुमिच्छसि ।
रामस्य सदृशीं भार्यां योऽधिगन्तुं त्वमिच्छसि ॥
यदन्तरं सिंहसृगालयोर्वने यदन्तरं स्यन्दिनिकासमुद्रयोः ।
सुराग्र्यसौवीरकयोर्यदन्तरं तदन्तरं वै तव राघवस्य च ॥

𑌅𑌯𑍋𑌮𑍁𑌖𑌾𑌨𑌾𑌂 𑌶𑍂𑌲𑌾𑌨𑌾𑌮𑌗𑍍𑌰𑍇 𑌚𑌰𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ।
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑍀𑌂 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌯𑍋𑌽𑌧𑌿𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ॥
𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑌿𑌂𑌹𑌸𑍃𑌗𑌾𑌲𑌯𑍋𑌰𑍍𑌵𑌨𑍇
𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌿𑌕𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑍋𑌃 ।
𑌸𑍁𑌰𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌸𑍌𑌵𑍀𑌰𑌕𑌯𑍋𑌰𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂
𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑍈 𑌤𑌵 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯 𑌚 ॥

அயோமுகாநாம் சூலாநாமக்ரே சரிதுமிச்சஸி ।
ராமஸ்ய ஸத்ருசீம் பார்யாம் யோதிகந்தும் த்வமிச்சஸி ॥
யதந்தரம் ஸிம்ஹஸ்ருகாலயோர்வநே யதந்தரம் ஸ்யந்திநிகாஸமுத்ரயோ:।
ஸுராக்ர்யஸௌவீரகயோர்யதந்தரம் ததந்தரம் வை தவ ராகவஸ்ய ச ॥

"ராவணா! நான் உன்னை ஸந்யாஸி என்று நினைத்து மோசம் போய்விட்டேன். துஷ்ட ராக்ஷஸனான உன்னோடு நான் இவ்வளவு தூரம் பேசினதே தப்பு. ராமனுடைய தர்ம பத்னியான என்னை, நீ பார்யையாக அடையவேண்டுமென்று இச்சிக்கிறாயே! இதைப்போல் மஹா பாபம் வேறொன்றுண்டா? நீ விஷலிப்தமான இரும்புக் கூடுகள் பதித்த ராம

னுடைய பாணாக்ரங்களுக்கு இரையாக ஆக இச்சிக்கிறாயா? நீ நீடித்தகாலம் வாழ்வாயா? உன்னுடைய ஸ்திதி எங்கே? ராமனுடைய பெருமை எங்கே? ஸிங்கத்திற்கும் நரிக்கும் எவ்வளவு வித்யாஸமுண்டோ, அவ்வளவு வித்யாஸம் ராமனுக்கும் உனக்கும் உண்டு. ராமன் ஸிம்மம்; நீ நரி. ஸிம்மத்தினுடைய பாகத்தை நரி இச்சிப்பதுபோல், நீ என்னை இச்சிக்கிறாய். இது மிகவும் நீதிக்கு விரோதமானது" என்று சொல்லிவிட்டு, பாபியான ராவணன் என்ன செய்துவிடுவானோ என்ற பயத்தால் ஸீதாதேவியானவள் மிகவும் பயகம்பாதிகளால் துக்கத்தை அநுபவித்துக்கொண்டு வந்தாள்.

ராவணனே, தன்னை, ஸீதையானவள் பருஷமான வார்த்தைகளால் பேசியதைக் கேட்டு பரம கோபத்துடன் ஸீதைக்கெதிரில் தன் பௌருஷங்களை ப்ரகாசப்படுத்திக்கொண்டான். "நான் குபேரனுடைய ப்ராதாவாகுவேன். தேவ கந்தர்வர்களெல்லோரும் என் எதிரில் நிற்கக்கூட முடியாதவர்கள். என் திக்விஜய காலத்தில் கைலாஸ பர்வதத்தைக்கூட புரட்டித் தள்ளியிருக்கிறேன். ஸமுத்ரத்தின் மத்தியில் என்னுடைய பட்டணமான லங்கா நகரம் விளங்கிவருகிறது. தேவர்களோ, அஸுரர்களோ, யாரும் என் நகரத்திற்குள் ப்ரவேசிக்க முடியாது. கேவலம் மனுஷ்யனான ராமனிடத்தில் ஏற்பட்ட ப்ரேமையை விட்டுவிட்டு, என்னிடத்தில் பரமபாவத்தோடு அமாநுஷமான போகங்களை அனுபவித்துக்கொண்டு ஜீவிப்பதுதான் உன்னுடைய ஸௌந்தர்யத்திற்கு அழகாகும்.

यः स्त्रिया वचनाद्राज्यं विहाय ससुहृज्जनम् ।
अस्मिन्व्यालानुचरिते वने वसति दुर्मतिः ॥

𑌯𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 𑌵𑌚𑌨𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌸𑌸𑍁𑌹𑍃𑌜𑍍𑌜𑌨𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑍍𑌯𑌾𑌲𑌾𑌨𑍁𑌚𑌰𑌿𑌤𑍇 𑌵𑌨𑍇 𑌵𑌸𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑌿𑌃 ॥

ய: ஸ்த்ரியா வசனாத்ராஜ்யம் விஹாய ஸஸுஹ்ருஜ்ஜனம் ।
அஸ்மிந்வ்யாலாநுசரிதே வநே வஸதி துர்மதி: ॥

எந்த ராமன், கேவலம் கைகேயிதேவி என்ற ஸ்த்ரீயின் வார்த்தைக்குப் பயந்துகொண்டு, ராஜ்யத்தை விட்டுவிட்டு, ராக்ஷஸர்களாலும், ம்ருகங்களாலும், ஸர்ப்பங்களாலும் சூழப்பட்ட அரண்யத்தில் புத்தியில்லாமல் வஸிக்கிறானோ, அந்த ராமன்மூலம் என்ன ஸுகத்தை அநுபவிக்கப்போகிறாய்?

எந்த லாபத்தை அடையப்போகிருய்? அந்த துற்புத்தியை விட்டுவிட்டு, நீ என்னையே பர்த்தாவாக அடைந்து, நீடித்த காலம் ஸுகத்தை அனுபவிக்கலாம்'' என்று ராவணன் ஸீதையை வெகு ப்ரகாரமாக ப்ரலோபப்படுத்தினுன்.

त्यज्यतां मानुषो भावो मयि भावः प्रणीयताम् ।
राज्याच्च्युतमसिद्धार्थं रामं परिमितायुषम् ।
कैर्गुणैरनुरक्तासि मूढे पण्डितमानिनि ॥

𑌤𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑌾𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌮𑌯𑌿 𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌯𑍁𑌷𑌮𑍍 ।
𑌕𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌰𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌾𑌸𑌿 𑌮𑍂𑌢𑍇 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑌾𑌨𑌿𑌨𑌿 ॥

த்யஜ்யதாம் மாநுஷோ பாவோ மயி பாவ: ப்ரணீயதாம் ।
ராஜ்யாச்ச்யுதமஸித்தார்த்தம் ராமம் பரிமிதாயுஷம் ।
கைர்குணைரநுரக்தாஸி மூடே பண்டிதமாநிநி ॥

கேவலம் மனிதனுன ராமனிடத்தில் அபிலாஷையை விட்டுவிட்டு, நீ என்னிடத்தில் பரமப்ரேமையை வைத்தால் ஸுகமாக இருக்கலாம். ராமனே, ராஜ்ய ப்ரஷ்டன். எந்தக் கார்யத்தை ஆரம்பித்தாலும் அவனுக்கு அந்தக் கார்யம் பூர்த்தியை அடையாது. ஆயுஸ்ஸும் அல்பமான ஆயுஸ் ஸுதான். என்ன குணங்களைக் கண்டு நீ ராமனிடத்தில் இவ்வளவு ஆசையுடன் இருக்கிருய் என்று தெரியவில்லை. உண்மையில் உனக்குக் கொஞ்சமேனும் புத்தியில்லை. நீயே உன்னை புத்திமதியாக நினைத்துக்கொள்கிருய் என்று பலவாருக ஸீதையினிடம், ராமனை நிந்தித்துப் பேசினுல், ஸீதைக்கு தன்னிடத்தில் அபிமானம் ஏற்பட்டுவிடுமோ என்ற ப்ராந்தியினுல், ராவணன் ராம நிந்தையைச் செய்தான். ஆகிலும், மேற்கண்ட ச்லோகங்களுக்கு இந்த தாத்பர்யமானது மூட லோகத்தை அனுஸரித்து ஆகுமே தவிர, வித்வான்களுடைய த்ருஷ்டியை அனுஸரித்தால், ராமனுடைய ப்ரசம்ஸையாக ஆகுமல்லாமல், நிந்தையாக ஆகாது.

மனிதனிடத்தில் பாவத்தை (எண்ணத்தை) விட்டு விட்டு என்னிடத்தில் பாவத்தை வைக்கவேண்டுமென்று சொல்கிற ராவணனுடைய அபிப்ராயமோ, “ஹே ஸீதே! நீ மனுஷ்ய லோகத்தில், மனுஷ்ய ஸ்த்ரீயாக அவதாரம் செய்

திருக்கிறபடியால், ஸ்வஜாதி அபிமானத்தை வைத்துக் கொண்டு, 'மனுஷ்யனைத்தான் ரக்ஷிக்கிறது' என்ற அபிப்ராயத்துடன் இருந்துவருகிறாய். நீ தெய்வமானதினால், அது உனக்கழகல்ல. தெய்வத்திற்கு, மனுஷ்யன், ராக்ஷஸன் என்ற வேற்றுமையுண்டா? யார் உபாஸிக்கிறார்களோ, அவர்களை ரக்ஷிக்கவேண்டியது தெய்வத்தின் பொறுப்பாகும். ஆகையால், ராக்ஷஸனானாலும், நான் உன்னை வெகு காலமாக உபாஸித்துவருகிறேன். என்னை நீ ரக்ஷிக்கவேண்டும்; க்ருபை வைக்கவேண்டும். நானோ, உண்மையில் மூடன். மஹா வித்வான் என்ற துரபிமானம் மாத்ரம் என்னிடம் இருந்து வருகிறது. உண்மையில், மூடனாயும், அஹங்காரத்தால் பண்டிதமானியாயும் உள்ள என்னிடத்திலும், உன் கருணை ஏற்படவேண்டும். தவிரவும், ராமனுடைய பெருமையைப் பற்றியோ என்றால் வர்ணிக்க முடியாது. ராமனோ, ராஜ்ய ப்ரஷ்டன் என்று சொல்ல நான் துணிந்தவனல்ல. ராஜ்யபோகத்தைத் துச்சமாக நினைத்து, தர்மத்தையே சரணமடைந்தவன் அவனே வித்தார்த்தன். [illegible] (அபாஸ்ய விஷயஃபஸ்ய ஸவிஷயஃ) (அச்சாப்ஸ்யவித்தார்த்தச அவித் தார்த்த:) என்று ஸமாஸம் செய்தால் (அ) (அ) காரத்தால் விஷ்ணுவென்றும் [illegible] (விஷயஃ) (வித்தார்த்த:) என்றதினால் அவாப்த ஸமஸ்த காமனென்றும், [illegible] ஸமஸ்த காமனை மஹாவிஷ்ணுவே [illegible] ந்திருக்கிறார் என்ற அர்த்தமானது த்வனிக்கிறது.

परिमितायुः (வரிமிதாயுஷம்) (பரிமிதாயுஷம்) என்பதினால் परि, मितं, आयुः येन सः (வரி, மிதம், ஆயு: யேந ஸ:) (பரி, மிதம், ஆயு: யேந ஸ:) என்று ஸமாஸம் செய்தால் परि (வரி) (பரி) என்ற பதத்தால் த்யாகம் என்ற அர்த்தமும், मितं (மிதம்) (மிதம்) என்ற பதத்தால் அல்பம் என்ற அர்த்தமும் [illegible] லிருந்து அல்பமான ஆயுஸ்ஸைத் [illegible] என்றதினால், அபரிமிதமான (பூர்ணமான) ஆயுஸ்ஸோடு [illegible] என்பது ஸித்திக்கின்றது. [illegible] பிபீஷிகை [illegible] கொடுக்கும் ப்ரபு [illegible] கொள்ளவேண்டும்.

[illegible] (ஸௌசீலாதிகுணா:) ([illegible]) என்றதினால் அநிர்வசனீயமான கல்யாணகுணங்கள் என்று த்வனிக்கிறது.

ஆதிசேஷனாலேயும் இவ்வளவுதான் என்று எண்ணமுடியாத அனந்தகல்யாணகுணங்களோடு கூடினவன் என்ற பொருள் வெளியாகிறது. அந்த மஹாநுபாவனை, நீ பர்த்தாவாக அடைந்து, பரம பக்தியோடு இருந்துவருகிறாய் என்பதுண்டே, அது உன் பூர்வ புண்யத்தை ஸூசிப்பிக்கின்றது.

दुर्मतिः (து³ர்மதி:) (துர்மதி:) என்ற பதத்தால் दुष्टेष्वपि मतिः अनुग्राहिका यस्य सः (து³ஷ்டேஷ்வபி மதி: அநுக்³ராஹிகா யஸ்ய ஸ:) (துஷ்டேஷ்வபி மதி: அநுக்ராஹிகா யஸ்ய ஸ:) என்று ஸமாஸம் செய்தால், மூர்க்க ஜனங்களையும் அனுக்ரஹம் செய்து ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவன் ராமன் என்று தெரிகிறது. அந்த ராமனை அனுஸரித்து உனக்கும் அந்த ஸ்வபாவம் அவச்யம் இருந்தே தீரவேண்டும்.

அதனால், நான் மூர்க்கனானாலும், என்னை நீ ரக்ஷித்தே தீரவேண்டும். ஸ்த்ரீயான கைகேயிதேவியினுடைய வார்த்தைக்காக ராமன் அரண்யத்திற்கு வந்தார் என்பது வ்யாஜமாகத்தானாகும். வாஸ்தவத்தில் என்னைப்போலொத்த ராக்ஷஸர்களை, ஸனகாதிகளுடைய சாபத்திலிருந்து விமுக்தர்களாகச் செய்துவைத்து, ராக்ஷஸ பாவத்தைப் போக்கி, நித்ய ஸூரிகளுடைய பரிஷத்தில் எப்பொழுதும் முக்தி புருஷர்களாக வஸிக்கும்படிச் செய்யவேண்டுமென்ற அபிப்ராயத்துடன்தான் அரண்யத்தில் வந்து வாஸம் செய்கிறார். அதனால் ராமன் துர்பலனாகிவிடமாட்டான். மஹா பலிஷ்டன். நானும் அதை அறிந்தவன்தான். ஸனகாதிகளுடைய அநுக்ரஹத்தால், எனக்கு பூர்வவ்ருத்த ஞானம் இருப்பதைக் கொண்டு, முன்போலவே அபராஜிதமான வைகுண்டத்தில் பார்ஷதனாக ஆகவேண்டுமென்றநோக்கத்துடன், மஹாலக்ஷ்மீயான உன்னை லங்கா நகரத்திற்கு அழைத்துச் சென்று, மஹோபசாரங்களால் ஆராதிக்க ப்ரார்த்திக்கிறேன். இதுதான் என்னுடைய உண்மையான அபிப்ராயம்" என்று ராவணன் வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டான் என்று வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து மேற்சொன்ன ச்லோகங்களுக்கு தாத்பர்யத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஸீதாபஹாரம்

इत्युक्त्वा मैथिलीं वाक्यं प्रियार्हां प्रियवादिनीम् ।
अभिगम्य सुदुष्टात्मा राक्षसः काममोहितः ॥
जग्राह रावणः सीतां बुधः खे रोहिणीमिव ।
वामेन सीतां पद्माक्षीं मूर्धजेषु करेण सः ॥
ऊर्वोस्तु दक्षिणेनैव परिजग्राह पाणिना ।

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌹𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌗𑌮𑍍𑌯 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 ॥
𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌬𑍁𑌧𑌃 𑌖𑍇 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌮𑌿𑌵 ।
𑌵𑌾𑌮𑍇𑌨 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑍇𑌷𑍁 𑌕𑌰𑍇𑌣 𑌸𑌃 ॥
𑌊𑌰𑍍𑌵𑍋𑌸𑍍𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨𑍈𑌵 𑌪𑌰𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ।

இத்யுக்த்வா மைதிலீம் வாக்யம் ப்ரியார்ஹாம் ப்ரியவாதிநீம் ।
அபிகம்ய ஸுதுஷ்டாத்மா ராக்ஷஸ: காமமோஹித: ॥
ஜக்ராஹ ராவண: ஸீதாம் புத: கே ரோஹிணீமிவ ।
வாமேந ஸீதாம் பத்மாக்ஷீம் மூர்தஜேஷு கரேண ஸ: ॥
ஊர்வோஸ்து தக்ஷிணேநைவ பரிஜக்ராஹ பாணிநா ।

மேற்சொன்னபடி ராவணன் ஸீதையினிடம் தெரிவித்து விட்டு, ராக்ஷஸ ஜாதியானதினால், துஷ்டமான புத்தியை அவலம்பித்து, ஸீதையை பலாத்காரமாக அபஹரித்தான். அதிலும், காமமோஹிதனாக இருந்துகொண்டு ஸ்வீகரித்தான். இடது கையினால் ஸீதாதேவியின் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு, வலது கையினால் ஸீதையினுடைய துடையைப் பிடித்துத் தூக்கி, ஸீதையை ரதத்தில் வைத்தான். இந்த அபிப்ராயமானது வெகு வித்வான்களால் உபந்யாஸிக்கப்பட்டு வருகிறதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்த ராமாயணமானது உத்தம காவ்யம், காந்தாஸம்மிதை என்பதை யனுஸரித்து வ்யங்க்ய ப்ரதானமானதினால், வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து மேற்கண்ட ச்லோகங்களுக்கு தாத்பர்யத்தை விவேகிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

बुधः खे रोहिणीमिव (𑌬𑍁𑌧𑌃 𑌖𑍇 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌮𑌿𑌵) (புத: கே ரோஹிணீமிவ) என்ற மஹர்ஷியினுடைய த்ருஷ்டாந்த

வாக்கியத்தையும் பராமர்ஸம் செய்து பார்த்தால் ராவணன் ஸீதையை அபஹரித்த உண்மையை ஸுலபமாக அறியக் கூடும். புதனே சந்த்ரனுடைய புத்ரனுவான். ரோஹிணியோ சந்த்ரனுடைய தர்மபத்னி. மாதாவை புத்ரன் ஸ்வீகரித்ததுபோல் என்ற த்ருஷ்டாந்தத்தை, உபயோகப்படுத்தியிருக்கிறார். அதனுல் ராவணன், புத்ரனுடைய ஸ்தானத்தில் இருந்துகொண்டு, லோகமாதாவான ஸீதாதேவியை மாத்ருத்வ புத்தியோடு, புஜார்த்தமாக ஸ்வீஹரித்தான் என்பதுதான் உண்மையான தாத்பர்யமாகும். ராவணன் துஷ்டாத்மா, காமமோஹிதன் என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆகிலும், மாதாவான ஸீதையினிடம், இந்த விசேஷணங்களை ராவணன் உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது. மிகவும் காமாதுரனுக்கும் மாத்ரு ஜனங்களிடத்தில் காமவிகாரம் ஏற்படுவதென்பது ரொம்பவும் சஹிக்கத் தகுந்த விஷயமல்ல. ஆகையால், எப்படி புதன், தன் மாதாவை பூஜ்யத்வ புத்தியுடன் ஸ்வீகரித்தானே, அதுபோல் ராவணனும் லோகமாதாவான ஸீதையை, மாத்ருத்வ புத்தியோடு பூஜிப்பதற்குத் தான் க்ரஹித்தான் என்ற தாத்பர்யத்தைத் தான் க்ரஹித்துக்கொள்ள வேண்டும். அன்னியில் ஸீதாதேவியினுடைய துடையிலும், தலைமயிரிலும் கையைப் போட்டு ராவணன் ஸீதையை க்ரஹித்தான் என்பது ரொம்பவும் அஸமஞ்ஜஸமானது. நளகூபரமணிக்ரீவானுடைய சாபம், வேதவதீ சாபம், முதலான அநேக சாபங்களால், பலாத்காரமாக ராவணன் பர தாரத்தைத் தொட்டால் அவனுடைய சிரஸ் வெடித்துவிடும் என்பது புராணுந்தரங்களின் மூலமாகத் தெரியவரும்பொழுது, அதற்கு விரோதமாக காமாதுரனுக யிருந்துகொண்டு நேரில் தொட்டு ராவணன் ஸீதையை தூக்கினுன் என்று சொல்ல அவகாசமேயில்லை.

ஆனுல், वामेन करेण मूर्धजेषु, दक्षिणेन पाणिना ऊर्वोः (𑌵𑌾𑌮𑍇𑌨 𑌕𑌰𑍇𑌣 𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑍇𑌷𑍁, 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌊𑌰𑍍𑌵𑍋𑌃) (வாமேந கரேண மூர்தஜேஷு தக்ஷிணேந பாபிநா ஊர்வோ:) என்ற வசனம் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறதே.

वामेन सीतां पद्माक्षीं मूर्धजेषु करेण सः ।
ऊर्वोस्तु दक्षिणेनैव परिजग्राह पाणिना ॥

𑌵𑌾𑌮𑍇𑌨 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑍇𑌷𑍁 𑌕𑌰𑍇𑌣 𑌸𑌃 ।
𑌊𑌰𑍍𑌵𑍋𑌸𑍍𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨𑍈𑌵 𑌪𑌰𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ॥

வாமேந ஸீதாம் பத்மாக்ஷீம் மூர்தஜேஷு கரேண ஸ: ।
ஊர்வோஸ்து தக்ஷிணேநைவ பரிஜக்ராஹ பாணிநா ॥

என்று வால்மீகி மஹர்ஷி 'துடையில் ஒரு கையையும், தலைமயிரில் ஒரு கையையும், போட்டுத் தூக்கினன்' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறரே, அப்படியிருக்கும் பொழுது மேற்சொன்னபடி தத்வார்த்தமானது எப்படி ஒத்துவரும் என்ற சங்கை ஏற்படலாம். ஆகிலும் பதார்த்த ஞானமில்லாதவர்களுடைய ப்ராந்திதான் அதற்கு காரணமாகும். அதனுடைய உண்மையோ.

ப்ராம்மணனிடத்தில் ஸத்யம் சொல்லுகிறனு? பொய் சொல்கிறனு என்ற ஸந்தேஹம் வந்தால், தனது யக்ஞோபவீதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு சபதம் கூறி, நான் ஸத்யம்தான் சொன்னேன் என்பதை ருஜூப்படுத்துகிற வழக்கம். க்ஷத்ரிய ஜாதியில் பிறந்தவர்களோ, க்ஷத்ரிய ஆசாரத்துடன் கூடிய மற்றவர்களோ, யுத்தவீரர்களானதினல் பாணங்களைக் கையில் வைத்துக்கொண்டு சபதம் கூறித் தன்னுடைய வார்த்தையை ஸத்யம் என்று ருஜூப்படுத்துகிற வழக்கம். ராவணன் ராக்ஷஸனுனலும், ஆசாரத்தில் க்ஷத்ரியனைதினல், தனக்கு அஸாதாரணமான பாணங்கள் எவைகளோ, அவைகளை இரண்டு கையிலும் வைத்துக்கொண்டு "ஹே தாயே! என்னிடத்தில் கொஞ்ஜமேனும் விபரீதமான எண்ணம் வேண்டாம். உன்னை நான் மாத்ருத்வ புத்தியோடு, இஷ்ட தேவதை என்று நினைத்து லங்கா நகரத்திற்கு, அஷ்டகோணங்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் எழுந்தருளச் செய்து, அங்கு பூஜா ஸ்தானத்தில் உன்னை ஸ்தாபித்து, ஆராதானம் செய்து, அதன்மூலம் என் ஜன்ம ஸாபல்யத்தை அடையவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் நான் பிரார்த்திக்கிறேன். இது ஸத்யமானது" என்று சபதம் கூறி; தன்னுடைய அபிப்ராயத்தை ஸத்யமாகச் செய்து, ஸீதையினுடைய இரண்டு பாதங்களில் விழுந்து பிரார்த்தித்தான். [illegible] ([illegible]) (மூர்தஜேஷு) என்ற பதத்தைப் பார்த்து சிலர் ப்ரமிப்பார்கள் [illegible] ([illegible]) (மூர்தஜம்) என்ற பதத்திற்கு தலைமயிர் என்ற அர்த்தம் ப்ரஸித்தமானதினல் அவர்களுக்கு ப்ரமம் ஏற்படுகிறது. ப்ரகிருதத்திலோ, [illegible] ([illegible]) (மூர்தஜம்) என்ற பதத்தால் ச்ரேஷ்டம் என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்

கொள்ளவேண்டும். லோகத்தில்கூட ஒரு கார்யத்தில் ஒரு வன் ப்ரதானமாக நின்றானேயானால், அவன்தான் அந்தக்கார் யத்தில் மூர்த்தஜனாக இருக்கிறான் என்று சொல்லும் அநு பவம் ஏற்பட் டிருக்கிறது.

मूर्धजेषु (மூர்த்தஜேஷு) (மூர்த்தஜேஷு) என்பது தனிப்பத மல்ல. मूर्धजेषु करेण (மூர்த்தஜேஷு கரேண) (மூர்த்தஜேஷு கரேண) என்றுதான் பதத்தைப் பிரித்துக்கொள்ளவேண்டும். मूर्धजाः प्रधानभूताः इषवः बाणाः परिगृह्णन्ते सः मूर्धजेषुकरः तेन मूर्धजेषु करेण (மூர்த்தஜா: ப்ரதாநபூதா: இஷவ: பாணா: பரிக்ருஹ்யந்தே ஸ: மூர்த்தஜேஷுகர: தேந மூர்த்தஜேஷு கரேண) (மூர்த்தஜா: ப்ராதநபூதா: இஷவ: பாணா: பரிக்கரே ஸ: மூர்த்தஜேஷு கர: தேந மூர்த்தஜேஷு கரேண) என்ற ஸமாஸத்தால் ப்ர தானமான பாணங்களோடு கூடின இடதுகையினாலேயும், வலது கையினாலேயும், அதாவது, இரண்டு கைகளிலும் ப்ர தானமான பாணங்களை வைத்துக்கொண்டு; ऊर्वोः (ஊர்வோ:) (ஊர்வோ:) என்ற பதத்திற்கு பாதங்கள் என்ற அர்த்தமான தினால், ஸீதாதேவியினுடைய சரணாரவிந்தங்களில் ப்ரணா மம் செய்து ப்ரார்த்தனை செய்துகொண்டான் என்பதுதான் ஸீதாபஹாரத்தின் தத்வமாகும்.

தவிரவும் ராவணன் ஸீதாதேவியை ஸாக்ஷாத்தாக தரி சிக்கவுமில்லை; அவளுடைய சரீரத்தை தொடவுமில்லை. தேவியினுடைய தேசத்தின் நிழலையும் ஜானு (முழங்கால்) ப்ரதேசத்தினுடைய நிழலையும் தான் க்ரஹித்தான். சாயையை க்ரஹிக்கும் ஸ்வபாவம் ராக்ஷஸர்களுக்கு இயற்கையாகவே ஏற்பட்டது. அதில்,

[illegible] सर्वेषां [illegible] ।
[illegible] ।
मूर्धजेषु [illegible] जग्राह रावणः ॥

[illegible] ।
[illegible] ।
மூர்த்தஜேஷு [illegible] ஜக்ராஹ ராவண: ॥

சாயாக்ராஹித்வமப்யஸ்தி ஸர்வவித்யா விசாரத ।
கேசச்சாயாம் பராம்ருச்ய ஜாநுச்சாயாம் ததைவச ॥
க்ருஹீத்வா ஜாநகீ ஹ்ருஷ்ட: லங்காம் ப்ராயாத்ஸ ராவண: ॥

என்ற ஸ்காந்த மஹாபுராண, வாக்யமே ப்ரமாணமாகும். சாயையை ராவணன் க்ரஹித்துக்கொண்டு, போனதிலிருந்தும் ஸீதாதேவி, ராவணனை அனுஸரித்து போகும்படி நேர்ந்துவிட்டது. ஆதலால் ஸீதாதேவிக்கு ஸாக்ஷாத்தாக பரபுருஷ ஸ்பர்சம் என்ற தோஷமே ஏற்பட ந்யாயமில்லை. தென்மொழியில் ப்ரசித்தி பெற்ற மகா கவியான கம்பர் முதலானவர்களும்கூட 'ஸீதையை, ராவணன் ஸாக்ஷாத்தாகத் தொட்டுத் தூக்கவில்லை. அவள் வஸிக்கும் பூமி ப்ரதேசத்தைப் பேர்த்து எடுத்துக்கொண்டு ராவணன் லங்காநகரம் சென்றான். ஸீதையோ, பூமியினுடைய புத்ரியானதினால் பூமியாகிற தாயார் ஸஹிதமாக ஸீதாதேவியை லங்காநகரத்திற்கு அழைத்துச் சென்று ராவணன் பூஜித்தான்' என்றதைத் தன்னுடைய பாசுரங்களில் ஸாதிப்பிக்கின்றார்கள். அப்படியிருக்க, வடமொழியில் ப்ரஸித்திபெற்ற மஹா வித்வான்கள், ஸகல உபநிஷத்துக்களின் ரஹஸ்யங்களையும், அறிந்திருந்தும், ஸீதாதேவியை, 'ராவணன் நேரில் தொட்டுத் தூக்கினான்' என்ற கதையை எப்படித்தான் ப்ரவசனம் செய்கிறார்களோ! அப்படி ப்ரவசனம் செய்கிறது சாஸ்த்ர ஸம்மதமாகவே ஆகாது. ஒன்று மாயா ஸீதையை க்ரஹித்தான் என்ற அர்த்தமோ; அல்லது ஸீதையினுடைய சாயையை க்ரஹித்தான் என்ற அர்த்தமோ தான் பொருத்தமுள்ள தன்னியில், ஸாக்ஷாத்தாக ராவணன் ஸீதையை க்ரஹித்தான் என்பது பொருத்தமுள்ளதாகாது.

सीतापहरणं चैव येऽशृण्वन्ति नरोत्तमाः ।
न तेषामशुभं देवि भविष्यति कदाचन ॥

𑌸𑍀𑌤𑌾𑌪𑌹𑌰𑌣𑌂 𑌚𑍈𑌵 𑌯𑍇𑌽𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌨 𑌤𑍇𑌷𑌾𑌮𑌶𑍁𑌭𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥

ஸீதாபஹரணம் சைவ யேச்ருண்வந்தி நரோத்தமா: ।
ந தேஷாமசுபம் தேவி பவிஷ்யதி கதாசந ॥

என்று, பரமேச்வரன், பார்வதியைப் பார்த்து, 'ஸீதையை ராவணன் அபஹரித்த கதா ஸந்தர்ப்பத்தை ச்ரவணம் செய்கிறவர்களுக்கு ஒரு ஸமயத்திலும் அசுபமே ஏற்படாது'

என்று சொல்லியிருக்கும் பலச்ருதியை கவனித்தாலே ஸீதாபஹரணம் என்பது புண்யமா, பாபமா, என்று வெளியாகிறது. பாப ச்ரவணத்திற்கு பலச்ருதி யுண்டா? ஒருவன் ஒரு பதிவ்ரதா ஸ்த்ரீயைத் தொட்டுத் தூக்கினான் என்பது பாப மன்னியில் புண்யமாகாது. இந்த பலச்ருதியையோ ஸாக்ஷாத் பரமேச்வரனே, ஜகன் மாதாவான பார்வதீ தேவிக்கு சொல்கிற பலச்ருதியாகும். அதனாலேயே ஸீதாபஹரணம் என்பது மஹா புண்ய கர்மா என்று வெளியாகிறது. அந்த ஸீதாபஹரணத்தை ஜகன் மாதாவான பராசக்தியினுடைய ஆராதன ரூபமாக வைத்தால்தான், அது புண்ய கர்மாவாகும். அதற்கு உசிதமாக ராவணன் ஸீதையை அபஹரித்த விஷயத்தை நயநம் செய்யவேண்டும். மனுஷ்யர்களோ, ஸ்வயமாக ரிஷிகளுடைய அபிப்ராயத்தை அறியும் ப்ரக்ஞையுடன் கூடினவர்கள் அல்ல. பரதந்த்ர ப்ரக்ஞர்கள். அவதார புருஷர்களான வ்யாக்யாதாக்களுடைய வ்யாக்யானங்களை கவனித்துத்தான் ஆர்ஷமான அபிப்ராயத்தை அறிய சக்தியுள்ளவர்கள். மஹேச்வர தீர்த்தீயம் என்ற வ்யாக்யானங்களிலோ, இந்த ச்லோகங்களின் வ்யாக்யான பாகத்தில் தத்வங்களை எடுத்து ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை விவேகிகள் கவனித்துப் பார்த்து, தான் மனஸ் ஸமாதானத்தையடைவதுடன்கூட, அந்யர்களுக்கும் போதித்தால் மஹர்ஷிகளின் பெருமைகளை வெளிப்படுத்தினவர்களாக ஆவார்கள்.

முன் சொன்னபடி ராவணவதத்திற்கு நிமித்தமாக ஸீதாபஹாரம் என்ற வ்ருத்தாந்தமானது முடிவுபெற்றது. இவ்விதம் ஸீதையை, ராவணன் அபஹரித்துக்கொண்டு, தன்னுடைய ஸங்கல்ப மாத்ரத்தில் எதிரில் வந்து நிற்கும் ரதத்தில் ஸீதையை ஸ்தாபனம் செய்துவிட்டுத் தானும் ரதத்தில் ஏறிக்கொண்டு பஞ்சவடீ தீரத்திலிருந்து தெற்கு திக்கிலுள்ள லங்கா நகரத்தை நோக்கிச் சென்றான்.

ஸீதாதேவியோ, பயகம்பாதிகளை அடைந்து "ஹா ராமா! ஹா லக்ஷ்மணா" என்று கதறிக்கொண்டு மிகவும் துக்கத்தை அநுபவித்து வந்தாள். வனதேவதைகளோ, கோதாவரி நதியின் அதிதேவதையோ, வனத்திலுள்ள பசு, பக்ஷி, ம்ருகாதிகளோ, எல்லா ப்ராணிகளும் 'ராவணன் செய்தது அக்ரமம்' என்று நினைத்து ஸீதையைப் பார்த்துப் பார்த்துக் கதறிக் கஷ்டப்பட்டன.

ஜடாயு வதம்

இந்த ஸந்தர்ப்பத்தில் ராமாச்ரமத்திற்கு ஸமீபத்தி லுள்ள ஆலமரத்தில் வெகுகாலமாகக் கவலித்துவந்த, ஜடாயுஸ் என்ற பக்ஷியோ, ராமனுடைய விஷயத்தில் தாஸ்ய பாவத்தை யடைந்து, கைங்கர்யம் செய்துவந்த காரணத் தால் 'லோகத்தில் எஜமானனுடைய விஷயத்தில் தாஸனானவன் தன் ப்ராணனை இழந்தும் கைங்கர்யத்தைச் செய்ய வேண்டும் அப்படியானால்தான் ஸ்வாமிக்கும் தனக்கும் ஏற் பட்ட சேஷ சேஷி பாவ ஸம்பந்தமானது நிலைநாட்டப்பட்ட தாக ஆகும்' என்றதை லோகத்தில் ஸ்தாபனம் செய்வதற் காக, தானும் சேஷவிருத்தியை அவலம்பித்து ராவணனோடு த்வந்த யுத்தம் செய்ய ஆரம்பித்தது. வெகுகாலம்வரையிலும் தான் நித்ரையில் அமர்ந்திருந்த காரணத்தால் ராவணன் ஸந்யாசி வேஷதாரியாக ஆச்ரமத்திற்குள் ப்ரவேசித்து, ஸீதையை அபஹரித்த வ்ருத்தாந்தத்தை அந்த பக்ஷி அறிய வில்லை. ஸீதையை ராவணன் அபஹரித்த பிற்பாடு, ஸீதையி னுடைய தீனமான ஸ்வரத்தைக்கேட்டு விழித்துக்கொண்டு, ராவணனோடு போர்செய்ய ஆரம்பித்துவிட்டது. முதன் முதலில் 'ஸாம வாதத்தை அவலம்பித்து, ராவணனை ஸமாதானம் பண்ணிப் பார்ப்போம்' என்ற எண்ணத்துடன் ராவ ணனைப் பார்த்து ஸாதுவான உபதேசத்தைச் செய்ய ஆரம் பித்தது.

दशग्रीव स्थितो धर्मे पुराणे सत्यसंश्रयः ।
जटायुर्नाम नाम्नाहं गृध्रराजो महाबलः ॥

[illegible] ।
[illegible] ॥

தசக்ரீவ ஸ்திதோ தர்மே புராணே ஸத்யஸம்ச்ரய: ।
ஜடாயுர்நாம நாம்நாஹம் க்ருத்ரராஜோ மஹாபல: ॥

"ராவணா! என்னுடைய ஸ்வரூபத்தை நீ யறிந்திருந் தால், நான் ஜீவித்திருக்கும்போது நீ இந்த அக்ருத்யமான காரியத் தில் ப்ரவ்ருத்தித்திருக்கமாட்டாய். தாஸ்ய வ்ருத்தி என்பது சேஷ வ்ருத்தியாகும். பகவானோ, என்றும் சேஷியான வஸ்து. ப்ரஜைகள் என்றும் சேஷமான ப்ராணிகள். தாஸ்ய மென்றால் கைங்கர்யமாகும். பகவானிடத்தில் என்றும் சேஷ பாவத்தையடைந்து கைங்கர்யத்தைச் செய்துவருவது என் பதுதான் ஸநாதனமான தர்மமாகும். நான் அந்த ஸநாதன

மான சேஷ வ்ருத்தி என்ற தர்மத்தில் இருந்து வருகிறேன். எனக்கு ஆச்ரயமான வஸ்துவோ सत्यं ज्ञानमनन्तं ब्रह्म (𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮) (ஸத்யம் ஞாநமநந்தம் ப்ரஹ்ம) என்ற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸ்வரூபலக்ஷணத்தோடு கூடின தாரகப்ரம்மமே. சேஷ வ்ருத்தி என்ற தர்மத்தினுடைய பலத்தைக்கொண்டோ, தாரக ப்ரம்மமாகிய ஆச்ரய பலத்தைக் கொண்டோ, நான் மஹா பலிஷ்டனாக இருந்துகொண்டு ஜடாயுஸ் என்ற பெயரால் லோகத்தில் ப்ரஸித்தியடைந்து, தாரக ப்ரம்மமாகிய சேஷியான ராமனுடைய ஸந்நிதியில் வஸித்து வருகிறேன். நான் ஜீவிக்கும்பொழுது நீ ஸீதையை அபஹாரம் செய்துகொண்டு இஷ்டம்போல் லங்கா நகரம் போய்விடலாம் என்ற தைர்யத்தை விட்டுவிடு. தாஸனான என்னுடைய ஸ்வரூபத்தைக் கவனித்தாலே உன்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸீதாபஹாரம் என்ற கார்யமானது உனக்குப் பல பர்யவஸாயியாக ஆகாததோடுங்கூட, குல நாசகமாகவும் வந்து பரிணமிக்கும். என் ஸ்வாமியான ராமனுடைய ஸ்வரூபத்தை அறிந்திருந்தாவது நீ இந்தக் கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கக்கூடாது.

राजा सर्वस्य लोकस्य महेन्द्रवरुणोपमः ।
लोकानां च हिते युक्तो रामो दशरथात्मजः ॥

𑌰𑌾𑌜𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍁𑌣𑍋𑌪𑌮𑌃 ।
𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌰𑌾𑌮𑍋 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌃 ॥

ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய மஹேந்த்ரவருணோபம: ।
லோகாநாம் ச ஹிதே யுக்தோ ராமோ தசரதாத்மஜ: ॥

தசரத சக்ரவர்த்தியினுடைய புத்ரனும், என்னுடைய ஸ்வாமியாயும் உள்ள ராமனே, ஸர்வ லோகத்திற்கும் ஸ்வதந்த்ரமான அரசன் என்பதை நீ அறியவும். உனக்கும், ராமன் ஸ்வாமியாகுவார். நீயும் என்னைப்போல் ராமனுடைய சேஷபூதமான வஸ்துதான். ஸர்வ ப்ராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்வதிலேயே ஸ்வபாவமுள்ள ஸர்வ சேஷியான ராமனுக்கு, அல்பனான நீ சேஷபாவத்தை அவலம்பித்து தாஸ்யம் செய்யாதபோனாலும், விரோதத்தை உண்டுபண்ணிக்கொண்டால், உன்னால் எப்படி ஜீவிக்கமுடியும்? சேஷனான என்னுடைய ஸ்வரூபமும், சேஷியான ராமனுடைய ஸ்வரூபமும் ஜீவித்துக்கொண்டிருக்கும்பொழுது இவ்விதமான அதர்மத்

தைச் செய்வது உனக்கு ஒரு பெரிய தீங்கை விளைவிக்கும் என்பதை நீ அறியாயோ. தாயாதபலத்தைப்பற்றியோ, ஸ்வாமி பலத்தையோகூட நீ கவனிக்கவேண்டாம். அபஹரித்துக்கொண்டு போகிற ஸீதா ரூபமான த்ரவ்யத்தின் ஸ்வபாவத்தைக் கவனிக்கவேண்டும்.

तस्यैषा लोकनाथस्य धर्मपत्नी यशस्विनी ।
सीता नाम वरारोहा यां त्वं हर्तुमिहेच्छसि ॥

தஸ்யைஷா லோகநாதஸ்ய தர்மபத்நீ யஶஸ்விநீ ।
ஸீதா நாம வராரோஹா யாம் த்வம் ஹர்துமிஹேச்சஸி ॥

தஸ்யைஷா லோகநாதஸ்ய தர்மபத்நீ யசஸ்விநீ ।
ஸீதா நாம வராரோஹா யாம் த்வம் ஹர்துமிஹேச்சஸி ॥

எந்த ஸீதையை நீ அபஹரித்துக்கொண்டு அது ஜரித்து விடும் என்று நினைக்கிறாயோ, அந்த ஸீதையானவள் ஸர்வ லோக ஸ்வாமியான ஸ்ரீ ராமனுடைய தர்மபத்னியானவள். மஹா பதிவ்ரதா சிரோமணி. அந்த பதிவ்ரதா சிரோமணியான ஸீதாதேவியை நீ அபஹாரம் செய்தால், அதற்கு மேலான உத்கடமான பாபம் வேறில்லை. பதிவ்ரதா சிரோமணியான ஸாவித்ரி கூட ஸத்யவான் என்ற தன்னுடைய புருஷனை யமபாசத்திலிருந்துங்கூட விடுவித்திருக்கிறாள் என்ற புராண ப்ரஸித்தியானது உன் காதில் படவில்லையா? இந்த்ரனுடைய வஜ்ரத்தையா திருடுவான்? தொட்டமாத்ரத்தில் பஸ்மமாகிவிட மாட்டானோ? அதுபோல் பாதிவ்ரத்யத்தால் உன் குலமே பஸ்மமாகிவிடுமே! இப்படி நீ விவேகமில்லாமல் நடத்தையை அவலம்பித்து இந்த அக்ரமத்தில் ப்ரவ்ருத்தித்தானது உன் வம்ச கௌரவத்தையும் கெடுக்கிறது. புலஹர், புலஸ்தியர், விச்ரவஸ் முதலான மஹர்ஷிகள் உன் குல பித்ருக்களல்லவா! அவர்களுக்கு நீ செய்கிற காரியம் ஸம்மதமாகுமா! க்ரோதத்தைத்தான் அடைவார்கள். அவர்களுடைய சாபத்தாலும் உன் குலம் அடியோடு அழிந்துவிடும் என்பதை நீ தெரிந்துகொள். ஆகையால் இந்த அக்ரமமான காரியத்தில் நீ ப்ரவ்ருத்திக்க வேண்டாம். தாயாதருடைய பலம், ஸ்வாமியினுடைய பலம், வஸ்துவினுடைய பலம், என்பதைக் கவனித்து மாத்ரம் உன்னை நான் இந்த அக்ரமத்திலிருந்தும் விடுதலை செய்து வைக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. உன்னுடைய ஸ்வபாவத்திற்குத்தான் இந்தக் காரியம் அநுகூலமா?

कथं राजा स्थितो धर्मे परदारान्परामृशेत् ।
रक्षणीया विशेषेण राजदारा महाबल ॥
निवर्तय मतिं नीचां परदाराभिमर्शनात् ।
न तत्समाचरेद्धीरो यत्परोऽस्य विगर्हयेत् ।
यथात्मनस्तथान्येषां दारा रक्ष्या विपश्चिता ॥

𑌕𑌥𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌨𑍍𑌪𑌰𑌾𑌮𑍃𑌶𑍇𑌤𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌰𑌾𑌜𑌦𑌾𑌰𑌾 𑌮𑌹𑌾𑌬𑌲 ॥
𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯 𑌮𑌤𑌿𑌂 𑌨𑍀𑌚𑌾𑌂 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌭𑌿𑌮𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌦𑍍𑌧𑍀𑌰𑍋 𑌯𑌤𑍍𑌪𑌰𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌥𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌦𑌾𑌰𑌾 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 ॥

கதம் ராஜா ஸ்திதோ தர்மே பரதாராந்பராம்ருசேத் !
ரக்ஷணீயா விசேஷேண ராஜதாரா மஹாபல ॥
நிவர்த்தய மதிம் நீசாம் பரதாராபிமர்சநாத் !
ந தத்ஸமாசரேத்திரோ யத்பரோஸ்ய விகர்ஹயேத் !
யதாத்மநஸ்ததாந்யேஷாம் தாரா ரக்ஷ்யா விபச்சிதா ॥

நீயோ ஸகல ராக்ஷஸர்களையும் ஆளக்கூடிய அரசனாக இருக்கிறாய். ராஜன் தர்ம வ்ருத்தமான கார்யத்தில் ப்ரவ்ருத்தித்தால், ப்ரஜைகளும் அதை அநுஸரித்துத்தானே போவார்கள். ப்ரஜைகளை ஸன்மார்க்கத்தில் ஸ்தாபனம் செய்ய மகுடாபிஷேகம் செய்துகொண்டு செங்கோல் பிடித்து அரசாளுகிறவன், பர ஸ்த்ரீகளைத் தொட்டுப் பார்க்கலாமா? அதிலும் ராஜ ஸ்த்ரீகளை மிகவும் யத்னம்செய்து ரக்ஷிக்கவேண்டுமல்லவா! "தன்னுடைய பத்னியை ஒருவன் அபஹரித்தால் எப்படி அவள் புருஷனுக்கு மனதிருக்குமோ அதுபோல் ராமனுடைய பத்னியை நீ அபஹரித்ததினால் ராமனுடைய மனது தபிக்கும் என்பதை நீ அறிய வேண்டாமா? அந்யர்கள் நிந்திக்கும் கார்யத்தில் புத்திமான் ப்ரவ்ருத்திப்பானோ? எந்தப் புருஷனுடைய புத்திக்கு பர ஸ்த்ரீயிடம் ருசி ஏற்படுகிறதோ அந்த புத்தியைத்தான் நீச புத்தி என்று சொல்கிற வழக்கம். உன்னுடைய புத்தியை நீசமாகச் செய்துகொள்ளாமல், பரதாராபிமர்சனத்திலிருந்தும் நிவ்ருத்தி செய்துகொள்.

धर्ममर्थं च कामं च शिष्टः शास्त्रेष्वनागतम् ।
व्यवस्यन्ति न राजानः पौलस्त्यकुलनन्दन ॥

𑌧𑌰𑍍𑌮𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌕𑌾𑌮𑌂 𑌚 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍍𑌵𑌨𑌾𑌗𑌤𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌰𑌾𑌜𑌾𑌨𑌃 𑌪𑍌𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍁𑌲𑌨𑌨𑍍𑌦𑌨 ॥

தர்மமர்த்தம் ச காமம் ச சிஷ்டா: சாஸ்த்ரேஷ்வநாகதம் ।
வ்யவஸ்யந்தி ந ராஜாந: பௌலஸ்த்யகுலநந்தந ॥

ராஜாக்கள் சிஷ்டர்களாக இருந்துகொண்டு சாஸ்த்ரத்தில் உபதேசிக்காததான தர்ம தத்வமோ, அர்த்த தத்வமோ, காம தத்வமோ, அதை அநுஷ்டிக்காமலிருக்கிறார்கள். அதாவது சாஸ்த்ர ஸம்மதமான உபாயத்தைத்தான் அநுஷ்டிப்பது என்ற வீம்போடு இருப்பது என்பது யாதொன்று உண்டோ, அதுதான் தர்மமாகும். ராஜாக்கள்தான் தர்மத்தை ரக்ஷிக்கும் பந்துவாகுவார்கள். அவ்விதம் அரசனாக இருந்துகொண்டு தர்ம வ்ருத்தமான கார்யத்தில் நீ ப்ரவ்ருத்திக்கக்கூடாது. உன் தேசத்திலோ, ராஜ்யத்திலோ, நகரத்திலோ, உனக்கோ, உன்னைச் சேர்ந்தவர்களுக்கோ, ராமன் யாதொருவிதமான அபராதமும் செய்யாமலிருக்கும்பொழுது, நீ எதற்காக ராமனுக்கு அபராதத்தைச் செய்கிறாய். 'கரனை ராமன் கொன்றது எனக்குச் செய்த அபராதமாக ஆகாதா' என்று நீ நினைப்பதும் ஸரியல்ல. சூர்ப்பணகை ராமரிடத்தில் மர்யாதைத் தவறி, அவரைப் பர்த்தாவாக அடையவேண்டுமென்ற தைர்யத்துடன் ஸாஹஸம் செய்தாள். அதற்கு, ராமன் அவளைக் கொல்லாமல், காதுகளையும் மூக்கையும் மாத்ரம் அறுத்துவிட்டு ஜீவனோடு விரட்டினாரே. அதற்கே நீ ராமனுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கவேண்டும். சூர்ப்பணகையை மானபங்கப்படுத்தினதற்காக, கரன்தான் கோபத்தையடைந்து ராமனுடன் போர் செய்யலாமா? கரன் யோக்யனானால் சூர்ப்பணகையையல்லவா சிக்ஷிக்கவேண்டும். 'நீ ஸ்த்ரீயல்லவா ஸ்வயமாக ஒரு மஹா புருஷனிடம் சென்று, அவமர்யாதையாகப் பேசியது ந்யாயமாகுமா? அதனால் எனக்கல்லவா அபயசஸ் ஏற்படும்' என்று சொல்லி சிக்ஷிக்கவேண்டியதாக இருக்க, பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் ராமரோடு போர் செய்வது உசிதமாகும் सर्वतो आत्मानं रक्षेत् (𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍) (ஸர்வதோ ஆத்மாநம் ரக்ஷேத்) என்ற சாஸ்த்ரத்தை அநுஸரித்து, தன்னுடைய ஆத்ம ரக்ஷணைக்காக கரன் முதலானவர்களைக் கொன்று, ராமன் யுத்தத்தில் ஜயத்தை அடைந்தார். இது ராமனுடைய அபராதமா? மர்யாதையை அதிக்ரமித்ததால், கரன் மடிந்தான். ஆகையால் சூர்ப்பணகையின்

மானபங்கத்தையோ, கரனுடைய வதத்தையோ, ராமா பராதமாக நீ பாவித்துக்கொள்வதே உன் மௌட்யத்தை ப்ரகாசப்படுத்துகிறது. ஆகையால் நிரபராதியான ராம னுக்கு இவ்விதம் அபராதம் செய்வது ந்யாயமாகாது. க்ரூர மான சக்ஷுஸ்ஸால் இந்த தேவி உன்னைப் பார்த்தால் நீ எரிந்து போய்விடுவாய். ஆகையால் ஸீதையை விட்டுவிடு'' என்று வெகுப்ரகாரமாக சாந்த்வ வாதத்தை அவலம்பித்து ராவணனுக்கு, ஜடாயுஸ் உபதேசம் செய்தார்.

ராக்ஷஸனுனதினுல், ராவணன் ஜடாயுஸ்ஸினுடைய உப தேச வார்த்தையைப் பொருட்படுத்தாமல் மஹா கோபத்தை யடைந்து, ஜடாயுஸ்ஸையே ஒழித்துவிடுகிறதென்ற எண் ணத்துடன், ஜடாயுஸ்ஸின் ஸமீபம் சென்று பாண வர்ஷங் களால் அதை ஹிம்ஸை செய்தான். ஜடாயுஸ்ஸுக்கும், ராவணனுக்கும் மிகவும் பலமான யுத்தம் ஏற்பட்டுவிட்டது. ஸீதையோ ரதத்திலிருந்துகொண்டு, தன்னை ரக்ஷிக்கவந்த ஜடாயுஸ்ஸுக்கு இவ்விதமான கஷ்டம் நேர்ந்துவிட்ட தென்று நினைத்து, மிகவும் ரோதனம் செய்தாள். ஜடாயுஸ் ஸும் கூடுமானவரையில் தன்னுடைய வார்த்தக்யத்தை (கிழட்டுத்தனத்தை)க்கூட லக்ஷ்யம் செய்யாமல் மூக்கினுலும், நகங்களாலும் ராவணனை வெகு ப்ரகாரமாக ஹிம்ஸித்துக் கஷ்டப்படுத்தியது. பிறகு ராவணன் க்ரோதத்தையடைந்து, கத்திகளால் ஜடாயுஸ்ஸினுடைய இறக்கைகள், பார்ச்வங் கள் முதலியவைகளை வெட்டி உயிர் போகும்படியான நிலை யில் கீழே தள்ளிவிட்டான். அதைப்பார்த்த ஸீதாதேவியோ, "ஹா ராமா! ஹா லக்ஷ்மணு!" என்று கதறிக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டாள். அப்பேர்ப்பட்ட ஸீதையை, ராவணன் மறுபடியும் எடுத்துக்கொண்டு வெகு வேகமாக லங்கா நகரத்தை நோக்கிச் சென்றுன்.

ஜடாயுஸ்ஸின் நிலையைப் பார்த்த ஸீதை மிகவும் வ்ய ஸனத்தை யடைந்தவளாலும், ராமன் திரும்பி வரும்வரை ஜடாயுஸ்ஸுக்கு உயிர் இருக்கவேண்டுமென்று ப்ரார்த்தித் துக்கொண்டு சென்றுள். அப்படி ராவணன் ஸீதையை, ரதத்தில் எடுத்துக்கொண்டு, லங்கா நகரத்தை நோக்கிப் போகும் வழியில், ரிஷ்யமூக பர்வதத்தினுடைய சிகரத்திற்கு மேல்பாகத்தில் ரதம் சென்றது. அந்த பர்வதத்தினுடைய சிகரத்தில், சுக்ரீவன், ஹநுமான் முதலான வானர ச்ரேஷ்டர் களை ஸீதை கவனித்து, ஒரு ஸமயம், ராமன் தேடிவந்தால் அடையாளமாக இருக்கட்டும் என்று நினைத்து, தன்னுடைய

உத்ரீய வஸ்த்ரத்தில் அபூர்வமாயும் விலைமதிக்க முடியாத தாயுமுள்ள தன்னுடைய சில ஆபரணங்களை வைத்து, சுத்தி முடிந்து அந்த வானர ச்ரேஷ்டர்களுடைய மத்தியில் போட்டுவிட்டுச் சென்றாள். ராவணன் ஸீதையை லங்கா நகரத்தில் கொண்டு சேர்த்து லங்கா நகரத்திற்கு ஸமீபத்தில், உத்யான வனத்திலுள்ள வாயிலில் பெரிதான ஒரு பரமேச்வரனுடைய ஆலயத்தின் பள்ளியறைக்கு ஸமீபத்தில் ஸீதையை ஸ்தாபனம் செய்தான்.

तत्र तामसितापाङ्गां शोकमोहपरायणाम् ।
निदधे रावणः सीतां मयो मायामिव स्त्रियम् ॥

𑌤𑌤𑍍𑌰 𑌤𑌾𑌮𑌸𑌿𑌤𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌾𑌂 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌮𑍍 ।
𑌨𑌿𑌦𑌧𑍇 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑌯𑍋 𑌮𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥

தத்ர தாமஸிதாபாங்காம் சோகமோஹபராயணாம் ।
நிததே ராவண: ஸீதாம் மயோ மாயாமிவ ஸ்த்ரியம் ॥

மயன் என்ற அஸுர தச்சன் தன்னுடைய மாயா பலத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட ஸ்வயம்ப்ரபை என்ற ஸ்த்ரீயை ஸ்வயம்ப்ரபாபிலத்தில் ஸ்தாபனம் செய்தது போல், ராவணன் அசோக வனத்தில் ஸீதாதேவியை ஸ்தாபித்தான். பிறகு தினந்தோறும் தன்னுடைய ப்ரபாவத்தையும் வர்ணித்துக்கொண்டு, ராமருடைய பக்ஷத்தை தீனமாகப் பேசிக்கொண்டு, ஸீதாதேவியை தன் வசமாக்கிக்கொள்ள ப்ரலோபப்படுத்தினான். ராமனை ரொம்பவும் இழிவாகப் பேசுவது போல் காணப்படும் இரண்டொரு ச்லோகங்கள் எழுதப்படுகின்றன. அதாவது :—

राज्यभ्रष्टेन दीनेन तापसेन गतायुषा ।
किं करिष्यसि रामेण मानुषेणाल्पतेजसा ॥

भजस्व सीते मामेव भर्ताहं सदृशस्तव ।
यौवनं ह्यध्रुवं भीरु रमस्वेह मया सह ॥

दर्शने मा कृथा बुद्धिं राघवस्य वरानने ।
कास्य शक्तिरिहागन्तुमपि सीते मनोरथैः ॥

രാജ്യഭ്രഷ്ടേന ദീനേന താപസേന ഗതായുഷാ ।
കിം കരിഷ്യസി രാമേണ മാനുഷേണാല്പതേജസാ ॥
ഭജസ്വ സീതേ മാമേവ ഭര്‍ത്താഹം സദൃശസ്തവ ।
യൌവനം ഹ്യധ്രുവം ഭീരു രമസ്വേഹ മയാ സഹ ॥
ദര്‍ശനേ മാ കൃഥാ ബുദ്ധിം രാഘവസ്യ വരാനനേ ।
കാസ്യ ശക്തിരിഹാഗന്തുമപി സീതേ മനോരഥൈഃ ॥

ராஜயப்ரஷ்டேந தீநேந தாபஸேந கதாயுஷா ।
கிம் கரிஷ்யஸி ராமேண மாநுஷேணால்பதேஜஸா ॥
பஜஸ்வ ஸீதே மாமேவ பர்த்தாஹம் ஸத்ருசஸ்தவ ।
யௌவநம் ஹ்யத்ருவம் பீரு ரமஸ்வேஹ மயா ஸஹ ॥
தர்சநே மா க்ருதா புத்திம் ராகவஸ்ய வராநநே ।
காஸ்ய சக்திரிஹாகந்துமபி ஸீதே மநோரதை: ॥

"ஹே ஸீதே! நீ ராமனை எதிர்பார்ப்பதில் கொஞ்சமேனும் ப்ரயோஜனமில்லை. ராமன் ராஜ்யத்திலிருந்தும் ப்ரம்சனத்தை அடைந்துவிட்டான். அத்துடன், பரம தீனனுமாவான். தபஸ்விபோல் வேஷம் தரித்துக்கொண்டு, அரண்யத்தில் ஸஞ்சாரம் செய்கிறான். அரண்யத்தில் ஸஞ்சாரம் செய்வதிலிருந்தே அவனது ஆயுஸ் அல்பம் என்று ஊஹிக்கக்கூடியதாயிருந்து வருகிறது. மனிதன் பராக்ரமும் மிகவும் அல்பமானது. அந்த ராமனால் நீ என்ன செய்யப்போகிறாய்? உனக்கு நான்தான் ஸமானமான பர்த்தா. என்னையே பர்த்தாவாக அடையவேண்டும். யௌவனமோ சஞ்சலமானது. என்னுடன்கூட இஷ்டம்போல் ரமிக்க யத்னம் செய். ராமனைப் பார்ப்பது என்ற புத்தியை விட்டுவிடு. மனதினால் கூட ராமனுக்கு இங்கு வரும் சக்தி கிடையாது' என்ற நிரந்தரரூபமான அர்த்தத்தை ப்ரதானமாக நினைக்கும் ஜனங்களை அநுஸரித்து மேற்சொன்ன ச்லோகங்களுக்குத் தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ளவும். வித்வான்களுடைய த்ருஷ்டியை அநுஸரித்து வாஸ்தவமான தாத்பர்யத்தையோ அடியில் கண்டபடி அறியவும். அதாவது :—राज्यभ्रष्टेन राज्यात् भ्रष्टाः रिपवः शत्रवः यस्मात्सः (രാജ്യഭ്രഷ്ടേന രാജ്യാത് ഭ്രഷ്ടാഃ രിപവഃ ശത്രവഃ യസ്മാത്സഃ) (ராஜ்யப்ரஷ்டேந ராஜ்யாத் ப்ராஷ்டா: ரிபவ: சத்ரவ: யஸ்மாத்ஸ:) என்று விக்ரஹத்தை (ஸமாஸத்தை) அநுஸரித்து, பக்தனுடைய சத்ருக்களை ராஜ்யத்திலிருந்து ப்ரம்சனம் செய்துவைக்கும் ஸ்வபாவமுள்ள ஈச்

வரனே ராமன் என்ற பொருள் வெளியாகிறது. दीनेन तापसेन गतायुषा: (தீநேந தாபஸேந கதாயுஷா:) (தீநேந தாபஸேந கதாயுஷா:) என்பதை ஒரே பதமாக அறியவும். दीनानां जन: रक्षक: दीनेन: तापसानां जन: रक्षक: तापसेन: दीनेनश्चासौ तापसेनश्च दीनेन तापसेन: (தீநாநாம் இந: ரக்ஷக: தீநேந: தாபஸாநாம் இந: ரக்ஷக: தாபஸேந: தீநேநச்சாஸௌ தாபஸேநச்ச தீநேந தாபஸேந:) (தீநாநாம் இந: ரக்ஷக: தீநேந: தாபஸாநாம் இந: ரக்ஷக: தாபஸேந: தீநேநச்சாஸௌ தாபஸேநச்ச தீநேநதாபஸேந:) என்ற ஸமாஸத்தால், தீனஜன ரக்ஷகன், தபஸ்வி ஜனங்களை ரக்ஷிக்கிறவன், என்ற தாத்பர்யம் கற்பிதமாக இருந்துவருகிறது. गतायुषा (கதாயுஷா) (கதாயுஷா) என்றதினால், गतं प्राप्तं आयु: एकादशसहस्रपरिमितं येन तेन (கதம் ப்ராப்தம் ஆயு: ஏகாதச ஸஹஸ்ரபரிமிதம் யேந தேந) (கதம் ப்ராப்தம் ஆயு: ஏகாதச ஸஹஸ்ரபரிமிதம் யேந தேந) என்ற ஸமாஸத்தால் பதினோராயிரம் வருஷ காலம் பூலோகத்தில் செங்கோல் பிடித்து ராஜ்ய பரிபாலனம் செய்யும் ஸங்கல்பமுள்ளவர் என்ற தாத்பர்யமும் த்வனிக்கிறது. दीनेन तापसेन गतायुषा (தீநேந தாபஸேந கதாயுஷா) (தீநேந தாபஸேந கதாயுஷா) என்ற பதமானது ஒரே பதம் என்று முன்பு ஸமர்ப்பித்தோம். அதனால் தீன ஜனங்களை ரக்ஷிப்பதற்காகவும், தபஸ்விகளான மஹர்ஷிகளை ரக்ஷிப்பதற்காகவும், பதினோராயிரம் வருஷ காலம் பூலோகத்தில் வஸிக்கவேண்டுமென்ற ஸங்கல்பத்துடன், மாநிட விக்ரஹத்தோடு அவதரித்த ப்ரபுவே ராமன் என்ற தாத்பர்யம் வெளியாகிறது.

अल्पतेजसा (அல்பதேஜஸா) (அல்ப தேஜஸா) என்ற பதத்தால் अल्पं परिमितं तेज: आदित्यादीनामपि यस्मात् (அல்பம் பரிமிதம் தேஜ: ஆதித்யாதீநாமபி யஸ்மாத்) (அல்பம் பரிமிதம் தேஜ: ஆதித்யாதீநாமபி யஸ்மாத்) என்ற ஸமாஸத்தால் न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्नि: तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति । (ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி: தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) (ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம் நேமாவித்யுதோ பாந்தி குதோயமக்நி: தமேவ பாந்

தமநுபாதி ஸர்வம் தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி) என்ற ச்ருதியை அனுஸரித்து, ஸர்வ ஜகத்தையும் பாஸிக்கச் செய்கிற ஸூர்யன் முதலான தேவர்களுக்கும் அவபாஸகனாக இருந்துகொண்டு, தான் பாஸிக்கிற விஷயத்தில் மற்றொரு ப்ரகாசத்தை எதிர்பார்க்காமல், ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் ஸ்வயம்ப்ரகாச சிதைகரஸனே இந்த ராமன். இவ்விதமான மஹிமையுள்ள ராமனைப் பற்றி, 'அவரை விட்டுப் பிரிந்து விட்டோமே; அவர் என்ன செய்வாரோ' என்று நீ எதற்காக ப்ரலாபிக்கவேண்டும்? அவரோ, மஹாத்மா. அவருடைய விஷயமாக உனக்கு யாதொரு கவலையும் வேண்டாம்.

मामेव (மாமெவ) (மாமேவ) என்பதை मा, मे, अव (மா, மெ, அவ) (மா, மே, அவ) என்று மூன்று பதமாக பிரிக்கவேண்டும். हेमे (ஹெமெ) (ஹேமே) ஹேமகா லக்ஷ்மியே! मा (மா) (மா) என்னை अव (அவ) (அவ) ரக்ஷி.

यौवनं (யௌவநம்) (யௌவநம்) என்ற பதத்தால் மற்ற அவஸ்தைகளையும் க்ரஹித்துக்கொள்ளவேண்டும். பால்யம், கௌமாரம் யௌவனம், வார்த்தக்யம் என்ற அவஸ்தைகளோடு கூடின ஆயுளையே ப்ரக்ருதத்தில் யௌவன சப்தத்தால் க்ரஹித்துக்கொள்ளவும். பூலோகத்தில் ஏற்படுகிற ஆயுஸ்ஸோ, உன்னை உபாஸிக்கிறதற்காகத்தான் ஏற்பட்டது. அந்த ஆயுளை இன்று, நாளை என்று உன்னை உபாஸிக்காமல் வீணுக்குவதில் ப்ரயோஜனமில்லை. அதுவோ நச்வரம். எந்த நிமிஷத்தில் முடியக்கூடியதோ? சொல்லி முடியாது. ஆகையால் அந்த ஆயுளை அடைந்தவர்கள் உடன் உன்னை உபாஸித்தே தீரவேண்டும். வீணுக் காலம் போகாமல் உன்னுடைய உபாஸனத்தை நான் செய்து என் ஆயுளை ஸபலமாகச் செய்துகொள்ளும்படி எனக்கு நீ அருள் செய்யவேண்டும்.

बिभर्ति शिश्रूषादिना स्वामिनं (பிபர்த்தி ஶிஶ்ரூஷாதிநா ஸ்வாமிநம்) (பிபர்த்தி சிச்ருஷாதிநா ஸ்வாமிநம்) என்ற சமாஸத்தால் भर्ती (பர்தீ) (பர்தீ) என்ற சப்தத்திற்கு ப்ருத்யன் என்ற அர்த்தம் ஏற்படுகிறது. உனக்கு நான் அனுரூபமான வேலைக்காரன். அப்படி அனுரூபனை என்னை நீ ப்ருத்யனாக ஸ்வீகரிக்கவேண்டும். என்னை ரக்ஷிக்கவும் வேண்டும்.

ஜ (உஸ) (இஹ) இந்த லங்கையில், ஸஹ (ஸயாவஹ) (மயாவஹ) ராஜ்யலக்ஷ்மியோடுகூட அதாவது லங்கா ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துகொண்டு வேகமாக நீ பூர்ண ஸாந்நித்யத்தோடு ப்ரகாசித்து வரவேண்டுமென்று என்னுடைய கோரிக்கை "அதை ஸபலமாகச் செய்யவேண்டும்" என்று ராவணனுடைய பருஷபாஷண ச்லோகங்களுக்கு ஆந்தரமான தாத்பர்யத்தை அறியவும்.

ஜடாயு மோக்ஷம்

மாயா ம்ருகத்தை விரட்டிக்கொண்டுபோன ஸ்ரீராமன், அவன் ராக்ஷஸன் என்றதைத் தெரிந்துகொண்ட பிறகு, அவனை வதித்துவிட்டு ஸீதையினுடைய நினைவாகவே ஆச்ரமத்திற்குத் திரும்பிவந்தார்! "ஹா லக்ஷ்மணா! ஹா ஸீதே!" என்று தீனபாவத்தோடு நமது ஸ்வரம்போல் த்வனிக்கும்படி உத்கோஷம் செய்துகொண்டு மாரீசன் மரித்தானே அந்த சப்தத்தைக் காதால் கேட்டவுடன் ஸீதாதேவியானவள் எவ்விதம் எண்ணுவாளோ நம்மைத்தான் யாராவது ராக்ஷஸர்கள் ஹிம்ஸித்துவிட்டார்களோ என்று நினைத்து கதறினால் நாம் என்ன செய்யமுடியும் லக்ஷ்மணன் இவ்விதமான ப்ரமத்தோடு ஸீதையை விட்டு விட்டு நமது பதவியை தேடிக் கொண்டு வந்துவிட்டானேயானால் ஸீதையினுடைய கதி எப்படியாயிருக்கும் என்ற கவலையுடன் மெள்ள மெள்ள ஆச்ரமத்தைக் குறித்து ராமன் வரும்பொழுது எதிரில் லக்ஷ்மணனையும் கண்டுவிட்டார். லக்ஷ்மணனைப் பார்த்து, "லக்ஷ்மணா! ஸீதையைத் தனியாக ஆச்ரமத்தில் விட்டு விட்டு நீ ஏன் இங்கு வந்தாய்? ராக்ஷஸ பூயிஷ்டமான அரண்யத்தில் உன்னை ஸீதையை ரக்ஷிக்கும்படி சபதம் கூறிவிட்டு நான் வந்தேனே, இவ்விதம் மோசம் பண்ணிவிட்டாயே! நாம் இனிமேல் ஸீதையைக் காணமுடியுமா?" என்று மிகவும் கோபத்தையும், ஸம்ப்ரமத்தையும் அடைந்து, லக்ஷ்மணனுடன் ஆச்ரமத்தை அடைந்து ஸீதையைப் பார்த்தார். ஸீதை; காணவில்லை அதிலிருந்து துக்க ஸாகரத்தில் மூழ்கிக் கொண்டு வெகுகாலம் வரையில் பரிதபித்துவிட்டு, கோதாவரி நதி, வ்ருக்ஷங்கள், மலைகள் குன்றுகள், முதலான இடங்களில் ப்ராக்ருத மனிதன்போல் ஸீதையைத் தேடி அலைந்தனர். கொஞ்சதூரம் சென்றதும், ஜடாயுவானது மரிக்கும் தருவாயில் கொஞ்சம் ப்ராணனோடு கீழே கிடந்து கஷ்டப்பட்டது. அந்த ஜடாயுவைப் பார்த்து யாரோ ராக்ஷஸனே என்று சந்தேகத்தையடைந்து, இதன்மூலமாகத்

தான் ஸீதைக்கும் விபத்து ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற தீர்மானத்துடன், ஸமீபம் சென்றார். ஜடாயுஸ்ஸோ, ஆஸன்ன ப்ராணனாக இருக்கும் காரணத்தால் தன்னுடைய சக்தியை அனுஸரித்து, மனதினால் ராமனுக்கு பூஜைகளை செய்துவிட்டு 'ராவணன் ஸீதையைக் அபஹரித்துக் கொண்டுபோனான்' என்று சொல்லிவிட்டு ப்ராணனை விட்டு விட்டது. ஸீதையை ராவணன் அபஹரித்துக்கொண்டு போன விஷயத்தில்கூட ராமன் அவ்வளவு துக்கத்தை யடையவில்லை என்று சொல்லலாம். ஸீதைக்காக ப்ராண த்யாக பரியந்தம் ராவணனோடு போர்செய்து கைங்கர்யம் பண்ணின ஜடாயுஸ்ஸை, நினைத்து நினைத்து ராமன் அனு பவித்த துக்கத்தையோ வர்ணித்து முடியாது! பிறகு தன் விஷயத்தில் இந்த ஜடாயுஸ்ஸானது ப்ராணனை இழந்திருப் பதனால், ஜடாயுஸ்ஸுக்குத் தானே ப்ரம்மமேத ஸம்ஸ்காரம் செய்து, திவ்ய லோகத்திற்கு அனுப்பவேண்டுமென்ற எண் ணத்துடன், லக்ஷ்மணன் மூலமாக, அக்னியை ஸித்தமாகச் செய்துகொண்டு, காஷ்டங்களையும் கொண்டுவரச் சொல்லி, ஜடாயுஸ்ஸுக்கு ஸ்ரீராமனே ஸம்ஸ்காரம் செய்து உதக தானாதிகளையும் செய்து பரலோக ப்ராப்தி ஏற்படும்படி உத் தரவு அளித்தார்.

यागतिर्यज्ञशीलानामाहिताग्नेश्चयागतिः
अपरावर्तिनांयाच याचभूमिप्रदायिनां ।
मयात्वं समनुज्ञातः गच्छलोकाननुत्तमान्
गृध्रराजमहासत्व संस्कृतश्चमयाव्रज ॥

𑌯𑌾𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑌶𑍀𑌲𑌾𑌨𑌾𑌮𑌾𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑍇𑌶𑍍𑌚𑌯𑌾𑌗𑌤𑌿𑌃
𑌅𑌪𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂𑌯𑌾𑌚 𑌯𑌾𑌚𑌭𑍂𑌮𑌿𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑌾𑌂 ।
𑌮𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌗𑌚𑍍𑌛𑌲𑍋𑌕𑌾𑌨𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍
𑌗𑍃𑌧𑍍𑌰𑌰𑌾𑌜𑌮𑌹𑌾𑌸𑌤𑍍𑌵 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌶𑍍𑌚𑌮𑌯𑌾𑌵𑍍𑌰𑌜 ॥

யாகதிர்யஜ்ஞசீலாநாமாஹிதாக்நேச்சயாகதி:
அபராவர்திநாம்யாச யாசபூமிப்ரதாயிநாம் ।
மயாத்வம் ஸமநுக்ஞாத: கச்சலோகாநநுத்தமாந்
க்ருத்ரராஜமஹாஸத்வ ஸம்ஸ்க்ருதச்சமயாவ்ரஜ ॥

என்ற வாக்யங்களால், ஸ்ரீராமன் ஜடாயுஸ்ஸுக்கு திவ்ய லோக ப்ராப்தியை விதிக்கின்றார். [illegible] (பக்ஷீ[illegible]

(யக்ஞசீலா:) என்றால் யக்ஞாநுஷ்டான தத்பரர்களான க்ரஹஸ்தாச்ரமிகளாக ஆகுவார்கள். அவ்விதம் ஒரு தினம்கூட விடாமல் காலையிலும் மாலையிலும் த்ரேதாக்னியை உபாஸித்துக்கொண்டிருக்கும் யக்ஞ சீலர்களான க்ரஹஸ்தர்களுக்கு எந்த லோகமோ அந்த லோகங்களையும்; आहिताग्नेश्चयागतिः आहिताः परिस्थापिताः अग्नयः पंचाग्नयः ([illegible]) (ஆஹிதாக்னேச்சயாகதி: ஆஹிதா: பரிதஸ்தாபிதா: அக்னய: பஞ்சாக்னய:) என்ற சமாஸப்படி பஞ்சாக்னி மத்தியில் தபஸ்ஸைச் செய்து எப்பொழுதும் தபஸ்ஸீலர்களாகவே இருந்துகொண்டு வருகிற வானப்ரஸ்தாச்ரமிகளுக்கு எந்த லோகமோ அவைகளையும்; अपरावृत्तिनांयाच अरण्यमियात् नपुनरेयात् ([illegible]) (அபராவ்ருத்திநாம்யாச அரண்யமியாத் நபுநரேயாத்) என்ற ச்ருதியில் சொன்னபடி ஸர்வஸங்க பரித்யாகம் செய்துவிட்டு நிர்ஜனமான ப்ரதேசத்தில் கூடசாரியாக அவ்யக்தலிங்களையும் எப்பொழுதும் ப்ரணவாநுஸந்தானம் செய்துகொண்டு இருந்துவரும் ஸந்யாஸிகளுக்கு எந்த லோகங்களோ அதுகளையும்; याच भूमिप्रदायिना ([illegible]) (யாச பூமிப்ரதாயிநா) பூமியிலுள்ள போகவாஸனைகளை விட்டுவிட்டு ஜீவிதசையின் முடிவு வரையிலும் ஆச்சார்ய குலத்திலேயே வஸித்துக்கொண்டு குருசுச்ரூஷையைச் செய்து வரும் நைஷ்டிக ப்ரம்மசாரிகளுக்கு எந்த லோகங்களோ அவைகளையும்; அதாவது प्राजापत्यं गृहस्थानां ब्राह्मं संन्यासिनांस्मृतं वनिनां देवलोकः गृहस्थानां नैष्ठिकानां तपस्तथा ([illegible]) (ப்ராஜாபத்யம் க்ரஹஸ்தாநாம் ப்ராஹ்மம்ஸந்யாஸிநாம் ஸ்ம்ருதம் வனிநாம் தேவலோக: க்ருஹஸ்தானாம் நைஷ்டிகாநாம் தபஸ்ததா) என்ற ஸ்ம்ருதியை அநுஸரித்து க்ரகஸ்தர்களுக்குள் திவ்ய போகத்தை அநுபவிக்கும் ப்ரஜாபதியின் லோகமென்ன, ஸந்யாஸிகள் செல்லும் ப்ரம்மலோகமென்ன, வானப்ரஸ்தாச்ரமிகள் செல்லும் தேவலோகமென்ன, நைஷ்டிக ப்ரம்மசாரிகள் செல்லும் தபோலோகமென்ன. இவைகளை ஹே, க்ருத்ரராஜா! நீ அடைந்து, அந்த லோகங்களில் திவ்ய போகத்தை சாச்வதமாக அநுபவிக்கவேண்டியது. அந்த லோகங்களில் சாச்

வதமான திவ்ய போகத்தை அனுபவித்த பிறபாடு अथयदतः परो दिवोज्योतिः दीप्यते विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेषु अनुत्तमेषु उत्तमेषु (அயதத: பரோ திவோஜ்யோதி: தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு) (அதயதத: பரோ திவோஜ்யோதி: தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு) என்ற ச்ருதி ப்ரஸித்தமான ப்ரம்மலோகத்தையும், அதாவது மோக்ஷத்தையும் நீ அடையலாம்'' लोकेषु (லோகேஷு) (லோகேஷு) என்ற பகு வசனமானது அந்தலோகத்தினுடைய பெருமையைக் காட்டுவதன்னியில், லோகங்கள் அநேகங்கள் என்ற ப்ரம்மம் வேண்டாம். மோக்ஷலோகம் என்பது ஒரே லோகமாகத்தான் ஆகும். नसपुनरावर्तते (நஸ புநராவர்ததே) (நஸபுநராவர்ததே) என்ற ச்ருதியினால் ஸித்தமான ஸம்ஸார மண்டலத்தில் புனராவ்ருத்தியில்லாத லோகமே மோக்ஷலோகமாகும். அந்த லோகத்தில் ஸம்ஸார வாடையே இராது. அதைத்தான் அபராஜிதமான வைகுண்டம் என்றும் மதாந்த்ரத்தில் சொல்லப்படும்.

ஞான ஹீனமான பக்ஷிகளுக்கு இந்த உத்தமலோக ப்ராப்தி ஏற்பட ந்யாயமுண்டா? என்ற சங்கையை அடையக்கூடாது. ராமனுடைய கையால் செய்யப்பட்ட ப்ரம்ம மேத ஸம்ஸ்காரத்தால் ஜடாயுஸ்ஸானது திவ்யலோக ப்ராப்திக்கு அர்ஹமான சரீரத்தோடு கூடினதானபடியால், ராமனுடைய அனுக்ஞாபலத்தைக்கொண்டு பக்ஷிகளுக்கும் திவ்ய லோக ப்ராப்தி ஏற்படலாம். ராமன் மனிதனாயிற்றே, अनुत्तमं (அநுத்தமம்) (அநுத்தமம்) என்ற சப்தத்தால் சொல்லப்பட்ட மோக்ஷத்தை கொடுக்கக்கூடிய சக்தி எப்படி ஏற்படும்? என்ற சங்கைக்கும் அவகாசமில்லை. மூடலோகத்தினுடைய த்ருஷ்டியை அனுஸரித்து ராமன் மனிதன்போல் நடித்துவந்தாலும், ராமன் பரவஸ்து தான் என்பதற்கு அஸாதாரணமான லிங்கங்கள் ஆங்காங்கு இந்த ப்ரபந்தத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், विष्णुः (விஷ்ணு:) (விஷ்ணு:) என்ற சப்தத்தாலும் ஒவ்வொரு காண்டத்திலும் மஹர்ஷியானவர் ராமனைக் குறிப்பிட்டு சொல்லியிருப்பதினாலும், ராமன் பரம்பொருள் என்பதில் ஸந்தேகமேயில்லை.

தவிரவும் सत्येन लोकान् जयति (ஸத்யேந லோகாந் ஜயதி) (ஸத்யேந லோகாங் ஜயதி) என்ற வாக்யத்தால் ராமன் ஸத்யபரனுனதினுல், ஸத்யபரனுக உள்ள மனிதனுடைய வசத்தில் ஸர்வலோகங்களும் இருந்துவருகிறபடியாலும், ஸத்யம் என்ற விசேஷ தர்மத்தை அனுஷ்டானம் பண்ணும் உபாயத்தால் ஸர்வ லோகங்களையும் ராமன் தன் வசமாக்கிக் கொண்டார்.

போஜராஜ்யத்தில், ராஜவீதியில் ஒரு மண்டபத்தில் ஒரு வித்வான் ராமாயணத்தை ப்ரதிதினமும் படித்துவரும் வழக்கமுண்டு. ஒரு தினத்தில் ஜடாயுஸ்ஸுக்கு ராமன் மோக்ஷம்கொடுத்த கட்டமானது விசேஷமாக நடைபெற்றது. அன்று மண்டபங்களெல்லாம் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருந்தன. மறுநாள் காலையில் ப்ரபாதஸமயத்தில் போஜ மஹாராஜன் நகர சோதனைக்காக கால் நடையாக போய்க் கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில், அலங்கரிக்கப்பட்ட இந்த மண்டபம் அவருடைய கண்ணில் தென்பட்டது. அந்த இடமோ நான்கு ராஜவீதிகள் ஸந்திக்கும் இடமாகும். அங்கு ஒரு பட்டாரகன் (ஸேவகன்) நின்று வந்தான். அவனைப் பார்த்து ராஜனு "என்னப்பா இந்த மண்டபத்தில் விசேஷம்" என்று கேட்டார். அதற்கு அந்த ஸேவகனு "இந்த மண்டபத்தில் ஒரு ஸ்வாமிகள் தினந்தோறும் ராமாயணம் படித்து வருகிருர்கள். நேற்றிரவு ஜடாயுஸ்ஸுக்கு ராமன் மோக்ஷம் கொடுத்த கட்டம் கதை நடந்தது. அதற்காக மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னுன். அதைக்கேட்ட அரசனு "நீ அந்த கதையைக் கேட்பதுண்டா" என்றுன். பட்டாரகன் "கேட்பதுண்டு" என்று சொன்னுன். அரசன் பட்டாரகனைப் பார்த்து "ராமன் நம்மைப்போல மனிதன்தானே! எப்படி ஜடாயுஸ்ஸுக்கு மோக்ஷம் கொடுத்தார்? அதைப்பற்றி இந்த ஸ்வாமிகள் என்ன சொன்னுர்" என்றுன். பட்டாரகன் அதைப் பற்றி விவரமாக அந்த ஸ்வாமிகள் ஒன்றும் சொல்லவில்லை" என்று சொன்னுன். "இன்றைய தினம் நீ அந்த ஸ்வாமிகளிடம் கேட்டு, நாளை காலை பதில் சொன்னுல் உனக்கு ஸன்மானம் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு அரசன் போய் விட்டான். அந்த ஸேவகனு மறுநாள் ராமாயணம் ஆரம்பிக்கும்பொழுதே அந்த ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு "ஸ்வாமிகளே! நேற்று கதையில் ஜடாயுஸ்ஸுக்கு ராமன் மோக்ஷம் கொடுத்தார் என்று சொல்லப்பட்டதே. ராமன் என்னைப்போல் மனிதனுக இருக்கும்பொழுது எப்படி

மோக்ஷத்தைக் கொடுத்தார்? இந்த ஸந்தேகத்தை நிவர்த்தி செய்து வைக்கவேண்டும்" என்று கேட்டான். ஸ்வாமிகளும் सत्येन लोकान् जयति (ஸத்யேந லோகாந் ஜயதி) (ஸத்யேநலோகாந் ஜயதி) என்ற சாஸ்திரமானது ஸத்யத்தை கைபிடித்தவன் வசமாக ஸகல லோகங்களும் ஆகிறது. ராமன் மனிதனு? ஈச்வரனு? என்ற விசாரம் இப்பொழுது வேண்டாம். ஸத்ய ஸந்தனுனதினுல் ஸகல லோகங்களும் அவனுடைய வசத்தில் இருந்து வருகின்றன. அதுகளில் சில லோகங்களை தன் விஷயத்தில் உயிரைவிட்டு கைங்கரியம் பண்ணின ஜடாயுஸ் ஸுக்கு கொடுத்தார்" என்று சொன்னுர். பட்டாரகனும் ஸந்தோஷமாக க்ரஹித்துக்கொண்டு அதை மறுநாள் காலை யில் அரசனிடம் சொல்லி வெகுமானத்தையும் அடைந்தான். இது புராதனமான வ்ருத்தாந்தங்களில் ஒரு அபூர்வமான வ்ருத்தாந்தமாகும்.

மேற்சொல்லப்பட்டதை அநுஸரித்து ராமன் ஸத்யஸந்த னுனதினுல் सत्यप्रतिष्ठायां सर्वक्रियाफल आश्रयत्वं (ஸத்யப்ரதிஷ்டாயாம் ஸர்வக்ரியாபல ஆச்ரயத்வம்) (ஸத்யப்ரதிஷ்டாயாம் ஸர்வக்ரியா பல ஆச்ரயத்வம்) என்ற பாதஞ்ஜல ஸூத்ரத்தை அநு ஸரித்து ஸத்யத்தில் ப்ரதிஷ்டிதனுக உள்ள மனிதன் ஸர்வ லோகங்களையும் தன் வசமாக்கிக்கொண்டு ஸர்வ ப்ராணி களுக்கும் கர்மபலத்தைக் கொடுக்கக் கூடிய சக்தியுள்ளவ னுக ஆகிருன் என்று தெரிகிறபடியால் ராமனுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கும்படியான சக்தி ஏற்பட நியாய முண்டு. ஜடாயுஸ்ஸுக்கு மோக்ஷத்தை யளித்தார் என்பதில் ஸந்தேகத்திற்கும் இடமேயில்லை.

தவிரவும் ராமன் ஜடாயுஸ்ஸுக்கு ஸம்ஸ்காரம் செய் திருக்கிறபடியாலும் "யக்ஞசீலர்களுடைய லோகத்தை நீ அடைந்து திவ்ய போகத்தை நீ அடைவாய்" என்று அநுக்ஞை செய்திருப்பதாலும் ஜடாயுஸ்ஸுக்கு ஸ்வயமாக யக்ஞசீலர்களுடைய லோகம் போகும்படியான ஸத்கர்மா இல்லாதபோனுலும் ராமனுடைய ப்ரபாவத்தால் யக்ஞசீலர் களுடைய லோகங்களையும் அடையும்படியான ஸம்சுத்தி ஜடாயுஸ்ஸுக்கும் ஏற்பட்டுவிட்டது. யக்ஞசீலர்களுடைய லோகங்களெல்லாம் ஜடாயுஸ்ஸுக்கு ஆநுஷங்கிகமான பல மாக ஆகும். उत्तमेषु अनुत्तमेषु लोकेषु (உத்தமேஷு அநுத்தமேஷு

[illegible]) (உத்தமேஷு அநுத்தமேஷு லோகேஷு) என்ற ச்ருதியினால் சொல்லப்பட்ட லோகமோ மோக்ஷமாகும்.

आयुरारोग्यमर्थांश्च भोगांश्चैवानुषंगिकान् ।
ददाति ध्यायतां नित्यं अपवर्गप्रदोहरिः ॥

[illegible] ।
[illegible] ॥

ஆயுராரோக்யமர்த்தாச்ச பாகாம்ச்சைவாநுஷம்கிகாந் ।
ததாதி த்யாயதாம் நித்யம் அபவர்கப்ரதோஹரி: ॥

என்ற ஸ்மிருதி ப்ரகாரம் மஹாவிஷ்ணுவானவர் அகண்டமான ஐச்வர்யம், தீர்க்கமான ஆயுள், ஆரோக்யம், திவ்ய லோகங்களின் அமாநுஷமான போகங்கள் இவைகளை தன் பக்தர்களுக்கு ஆநுஷங்கிகமாகக் கொடுத்துவிட்டு, அந்த பக்தன் இவைகளை எதிர்பார்க்காதபோதிலும், தான் வற்புறுத்தி பக்தனுக்கு கொடுத்துவிட்டு, கடைசியில் सोऽश्नुते सर्वान्कामान् ([illegible]) (ஸோச்நுதேஸர்வாந்காமாந்) என்ற ச்ருதி ப்ரஸித்தமான மோக்ஷத்தையும் கொடுக்கிறார். அந்த ரீதியை அநுஸரித்துத்தான் ப்ரக்ருதத்தில் ஐடாயுஸ்ஸுக்கும் மோக்ஷத்தை கொடுத்தார் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், तमेवविदित्वा अतिमृत्युमेति नान्यःपन्था विद्यते अयनाय ([illegible]) (தமேவவிதித்வா அதிம்ருத்யுமேதி நாந்ய:பந்தா வித்யதே அயநாய) என்ற வேதமானது 'ஆத்மஞானத்தைத் தவிர மோக்ஷத்திற்கு வேறு ஒன்றும் ஸாதனமேயில்லை' என்று சொல்லும்பொழுது, ஞானமில்லாத ஐடாயுஸ்ஸுக்கு எப்படி மோக்ஷம் கொடுத்தார்? அப்படியானால் மேற்சொன்ன ச்ருதிக்கு ப்ராமாண்யவிரோதமல்லவா ஏற்படும்? என்ற சங்கை சிலர்களுக்கு ஏற்படக்கூடும். அதற்கு ஸமாதானமோ, மோக்ஷம் என்பதோ पारमार्थिक ब्रह्मात्मना अवस्थानं ([illegible]) (பாரமார்த்திக ப்ரஹ்மாத்மநா அவஸ்தாநம்) என்பதுதான் அத்வைதிகளுடைய ஸித்தாந்த

ரீதியாக ஏற்பட்டது. ஆத்மாவோ என்றும் ப்ரம்மம்தான். ஆகிலும், தான் ப்ரம்மம் என்ற ஸ்வாநுபூதியானது அக்ஞானம் என்ற ஆவரணத்தால் ஏற்பட்டிருக்கின்றது. ஸத்குருவினுடைய உபதேசத்தாலும், பூர்வ புண்ய பரிபாகத்தாலும் 'தான் ப்ரம்மம்' என்ற ஞானம் உதித்துவிட்டால், அந்த அக்ஞானம் என்ற ஆவரணத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டு, ஆத்மா, ஸச்சிதானந்தரூபமான ப்ரம்மமாக ப்ரகாசிக்கின்றது. முன்பு இல்லாமல் புதிதாக வந்ததுபோல் தோன்றும். ஆனால் எப்பொழுதும் உள்ளதுதான். அப்ராப்தமான ஒரு வஸ்துவை அடைவது என்பது அத்வைதிகளுடைய ஸித்தாந்த ரீதியாக மோக்ஷமாக ஆகாது. ப்ராப்தமான ஸ்வரூபத்தில் ஏற்பட்ட, அப்ராப்தத்வ ப்ரம்ம நிவ்ருத்திதான் அத்வைதிகளுடைய ஸித்தாந்த ரீதியான மோக்ஷமாகும். அப்பேர்ப்பட்ட மோக்ஷத்திற்கு ஞானம் ஒன்றுதான் ஸாதனமாகும். அந்த மோக்ஷத்தைத் தான் குறித்து ஞானத்தை தவிர வேறு ஸாதனமில்லை என்று [illegible] (ஜ்ஞாத்வைவ [illegible]) (நாந்ய: பந்தா வித்யதே அயநாய) என்ற ச்ருதியானது போதிக்கின்றது. ஜடாயுஸ் அடைந்த மோக்ஷமோ, ஸாரூப்ய மோக்ஷமாகும். அது உபாஸனா பலத்தால் ஏற்படக்கூடும். பக்திதான் அந்த மோக்ஷத்திற்கு காரணம் என்று விசிஷ்டாத்வைதிகளுடைய ஸித்தாந்தமாகும். ஜடாயுஸ்ஸுக்கோ ராமனிடத்தில் அபாரமான பக்தி இருந்துவந்ததென்பதை ராம காரியத்திற்காக ப்ராண த்யாகம் செய்ததே ருஜுப்படுத்துகிறது. இதனால் ஞானமில்லாமல் ஜடாயுஸானது மோக்ஷத்தை யடைந்தது என்று சொல்வதினால் [illegible] (நாந்ய: [illegible]) (நாந்ய: பந்தா) என்ற ச்ருதிக்கு விரோதம் வராது. என்று இவ்விதம் சிலர்கள் ஸமாதானம் சொல்லுகிறார்கள்.

அத்வைத ஸித்தாந்த ரீதியான மோக்ஷத்தையே ஜடாயுஸ் அடைந்தது. ஆனால் அதற்கு ஞானமில்லை அப்படியானால் மோக்ஷத்திற்கு ஞானம்தான் காரணம் என்று சொல்லுகிற ச்ருதி வீணாக ஆகிவிடுமே என்ற சங்கைக்கு மற்றொரு பக்ஷத்தில் சமாதானமோ :—

ஞானத்தால்தான் மோக்ஷத்தை யடையவேண்டும் என்ற நிபந்தனை பகவத் பக்தியில்லாதவனுடைய விஷயம் [illegible] னுடைய பக்தி ஒரு புருஷனிடத்திலிருந்து [illegible] மல்லாமலே அந்தப் புருஷனுக்கு மோக்ஷத்தை [illegible]

அளித்து விடலாம் அதை யாரும் தடுக்கமுடியாது. ஒரு புருஷன் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு தூமசகடத்(ரயில் வண்டி)தில் பிரயாணம் செய்யும்பொழுது, டிக்கட் இல்லாதபோனல் போக முடியாது என்ற நிபந்தனை யானது, அதிகாரிகளுடைய தயவில்லாத மனிதனை பொறுத்தது, அதிகாரிகளுடைய தயவு இருந்தால் டிக்கட் இல்லாமலே ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு தூமசகடத்திலேயே மனிதன் போகிறன் என்பது அநுபவ ஸித்தமானது அதுபோல் பகவானுடைய அருள் இருந்தால், ஞானமில்லாமலும் மோக்ஷத்தை அடையலாம். ஞானமில்லாத போனல் மோக்ஷம் கிடையாது என்ற ச்ருதியை பகவத்பக்தியில்லாதவர்களுடைய விஷயமாக ஸங்கோசம் பண்ணவேண்டும். கேவலம் லோகாநுபவத்தை மாத்ரம் ஒட்டிச் சொன்னதல்ல. ந்ருஸிம்ம புராணத்தில்

मत्कृते निधनं यस्मात् त्वया प्राप्तं द्विजोत्तम ।
तस्मात् मम प्रसादेन विष्णुलोकमवाप्स्यसि ॥

[illegible] ।
[illegible] ॥

மத்க்ருதே நிதநம் யஸ்மாத் த்வயா ப்ராப்தம் த்விஜோத்தம !
தஸ்மாத் மம ப்ரஸாதேந விஷ்ணுலோகமவாப்ஸ்யஸி ||

என்று பகவானே ஜடாயுஸ்ஸை பார்த்து “ஹே பக்ஷி ராஜனே ! ‘ஞானமில்லாததினல் எனக்கு எப்படி மோக்ஷம் கிடைக்கும்’ என்ற சங்கையை அடையவேண்டாம் ஞானத்தால்தான் மோக்ஷத்தை அடையலாம் என்ற நியமம் என்னுடைய பக்தர்களாக இல்லாதவர்களுடைய விஷயத்தில் சங்கோசம் செய்துகொள்ள வேண்டியது. என்னுடைய பக்தர்களை அந்த ச்ருதியானது பாதிக்காது. நீயோ என்னுடைய பரம பக்தன் ஆகையால் என்னுடைய ப்ரஸாதத்தால் நீ விஷ்ணு லோகத்தை அடையலாம்” என்று சொல்கிறர் சிலர்கள் नान्यः पन्था (நாந்ய: பந்தா) (நாந்ய: பந்தா) என்ற ச்ருதியை காரணமன்னியில் ஸங்கோசம்செய்து சாஸ்த்ரார்த்தத்தை விபரீதமாக அர்த்தம் செய்கிருர்கள். தவிரவும் नान्यः पन्था विद्यते अयनाय (நாந்ய: பந்தா வித்யதே அயநாய; நாந்ய: பந்தா வித்யதே அயநாய) என்ற ச்ருதிக்கு சங்கோசம் செய்வது

என்பதில் காரணமேயில்லை. ஜடாயுஸ்ஸுக்கு அத்வைத ஸித்தாந்த ரீதியான மோக்ஷம் என்பதும் இல்லை. ஜடாயுஸ்ஸோ பரம பக்தன் என்பதில் ஆக்ஷேபணையே இல்லை. பக்தனுடைய விஷயத்திலோ, பகவான்

तेषामहं समुद्धर्ता मृत्युसंसार सागरात् ।
नाशयामि आत्म भावस्थः ज्ञानदीपेन भास्वता ॥

തേഷാമഹം സമുദ്ധർത്താ മൃത്യുസംസാര സാഗരാത് ।
നാശയാമി ആത്മ ഭാവസ്ഥഃ ജ്ഞാനദീപേന ഭാസ്വതാ ॥

தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸார ஸாகராத் ।
நாசயாமி ஆத்ம பாவஸ்த: ஞானதீபேந பாஸ்வதா ॥

என்று சொன்னபடி, பக்தனுடைய விஷயத்தில் அந்திம காலத்தில் பகவானே நேரில் வந்து ஞானோபதேசம் பண்ணி, அவனை முக்தனுகச் செய்கிறார், என்று தெரிகிறபடியால் அதை அநுஸரித்து பகவானே ஜடாயுஸ்ஸுக்கு ஞானோப தேசம் பண்ணி கைவல்யத்தை கொடுத்தார் என்று தாத்பர் யத்தை ப்ரகாசம் செய்யும்பக்ஷத்தில் नान्यः पन्था विद्यते (നാന്യഃ പന്ഥാ വിദ്യതേ) (நாந்ய:பந்தா வித்யதே) என்ற ச்ருதிக்கும் சங்கோசம் செய்யவேண்டாம் ஜடாயுஸ் அடைந்த மோக்ஷமும் न स पुनरावर्तते (ന സ പുനരാവർത്തതേ) (நஸபுநராவர்த்ததே) என்ற ச்ருதியினுல் ஸித்தமான பரம மோக்ஷமாக ஆகலாம். ஒருவிதமான விரோதமும் ஒரு வாக்யத்திற்கும் கிடையாது என்றும் சில வித்வான்கள் சொல்லுகிறுர்கள். இதுதான் சாஸ்த்ர ஸம்மதமான ஸித்தாந்தமாக ஆகும்.

ஸ்ரீ ராமன், லக்ஷ்மணனுடன் ஸீதையைத் தேடுதல்

இவ்விதம் ஜடாயுஸ்ஸுக்கு மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தை அளித்துவிட்டு, லக்ஷ்மணனேடுகூட தென் மேற்கு திக்கை நோக்கி ஸீதையை தேடிக்கொண்டே பக வான் சென்றுர். கொஞ்சதூரம் சென்றவுடன், அயோமுகி என்ற பெயரால் ப்ரஸித்தியடைந்த ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீயான வள் ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் எதிரில் வந்து, ராமன்,

லக்ஷ்மணன் இவர்களுடன் அநுகூலமான வார்த்தைகளைப் பேசி, ராமன், லக்ஷ்மணன் இவர்களுக்குப் பரம ஸந்தோஷத்தை உண்டு பண்ணினான். பகவானும் பரம ஸந்தோஷமடைந்து அவ்விட ஸ்த்ரீகளோடு ஸம்போகம் செய்யக்கூடாது என்று நினைத்து அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்து அவமானப்படுத்தி விரட்டிவிட்டார். மறுபடி கொஞ்ச தூரம் போனவுடன் வயிற்றில் இரண்டு கண்களுடன் கோரமான உருவத்துடன், இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு மார்க்கத்தையும் தடுத்து, மார்க்கத்தில் வருகிறவர்களைக் கைகளால் அபஹரித்து பக்ஷிக்கிற ஸ்வபாவமுள்ள ஒரு கபந்த சரீரத்தை பகவானான ஸ்ரீராமன் பார்த்தார். லக்ஷ்மணனுக்கும் காட்டினார். லக்ஷ்மணனோ முன்பு பார்க்கப்படாத அபூர்வமான கோரமான ரூபமாயிருந்ததினால், கொஞ்சம் பார்த்து பயந்தார். ராமன் லக்ஷ்மணனை ஆச்வாசம் செய்துவிட்டு, பரம தைரியத்துடன் அந்த ராக்ஷஸனுடைய ஸமீபம் சென்று, அந்த கபந்தனை வதிக்க யத்னம் செய்தார். இரண்டு கைகளாலும் ராமன், லக்ஷ்மணன் இருவர்களை பலாத்காரமாக அபஹரித்து பக்ஷிக்க ஆரம்பித்தவுடன், ராமனும் லக்ஷ்மணனும் பரம கோபத்துடன், அவனுடைய இரண்டு கைகளையும் வெட்டி கீழே தள்ளி, பயத்திலிருந்தும் முக்தர்களாக ஆனார்கள். உடன் கபந்தனும் மரித்து கீழே விழுந்துவிட்டான். அவன் மரித்த பிற்பாடு திவ்ய சரீரத்துடன் ஆகாச மார்க்கத்தில் விமான ஆரூடனாக இருந்து கொண்டு ராமனையும் லக்ஷ்மணனையும் பார்த்து அஞ்ஜலி பந்தனம் செய்துவிட்டுத் தன் விருத்தாந்தத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

"ராமா! நான் கந்தர்வ லோகத்திற்கு அதிபதியான ஒரு அரசனாக இருந்தேன். என்னுடைய சரீரமோ அதிசுந்தரமாக இருந்தது. என்னைப்போல் உலகத்தில் அழகுள்ளவன் கிடையாது என்ற அஹங்காரத்தையும் அடைந்தவன் நான். ஒரு ஸமயம் விமானத்தில் ஏறிக்கொண்டு லோகத்தில் ஸஞ்சாரம் செய்தகாலத்தில், ஒரு ஆரண்யத்தில் ஒரு ரிஷியைக் கண்டேன். அவருடைய தேஹமோ [illegible] பருமனாக இருந்தது. உடலோ ரொம்பவும் கோணலாக இருந்தது. அவருக்கு ஸ்தூலசிரா (ஸ்தூலசிரஸ்) (ஸ்தூலசிரா) என்று ஒரு பெயரும் ப்ரஸித்தமாக ஏற்பட்டிருந்தது. நான் மிகவும் ஸுந்தரன் என்ற கர்வத்தால் அவரைப்பார்த்து பரிஹாசம் செய்து, ப்ரம்ம [illegible] இவ்விதம் கோரமான சரீரம் ஒன்று

உண்டா' என்று நினைத்தேன். அவர் அதை அறிந்து என்னை 'நீ குரூபியாகப் போகக்கடவது' என்று சபித்துவிட்டார். அதுமுதல் நான் இந்தவிதமான நிலையில் இருந்துவருகிறேன். நான் பிறகு, 'நாம் செய்தது தப்பு' என்று தோன்றி அவருடைய காலில் விழுந்து சாப விமோசன காலத்தை ப்ரார்த்திக்கும்பொழுது, அந்த மஹர்ஷி எனக்கு அநுக்ரகம் செய்ததாவது: 'அபராஜிதமான வைகுண்டத்திற்கு அதிபதியான மஹா விஷ்ணுவானவர் பூலோகத்தில் தர்ம ஸ்தாபனம் செய்வதற்காக இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத சக்ரவர்த்தியின் புத்ரனாக த்ரேதாயுகத்தில் அவதரிக்கப் போகிறார் அந்த அவதாரத்திற்கு ஸ்ரீராமன் என்ற பெயர் ப்ரஸித்தமானது. ராமன் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை ஸ்தாபிக்க ஸீதை என்ற தர்ம பத்னியோடுகூடவும், லக்ஷ்மணன் என்ற ப்ராதாவோடு கூடவும் தண்டகாரண்யத்தில் வாஸம் செய்வார். லங்கைக்கு அதிபதியான ராவணன் ஸீதையை அபஹாரம் செய்துகொண்டு போகப் போகிறான். ஸீதையைத் தேடிக்கொண்டு இருவர்களும் அரண்யத்தில் வரும்பொழுது உன்னுடைய இரண்டு கைகளையும் தன் கத்திகளால் அறுத்து உன்னை இந்த குரூர பாவத்திலின்றும் விமோசனம் செய்து வைப்பார்கள். அவர்களுடைய அநுக்ரகத்திற்கு நீ பாத்ரமானதும் திவ்ய தேஹமும், திவ்ய ஞானமும் உனக்கு உண்டாகிவிடும். ராவணன் ஸீதையை அபஹரித்துக் கொண்டு போன மார்க்கத்தையும் அவர்களுக்கு நீ சொல்லி உபகரிக்க வேண்டும்' என்று சொன்னார். ராமா! நான் க்ருதார்த்தனாக ஆகிவிட்டேன். இந்த கபந்த சரீரத்தையும் அக்கினியினால் தாகம்செய்து பரிசுத்தனாக செய்துவிடு நானும் உன் அநுக்ரகத்தால் கந்தர்வலோகமே போகிறேன். இதோ சமீபத்தில் பம்பாஸரஸ் ஒன்று இருக்கிறது. அது மிகவும் அழகான ஸரஸ். பம்பாஸரஸினுடைய ஸமீபத்தில் ரிஷ்யமூகம் என்ற ஒரு பர்வதமும் காணப்படும். அதனுடைய சிகரத்திலோ, கிஷ்கிந்தா நகரத்திற்கு அதிபதியான வாலியினுடைய தம்பியான ஸுக்ரீவன், கிஷ்கிந்தா ராஜ்யத்தையும், தன் மனைவியான ருமை என்பவளையும் வாலியினால் அபஹரிக்கப்பட்டவனாய்க் கொண்டு, வாலியினுடைய பயத்தால் ஸுக்ரீவன் வாசம் செய்கிறான். ஸுக்ரீவனிடத்தில் ந்யாயமிருப்பதினால் அவனை அநுஸரித்து அவனுடன் வாலிக்குப் பயந்து ஓடிவந்த நான்கு மந்திரிகளும், அதாவது ஜாம்பவான், ஹநுமான், நளன், நீலன் என்ற நால்வரும் ஸுக்ரீவனுடன் வஸிக்கிறார்கள். ஸுக்ரீவனே வாலியைக் கொன்று தன் பார்யையான ருமை என்பவளை தன்வசம் அடைவதற்கு

எந்தவிதம் ஸஹாயம் செய்யப் போகிறுளே என்று தனக்கு ஸகாயம் செய்கிற வீரனுடைய ஆகமனத்தை எதிர்பார்த்து வருகிறுன். உனக்கும் ராவணனைக்கொன்று ஸீதையை அடை வதற்கு அவனுல் ஸஹாயம் செய்யமுடியும். ஆகையால் நீங் கள் இருவர்களும் ஸக்யம் (ஸ்நேகம்) செய்து கொண்டால் உன்னுடைய மனோரதமும் பூர்த்தியாகும். ஸுக்ரீவனுடைய மனோரதமும் பூர்த்தியாகும். உங்கள் இருவர்களின் ஸக்யத் தால் லோகத்திற்கே பரம க்ஷேமம் ஏற்படும். ஆகையால் ரிஷ்யமூக பர்வதம்சென்று அவச்யம் ஸுக்ரீவனை ஸக்யம் செய்துகொள்ள வேண்டும். ஆகையால் ரிஷ்யமூக பர்வதம் போகலாம். போகும் வழியிலோ இங்கிருந்து ஸமீப ப்ர தேசத்தில் மதங்காச்ரமம் என்று ஓர் ஆச்ரமம் இருந்து வருகிறது. அந்த ஆச்ரமத்திலோ அறுபதினுயிரம் சிஷ்யர் களுடன்கூட மதங்க மஹர்ஷி என்ற ஒரு ஜீவன் முக்தன் இருந்துவந்தார். அவர் இப்பொழுது விதேக கைவல்யத்தை சிஷ்யர்களுடன் அடைந்துவிட்டார். அந்த ஆச்ரமத்தை நீ அவச்யம் போய் தர்சனம் செய்யவேண்டும். அந்த ஆச்ரமத் தில் மதங்க மஹர்ஷிக்கு பரிசாரிணியாக இருந்து வந்த சபரி யென்ற பெயரால் ப்ரஸித்திபெற்ற ஒரு விதுஷியானவள் உன்னுடைய தர்சனத்தை எதிர்பார்த்துக்கொண்டு வரு கிறுள். ஆகையால் அங்கு அவச்யம் நீ போகவேண்டும்" என்று சொல்லிவிட்டு கபந்தன் மறைந்துவிட்டான்.

சபரி மோக்ஷம்

ராமனும், கபந்தனுக்கு மோக்ஷத்தை அளித்துவிட்டு அந்த கபந்தனுல் காட்டப்பட்ட மார்க்கத்தை அநுஸரித்தே மதங்காச்ரமத்திற்கு வந்து சபரி என்ற விதுஷிக்குத் தன் தர் சனத்தை அளித்தார். பம்பாஸரஸ்ஸினுடைய மேல் கரையில் சபரியினுடைய ஆச்ரமமானது ரொம்பவும் அழகாயும் பல விதமான வ்ருக்ஷங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் வாபீ கூப தடாகாதிகளால் சூழப்பட்டதாயும், ஹம்ஸ காரண்ட கோகிலம் முதலிய பக்ஷி விசேஷங்களால் ரமணீயமான தங்களோடு பாஸிக்கிறதாயும் விளங்கி வந்தது, அவ்வ[illegible] மான ஆச்ரமத்தில் ராமர் லக்ஷ்மணர் இருவரும் ப்ரவேசித் தார்கள். இருவர்களும் ப்ரவேசித்த மாத்ரத்தில்,

பம்பா ஸரஸ்ஸில் ராமன் வஸித்தல்

இவ்விதம் சபரிக்கு மோக்ஷத்தை கொடுத்துவிட்டு ராமன், லக்ஷ்மணனுடன்கூட ரிஷ்யமூக பர்வதத்திலுள்ள, ஸுக்ரீவனோடு ஸக்யம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் பம்பாஸரஸ்ஸிற்கு வந்து சேர்ந்தார். வரும் வழியில் சபரியினுடைய தபஸ்ஸைப் பற்றியும், மதங்க மஹர்ஷியினுடைய, யோக மஹிமையைப்பற்றியும், அவருடைய சிஷ்யர்களான மஹான்களைப் பற்றியும், ஆச்ரமத்தினுடைய கௌரவத்தைப் பற்றியும் பேசிக்கொண்டு சென்றார். சபரியினுடைய ஆச்ரமத்திலுள்ள (ஸப்த) ஏழுவிதமான கடல்களிலும் தான் ஸ்னானபானாதிகளால் பித்ருக்களை த்ருப்தி செய்துவைத்த மஹிமையை நினைத்துக்கொண்டு தன்னுடைய ஜன்ம ஸாபல்யத்தையும் ச்லாகித்துக்கொண்டார். "லக்ஷ்மணா! எந்த பம்பாஸரஸ்ஸினுடைய தீரத்தில் ரிஷ்யமூக பர்வதமானது விளங்கிவருகிறதோ அந்த பர்வதத்தில்தான் சுக்ரீவன் வஸம் செய்து வருகிறான். வாலியினுடைய பயத்தால் ஸுக்ரீவன் அங்கு வாஸம் செய்கிறான் என்பதைக் கபந்தன் மூலமாக நாம் அறிந்தோம். அவனுடைய ஸக்யமோ நமக்கு ரொம்பவும் அவசியமானது. அவனுடைய அதீனமாகத்தான் நான் ஸீதையை அடையவேண்டும். ஆகையால் சீக்ரமாக ஸுக்ரீவனுடைய ஸமீபம் போவோம்" என்று சொல்லிக்கொண்டு வெகு வேகமாக லக்ஷ்மணனோடு கூட பகவானான ஸ்ரீராமன் பம்பாதீரத்திற்கு வந்து சேர்ந்தார்.

பம்பாதீரத்திற்கு வந்தவுடன் அந்த தீரத்தில் ஏற்பட்டிருக்கும் உத்யானவனங்களையும், அழகான பக்ஷி விசேஷங்களையும், பம்பாஸரஸ்ஸினுடைய நிர்மலமான ஜலத்தையும், அங்குள்ள சைத்ய, ஸௌரப்ய, மாந்த்யத்தோடு கூடின (வாயு) காற்றையும் பார்த்து, ஸீதையை விட்டு தான் பிரிந்திருக்கின்றோமே என்பதையும் மனதில் நினைத்துக்கொண்டு, தன்னுடைய ஜன்மா, வீண் என்ற எண்ணத்துடன் ப்ரலாபித்தார். "லக்ஷ்மணா! என்னுடைய தௌர்பாக்யம்போல் தௌர்பாக்யத்தை மற்றவர்களிடம் காணமுடியுமா? இக்ஷ்வாகு வம்சத்தில் தசரதராஜனுக்கு புத்ரனாக பிறந்தும், மிதிலாபுரிக்கு அரசனான ஜனகராஜனுடைய பெண்ணான ஸீதையை பத்னியாக அடைந்தும், யௌவன காலத்தில் ராஜ்யத்தையும் இழந்து, பரமஸுக போகத்திற்கு யோக்ய தேசமான இந்த பம்பா தீரத்தில் ஸீதையென்ற மனைவியை

யும் இழந்து நான் ஏகாகியாக பரிதபிக்கும்படியான நிலைமை எனக்கும் ஏற்பட்டிருக்கிறதைப் பார்த்தாயா? பூர்வ கர்மா யாரைத்தான் விட்டது”

इत्येवमुक्त्वा मदनाभिपीडितः स लक्ष्मणं वाक्यं
अनन्यचेतसं विवेश पंपां नलिनीं मनोहरां ।
रघूत्तमः शोकविषादयन्त्रितः ।
ततोमहद्वर्त्म सुदूरसंक्रमः क्रमेण गत्वा
प्रतिकूल धन्वनं ददर्श पंपां शुभदर्शकाननाम्
अनेक नानाविधपक्षिजालकां ॥

𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌦𑌨𑌾𑌭𑌿𑌪𑍀𑌡𑌿𑌤𑌃 𑌸 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂
𑌅𑌨𑌨𑍍𑌯𑌚𑍇𑌤𑌸𑌂 𑌵𑌿𑌵𑍇𑌶 𑌪𑌂𑌪𑌾𑌂 𑌨𑌲𑌿𑌨𑍀𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌂 ।
𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑌃 𑌶𑍋𑌕𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌤𑌤𑍋𑌮𑌹𑌦𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌸𑍁𑌦𑍂𑌰𑌸𑌂𑌕𑍍𑌰𑌮𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌗𑌤𑍍𑌵𑌾
𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲 𑌧𑌨𑍍𑌵𑌨𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌪𑌂𑌪𑌾𑌂 𑌶𑍁𑌭𑌦𑌰𑍍𑌶𑌕𑌾𑌨𑌨𑌾𑌮𑍍
𑌅𑌨𑍇𑌕 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌪𑌕𑍍𑌷𑌿𑌜𑌾𑌲𑌕𑌾𑌂 ॥

இத்யேவமுக்த்வா மதநாபிபீடித: ஸ லக்ஷ்மணம் வாக்யம்
அநந்யசேதஸம் விவேச பம்பாம் நலினீம் மநோஹராம் ।
ரகூத்தம: சோகவிஷாதயந்த்ரித: ।
ததோமஹத்வர்த்ம ஸுதூரஸம்க்ரம: க்ரமேண கத்வா
ப்ரதிகூல தந்வநம் ததர்ச பம்பாம் சுபதர்சகாநநாம்
அநேக நாநாவிதபக்ஷிஜாலகாம் ॥

முன் சொன்னபடி லக்ஷ்மணனைப் பார்த்து சொல்லிக் கொண்டு ஸீதையை விட்டுத்தான் பிரிந்தோமே என்ற துக்க ஸாகரத்திலும் மூழ்கிக்கொண்டு ரொம்பவும் துர்க்கமமான மார்க்கத்தில் ஆங்காங்கு நடுவில் ஏற்படும் விக்னங்களையும் நிவர்த்தி செய்துகொண்டு, பார்ப்பதற்கு அழகான பம்பா ஸரஸ்ஸை அடைந்து சில காலம் அங்கு எப்படி ஸுக்ரீவனை தர்சனம் செய்யலாம் என்ற எண்ணத்துடன் வாஸம் செய்துவந்தார். ஒவ்வொரு தினத்திலும் பம்பா ஸரஸ்ஸில் ஸ்நானம் செய்யும்பொழுது ஸீதையை நினைத்துக்கொண்டு ரொம்பவும் துக்கப்படுகிற மனதோடு கூடினவராக ஆகி விடுவார்.

ஒரு தினம் ஸ்நான காலத்தில் துக்கத்தை ஸஹிக்கமுடியாமல் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்கிறார்.

अद्यप्रत्यहमेषा कर्दमशेषामदंग संगेन ।
पुनरप्यपूरिपंपा मल्लोचनविनिसृतैः उदकैः ॥

𑌅𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌮𑍇𑌷𑌾 𑌕𑌰𑍍𑌦𑌮𑌶𑍇𑌷𑌾𑌮𑌦𑌂𑌗 𑌸𑌂𑌗𑍇𑌨 ।
𑌪𑍁𑌨𑌰𑌪𑍍𑌯𑌪𑍂𑌰𑌿𑌪𑌂𑌪𑌾 𑌮𑌲𑍍𑌲𑍋𑌚𑌨𑌵𑌿𑌨𑌿𑌸𑍃𑌤𑍈𑌃 𑌉𑌦𑌕𑍈𑌃 ॥

அத்யப்ரத்யஹமேஷா கர்தமசேஷாமதங்க ஸம்கேந !
புநரப்யபூரிபம்பா மல்லோசநபிநிஸ்ருதை: உதகை: ॥

"ஹே லக்ஷ்மணா! நான் இந்த பம்பா ஸரஸ்ஸில் ஸ்நானம் பண்ண இறங்கின மாத்ரத்தில் ஸீதையை விட்டுப் பிரிந்த துக்க அக்னியினுல் சூடோடு கூடின என் சரீரத்தில் இந்த பம்பா ஸரஸ்ஸினுடை ஜலம் ஸம்பந்தப்பட்ட மாத்ரத்தில் என் சரீரத்தின் உஷ்ணமானது பம்பா ஸரஸ்ஸினுடைய ஜலத்தை சுண்டச் செய்து, சேரு மாத்ரம் மீதம் இருக்கும்படி செய்கிறது பார்த்தாயா! ஆனுல் 'இவ்விதமான துர்பகனுக நான் ஆகிவிட்டேனே' என்பதை நினைத்துக் கண்ணீர் ஜலம் பெருகும்பொழுது, அந்த ஜலங்களால் பம்பாஸரஸ்ஸே மறுபடியும் பூர்த்தியாகிறது. இவ்விதமான ஆச்சர்யத்தை மற்ருேரிடத்தில் நீ பார்க்க முடியுமா?" என்று வெகு ப்ரகாரமாக ப்ரலாபித்துக்கொண்டே காலத்தை நயனம் செய்துகொண்டு வந்தார்.

இவ்விதம் பம்பாஸரஸ்ஸில் வாஸம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது, சைத்ய ஸௌரப்ய, மாந்த்யத்தோடு கூடின வாயுவைப் பார்த்து பகவானுன ஸ்ரீராமன்,

एहिवायो यतःकान्ता तांदृष्ट्वामामपि स्पृशः ।
त्वयिमेगात्रसंस्पर्शः चन्द्रेदृष्टिसमागमः ॥

𑌏𑌹𑌿𑌵𑌾𑌯𑍋 𑌯𑌤𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾 𑌤𑌾𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌮𑌾𑌮𑌪𑌿 𑌸𑍍𑌪𑍃𑌶𑌃 ।
𑌤𑍍𑌵𑌯𑌿𑌮𑍇𑌗𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌃 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌮𑌾𑌗𑌮𑌃 ॥

எஹிவாயோ யத:காந்தா தாம்த்ருஷ்ட்வாமாமபி ஸ்ப்ருச: ।
த்வயிமேகாத்ரஸம்ஸ்ப்ருச: சந்த்ரேத்ருஷ்டிஸமாகம: ॥

"ஹே வாயுவே! எந்த இடத்தில் என்னுடைய ப்ராண நாயகியான ஸீதை வஸிக்கிறளோ அந்த இடத்திற்குப் நீ போய் என்னுடைய காந்தையான ஸீதையின் சரீரத்தில் நீ ஸம்பந்தப்பட்டு, அதே க்ரணங்களால் என் சரீரத்தையும் தொட்டுப் பார்த்தால் நேராக ஸீதையைத் தொட்டு அனுபவிக்கக்கூடிய ஸுகத்தை நான் அனுபவிப்பேன். உன்னுடைய அதீனமாக ஸீதையினுடைய சரீரத்திற்கும் என் சரீரத்திற்கும் ஸம்பந்தம் ஏற்படவேண்டும். சந்த்ரன் தன்னுடைய க்ரணங்களால் ஸீதையை பார்த்துவிட்டு மறுபடியும் அதே க்ரணங்களால் என்னையும் பார்க்கிறபடியால் दृष्टिसमागमः (𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌮𑌾𑌗𑌮𑌃) (த்ருஷ்டிஸமாகம:) த்ருஷ்டி ஸமாகமமானது சந்த்ரனுடைய அதீனமாக ஏற்படுகிறது அவ்விதம் த்ருஷ்டி ஸமாகமம் சந்த்ரனுடைய அதீனமாக ஏற்படுவதுபோல் காந்த்ரஸம்ஸ்பர்சமும் உன்னுடைய அதீனமாக ஏற்படவேண்டும்" என்று வாயுவைப் பார்த்து ப்ரலாபிப்பார்.

इत्थं रामोऽपि पंपायां प्रलपन् जानकीं स्मरन् ।
सुग्रीव दर्शनाकांक्षी न्यवसत् तत्र सलक्ष्मणः ॥

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌰𑌾𑌮𑍋𑌽𑌪𑌿 𑌪𑌂𑌪𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍 𑌜𑌾𑌨𑌕𑍀𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍀 𑌨𑍍𑌯𑌵𑌸𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 ॥

இத்தம் ராமோபி பம்பாயாம் ப்ரலபன் ஜானகீம் ஸ்மரன் !
ஸுக்ரீவ தர்சனாகாங்க்ஷீ ந்யவஸத் தத்ர ஸலக்ஷ்மண: !!

இத்துடன்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில்

ஆரண்யகாண்டம்

முற்றிற்று.

சுபம் ! சுபம் !! சுபம் !!!



Printed at Giri Press, Triplicane—QHMS 173 C-1000 29-10-48.